
# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - மார்ச் 2024

**www.tnpscthervupettagam.com**




















SHANKAR IAS ACADEMY™
Best Academy for Civil Services Exam Coaching
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் .......... 10
தமிழ்நாடு செய்திகள் .......... 23
கர்பினி-GA2 செயற்கை நுண்ணறிவு மாதிரி .......... 23
‘இலக்கிய மாமணி’ விருதுகள் .......... 23
குலசேகரப்பட்டினம் விண்வெளி ஏவு தளம் .......... 24
மாநில அரசின் புதிய மின் ஆளுகை முன்னெடுப்பு .......... 25
11 ஆம் நூற்றாண்டு விஷ்ணு கோயில் .......... 25
ஸ்டெர்லைட் குறித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு 2024 .......... 26
தமிழகத்தின் நிறுவப்பட்ட எரிசக்தி திறன் 2026-27 .......... 26
2024 ஆம் ஆண்டு மாவட்ட நீதிபதிகள் தேர்வு முடிவு ரத்து .......... 28
தமிழ்நாடு காப்பு நிறுவனங்களின் செயல்பாட்டு மதிப்பீட்டு மாதிரி அறிக்கை .......... 28
தமிழ்நாட்டின் பசுமை இல்ல வாயு இருப்புநிலை அறிக்கை .......... 29
ஊர்வன இனங்களின் முதல் கணக்கெடுப்பு .......... 29
புதிய கற்கால குழந்தைகள் புதைக்கப்பட்ட கல்லறைகள் .......... 30
இந்தியாவின் முதல் கடல்சார் வளங்காப்பு படை .......... 30
கழுவேலி நீர்ப்பிடிப்பு பகுதி .......... 31
இலங்கை அகதிகள் குறித்த சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு .......... 31
ஆலிவ் ரிட்லி ஆமைகளின் குஞ்சு பொரிப்பிற்கான தளங்கள் .......... 32
புதிய மாநகராட்சிகள் 2024 .......... 33
காலை உணவுத் திட்டத்தின் தாக்கம் .......... 34
மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் தாக்கம் .......... 34
சுறா உடல் பாகங்களின் சட்டவிரோத வர்த்தகம் .......... 36
புதுமைப் பெண் திட்டத்தின் தாக்கம் .......... 36
சீர் மரபினர் சமூகங்களுக்கான ஒற்றைச் சான்றிதழ் .......... 37
PM SHRI பள்ளிகள் திட்டம் .......... 38
வங்கிக் கடனில் பெண்களின் பங்கு .......... 38
புலிகள் வளங்காப்பகத்திற்காக நிலம் கையகப்படுத்துதல் .......... 39
மக்களவைத் தேர்தல் மற்றும் குற்றவியல் வழக்குகள் .......... 40
தனியார் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் இரண்டாவது ஏவுகலம் .......... 41
சோழர் கால கல்வெட்டுகள் – திருச்சி .......... 41
2024 ஆம் ஆண்டில் தமிழகத்தின் உச்ச கட்ட மின் தேவை .......... 42
ஆற்காடு தள அருங்காட்சியகம் .......... 43
ஜவ்வாது மலையின் மேற்பகுதியில் பெருங்கற்காலக் கல்லறை .......... 44
தேசியச் செய்திகள் .......... 45
இந்தியாவின் மொழி சார் வரைபடம் .......... 45
2023 ஆம் ஆண்டில் கருங்காய்ச்சல் பாதிப்புகள் .......... 46
வாடகைத் தாய் (ஒழுங்குமுறை) திருத்த விதிகள், 2024 .......... 46

இந்தியாவின் மிக நீளமான கம்பிவட தாங்கு பாலம் ........ 47
இந்தியாவின் முதல் கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யும் தானியங்கி எந்திரம் ........ 48
வீட்டு உபயோக நுகர்வுக் கணக்கெடுப்பு – மாநிலங்கள் தர வரிசை ........ 48
பொருளாதாரப் பரிமாற்றத் திட்டம் ........ 50
தக்சின் பாரத் சமஸ்கிருத கேந்திரா ........ 50
'பயிர்க் காப்பீட்டை' அதிகரிப்பதற்கான புதிய முன்னெடுப்புகள் ........ 51
உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்புக் கிடங்கு திட்டம் ........ 52
Island On The Air (IOTA) திட்டம் ........ 52
2047 ஆம் ஆண்டிற்குள் ஆறு மாபெரும் துறைமுகங்கள் உருவாக்கம் ........ 53
கடலடித் துறைமுகப் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்பு ........ 53
இந்தியாவில் முதியோர் பராமரிப்புச் சீர்திருத்தங்கள் ........ 54
திருநர்களுக்கு சம வாய்ப்பளிக்கும் கொள்கை ........ 55
சர்க்கரைக் கழிவுப் பாகுகளிலிருந்து பொட்டாஷ் உரம் தயாரிப்பு ........ 55
சுவயம் பிளஸ் இயங்குதளம் ........ 56
இந்தியாவின் 3வது விமான அருங்காட்சியகம் ........ 57
நிலக்கரித் தளவாடங்கள் திட்டம் மற்றும் கொள்கை ........ 57
திரை அரங்குகள் அணுகல் சார்ந்த வழிகாட்டுதல்கள் ........ 58
இந்தியாவில் தீவிர வறுமையில் உள்ள மக்கள் ........ 58
தபால் வாக்கு அளிப்பதற்கான குறைந்தபட்ச வயது நிர்ணயம் ........ 59
பாராளுமன்றத்தில் வாக்களிக்க லஞ்சம் வாங்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் ........ 59
INS ஜடாயு ........ 60
சக்சு இயங்கு தளம் ........ 60
ஸ்வச்சதா பசுமை இலை மதிப்பீடு முன்னெடுப்பு ........ 61
DefConnect 2024 ........ 61
மரண வாக்குமூலம் மீதான தீர்ப்பு ........ 61
நான்காவது மின்துறை ஊழியர்கள் தினம் ........ 62
10 இராணுவக் குடியிருப்புகள் (கண்டோன்மென்ட்) நிலை நீக்கம் ........ 62
குடியுரிமை திருத்தச் சட்டம் 2019 ........ 63
தேர்தல் ஆணையர் பதவி விலகல் ........ 64
EFTA ஒப்பந்த நாடுகளுடன் இலவச வர்த்தக ஒப்பந்தம் ........ 64
வர்த்தக இரகசியங்கள் மீதான 22வது சட்ட ஆணையம் ........ 65
உலகின் மிக நீளமான இரட்டைவழிப் பாதை சேலா சுரங்கப்பாதை ........ 65
உணவற்ற குழந்தைகள் ........ 66
தேசியக் கூட்டுறவுத் தரவுத் தளம் ........ 67
'மாநிலங்களுக்கான நிதி ஆயோக்' இணைய தளம் ........ 67
இ-கிசான் உபஜ் நிதி ........ 68
UNNATI - 2024 ........ 69
இந்தியாAI திட்டம் ........ 69
2024 ஆம் ஆண்டு மழைநீர் சேமிப்பு பிரச்சாரம் ........ 70
உயிருள்ள விலங்கு இனங்கள் (அறிக்கையிடல் மற்றும் பதிவு செய்தல்) விதிகள், 2024 ........ 70

KIRTI திட்டம் ........ 71
UNDP பாலினச் சமத்துவமின்மைக் குறியீடு 2022 ........ 72
NFECS மற்றும் NECCE அறிமுகம் ........ 72
தேர்தல் பத்திரங்கள் தரவு ........ 73
மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் 2024 ........ 74
நாடு முழுவதும் ஒரே தேர்தல் நடத்துவது குறித்த குழு ........ 75
மின்சார வாகனம் (EV) கொள்கை 2024 ........ 76
'அக்ரே' மற்றும் 'அக்சய்' அறிமுகம் ........ 77
NAP-SE ........ 78
PM-SURAJ இணைய தளம் ........ 78
குற்றவியல் வழக்கு மேலாண்மை அமைப்பு ........ 79
வளிமண்டல சோதனைத் தளம் ........ 80
அழைப்பாளர் பெயர் அறிவிப்பு வசதி ........ 80
குறை தீர்ப்பு மதிப்பீட்டுக் குறியீடு 2023-24 ........ 81
செய்திப் பகிர்வுச் சேவை பிரசார் பாரதி ........ 82
நமோ திதி ஆளில்லா விமானத் திட்டம் ........ 82
'உங்கள் வேட்பாளரை அறிந்து கொள்ளுங்கள்' செயலி ........ 83
காப்புரிமைகள் (திருத்தம்) விதிகள், 2024 ........ 84
மின்சார வாகன ஊக்குவிப்புத் திட்டம் 2024 ........ 85
முகாமில் அடைக்கப்பட்ட யானைகள் (இடமாற்றம் அல்லது போக்குவரத்து) விதிகள், 2024 ........ 86
STEAG குழு ........ 86
உலகக் கூட்டுறவுப் பொருளாதார மன்றம் ........ 87
கல்ப சுவர்ணா ........ 87
SAKHI செயலி ........ 88
உண்மை சரிபார்ப்புப் பிரிவு குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ........ 88
FLNAT மதிப்பீட்டுத் தேர்வு ........ 89
புத்தொழில் நிறுவனங்களின் மஹாகும்ப் நிகழ்ச்சி 2024 ........ 89
பாஷாநெட் இயங்கு தளம் ........ 89
இந்தியாவில் வருமானம் மற்றும் செல்வ வளத்தில் நிலவும் சமத்துவமின்மை 1922-2023 ........ 90
வீட்டிலிருந்தபடியே வாக்களித்தல் ........ 91
ANAGRANINF திட்டம் ........ 92
சிவசக்தி தளம் ........ 92
பாரத் பயோடெக் நிறுவனத்தின் காசநோய் தடுப்பூசி ........ 93
சிப்கோ இயக்கத்தின் 50வது ஆண்டு நிறைவு ........ 93
அஃபனசி நிகிடின் கடல்குன்று (Seamount) ........ 94
**சர்வதேசச் செய்திகள் ........ 95**
1,000 ஆண்டுகள் பழமையான சோமின்சாய் திருவிழா ........ 95
FATF அமைப்பின் சாம்பல் நிறப் பட்டியல் ........ 95
பாகிஸ்தானின் முதல் பெண் முதல்வர் ........ 96
தென் கொரிய நாட்டின் கருவுறுதல் விகிதம் ........ 97

உலக வர்த்தக அமைப்பின் சேவைகள் தொழில்துறை ஒப்பந்தம் ....97
PANGEA திட்டம் ....98
பாண்டாக்களைப் பரிசாக வழங்கும் கொள்கையின் மறுமதிப்பீடு ....99
பெரு - டெங்கு சுகாதார அவசரநிலை ....100
உலகளாவிய நன்மைக்கான கூட்டணி - பாலினச் சமத்துவம் மற்றும் சமத்துவம் ....100
பிரெஞ்சு அரசியலமைப்பு சட்டத்தில் கருக்கலைப்பு தொடர்பான விதிகள் ....101
வலுவான எல் நினோ 2023-24 ....101
டோலுடெக்ராவிர் பற்றிய உலக சுகாதார அமைப்பின் அறிக்கை ....102
மனிதனால் உருவாக்கப்பட்ட 2வது மிகப்பெரிய மீத்தேன் கசிவு நிகழ்வு ....102
புலம்பெயர்ந்தோருக்கான மோசமான ஆண்டு – 2023 ....103
ப்ளூ லீடர்ஸ் குழுவின் உயர்மட்ட நிகழ்வு ....104
யாவுண்டே பிரகடனம் ....104
"மரணத்திற்கு உதவுதல்" - பிரான்சு ....104
செயற்கை நுண்ணறிவுச் சட்டம் (AI சட்டம், 2024) ....105
ரஷ்ய அதிபர் தேர்தல் ....106
அஃபார் முக்கோணம் ....107
சீனாவின் திருமண விகிதங்கள் ....108
ISA அமைப்பின் 29வது அமர்வு ....108
2024 ஆம் ஆண்டு மக்களாட்சிக்கான உச்சி மாநாடு ....109
பார்பர்டன் கிரீன்ஸ்டோன் மண்டலம் ....109
இந்திராவதி நடவடிக்கை ....110
SSN-AUKUS நீர்மூழ்கிக் கப்பல் திட்டம் ....110
செயற்கை நுண்ணறிவு மீதான ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் ....111
பொருளாதாரச் செய்திகள் ....112
MSCI நிறுவனத்தின் உலகத் தரநிலைக் குறியீடு ....112
இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை விகிதம் 2023 ....113
2024 ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் தங்க கொள்முதல் ....113
கையா AI திட்டம் ....114
இந்திய வேலைவாய்ப்பு அறிக்கை 2024 ....115
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ....116
'10,000 மரபணு வகையிடல் திட்டம் ....116
A வகை இரத்தம் உறையாமை நோய்க்கு மரபணு சிகிச்சை ....116
உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதலுறு வேக ஈணுலை ....117
ஜூஸ் ஜாக்கிங் ....118
வாழை இழைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கட்டுப் போடும் துணி ....119
மீத்தேன்சாட் ....120
ஹீலியம் வாயு நிறைந்த வெப்பமிகு சார் நிலை குறுநட்சத்திரங்கள் ....121
RAD51 புரதம் ....121
திவ்யாஸ்திரம் திட்டம் ....122
ஹைபர் செயற்கை நுண்ணறிவு மாதிரி ....123

வானியல் சார்ந்த மாபெரும் சுழற்சிகள் ............ 123
டெவின் AI ............ 124
மியாசைட் (Rh17S15) ............ 125
2040 ஆம் ஆண்டிற்குள் நிலவில் மனிதக் குடியிருப்புகள் ............ 125
ஆந்த்ரோபோட்ஸ் ............ 126
நுண் ஒளியணுவியல் எலக்ட்ரான் முடுக்கி ............ 127
செவ்வாய்க் கிரகத்தில் உள்ள மாபெரும் எரிமலை ............ 127
செந்நிற மின்னிறக்கம் ............ 128
காசியோபியா A: நட்சத்திரத்தின் புதிய புகைப்படம் ............ 129
நோயை உண்டாக்கும் பழமையான பூஞ்சை ............ 129
பூமியில் செவ்வாய்க் கிரகத்தின் ஒத்திசைவு ............ 130
இறக்கைகள் கொண்ட ஏவு கலம் - புஷ்பக் ............ 130
வானியற்பியல் சார்ந்த நியூட்ரினோக்கள் ............ 131
TOI-270 D கோள் ............ 131
ஹைடோல் சமூகத் திறன் கொண்ட மனித எந்திரம் ............ 132
சீனாவின் ஒலி சார் சீரொளிக் கற்றை ............ 132
ஜீனி – செயற்கை நுண்ணறிவு மாதிரி ............ 133
ஹனுமான்: பெரிய மொழி மாதிரிகளின் தொகுப்பு ............ 134
மிக பிரகாசமாக ஒளிரும் பொருள் ............ 134
நட்சத்திரங்களின் பழங்கால ஓட்டங்கள் ............ 135
பன்றியிலிருந்து மனிதருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை ............ 135
பட்ஜெட்ஸ் தவளை ............ 136
விண்வெளி வரலாற்றில் மிகப் பழமையான கருந்துளை ............ 137
SAMAR-2 ஏவுகணை அமைப்பு ............ 137
முப்பரிமாண அச்சிடல் நுட்பத்தில் உருவாக்கப்பட்ட மூளை திசு ............ 138
ரோன் ஒல்மி ............ 138
POEM-3 கலம் ............ 139
குறுங்கோள் 2005 EX296 ............ 140
**சுற்றுச்சூழல் செய்திகள் ............ 141**
பக்ஸா புலிகள் வளங்காப்பகம் - உள் உறைவிடப் புலி ............ 141
மன்னார் வளைகுடாவில் உள்ள உயிருள்ள பவளப்பாறைகளின் பங்கு ............ 141
இடம் பெயர்ந்த உயிரினங்களின் வளங்காப்புத் தொடர்பான உடன்படிக்கை குறித்த COP14 ............ 142
உலகின் இடம்பெயர்ந்த உயிரினங்களின் நிலை குறித்த அறிக்கை ............ 143
ஒற்றை இன வளங்காப்பு செயல் திட்டம் : CMS COP14 ............ 144
சிறுத்தைகளின் எண்ணிக்கை குறித்த அறிக்கை ............ 144
உலகின் மிகச்சிறிய தவளை ............ 145
பிரேசிலிய நாட்டின் ஹோல்லி மரம் மீண்டும் கண்டுபிடிப்பு ............ 145
வெள்ளப்பெருக்குச் சமவெளிகளில் உலோகச் சுரங்க மாசுபாடு ............ 146
பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பில் 1,036 இனங்கள் பதிவு ............ 147
6வது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் சபை ............ 147

மீண்டும் தென்பட்டுள்ள சாம்பல் திமிங்கலம் ....... 148
வெப்பமயமாதலுக்கேற்ப நுண்பாசிகளின் தகவமைவு ....... 148
IUCN பட்டியலில் ஆசிய சிங்கத்தின் நிலை ....... 149
இந்தியாவின் தங்க நிற மந்திகளின் எண்ணிக்கை 2024 ....... 149
குனோ தேசிய பூங்காவில் உள்ள சிவிங்கிப் புலிகளின் எண்ணிக்கை ....... 150
முட்டையிட்டு குட்டி ஈன்று பாலூட்டும் இருவாழ்வி இனங்கள் ....... 151
கருவுற்ற மெகாமவுத் சுறா ....... 151
பெருந்தடுப்புப் பவளத் திட்டுகளில் 4வது உலகளாவிய மாபெரும் பவளப் பாறை நிறமாற்ற நிகழ்வுகள் ....... 152
இயந்திரமயமாக்கப்பட்ட வெப்பமண்டலக் கடற்பாசிப் பண்ணை ....... 152
உலகளாவிய மீத்தேன் கண்காணிப்பு அறிக்கை 2024 ....... 153
8 கண்கள் மற்றும் 8 கால்கள் கொண்ட தேள் ....... 154
பவளப்பாறைகளின் விரிவான அதிவேகத் தொடர்பு அமைப்பு ....... 154
உலகக் காற்றுத் தரக் குறியீடு 2023 ....... 155
உலக மின்னணுக் கழிவுகள் கண்காணிப்பு அறிக்கை 2024 ....... 155
70 மில்லியன் ஆண்டுகள் பழமையான நத்தை ....... 156
அண்டார்டிக் ஓசோன் துளை மீள்வுப் போக்குகள் ....... 157
சாண்ட்ஜோர்டியா பக்கேசி ....... 157
FARM திட்டம் ....... 158
மூன்று நாடுகளின் COP தலைமைத்துவம் ....... 159
**அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ....... 160**
உலகளாவிய அறிவுசார் சொத்துக் குறியீடு 2024 ....... 160
உலகக் கழிவு மேலாண்மை கண்ணோட்ட அறிக்கை 2024 ....... 160
சர்வதேச ஆயுத பரிமாற்றங்களின் போக்குகள் – 2023 ....... 161
ஜனநாயக அறிக்கை 2024 ....... 162
பெண்கள், வணிகம் மற்றும் சட்ட அறிக்கை 2024 ....... 163
குழந்தைகள் உயிரிழப்பு மதிப்பீட்டிற்கான ஐநா சபையின் இடைமுகமை ....... 164
INFAAR 2019-22 அறிக்கை ....... 165
உலக இணைப்பு அறிக்கை, 2024 ....... 166
மனித வள மேம்பாட்டுக் குறியீடு 2023-24 ....... 166
உலக மகிழ்ச்சி அறிக்கை 2024 ....... 167
கட்டாயத் தொழிலாளர் இலாபம் பற்றிய ILO அறிக்கை ....... 168
உலகப் பருவநிலை அறிக்கை 2023 ....... 169
உலக வர்த்தக மதிப்பாய்வு 2023 மற்றும் கண்ணோட்டம் 2024 ....... 170
UN உலக நீர் மேம்பாட்டு அறிக்கை 2024 ....... 170
ஆரோக்கியம் மற்றும் சுகாதார நலனில் சம பங்கு உழைப்பு அறிக்கை ....... 171
ஹுருன் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை ....... 172
**மாநிலச் செய்திகள் ....... 173**
மொத்த வாகன விற்பனையில் முன்னணியில் உள்ள மாநிலம் ....... 173
ஆற்றுக்கால் பொங்கல் திருவிழா ....... 174
பொது மற்றும் தனியார் சொத்து சேத மீட்பு மசோதா ....... 174

கியாசனூர் வன நோய் ....175
புதிய புவிசார் குறியீடுகள் ....176
ஷாபூர் கண்டி அணை திட்டம் ....177
மாநில ஆற்றல் திறன் குறியீடு 2023 ....177
சாப்சார் குட் திருவிழா ....178
ஹைதராபாத்தின் அரக்கு வளையல்கள் ....178
மறுமண ஊக்குவிப்புத் திட்டம் - ஜார்க்கண்ட் ....179
தொழில்துறை புரட்சிக்கான மையம் ....179
பூங்காவில் புலிகளைக் காண்பதற்கான சுற்றுப் பயணத்திற்குத் தடை ....179
அரசிற்குச் சொந்தமான OTT இயங்குதளம் ....180
மணிப்பூரின் உள்நாட்டிலேயே புலம்பெயர்ந்தவர்களுக்கான திட்டம் ....180
குறிப்பிட்ட மாநிலம் சார்ந்த பேரிடர் – கேரளா ....181
அகநாசினி கழிமுகம் ....182
பாண்டவுல குட்டா ....182
திட்டம் 414 ....183
யுனெஸ்கோவின் தற்காலிகப் பாரம்பரியத் தளங்கள் பட்டியலில் மத்தியப் பிரதேச தளங்கள் ....184
சௌரௌயா பூண்டுவானா – மணிப்பூர் ....184
ராஜஸ்தான் - நீர் வளத் தரவுக் கட்டுப்பாட்டகம் ....185
இந்தியாவின் பழமையான கோவில் ....185
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....186
ககன்யான் திட்டத்தின் விண்வெளி வீரர்கள் ....186
மனோகர் ஜோஷி ....186
இந்தியாவின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர்- ஷஃபிகுர் ரஹ்மான் பார்க் ....186
டைலர் பரிசு 2024 ....187
சங்கீத நாடக அகாடமி விருதுகள் 2022 மற்றும் 2023 ....187
உலக அழகி 2024 ....188
தேசியப் படைப்பாளிகள் விருது 2024 ....188
எராஸ்மஸ் பரிசு 2024 ....189
96வது அகாடமி விருதுகள் ....190
பிரிட்ஸ்கர் கட்டிடக்கலை பரிசு 2024 ....190
சென்னை இசை அகாடமி விருதுகள் 2024 ....191
டயானா மரபு விருதுகள் ....191
தங்கப் புத்தகம் விருது 2024 ....192
ஆபெல் பரிசு 2024 ....192
விளையாட்டுச் செய்திகள் ....193
கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் 2024 ....193
முக்கிய தினங்கள் ....193
பாகுபாடுகள் ஒழிப்பு தினம் - மார்ச் 01 ....193
உலக கடற்புல் தினம் - மார்ச் 01 ....194
உலக குடிமைப் பாதுகாப்பு தினம் - மார்ச் 01 ....194

சுய தீங்கு விளைத்தல் குறித்த விழிப்புணர்வு தினம் - மார்ச் 01 ....... 194
உலக நிலையான ஆற்றல் தினம் - மார்ச் 02 ....... 195
உலக வனவிலங்கு தினம் - மார்ச் 03 ....... 195
உலக செவித் திறன் தினம் - மார்ச் 03 ....... 196
தேசியப் பாதுகாப்புத் தினம் - மார்ச் 04 ....... 196
உலக உடல் பருமன் தினம் - மார்ச் 04 ....... 197
இந்தியப் புவியியல் ஆய்வு மையத்தின் ஸ்தாபன தினம் - மார்ச் 04 ....... 197
நிலையான மேம்பாட்டிற்கான உலக பொறியியல் தினம் - மார்ச் 04 ....... 198
சர்வதேச HPV விழிப்புணர்வு தினம் - மார்ச் 04 ....... 198
பாலியல் சுரண்டலுக்கு எதிரானப் போராட்டத்திற்கான உலக தினம் - மார்ச் 04 ....... 198
ஆயுதக் குறைப்பு மற்றும் பரவல் தடுப்பு விழிப்புணர்விற்கான சர்வதேச தினம் - மார்ச் 05 ....... 199
அடையாளத் தொடர்பறும் கோளாறு குறித்த விழிப்புணர்வு தினம் - மார்ச் 05 ....... 199
சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 08 ....... 200
CISF எழுச்சி தினம் - மார்ச் 10 ....... 201
சர்வதேச பெண் நீதிபதிகள் தினம் - மார்ச் 10 ....... 201
இணையவெளி தணிக்கைக்கு எதிரான உலக தினம் - மார்ச் 12 ....... 201
புகைபிடித்தல் எதிர்ப்பு தினம் - மார்ச் 13 ....... 202
பை தினம் - மார்ச் 14 ....... 203
உலக ரோட்ராக்ட் தினம் - மார்ச் 13 ....... 203
சர்வதேச கணித தினம் - மார்ச் 14 ....... 204
நதிகளுக்கான நடவடிக்கை தொடர்பான சர்வதேச தினம் - மார்ச் 14 ....... 204
உலக சிறுநீரக தினம் - மார்ச் 14 ....... 205
உலக நுகர்வோர் உரிமைகள் தினம் - மார்ச் 15 ....... 205
உலக தூக்க தினம் - மார்ச் 15 ....... 206
தேசியத் தடுப்பூசி தினம் - மார்ச் 16 ....... 206
ஆயுதத் தொழிற்சாலைகள் தினம் (இந்தியா) - மார்ச் 18 ....... 207
உலக மறுசுழற்சி தினம் - மார்ச் 18 ....... 207
எண்ணிம வழிக் கற்றலுக்கான சர்வதேச தினம் - மார்ச் 19 ....... 208
சர்வதேச மகிழ்ச்சி தினம் - மார்ச் 20 ....... 208
உலக வாய் சுகாதார தினம் - மார்ச் 20 ....... 209
உலக சிட்டுக்குருவி தினம் - மார்ச் 20 ....... 209
மார்ச் சம இரவு நாள் - மார்ச் 20 ....... 210
உலக வன வள தினம் - மார்ச் 21 ....... 210
உலக மன நலிவு நோய் தினம் - மார்ச் 21 ....... 211
உலக கவிதை தினம் - மார்ச் 21 ....... 212
உலகப் பொம்மலாட்ட தினம் - மார்ச் 21 ....... 212
சர்வதேச நவ்ரூஸ் தினம் - மார்ச் 21 ....... 212
சர்வதேச இனப் பாகுபாடு ஒழிப்பு தினம் - மார்ச் 21 ....... 213
உலக தண்ணீர் தினம் - மார்ச் 22 ....... 213
உலக வானிலை தினம் - மார்ச் 23 ....... 213

தியாகிகள் தினம்/ ஷாஹீத் திவாஸ் - மார்ச் 23 ........ 214
உலக காசநோய் (TB) தினம் - மார்ச் 24 ........ 215
புவி நேரம் - மார்ச் 23 ........ 215
உலக நாடக தினம் - மார்ச் 27 ........ 216
சர்வதேச கழிவுகள் இல்லாத தினம் - மார்ச் 30 ........ 216
உலக இருமுனையப் பிறழ்வு கோளாறு தினம் - மார்ச் 30 ........ 217
ராஜஸ்தான் தினம் - மார்ச் 30 ........ 218
இதரச் செய்திகள் ........ 218
படகோனியா குகை ஓவியங்கள் ........ 218
கேவம் மேகங்கள் ........ 219

# TNPSC துளிகள்

- வங்காளதேசத்தின் டாக்கா நகரில் உள்ள இந்திரா காந்தி கலாச்சார மையத்தில் அமைக்கப்பட்டுள்ள காஷி சுதந்திரப் போராட்ட வீரர் யு டிரோட் சிங் சையீம் அவர்களின் மார்பளவு உருவச் சிலையை மேகாலயா அரசு திறந்து வைத்துள்ளது.
- இந்திய இராணுவம் மற்றும் ஜப்பான் எல்லைக் காப்புப் படை ஆகியவற்றிற்கு இடையேயான 'தர்மா கார்டியன்' எனப்படும் 5வது கூட்டு இராணுவப் பயிற்சியானது ராஜஸ்தானில் நடைபெற்று வருகிறது.
- இந்திய மகளிர் அணியானது மலேசியாவில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு ஆசிய பாட்மிண்டன் அணி சாம்பியன்ஷிப் போட்டியில் முதல் முறையாக தங்கப் பதக்கம் வென்றுள்ளது.
- ரவிச்சந்திரன் அஸ்வின் இந்திய நாட்டில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை (352) வீழ்த்தி அனில் கும்ப்ளேவின் (350) சாதனையினை முறியடித்து சாதனை படைத்துள்ளார்.
- இந்தியாவில் பிறந்த பொருளாதார நிபுணர் கீதா பத்ரா, உலக வங்கியின் உலகளாவிய சுற்றுச்சூழல் மையத்தின் தற்சார்பு மதிப்பீட்டு அலுவலகத்தின் (IEO) புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலத்தில் இயங்கும் 'சுச்சேதா' என்று பெயரிடப்பட்ட, இந்தியாவின் முதல் படகு கொச்சியில் அறிமுகப் படுத்தப் பட்டது.
  - V.O.சிதம்பரனார் துறைமுகம் ஆனது நாட்டின் முதல் பசுமை ஹைட்ரஜன் மையத் துறைமுகமாகும்.
- S.விஜயதரணி ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்கான உறுப்பினர் பதவி காலியானதாக சட்டமன்றச் செயலகம் அறிவித்து உள்ளது.
- பிரதமர் அவர்கள் இராஜ்கோட் (குஜராத்), பதிண்டா (பஞ்சாப்), ரேபரேலி (உத்தரப் பிரதேசம்), கல்யாணி (மேற்கு வங்காளம்) மற்றும் மங்களகிரி (ஆந்திரப் பிரதேசம்) ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஐந்து அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்விக் கழகங்களை (எய்ம்ஸ்) திறந்து வைத்தார்.
- இந்திய சூரிய சக்தி கழக லிமிடெட் (SECI) நிறுவனமானது, சத்தீஸ்கரின் ராஜ்நந்த் காவ்ன் எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள, சூரிய சக்தியைப் பயன்படுத்தி ஆற்றலைச் சேமிக்கும் இந்தியாவின் மிகப்பெரிய மின்கல ஆற்றல் சேமிப்பு கட்டமைப்பினை (BESS) வெற்றிகரமாக இயக்கியுள்ளது.
- புகழ்பெற்ற கஜல் (அரபுக் கவிதை) பாடகர் பங்கஜ் உதாஸ் சமீபத்தில் மும்பையில் காலமானார்.
- மிகப்பெரிய உலகளாவிய ஜவுளி நிகழ்வுகளில் ஒன்றான 2024 ஆம் ஆண்டு பாரத் டெக்ஸ் நிகழ்ச்சியானது டெல்லியில் தொடங்கப்பட்டது.
- புனேவில் உள்ள தேசிய இயற்கை மருத்துவ நிறுவனம் (NIN) மற்றும் அரியானாவின் ஜஜ்ஜரில் உள்ள தேவர்கானா கிராமத்தில் உள்ள மத்திய யோகா மற்றும் இயற்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் (CRIYN) இரண்டு 'ஆயுஷ் திட்டங்கள்' சமீபத்தில் திறக்கப் பட்டன.

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், மத்திய மத்திய ஊழல் தடுப்பு ஆணையத்தின் ஊழல் தடுப்பு ஆணையராக A.S. ராஜீவ் என்பவரை நியமித்துள்ளார்.
- உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி A.M. கான்வில்கர் ஊழல் தடுப்பு குறை தீர்ப்பாளரான லோக்பால் அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தில் பத்தாண்டுகளுக்கு முன் திட்டமிடப் பட்ட வெளித் துறைமுக சரக்குக் கொள்கலன் கப்பல் முனையத்திற்கான அடிக்கல் சமீபத்தில் நாட்டப்பட்டு அதன் கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டுள்ளது.
- தமிழக முதல்வர் அவர்கள், சென்னையில் 6.09 ஏக்கர் பரப்பில் கட்டமைக்கப்படவுள்ள கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவிற்கான அடிக்கல்லை நாட்டினார்.
- சிக்கிமின் ராங்போவில் அமைக்கப்பட உள்ள அம்மாநிலத்தின் முதல் இந்திய இரயில் நிலையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.
- ஒருங்கிணைந்த புலிகள் வாழ்விட வளங்காப்புத் திட்டத்தின் கீழ் (ITHCP) இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் சுந்தரவனக் காடுகள் பகுதியில் எல்லை கடந்த (நாடுகளுக்கிடையிலான) புலிகள் வளங்காப்பு திட்டத்தினை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்பினை மேற்கொண்டுள்ளன.
- இந்திய நாடானது 2035 ஆம் ஆண்டிற்குள் தனது சொந்த விண்வெளி நிலையத்தை உருவாக்கி, விண்வெளித் துறையின் முக்கிய வணிக மையமாகவும் மாறும் என்று பிரதமர் அவர்கள் அறிவித்துள்ளார்.
- இந்தியப் பிரதமர் அவர்கள் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் செயற்கைக்கோள் ஏவு கல ஒருங்கிணைப்பு மையம் (PIF), மகேந்திர கிரியில் (திருநெல்வேலி மாவட்டம்) உள்ள இஸ்ரோ உந்துவிசை இயக்க வளாகத்தில் பகுதியளவு கிரையோ ஜெனிக் வகையிலான ஒருங்கிணைந்த எஞ்சின் மற்றும் பரிசோதனை மையம் (SIEST) மற்றும் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் மூன்று வேக வரம்பிலான (குறையொலி, ஒத்த ஒலி வேகம் மற்றும் மீயொலி வேகம்) காற்றுச் சுரங்கம் ஆகிய மூன்று முக்கிய விண்வெளி உள்கட்டமைப்புத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.
- உலகப் பல்லுயிர்ப்பெருக்க கட்டமைப்பு நிதியத்தின் முதல் சபை கூட்டம் ஆனது சமீபத்தில் அமெரிக்காவின் வாஷிங்டன் DC நகரில் நடைபெற்றது.
- மத்திய அரசானது, பொதுவான 'உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள்' விதிகளை வகுப்பதற்காக வேண்டி, நிதித் துறைச் செயலாளர் T.V. சோமநாதன் அவர்கள் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை அமைத்துள்ளது.
- இந்தியக் கவிஞர்-அரசுமுறை அதிகாரி, நூல் ஆசிரியர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் அபய். K அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட 'Fool Bahadur' எனப்படும் முதல் மகாஹி மொழி புதினத்தின் ஆங்கில மொழிப் பெயர்ப்பானது பீகாரின் பாட்னா நகரில் வெளியிடப்பட்டது.
  - மகதி என்றும் அழைக்கப்படுகின்ற மகாஹி மொழி கிழக்கு இந்தியாவின் பீகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் பேசப்படும் இந்திய-ஆரிய மொழியாகும்.
- உலகின் முதல் வேத கடிகாரம் ஆனது உஜ்ஜயினியில் கட்டமைக்கப்பட்டுள்ள 85 அடி உயர கோபுரத்தில் நிறுவப்பட்டுள்ளது.
  - இந்தக் கடிகாரம் ஆனது இரண்டு சூரிய உதயங்களுக்கு இடையே உள்ள காலத்தை 48 நிமிடங்கள் கொண்ட 30 பகுதிகளாக (மணிநேரமாக) பிரித்துக் காட்டும்.

- இந்திய உழவர் உரக் கூட்டுறவு லிமிடெட் (IFFCO) நிறுவனமானது உலகின் முதல் 300 கூட்டுறவு நிறுவனங்களில் ஒரு முன்னணி கூட்டுறவு நிறுவனமாக மீண்டும் தரநிலைப் படுத்தப் பட்டுள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் உலக வர்த்தக நிறுவனத்தின் 13வது அமைச்சர்கள் மாநாடு (MC) நடைபெற்றது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் உள்ள புத்தாக்க மையத்தின் மாணவர்கள், சமீபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட 16வது வருடாந்திர ஓபன் ஹவுஸ் நிகழ்வில், தாங்கள் உருவாக்கிய சில புதுமையான தொழில்நுட்பங்களைப் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தினர்.
- ரிலையன்ஸ் அறக்கட்டளை நிறுவனமானது, இந்தியாவிலும் வெளிநாட்டிலும் காயம் அடைந்த, துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட மற்றும் அச்சுறுத்தப்பட்ட நிலையில் உள்ள விலங்குகளை மீட்டு, சிகிச்சை, பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு அளிப்பதற்காக 'வன்தாரா' (காடுகளின் நாயகன்) என்ற ஒரு திட்டத்தை குஜராத்தின் ஜாம்நகரில் அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் S. ஜெய்சங்கர் அவர்கள், ஆச்சார்யா லோகேஷ் முனியை 'உலகளாவிய சமண சமய அமைதி தூதர்' ஆக அறிவித்து கௌரவிக்க உள்ளார்.
  - அவர் அஹிம்சா விஸ்வ பாரதி மற்றும் உலக அமைதி மையத்தின் நிறுவனர் ஆவார்.
- மூத்தப் பத்திரிகையாளர் V.N. சாமிக்கு 2022 ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருது தமிழ்நாட்டில் வழங்கப்படவுள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, மிகக் குறுகிய தூர வரம்பு உடைய வான் பாதுகாப்பு அமைப்பு (VSHORADS) என்ற ஏவுகணையின் இரண்டு வெற்றிகரமான சோதனைகளை நடத்தியது.
- மூத்த இந்தியக் காவல்பணி அதிகாரியான தல்ஜித் சிங் சௌத்ரி, தேசிய பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய மருந்தியல் தரநிலைகளை அதிகாரப் பூர்வமாக அங்கீகரித்த முதல் ஸ்பானிய மொழி பேசும் நாடாக நிகரகுவா மாறியுள்ளது.
  - இந்திய மற்றும் நிகரகுவா அரசாங்கங்களுக்கிடையில் மருந்து உற்பத்தி மீதான ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்தானதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தமிழக முதல்வர் அவர்கள், அரசு அதிகாரிகள் குடிமக்களுடன் கலந்துரையாடி மாநில அரசின் பல்வேறு முன்னெடுப்புகள் பற்றிய கருத்துக்களைச் சேகரிக்கும் வகையில் 'நீங்கள் நலமா?' என்ற திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- சென்னையில் உள்ள தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NITTTR) ஆனது, பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டத்தின் 3வது பிரிவின் கீழ் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது.
- சுற்றுலா அமைச்சகம் ஆனது, சத்ரபதி சம்பாஜிநகரில் (மகாராஷ்டிரா மாநிலம்) உள்ள யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்களான அஜந்தா மற்றும் எல்லோரா குகைகளை அதன் இரண்டாவது ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் சேர்த்துள்ளது.
- குஜராத் மாநில வனத் துறையானது, கட்ச் மாவட்டத்தில் உள்ள பான்னி புல்வெளி வளங் காப்பகத்தில் இந்தியாவின் முதல் சிறுத்தை வளங்காப்பு இனப்பெருக்க மையத்தினை அமைக்க உள்ளது.

- இந்த மையம் ஆனது திறந்தவெளியில் தனிமைப்படுத்தப்பட்ட கூண்டுகளைக் கொண்டிருக்கும் என்பதோடு அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் சிறுத்தைகளைக் குஜராத்திற்கு கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ ஸோஹோ கார்ப்பரேஷன் நிறுவனமானது, சிறிய மற்றும் நடுத்தரப் பிரிவுகளில் உள்ள சில்லறை விற்பனைக் கடைகள் தங்களது அன்றாடச் செயல்பாடுகளை ஒழுங்கு படுத்துவதற்காக ஷாக்யா என்ற நவீன விற்பனைச் செயலாக்க வசதியை (PoS) அறிமுகப் படுத்தியுள்ளது.

❖ ஜம்முவில் தாவி நதிக் கரையில் நடைபெறும் 4 நாட்கள் அளவிலான தாவி திருவிழாவானது, டக்கர் கலாச்சாரத்தினைக் காட்சிப்படுத்துகிறது.

❖ சுவீடன் நாடானது, வாஷிங்டன் உடன்படிக்கைக்கு ஒப்புதல் அளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டு, அதிகாரப்பூர்வமாக வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் (நேட்டோ) 32வது உறுப்பினராக விரைவில் மாறவுள்ளது.

❖ தேசிய இயற்கை மருத்துவக் கழகத்தின் "நிசர்க் கிராம் திட்டத்தின்" கீழ், சுமார் 250 படுக்கைகள் கொண்ட பல்துறை ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க சேவை மையத்துடன் கூடிய இந்தியாவின் முதல் அரசு இயற்கை மருத்துவ முறை மருத்துவமனை சமீபத்தில் புனேவில் திறக்கப்பட்டது.

❖ தாய்லாந்தின் பட்டாயா நகரில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு BWF மாற்றுத் திறனாளிகளுக்கான பேட்மிண்டன் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய ஷட்டில் (நெட்டிப் பந்து) வீரர்கள் மூன்று தங்கம், நான்கு வெள்ளி மற்றும் 11 வெண்கலம் உட்பட 18 பதக்கங்களை வென்றனர்.

❖ 150 கோடி ரூபாய் ஒற்றை முறை நிதி ஆதரவுடன் இந்தியாவில் தலைமையகத்துடன் கூடிய சர்வதேச பெரும்பூனை இனங்கள் கூட்டணியை நிறுவச் செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

❖ இந்தியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான சமுத்திர லக்ஷ்மனா (இருதரப்புக் கடல்சார் பயிற்சி) பயிற்சியானது சமீபத்தில் ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப் பட்டினம் கடற்கரையில் நிறைவடைந்தது.

❖ உதவி ஆய்வாளர் சுமன் குமாரி, எல்லைப் பாதுகாப்புப் படையில் முதல் பெண் ஸ்னைப்பர் துப்பாக்கி சுடும் வீரராக இணைந்து வரலாறு படைத்துள்ளார்.

❖ துபாய் விளையாட்டுப் போட்டிகள் சபை மற்றும் கிராவிட்டி நிறுவனம் ஆகியவை இணைந்து முதன்முதலாக ஜெட் சூட் (புவிஈர்ப்பு விசைக்கு எதிராக பறக்க உதவும் அம்சங்கள் கொண்ட உடை) போட்டியினை நடத்தின.

❖ பீகாரின் பரௌனியில் அமைக்கப்பட்ட இந்துஸ்தான் உர்வரக் & ரசயான் லிமிடெட் (HURL) உர ஆலையானது, சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது.

❖ லார்சன் & டூப்ரோ (L&T) நிறுவனமானது, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தனது முதல் மின்பகுப்பானை, குஜராத்தின் ஹசிரா நகரில் அமைந்துள்ள பசுமை ஹைட்ரஜன் ஆலையில் நிறுவி இயக்கியுள்ளது.

❖ இந்தியாவின் முதல் அருகி வரும் கங்கை நதி ஓங்கில் இனங்கள் ஆராய்ச்சி மையம் ஆனது பீகாரின் பாட்னா நகரில் திறக்கப்பட்டுள்ளது.

❖ இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனம் ஆனது ஒடிசா மற்றும் மேற்கு வங்காளக் கடற்கரையில் கடல் அட்டை மெல்லுடலி என்ற புதிய வகையினைக் கண்டறிந்து உள்ளது.

- இது குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களின் பெயரால் அழைக்கப் படுகிறது.

❖ கேரள மாநிலம் ஆனது, ஐரிஸ் எனப்படும் தனது முதல் ஆக்கமிக்க செயற்கை நுண்ணறிவு ஆசிரியையினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- இது நிதி ஆயோக் அமைப்பினால் தொடங்கப்பட்ட அடல் மேம்பாட்டு ஆய்வகங்கள் (ATL) திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

❖ 'ஓஷன் கிரேஸ்' என்ற பெயரில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் ASTDS இழுவைக் கப்பல் மற்றும் நடமாடும் மருத்துவ வாகனம் (MMU) ஆகியவை சமீபத்தில் தொடங்கி வைக்கப் பட்டன.

❖ நதிக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் மெட்ரோ இரயில் சுரங்கப் பாதையானது மேற்கு வங்காள மாநிலத்தின் கொல்கத்தா நகரில் திறக்கப் பட்டுள்ளது.

❖ ஸ்பெயின் நாட்டின் மகளிர் கால்பந்து அணியானது பிரான்சு அணியை வீழ்த்தி தனது முதல் UEFA மகளிர் தேசிய லீக் போட்டியில் பட்டம் வென்று, வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியைப் பெற்றுள்ளது.

❖ பணியாளர் பாராட்டுத் தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டின் மார்ச் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.

❖ திருவனந்தபுரத்தில் உள்ள இந்திய விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (IIST) ஆனது, முன்மொழியப்பட்ட பாரத் குறைக்கடத்தி ஆராய்ச்சி மையத்தினை அமைப்பதற்கான சாத்தியமான இடமாக "தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது".

❖ ஜிண்டால் எஃகு (JSL) நிறுவனமானது, ஹரியானா மாநிலத்தின் ஹிசார் எனுமிடத்தில் அமைந்துள்ள அதன் எஃகு ஆலையில் பசுமை ஹைட்ரஜனின் முதல் பயன்பாட்டைத் தொடங்கியுள்ளது.

❖ சத்தீஸ்கரில் உள்ள சவுத் ஈஸ்டர்ன் கோல்ஃபீல்ட் (தென்கிழக்கு நிலக்கரித் தளங்கள்) லிமிடெட் நிறுவனத்தின் கெவ்ரா சுரங்கம் ஆசியாவின் மிகப்பெரிய நிலக்கரிச் சுரங்கமாக மாற உள்ளது.

- அந்த நிறுவனம் ஆனது, அதன் வருடாந்திர உற்பத்தித் திறனை 70 மில்லியன் டன்களாக விரிவுபடுத்துவதற்காக சுற்றுச்சூழல் அனுமதியைப் பெற்றுள்ளது.

❖ ஒருங்கிணைந்த வேளாண் செயல்பாட்டு மற்றும் கட்டுப்பாட்டு மையம் ஆனது தேசிய தலைநகரில் உள்ள கிருஷி பவனில் திறக்கப்பட்டுள்ளது.

❖ புரவலரும் எழுத்தாளருமான சுதா மூர்த்தி அவர்களின் பெயர் மாநிலங்களவையின் உறுப்பினர் பதவியில் நியமிக்கப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

- பல புத்தகங்களை எழுதியுள்ள இவர் இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் இணை நிறுவனர் N.R. நாராயண மூர்த்தியின் மனைவியும், மூர்த்தி அறக்கட்டளையின் தலைவரும் ஆவார்.

❖ முத்தையா முரளிதரன் மற்றும் ஷேன் வார்னே ஆகியோர் அடங்கிய, டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 700 விக்கெட்கள் வீழ்த்திய நபர்களின் பட்டியலில் இங்கிலாந்தின் ஜேம்ஸ் ஆண்டர்சன் சமீபத்தில் இணைந்துள்ளார்.

- தட்டம்மை மற்றும் ரூபெல்லாவை எதிர்த்துப் போராடுவதற்கான நாட்டின் முன்னெடுப்புகளை அங்கீகரிக்கும் வகையில், தட்டம்மை மற்றும் ரூபெல்லா கூட்டமைப்பு ஆனது இந்தியாவிற்கு மதிப்புமிக்க தட்டம்மை மற்றும் ரூபெல்லா சாம்பியன் (வாகையர்) விருதினை வழங்கியுள்ளது.
- ஆண்டிற்கு இருமுறை நடைபெறும் கடற்படைத் தளபதிகள் மாநாட்டின் 2024 ஆம் ஆண்டிற்கான முதல் மாநாடு ஆனது INS விக்ரமாதித்யா என்ற விமானம் தாங்கி கப்பலில் நடைபெற்றது.
- கோவாவில் அமைந்துள்ள FLY91 விமானப் போக்குவரத்து நிறுவனத்திற்கு வணிக நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு பொது விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) ஒப்புதல் அளித்துள்ளது.
- முதல் பாரத் நீராவி கொதிகலன் கண்காட்சி (2024) ஆனது, அசாம் மாநிலத்தின் கௌகாத்தியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.
- தமிழக அரசானது 2024 ஆம் ஆண்டிற்கான அவ்வையார் விருதிற்கு, பெண்ணியவாதி, ஆசிரியை மற்றும் நாவலாசிரியர் பாமா ஃபௌஸ்டினா சூசைராஜினைத் தேர்வு செய்துள்ளது.
- சமீபத்தில் ஓய்வு பெற்ற V. பழனிகுமாருக்கு அடுத்தப்படியாக இந்திய ஆட்சிப் பணி அதிகாரி P. ஜோதி நிர்மலாசாமி தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- சர்தார் ரமேஷ் சிங் அரோரா பாகிஸ்தான் நாட்டின் பஞ்சாப் மாகாணத்தின் முதல் சீக்கிய அமைச்சராகப் பதவியேற்று வரலாறு படைத்துள்ளார்.
- ஜம்மு & காஷ்மீர் காவல்துறையானது ஜம்மு, சம்பா மற்றும் கதுவா (JSK) காவல் செயல் பாட்டு எல்லைகளில் பசுக் கடத்தலைத் தடுப்பதற்காக "காமதேனு நடவடிக்கையை" தொடங்கியுள்ளது.
- இந்தியாவில் பொது மருந்துகளைப் பற்றிய விழிப்புணர்வையும், நாடு முழுவதும் உள்ள மில்லியன் கணக்கான மக்களுக்கு அவை எவ்வாறு உதவியாக இருக்கும் என்பதையும் ஊக்குவிக்கும் வகையில் மார்ச் 07 ஆம் தேதியன்று ஜன் ஔஷாதி திவாஸ் கொண்டாடப் பட்டது.
- அசாம் மாநிலத்தின் ஜோர்ஹாட் நகரில் அமைக்கப்பட்டுள்ள 'அகோம் பேரரசின் தலைமைப் படைத்தலைவர்' லச்சித் பர்புகானின் 125 அடி வெண்கலச் சிலையைப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்.
- பனாமா நாடானது, சர்வதேச சூரியசக்திக் கூட்டணியை (ISA) அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்து அதன் 97வது உறுப்பினர் நாடாக மாறியுள்ளது.
- சங்கம்: எண்ணிம இரட்டை முன்னெடுப்பிற்கான இரண்டாவது விழிப்புணர்வு என்ற நிகழ்ச்சி பெங்களூருவில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் நடத்தப் பட்டது.
- கர்நாடகாவின் பெங்களூரு நகரில் அமைந்துள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் இந்தியத் தோட்டக்கலை கல்வி நிறுவனத்தில் (ICAR-IIHR), ஒரு மாபெரும் "தேசிய தோட்டக்கலை கண்காட்சி – 2024" என்ற நிகழ்வானது ஏற்பாடு செய்யப்பட்டது.
- ஹரியானாவைச் சேர்ந்த யதின் பாஸ்கர் துகல் 2024 ஆம் ஆண்டு தேசிய இளையோர் பாராளுமன்ற விழாவில் முதல் பரிசை வென்றுள்ளார்.
  - தமிழகத்தைச் சேர்ந்த வைஷ்ணா பிச்சை இரண்டாம் பரிசையும், ராஜஸ்தானை சேர்ந்த கனிஷ்கா சர்மா மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

- எழுத்தாளர் கண்ணையன் தக்ஷிணாமூர்த்தி எழுதிய 'கருங்குன்றம்' புத்தகம் ஆனது 2023 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி மொழிபெயர்ப்பு பரிசிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
    - கண்ணையன் தக்ஷிணாமூர்த்தி, மாமாங் தாய் என்பவர் எழுதிய 'The Black Hill' எனப்படும் ஆங்கில புதினத்தினை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.
- மனோகர் லால் கட்டார் இராஜினாமா செய்ததையடுத்து ஹரியானா மாநிலத்தின் புதிய முதல்வராக நயாப் சிங் சைனி பதவியேற்றுள்ளார்.
- இந்தியாவில் உள்ள மத்திய துணை இராணுவப் படைகளுள் இரயில்வே பாதுகாப்புப் படையில் (RPF) அதிகப் பெண் பணியாளர்கள் (9%) உள்ளனர்.
- மொஹாலியில் உள்ள பிரதான தேசிய வேளாண்-உணவு உயிரித் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் (NABI) முதல்-வகையான "தேசிய பயிர் வளர்ச்சி தூண்டுதல் மையம்" ஆனது தொடங்கப்பட்டது.
- சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில், முப்பரிமாண அச்சிடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கட்டமைக்கப்பட்ட உலகின் முதல் மசூதியானது சமீபத்தில் திறக்கப்பட்டது.
- இந்திய நாடானது, சீனாவிற்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் கைபேசி உற்பத்தி செய்யும் இரண்டாவது நாடாக மாறியுள்ளது.
- பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதில் குழாய் அமைப்புப் பணிகள் கொண்டுள்ள முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதற்காக ஆண்டுதோறும் மார்ச் 11 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் உலக குழாய் அமைப்புப் பணிகள் தினம் கொண்டாடப்படுகிறது.
- இந்தியாவின் முதல் சிறிய அளவிலான திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு உற்பத்தி அலகு ஆனது மத்தியப் பிரதேசத்தில் உள்ள விஜய்ப்பூர் நகரில் திறக்கப்பட்டுள்ளது.
- குஜராத்தின் பாவ்நகர் அரசு மருத்துவமனையில் பணியமர்த்தப்பட்டுள்ள 23 வயதான கணேஷ் பாரையா, உலகின் மிகக் குள்ளமான மருத்துவர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- குஜராத்தின் வடோதரா மாநகராட்சிக் கழகம் ஆனது, அங்கீகாரம் பெற்ற ஆசியாவின் முதல் மாநகராட்சிக் கழக பசுமைப் பத்திரத்தை வெளியிட்டதன் மூலம் 1 பில்லியன் ரூபாய் நிதியைத் (12.07 மில்லியன் டாலர்) திரட்டியுள்ளது.
- சுழிய நிலை கார்பன் உமிழ்வு கொண்ட கட்டிடங்கள் செயல் திட்டத்தை (ZCBAP) தொடங்கியதன் மூலம், நிலையான மேம்பாட்டினை நோக்கி முதல் அடி எடுத்து வைத்துள்ள நாட்டின் முதல் நகரமாக நாக்பூர் மாறியுள்ளது.
- டெல்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் ஆனது, தொடர்ந்து ஆறாவது ஆண்டாக ஆசிய-பசிபிக் பிராந்தியத்தின் 'சிறந்த விமான நிலையம்' என்ற விருதை பெற்றுள்ளது.
- கிஷோர் மக்வானா, பட்டியலிடப்பட்ட சாதியினருக்கான தேசிய ஆணையத்தின் (NCSC) தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.
    - லவ் குஷ் குமார் பட்டியலிடப்பட்ட சாதியினருக்கான தேசிய ஆணையத்தின் (NCSC) உறுப்பினராக பொறுப்பேற்றுள்ளார்.
- ஆசிஃப் அலி சர்தாரி, பாகிஸ்தானின் 14வது அதிபராகப் பதவியேற்றுள்ளார்.

- டாடா மோட்டார்ஸ் குழுமம் ஆனது, ஐந்து ஆண்டுகளில் 9,000 கோடி ரூபாய் முதலீட்டில் வாகனத் தயாரிப்பு மையத்தினை உருவாக்குவதற்காக தமிழ்நாடு அரசுடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- பிரதமர் அவர்கள் கோச்ராப் ஆசிரமத்தைத் திறந்து வைத்து, குஜராத்தின் அகமதா பாத் நகரில் காந்தி ஆசிரம நினைவகத்தினை அமைப்பதற்கான ஒரு செயல் திட்டத்தினையும் தொடங்கி வைத்தார்.
- மலேசியாவின் பினாங் மாகாணத்தில் நடைபெற்ற 45வது IAA உலக மாநாட்டில் சீனிவாசன் K.சுவாமிக்கு IAA கோடன் காம்பஸ் விருது வழங்கப்பட்டுள்ளது.
- மாருதி சுசுகி நிறுவனத்தின் இந்தியாவிலேயே முதல் வகையான வாகன உற்பத்தி ஆலைக்குள்ளேயே அமைக்கப்பட்ட இரயில்வே வழித்தடத் திட்டம் ஆனது குஜராத் மாநிலத்தின் ஹன்சல்பூர் நகரில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தியக் கடலோரக் காவல்படை மற்றும் அமெரிக்கக் கடலோரக் காவல்படை ஆகியவை இடையே மேற்கொள்ளப்படும் ‘சீ டிஃபெண்டர்ஸ்-2024’ எனப்படும் விரிவான கடல்சார் பாதுகாப்புப் பயிற்சியானது அந்தமானின் போர்ட் பிளேயரில் மிகவும் வெற்றிகரமாக நிறைவு அடைந்தது.
- மகாராஷ்டிராவில் முதன்முறையாக, வொர்லி கோலிவாடா அருகே அரபிக்கடலில் 210 செயற்கை பவளப்பாறைகள் மும்பையில் நிறுவப்பட உள்ளன.
  - பாண்டிச்சேரிக்கு அடுத்தபடியாக நாட்டில் செயற்கையானப் பவளப்பாறைகள் அமைக்கப் படுவது இதுவே இரண்டாவது முறையாகும்.
- திருவனந்தபுரத்தில் உள்ள மத்திய மேம்பட்ட கணினித் திறன் மையத்தில் (C-DAC), “உத்திசார் பயன்பாட்டிற்கான மின்னணுப் பொருட்களுக்கான குறைக்கடத்தி சில்லுகள் & அமைப்புகள்” என்ற பெயரிலான இந்தியாவின் முதல் FutureLABS மையம் திறக்கப் பட்டுள்ளது.
- ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் ஞானேஷ் குமார் மற்றும் சுக்பீர் சிங் சந்து ஆகியோர் இந்திய தேர்தல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- வருவாய்ப் புலனாய்வு இயக்குனரகம் ஆனது, உதயசூரியன் (ரைசிங் சன்) என்ற ஒரு நடவடிக்கையின் கீழ் ஒரு பெரிய தங்கக் கடத்தல் நடவடிக்கையைத் தடுத்துள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, 2025 ஆம் ஆண்டிற்குள், ‘AsteriX ஆய்வகம்’ எனப்படுகின்ற ஒரு சிறிய விண்வெளி ஆய்வகத்தைச் சுற்றுப்பாதையில் நிலை நிறுத்துவதற்காக Vellon Space எனப்படும் விண்வெளி சார் புத்தொழில் நிறுவனத்துடன் இணைந்து நிதியுதவி வழங்குகிறது.
- ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தில் 2.5 ஏக்கர் பரப்பிலான நிலத்தை வாங்குவதற்கு மகாராஷ்டிரா அரசு முடிவு செய்துள்ளது.
  - ஜம்மு காஷ்மீரில் நிலம் வாங்கும் முதல் மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- மும்பை கிரிக்கெட் அணியானது, மும்பையில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு ரஞ்சி கோப்பை போட்டியில் விதர்பா அணியினை வீழ்த்திக் கோப்பையினை வென்றது.
- இரண்டாவது உலகத் தமிழ் செம்மொழி மாநாடு ஆனது, 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சென்னையில் ஐந்து நாட்கள் வரை நடைபெறும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
  - முதல் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு ஆனது 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கோயம்பத்தூரில் நடைபெற்றது.

- நடைபெற உள்ள 18வது மக்களவைத் தேர்தல் மற்றும் ஆந்திரப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம், ஒடிசா மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களின் சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான தேர்தல் அட்டவணையை இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் அறிவித்தார்.
    - 2024 ஆம் ஆண்டு மக்களவை தேர்தல் ஆனது ஏப்ரல் 19 முதல் ஜூன் 01 வரையிலான தேதிகளில் ஏழு கட்டங்களாக நடைபெறும்.
- டாடா சன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவரான ரத்தன் டாடாவிற்கு, அவரது சிறந்த மனிதாபிமான (புரவலர்) பங்களிப்புகளுக்காக மதிப்புமிக்க P.V. நரசிம்ம ராவ் நினைவு விருது வழங்கப்பட்ட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் சிறந்த பெண் ஊடகவியலாளருக்கான சமேலி தேவி ஜெயின் விருது ஆனது தனிச் சுதந்திரம் கொண்ட (எந்தவித வெளித் தாக்கமும் இல்லாத) பத்திரிகையாளர் கிரீஷ்மா குதர் மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழின் ரித்திகா சோப்ரா ஆகியோருக்கு கூட்டாக வழங்கப் பட்டுள்ளது.
- மகாராஷ்டிரா அரசானது, 18 ஆம் நூற்றாண்டின் மராத்திய இராணி அஹில்யாபாய் ஹோல்கரின் நினைவாக அகமதுநகர் மாவட்டத்தின் பெயரை 'அஹில்யா நகர்' என மறுபெயரிட முடிவு செய்துள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 17 ஆம் தேதியை 'ஐதராபாத் விடுதலை நாளாக' கொண்டாட உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
    - 1948 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதியன்று மேற்கொள்ளப்பட்ட 'போலோ நடவடிக்கை' என்ற காவல் துறை நடவடிக்கைக்குப் பிறகு இந்தப் பகுதி நிஜாமின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது.
- மகாராஷ்டிரா, கர்நாடகா, உத்தரப் பிரதேசம், புது டெல்லி மற்றும் தமிழ்நாடு ஆகிய ஐந்து மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 183 சில்லறை விற்பனை நிலையங்களில் எத்தனால் 100 எனப்படும் மாற்று வாகன எரிபொருளை இந்தியன் ஆயில் நிறுவனம் அறிமுகப் படுத்தியுள்ளது.
- 'நௌசேனா பவன்' எனப்படும் இந்தியக் கடற்படையின் பிரத்தியேக தலைமையகம் ஆனது டெல்லி இராணுவக் குடியிருப்பில் திறக்கப்பட்டுள்ளது.
- இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையே மேற்கொள்ளப்பட்ட இந்திய-மத்தியக் கிழக்கு ஐரோப்பா பொருளாதார வழித்தடம் மீதான ஒத்துழைப்பில் அரசுகளுக்கிடையேயான கட்டமைப்பு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- இந்தியாவின் நுமாலிகர் சுத்திகரிப்பு லிமிடெட் (NRL) நிறுவனம் ஆனது, தனது முதல் வெளிநாட்டு அலுவலகத்தினை வங்காளதேசத்தின் டாக்கா நகரில் திறந்துள்ளது.
- தேர்தல் ஆணையம் ஆனது, மாற்றுத் திறனாளி வில்வித்தை வீராங்கனையும் அர்ஜுனா விருது பெற்றவருமான ஷீத்தல் தேவியை அதன் தேசிய PwD (மாற்றுத் திறனாளி) நபர்களின் அடையாளச் சின்னமாக அறிவித்துள்ளது.
- புவனேஷ்வர் நகரில் உள்ள கலிங்கா மைதானத்தில் இந்தியாவின் முதல் உள்ளரங்க தடகள மற்றும் நீர் சார்ந்த விளையாட்டுகளுக்கான மையங்களை ஒடிசா அரசு திறந்து வைத்துள்ளது.
- இந்திய இராணுவம் மற்றும் செஷெல்ஸ் நாட்டுப் பாதுகாப்புப் படைகள் இணைந்து 10வது 'LAMITIYE-2024' என்ற கூட்டு இராணுவப் பயிற்சியை நடத்துகின்றன.

- 2024 ஆம் ஆண்டு DHL உலக இணைப்பு அறிக்கையின்படி, DHL இணைப்புக் குறியீட்டில் உள்ள 171 நாடுகளில் இந்தியா 62வது இடத்தில் உள்ளது.
- ஜார்க்கண்ட் மாநில ஆளுநர் C.P. இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு, தெலுங்கானா மாநிலத்தின் ஆளுநர் பதவியானது கூடுதல் பொறுப்பு ஆக வழங்கப்பட்டுள்ளது.
  - தமிழிசை சௌந்தரராஜன் தனது ஆளுநர் பதவியை இராஜினாமா செய்ததை அடுத்து இந்தப் பொறுப்பு மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்தியாவில் 2024 ஆம் ஆண்டு கிரிக்கெட் மகளிர் பிரீமியர் லீக் (WPL) இறுதிப் போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் (RCB) அணியானது டெல்லி கேப்பிடல்ஸ் அணியினை வீழ்த்தியது.
- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் முப்படைகளுக்கு இடையேயான டைகர் ட்ரையம்ப் எனப்படும் இருதரப்பு மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண (HADR) நீர் மற்றும் நிலம் சார் பயிற்சியின் தொடக்க விழாவானது, INS ஜலஷ்வா கப்பலில் நடைபெற்றது.
- பிரபல மலையாள கவிஞர் பிரபா வர்மா 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க சரஸ்வதி சம்மான் இலக்கிய விருதைப் பெற்றுள்ளார்.
- உலக சுகாதார அமைப்பின் பரிந்துரையான 1:1000 என்ற விகிதத்தை விட முன்னேறி, 1:900 என்ற மருத்துவர் மற்றும் மக்கள்தொகை இடையேயான விகிதத்தினை இந்தியா அடைந்துள்ளது.
- இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் எரிசக்தி, முக்கிய கனிமங்கள், தொழில் நுட்பம் மற்றும் தீவிரவாத எதிர்ப்பு மீதான தங்களது முதலாவது '2+2' பாதுகாப்பு அமைச்சர்கள் பேச்சுவார்த்தையினை மேற்கொண்டுள்ளன.
- வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாக ஸ்ரீநகரில் முதலாவது பார்முலா 4 கார் பந்தய செயல் விளக்க நிகழ்வு சமீபத்தில் நடைபெற்றது.
- 3F ஆயில் பாம் நிறுவனத்தினால் நிறுவப்பட்ட இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த செம்பனை எண்ணெய் (பாமாயில்) செயலாக்க ஆலை ஆனது அருணாச்சலப் பிரதேசத்தில் தனது வணிக நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது.
- வாகன் கெதிங் வேல்ஸ் நாட்டின் முதல் அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதை அடுத்து, ஐக்கியப் பேரரசில் ஓர் அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்ற முதல் கறுப்பினத் தலைவர் என்ற பெருமையினை அவர் பெற்றுள்ளார்.
- ஐக்கிய நாடுகள் சபையானது மார்ச் 15 ஆம் தேதியினை இஸ்லாமியத்திற்கு எதிரான மனப்பாங்கினை எதிர்த்துப் போராடுவதற்கான சர்வதேச தினமாக அனுசரிக்கிறது.
  - இது "முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு, பாகுபாடு மற்றும் வன்முறை ஆகியவற்றிற்கு எதிராக உறுதியான நடவடிக்கை மேற்கொள்வதை" முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேம்பாட்டு வங்கியான இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியானது, அவானா நிலைத்தன்மை நிதி (ASF) எனப்படும் 120 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான அதன் முதல் தொகுப்பு நிதித் திட்டத்திற்கு என்று பசுமை பருவநிலை நிதியத்தின் அனுமதியைப் பெற்றுள்ளது.
- 'சோமா: தி ஆயுர்வேத கிச்சன்' எனப்படுகின்ற இந்தியாவின் முதல் ஆயுர்வேத சிற்றுண்டியகம் ஆனது, டெல்லி மகரிஷி ஆயுர்வேத மருத்துவமனையில் திறக்கப் பட்டுள்ளது.

- நேபாளப் பிரதமர் பிரசந்தா அவர்கள், பொக்காரா நகரினை "நேபாளத்தின் சுற்றுலாத் தலைநகராக" அறிவித்துள்ளார்.
- மெட்டா நிறுவனமானது, வரவிருக்கும் மக்களவைத் தேர்தலின் போது அதன் இணைய தளங்களில் பரவும் தவறான பொய்த் தகவல்களைக் கட்டுப்படுத்தவும், வாக்காளர் குறுக்கீடுகளை அகற்றவும், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை நன்கு அதிகரிக்கவும் ஒரு 'விரிவான அணுகுமுறையை' அறிமுகப்படுத்தியுள்ளது.
- 28வது பங்குதாரர் மாநாட்டின் (2023 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பருவ நிலை மாற்ற மாநாடு) தலைவர் ஐக்கிய அரபு அமீரகத்தின் டாக்டர் சுல்தான் அல் ஜாபர், CERAWeek தலைமைத்துவ விருதைப் பெற்றுள்ளார்.
- 3வது வடகிழக்கு விளையாட்டுப் போட்டிகளானது (2024) நாகாலாந்தின் சோவிமா நகரில் தொடங்கியது.
- இந்திய மின்கட்டமைப்பு கட்டுப்பாட்டுக் கழக லிமிடெட் (GRID-INDIA) நிறுவனமானது, மினிரத்னா-I வகையிலான மத்திய பொதுத்துறை நிறுவனம் என்ற அந்தஸ்தினைப் பெற்றதன் மூலம் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் இந்தியாவின் முதல் பேருந்து ஆனது மகாராஷ்டிரா மாநில சாலைப் போக்குவரத்துக் கழகத்தினால் அறிமுகப் படுத்தப் பட்டு இயக்கப்பட்டது.
- டேபிள் டென்னிஸ் வீரர் சத்தியன் ஞானசேகரன், லெபனானின் பெய்ரூட் நகரில் நடைபெற்ற WTT ஃபீடர் தொடர் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் வெற்றி பெற்ற முதல் இந்தியர் என்ற வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளார்.
- பிரெஞ்சு மொழி மற்றும் கலாச்சாரத்தின் பாதுகாப்பு மற்றும் மறுமலர்ச்சியை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் மார்ச் 20 ஆம் தேதியன்று பிரெஞ்சு மொழி தினம் ஆனது கொண்டாடப்படுகிறது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) நான்காவது புத்தொழில் மன்றமானது புது டெல்லியில் நடத்தப் பட்டது.
- குட்எனஃப் எனர்ஜி நிறுவனமானது, ஜம்மு காஷ்மீரில் இந்தியாவின் முதலாவது மாபெரும் மின்கல ஆற்றல் சேமிப்பு கல உற்பத்தி ஆலையினை (ஜிகாஃபாக்டரி) துவக்கும் திட்டத்தினை அறிவித்துள்ளது.
  - இந்த ஆலையானது, ஆண்டுதோறும் 5 மில்லியன் டன் கார்பன் உமிழ்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியா, மொசாம்பிக் மற்றும் தான்சானியா நாடுகளின் கடற்படைகள் ஆனது, IMT TRILAT 2024 எனப்படுகின்ற இரண்டாவது முத்தரப்பு (TRILAT) கடல்சார் பயிற்சியில பங்கேற்கின்றன.
- வரவிருக்கும் 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்திய டேபிள் டென்னிஸ் வீரர் ஷரத் கமல் தேசியக் கொடியை ஏந்தி இந்திய அணியை வழிநடத்தும் வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற M.C. மேரி கோம் கோடைக்கால விளையாட்டுப் போட்டிகளுக்கான இந்திய அணியின் தலைமைப் பொறுப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) ஆனது, தனது எண்ணிமப் புத்தாக்க வாரியத்தின் இணைத் தலைமை பொறுப்பிற்கு இந்திய நாட்டினைத் தேர்ந்தெடுத்து உள்ளது.
    - தொலைத்தொடர்பு துறை செயலாளர், டாக்டர் நீரஜ் மிட்டல், சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியத்தின் எண்ணிம புத்தாக்க வாரியத்தின் இணைத் தலைவராக ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், 'ஆர்டர் ஆஃப் தி ட்ருக் கியால்போ' என்ற பூடான் நாட்டின் உயரியக் குடிமை விருதினைப் பெற்றுள்ளார்.
    - இந்தக் கௌரவத்தைப் பெறும் முதல் வெளிநாட்டு அரசாங்கத் தலைவர் இவர் ஆவார்.
- குழந்தைகள் மற்றும் இளையோர்களுக்கான நாடகக் கலை மீது பரந்த அளவில் பொதுமக்களின் கவனத்தை நன்கு ஈர்க்கச் செய்யும் வகையில், குழந்தைகள் மற்றும் இளையோர்களுக்கான உலக நாடக தினம் ஆனது ஆண்டுதோறும் மார்ச் 20 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
- NLC இந்தியா லிமிடெட் (NLCIL) நிறுவனமானது, சமீபத்தில் புது டெல்லியில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு உலகத் தூய்மை ஆற்றல் உச்சி மாநாட்டின் போது, சுரங்கப் பிரிவில் 2024 ஆம் ஆண்டு GEEF உலக சுற்றுச்சூழல் விருதினைப் பெற்றுள்ளது.
- சமூக மற்றும் சுற்றுச்சூழல் ஏற்றத்தாழ்வுகள் களத்தில் ஆற்றிய மிகவும் அற்புதமான பணிக்காக பினா அர்கவால் மற்றும் ஜேம்ஸ் K. பாய்ஸ் ஆகியோருக்கு முதலாவது "உலகச் சமத்துவமின்மை ஆராய்ச்சி விருது" ஆனது வழங்கப்பட்டுள்ளது.
- நாசா நிறுவனமானது, முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட ஒரு இயந்திரத்தை (என்ஜின்) சமீபத்தில் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.
    - இந்தப் புதுமையான உந்துவிசை அமைப்பு ஆனது, சுழலும் வகையிலான வெடிப்பு முறையில் தூண்டுவிக்கப்படும் எந்திரம் (RDRE) என்று அழைக்கப்படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 22 ஆம் தேதியன்று, பீகார் மாநிலத்தில் அம்மாநிலத்தின் உருவாக்க தினத்தினை நினைவு கூரும் வகையில் பீகார் திவாஸ் தினம் கொண்டாடப் படுகிறது.
    - 1912 ஆம் ஆண்டில் பீகார் மற்றும் ஒரிசா ஆகியவை வங்காளத்தில் இருந்து தனி மாநிலங்களாகப் பிரிந்தன.
- ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 24 ஆம் தேதியன்று, ஒட்டுமொத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் தன்மதிப்பு தொடர்பான உண்மையறியும் உரிமைக்கான சர்வதேச தினம் ஆனது கொண்டாடப்படுகிறது.
    - இந்த வருடாந்திர அனுசரிப்பு ஆனது, 1980 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் தேதியன்று படுகொலை செய்யப்பட்ட மான்சிக்னர் ஆஸ்கார் அர்னுல்ஃபோ ரோமெரோ அவர்களின் நினைவாக மேற்கொள்ளப்படுகிறது.
- கைது செய்யப்பட்ட மற்றும் காணாமல் போன ஐநா பணியாளர்களுக்கான சர்வதேச ஒன்றிணைவு தினமானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 25 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
    - இந்தத் தினமானது, 1985 ஆம் ஆண்டில் பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண மற்றும் பணி முகமையில் (UNRWA) பணியாற்றிய முன்னாள் பத்திரிகையாளர் அலெக் கோலெட் கடத்தப்பட்டதை நினைவு கூரும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப்படுகிறது.

- கருவில் உள்ள சிசுவின் நினைவாக ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 25 ஆம் தேதியன்று கருவில் உள்ள சிசுக்களுக்கான சர்வதேச தினம் அனுசரிக்கப் படுகிறது.
- தேர்தல் ஆணையம் ஆனது, மாற்றுத் திறனாளிகள் எளிதாக வாக்களிக்கவும் வாக்குச் சாவடிகளில் இதர வசதிகளைப் பெறுவதற்கும் வழிவகை செய்யும் வகையில் சாக்சம் என்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- உச்ச நீதிமன்றமானது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவிப்பதற்கான நாட்டின் சர்வதேச உறுதிப்பாடுகளுடன், அருகி வரும் கானமயில் பறவை இனத்தின் வளங்காப்பு மற்றும் பாதுகாப்பினைச் சமநிலைப்படுத்துவதற்காக என்று ஒரு நிபுணர் குழுவினை அமைத்துள்ளது.
    - குஜராத் மற்றும் ராஜஸ்தானில் உள்ள அவற்றின் முக்கிய வாழ்விடங்களை ஒட்டி அமைந்துள்ள மிக உயர் ஆற்றல் கொண்ட மின் கம்பி வடங்களில் அடிக்கடி சிக்கி அவை உயிரிழக்கின்றன.
- குஜராத் கூட்டுறவுப் பால் சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு (GCMMF) ஆனது, நான்கு வகையான பால்களை அமெரிக்கச் சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இந்திய நாட்டிற்கு வெளியே வேறொரு நாட்டில் அமுல் வகை தூய பால் கிடைப்பது இதுவே முதல் முறையாகும்.
- டி20 கிரிக்கெட் போட்டிகளில் 12,000 ரன்களை எட்டிய முதல் இந்திய வீரர் என்ற ஒரு பெருமையை விராட் கோலி பெற்றுள்ளார்.
- உலக பியானோ தினமானது ஆண்டின் 88வது நாளில் (மார்ச் 28) அனுசரிக்கப் படுகிற நிலையில் இது "இசைக்கருவிகளின் ராஜாவாக" கருதப்படும் பியானோ கருவியைக் கொண்டாடுகின்ற உலகெங்கிலும் உள்ள பியானோ பிரியர்களை ஒன்றிணைக்கிறது.
- இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் ஆனது உலகின் வலுவான காப்பீட்டு நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
    - அதனைத் தொடர்ந்து தைவான் நாட்டில் அமைந்துள்ள NRMA காப்பீட்டு நிறுவனம், ஆஸ்திரேலிய நாட்டில் அமைந்துள்ள கேத்தே என்ற ஆயுள் காப்பீட்டு நிறுவனம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- சிங்கப்பூர் நாட்டின் "டாலி" என்ற கொள்கலன் (சரக்கு) கப்பல் ஆனது அமெரிக்காவின் பால்டிமோர் நகரில் அமைந்துள்ள பிரான்சிஸ் ஸ்காட் கே பாலத்தின் தூண்களுள் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானது.
- இராமகிருஷ்ணா இயக்கத்தின் தலைவர் சுவாமி ஸ்மரனாநந்தா சமீபத்தில் காலம் ஆனார்.
    - அவர் 2017 ஆம் ஆண்டில் அவ்வியக்கத்தின் 16வது தலைவராகப் பொறுப்பேற்றார்.
- சர்வதேச திருநர்கள் குறித்த தெளிவான பார்வை என்ற தினமானது (Trans Day of Visibility) ஆண்டுதோறும் மார்ச் 31 ஆம் தேதியன்று, திருநர்களைக் கொண்டாடுவதற்காகவும், உலகளவில் உள்ள திருநர்கள் எதிர்கொள்ளும் பாகுபாடுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் வேண்டி அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## கர்பினி-GA2 செயற்கை நுண்ணறிவு மாதிரி

- கருவின் கர்ப்பகால வயதைத் துல்லியமாகக் கணிப்பதற்காக, ஆராய்ச்சியாளர்கள் இந்தியா சார்ந்த செயற்கை நுண்ணறிவு மாதிரியை உருவாக்கியுள்ளனர்.
- இந்த மாதிரியானது சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் ஹரியானாவின் ஃபரிதாபாத் நகரில் உள்ள நாடுகளுக்கிடையேயான சுகாதார அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஆகியவற்றினைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- பிறப்பு சார்ந்த பல்வேறு கண்காணிப்புச் செயல்பாடுகள் தொடர்பான மேம்பட்ட ஆராய்ச்சிக்கான ஓர் இடைநிலைக் குழுவின் ஒரு பகுதியான இது DBT இந்தியா முன்னெடுப்பு (GARBH-Ini) திட்டம் எனப்படுகிறது.
- கர்ப்பினி-GA2 என்பது இந்திய மக்கள் தொகைத் தரவைப் பயன்படுத்தி உருவாக்கப் பட்ட மற்றும் சரிபார்க்கப்பட்ட முதல் மூன்று மாத கால கர்ப்பகால வயது மதிப்பீட்டு மாதிரி ஆகும்.
- கர்ப்பினி-GA2 மாதிரியானது, சுமார் மூன்று மடங்கு வரை பிழையைக் குறைப்பதன் மூலம் கருவின் வயதை துல்லியமாக மதிப்பிடுகிறது.




## 'இலக்கிய மாமணி' விருதுகள்

- தமிழக முதல்வர் அவர்கள் அரங்க. இராமலிங்கம், K.N. கோதண்டம், மா. மருதாச்சலம் என்கிற சூர்யகாந்தன், மணி அர்ஜுனன், அர. திருவிடம், க.பூரணச்சந்திரன், G. மாணிக்க வாசகன், S. சண்முகசுந்தரம், S. நடராசன் என்கிற இலக்கியா நடராசன் ஆகிய ஒன்பது தமிழறிஞர்களுக்கு 'இலக்கிய மாமணி' விருதுகளை வழங்கினார்.
- இந்த விருது 5 லட்சம் பரிசுத் தொகை, தங்கப் பதக்கம் மற்றும் ஒரு பாராட்டுப் பத்திரம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- இராணிப்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள மறைந்த தமிழறிஞர் மு.வரதராசன் அவர்களின் சிலையையும் முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

- வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் அமைக்கப்பட்டுள்ள மறைந்த தமிழறிஞரும் சுதந்திரப் போராட்ட வீரருமான அண்ணல் தங்கோவின் சிலை, செங்கல்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள மறைந்த சாதி ஒழிப்புப் போராளி இரட்டைமலை சீனிவாசனின் அவர்களின் சிலை ஆகியவையும் திறந்து வைக்கப் பட்டன.

## குலசேகரப்பட்டினம் விண்வெளி ஏவு தளம்




- சிறிய செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவுவதற்காக அமைக்கப்பட உள்ள குலசேகரப் பட்டினம் விண்வெளி ஏவு தளம் ஆனது இரண்டு ஆண்டுகளில் கட்டி முடிக்கப் படும்.
- இது ஆண்டிற்கு சுமார் 24 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தும் திறன் கொண்டதாக இருக்கும்.
- இஸ்ரோவின் ஸ்ரீஹரிகோட்டா ஏவு தளத்திலிருந்து ஒரு செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்படும் போது ஏவு கலம் முதலில் கிழக்கு நோக்கிச் சென்று, பின்னர் தெற்கு நோக்கி திரும்பும்.
- ஆனால் குலசேகரன்பட்டினம் விண்வெளி ஏவு தளத்திலிருந்து செயற்கைக்கோள் ஏவப்படும் போது இந்த திசைதிருப்பல் செயல்பாட்டின் அவசியம் இருக்காது என்பதால் ஏவு கலங்கள் நேராக தெற்கு திசையில் பயணிக்க முடியும்.
- மேலும், ஸ்ரீஹரிகோட்டாவை விட குலசேகரப்பட்டினம் பூமத்திய ரேகைக்கு (நிலநடுக் கோட்டிற்கு) அருகில் உள்ளது.
- 500 கிலோ கிராமிற்கும் குறைவான எடையுள்ள செயற்கைக்கோள்களைப் புவி தாழ் மட்ட சுற்றுப்பாதையில் செலுத்துவதற்கு SSLV ஏவு வாகனங்கள் பயன்படுத்தப் படுகின்றன.

## மாநில அரசின் புதிய மின் ஆளுகை முன்னெடுப்பு

- தமிழ்நாடு அரசு ஆனது, தமிழ்நாடு பொது நிதி கண்காணிப்பு அமைப்பை (TNPFTS) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது நடைமுறைகளை எளிமையாக்குதல், கருவூலம் முதல் கடைநிலைப் பயனர்கள் வரையிலான நிதி செயல்பாட்டினை முழுமையாகக் கண்காணித்தல் மற்றும் செலவினங்களை சீரமைத்தல் போன்றவற்றை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் சுய சேவைத் தேவைகளை எளிதாக்கும் வகையில் ‘களஞ்சியம்’ இணைய தளத்தினையும் மற்றும் கைபேசி செயலியினையும் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- புதிய சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தினை மிகவும் திறம்பட செயல்படுத்துவதைக் கண்காணிப்பதற்காக மற்றொரு இணையதளம் மற்றும் கைபேசி செயலி தொடங்கப் பட்டுள்ளது.

## 11 ஆம் நூற்றாண்டு விஷ்ணு கோயில்

- தமிழ்நாடு தொல்லியல் துறையானது விஷ்ணு கோவிலில் வளங்காப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளைத் தொடங்கியுள்ளது.
- விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வானூர் அருகே அமைந்த உலகபுரத்தில் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னமாகும்.
- இந்தக் கோயில் கி.பி 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கூறப்படுகிற நிலையில், அப்போது இந்தக் கிராமம் உலகமாதேவிபுரம் என்று அழைக்கப்பட்டது.
- இது சோழ மன்னன் முதலாம் இராஜ இராஜனின் இராணியின் பெயரால் அழைக்கப் படுகிறது.
- இக்கோயிலில் சோழ மன்னன் முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டுகள் காணப் படுவதோடு, மேலும் அந்தக் கோயிலுக்கு வழங்கப்பட்ட நன்கொடைகள் பற்றிய பல பதிவுகளும் அங்கு உள்ளன.



## ஸ்டெர்லைட் குறித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு 2024


- உச்ச நீதிமன்றம் ஆனது, தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை மீண்டும் திறக்கக் கோரி வேதாந்தா நிறுவனம் தாக்கல் செய்த சிறப்பு அனுமதி மனுவை பிப்ரவரி 29 ஆம் தேதியன்று தள்ளுபடி செய்தது.
- 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், சுற்றுச்சூழல் விதி மீறல்களை ஏற்படுத்துகிறது என்ற காரணத்திற்காக அந்த ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும் என்ற மாநில அரசு மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) அறிவித்த முடிவை உறுதி செய்த சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் உறுதி செய்கிறது.
- தாமிரபரணி நதிக்கரையை ஒட்டியமைந்த தனியார் நிலங்கள் உட்பட 11 இடங்களில் வகைத் தொகையற்ற தாமிரக் கசடுகளை கொட்டியது உட்பட ஆலையில் மீண்டும் மீண்டும் பல விதி மீறல்கள் நடைபெற்றன.
- ஆலையின் ஒரு பகுதியில் அபாயகரமான கழிவுகளை கொட்டுவதற்கான அங்கீகாரம் பெறுவதில் தோல்வி ஏற்பட்டது.
- இருப்பினும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியமானது தனது கடமைகளை நிறைவேற்றச் செய்வதில் அலட்சியம் காட்டியுள்ளது என்று உயர்நீதிமன்றம் ஒப்புக் கொண்டது.




## தமிழகத்தின் நிறுவப்பட்ட எரிசக்தி திறன் 2026-27

- 2021-22 ஆம் ஆண்டில் 35,690 மெகாவாட்டாக உள்ள தமிழ்நாட்டின் மொத்த நிறுவப்பட்ட மின்னாற்றல் உற்பத்தித் திறன் ஆனது சுமார் 31.8% அதிகரித்து 2026-27 ஆம் ஆண்டில் 47,048 மெகா வாட்டாக அதிகரிக்கும்.

- தமிழக மாநிலத்தில் கடந்த ஆண்டு ஏப்ரல் 20 ஆம் தேதி அதிகபட்சமாக 19,387 மெகா வாட் மின்னாற்றல் தேவையானது பதிவானது.
- இது தென் மாநிலங்களில் அதிக மின் தேவையைக் கொண்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் பதிவான 16,891 மெகாவாட் என்ற உண்மையான மின்னாற்றல் தேவையுடன் ஒப்பிடும் போது, 2026-27 ஆம் ஆண்டில் தமிழகத்தின் உச்சக் கட்ட மின் தேவை 21,736 மெகா வாட்டாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 2026-27 ஆம் ஆண்டில் மொத்த ஆற்றல் தேவையானது 1,44,0,86 அலகுகளாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 13,685 மெகாவாட்டாக இருந்த மாநிலத்தின் நிலக்கரி சார்ந்த உற்பத்தி திறன் ஆனது 2026-27 ஆம் ஆண்டில் 18,128 மெகாவாட்டாக உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.




- 2,440 மெகாவாட்டாக இருந்த அணுசக்தி சார்ந்த மின்னாற்றல் உற்பத்தி திறன் ஆனது 5,940 மெகாவாட்டாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிற, அதே நேரத்தில் எரிவாயு மற்றும் புனல் மின்னாற்றல் சார்ந்த மின் உற்பத்தித் திறன் ஆனது தேக்க நிலையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில், 2022 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 9,871 மெகாவாட்டாக இருந்த தமிழ்நாட்டின் நிறுவப்பட்ட காற்றாலை உற்பத்தி திறன் ஆனது 2026-27 ஆம் ஆண்டில் 12,556 மெகாவாட்டாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

- சூரிய சக்தி திறன் 2022 மார்ச் இறுதியில் 5,112 மெகாவாட்டிலிருந்து 2026-27 ஆம் ஆண்டில் 5,316 மெகா வாட்டாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- அதிகரித்து வரும் பசுமை எரிசக்தி மூலங்களில், தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் நிலத்தில் இருந்து எடுக்கப்படும் ஆற்றல் சேமிப்புத் திட்டங்களின் நிறுவப்பட்ட திறன் 900 மெகாவாட் ஆக இருக்கும் என்று அறிக்கையில் எதிர்பார்க்கப்படுகிறது.
- 2027 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் இறுதியில் இந்தியாவில் நிறுவப்பட்ட மின்சார உற்பத்தித் திறன் ஆனது சுமார் 609.6 ஜிகாவாட் ஆக இருக்கும்.
- ஒட்டு மொத்த மின்னாற்றல் தேவையானது 2,77,201 மெகாவாட்டாக இருக்கும்.

## 2024 ஆம் ஆண்டு மாவட்ட நீதிபதிகள் தேர்வு முடிவு ரத்து

- 245 உரிமையியல் நீதிபதிகள் பணி நியமனத்திற்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்ட தற்காலிகத் தேர்வுப் பட்டியலை ரத்து செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆனது, தற்காலிகப் பட்டியலை உருவாக்கும் போது இடஒதுக்கீடு விதியை சரியாகப் பின்பற்றவில்லை என்று உயர் நீதிமன்றம் கூறியது.
- 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் 27வது பிரிவினைப் பின்பற்றி 92 “பின்னடைவு” காலி பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.
- மீதமுள்ள 153 தற்காலத்திய காலிப் பணியிடங்கள் ஆனது இட ஒதுக்கீட்டின் பொது விதியைப் பின்பற்றி நிரப்பப்பட வேண்டும்.

## தமிழ்நாடு காப்பு நிறுவனங்களின் செயல்பாட்டு மதிப்பீட்டு மாதிரி அறிக்கை

- தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் (MSME) அமைச்சகம் ஆனது தமிழ்நாடு காப்பு நிறுவனங்களின் செயல்பாட்டு மதிப்பீட்டு மாதிரியை (TNIMM) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது மாநிலம் முழுவதும் உள்ள புத்தொழில் நிறுவனக் காப்பகங்களை மதிப்பிடச் செய்வதற்கான ஒரு கட்டமைப்பாகும்.
- ஒரு காப்பு நிறுவனமானது, ஆதரவு, வளங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கச் செய்வதன் மூலம் ஆரம்ப-நிலை புத்தொழில் நிறுவனங்களின் பெரு வளர்ச்சிக்கு உதவுகிறது.
- காப்பு நிறுவனங்கள் தங்களைச் சிறந்த செயல்திறன் கொண்ட காப்பு நிறுவனங்களுடன் ஒப்பிட்டுத் தங்கள் தரத்தை மேம்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் இந்த கட்டமைப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, தமிழக மாநிலத்தை இந்தியாவின் விருப்பமிகு புத்தொழில் நிறுவனச் சூழல் அமைப்பாக மாற்றுவதையும், உலகளாவிய அமைப்புகளிடையே அதிகப் போட்டி தன்மையுடன் அதை நிலை நிறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- புத்தொழில் நிறுவனங்களைப் பொருத்தமான காப்பு நிறுவனங்களுடன் இணைக்கச் செய்வதற்காக ‘புத்தொழில் நிறுவனங்கள் TN செயலூக்கி’ என்ற பிரத்தியேக இணைய தளமும் தொடங்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டின் பசுமை இல்ல வாயு இருப்புநிலை அறிக்கை

**Pollution concern**

A look at the sector-wise contribution towards greenhouse gas emissions in Tamil Nadu

| Sector | 2005 | 2019 |
|---|---|---|
| Energy | 82% | 77% |
| Industrial processes and product use | 6% | 6% |
| Waste | 8% | 5% |
| Agriculture, forestry, and other land use | 4% | 12% |

- 2வது தமிழ்நாடு பருவநிலை உச்சி மாநாட்டின் தொடக்க விழாவில் பசுமை இல்ல வாயு (GHG) பதிவு அறிக்கை வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கைக்கு 'தமிழ்நாட்டின் பசுமை இல்ல வாயுப் பதிவு நிலை மற்றும் நிகரச் சுழிய உமிழ்வு நிலை மாற்றத்திற்கான செயல்பாட்டுப் பாதைகள்' என்று தலைப்பிடப் பட்டு உள்ளது.
- 2005 முதல் 2019 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் 84% உமிழ்வு அதிகரிப்பு பதிவானது.
- 2070 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய உமிழ்வை அடைவதற்கு சுமார் 475 ஜிகாவாட் சூரிய சக்தியும் 90 ஜிகாவாட் காற்றாலை சக்தியும் அவசியம் ஆகும்.
- தமிழகத்தில் 2019 ஆம் ஆண்டில் 184 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான உமிழ்வு பதிவானது.
- பசுமை இல்ல வாயு உமிழ்வில் எரிசக்தித் துறையானது 77%, தொழில்துறை செயல் முறை மற்றும் தயாரிப்பு பயன்பாட்டுத் துறை 6%, AFOLU துறை 12% மற்றும் கழிவுத் துறை 5% என்ற அளவுகளில் தமது சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளன.

## ஊர்வன இனங்களின் முதல் கணக்கெடுப்பு



- முதுமலை புலிகள் வளங்காப்பகத்தின் மையப் பகுதியில் முதன்முறையாக ஊர்வன இனங்களின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- அந்தப் பிராந்தியத்தின் இருவாழ்விகள் மற்றும் ஊர்வன இனங்களின் பன்முகத் தன்மை காரணமாக 82 வெவ்வேறு இனங்களின் இங்கு பதிவு செய்யப்பட்டன.
- இதில் 51 வகையான ஊர்வன மற்றும் 31 வகையான இருவாழ்வி இனங்கள் அடங்கும்.

## புதிய கற்கால குழந்தைகள் புதைக்கப்பட்ட கல்லறைகள்




- சென்னைக்கு அருகில் உள்ள செட்டிமேடு பாத்தூரில் புதிய கற்காலத் தளத்தைச் சென்னைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அரிய மெருகேற்றப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டங்கள் மற்றும் சோழர் கால நாணயங்கள் உள்ளிட்ட பல்வேறு கலாச்சாரம் சார்ந்த கலைப் பொருட்களுடன் கூடிய ஒரு குழந்தையின் புதைகுழி எச்சங்கள் இந்த தளத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது.
- இந்தத் தளம் ஆனது, கி.மு. 2500 முதல் கி.மு. 3000 ஆண்டு வரையிலான காலக் கட்டத்தினைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

## இந்தியாவின் முதல் கடல்சார் வளங்காப்பு படை

- மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீர்ச்சந்தியில் கடல் வளம் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தினைப் பாதுகாப்பதற்காக வேண்டி நாட்டின் 'முதல்' கடல் சார் வளங்காப்பு படையைத் தமிழக அரசு தொடங்கியுள்ளது.
- இது பவளப்பாறைகள், கடல் புல் மற்றும் பிற கடல் தாவரங்கள் மற்றும் பல்வேறு விலங்கினங்கள் போன்ற விலைமதிப்பற்ற கடல் சார் பல்லுயிர்களின் வளங்காப்பு மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்தும்.
- இந்தப் படையானது கடல் சார் விலங்குகளின் கடத்தல் மற்றும் வேட்டையாடுதல் போன்ற கடல்சார் உயிரினங்கள் தொடர்பான பல குற்றங்களைத் தடுத்தல் மற்றும் அதனை எதிர்த்துப் போராடுதல் ஆகியவற்றில் ஈடுபடும்.
- உள்ளூர் மீனவர் சமூகத்தைச் சேர்ந்த 12 பேர் கடல் சார் உயிரினக் கண்காணிப்பாளர்கள் படையில் தற்போது இராமநாதபுரத்தில் ஈடுபடுத்தப் பட்டு உள்ளனர்.

## கழுவேலி நீர்பிடிப்பு பகுதி




- விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கழுவேலி நீர்பிடிப்புப் பகுதியில் உள்ள ஏரி (குளம்) கட்டமைப்பினை, உலக நினைவுச் சின்னங்கள் நிதியத்தின் கண்காணிப்பு 2025 திட்டத்தின் கீழ் சேர்க்கப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட உள்ளது.
- செஞ்சி முதல் மரக்காணம் வரை ஆரோவில் பீடபூமி வரை நீண்டுள்ள இந்த நீர்ப்பிடிப்புப் பகுதியானது 740 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளது.
- கண்காணிப்பு 2025 திட்டம் என்பது ஒரு பரிந்துரை அடிப்படையிலான திட்டமாகும். இது உள்நாட்டு பாரம்பரியத் தளங்களின் பாதுகாப்பை உலகளாவிய விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கையுடன் இணைக்கிறது.

## இலங்கை அகதிகள் குறித்த சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு


- தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கான சிறப்பு முகாம்களில் பிறக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் இந்தியக் குடியுரிமை வழங்குமாறு மத்திய அரசுக்கு பொது உத்தரவு பிறப்பிக்க சென்னை உயர்நீதிமன்றம் மறுத்துள்ளது.
- 1964 ஆம் ஆண்டு சிரிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் மற்றும் 1974 ஆம் ஆண்டு சிரிமாவோ - காந்தி ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டது.
- பின்னர், இந்திய வம்சாவளி மக்களுக்குப் பொருந்தக் கூடிய வகையில் 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் 5(1)(b) என்ற பிரிவின் கீழ் இந்தப் பிரச்சினையானது கையாளப் பட்டது.
- இருப்பினும், 1964 ஆம் ஆண்டின் சிரிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் குடியுரிமை கோரி விண்ணப்பம் செய்வதற்கான சட்டப்பூர்வமான கால வரம்பு 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 31 என நிர்ணயிக்கப்பட்டது.

- இந்தச் செயல்பாட்டு வரம்புத் தேதிக்கு முன் விண்ணப்பிக்கத் தவறிய இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழர்கள் 5(1)(b) என்ற ஒரு பிரிவின் கீழ் கூட இந்தியக் குடியுரிமையைப் பெறத் தகுதியற்றவர்கள் ஆவர்.
- செல்லுபடியாகும் தன்மை கொண்ட பயண ஆவணங்கள் இல்லாமல் இந்தியாவிற்குள் நுழைந்த வெளிநாட்டவர் மற்றும் அனுமதிக்கப்பட்டக் காலத்திற்கு அப்பால் தங்கி இருப்பவர்கள் 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் 2(1)(b) என்ற பிரிவின் கீழ் சட்ட விரோதமாக குடியேறியவராக மட்டுமே கருதப்படுவர்.
- 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் 3(1)(c) என்ற பிரிவு, 2003 ஆம் ஆண்டு சட்டத் திருத்தத்தின் அமலாக்கத்திற்குப் பிறகு, இந்தியாவில் பிறந்தவர்கள் அவர்களின் பெற்றோர் இருவரும் இந்தியக் குடிமக்களாக இருந்தாலோ அல்லது பெற்றோரில் யாரேனும் ஒருவர் இந்தியக் குடிமக்களாக இருந்து மற்றொருவர் சட்டவிரோதமாகக் குடியேறியவராக இல்லாமல் இருந்தாலோ மட்டுமே பிறப்பின் மூலம் குடியுரிமை கோர முடியும் என்று தெளிவாகக் கூறுகிறது.



## ஆலிவ் ரிட்லி ஆமைகளின் குஞ்சு பொரிப்பிற்கான தளங்கள்

- தமிழ்நாடு வனத்துறையானது ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகளுக்காக 'பருவநிலை நெகிழ் திறன் கொண்ட' குஞ்சு பொரிப்புத் தளங்களை அமைத்துள்ளது.
- சென்னை மற்றும் நாகப்பட்டினத்தில் தலா இரண்டு, விழுப்புரம், கடலூர், நாகப் பட்டினம், திருநெல்வேலி, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகியவற்றில் தலா ஒன்று என 10 குஞ்சு பொரிப்புத் தளங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- ஆமைக் குஞ்சுப் பொரிப்பு இடங்களில் நிலவும் அதிக வெப்பநிலையானது, பெண் ஆமைக் குஞ்சுகளை அதிக விகிதத்தில் உற்பத்தி செய்யவும், குளிர்ச்சியான வெப்ப நிலை ஆண் ஆமைக் குஞ்சுகளை அதிக விகிதத்தில் உற்பத்தி செய்ய வழிவகுக்கும் என்று அறியப்படுகிறது.
- கடல் ஆமைகள் 30°C வெப்பநிலை என்ற அளவு வெப்பநிலையுடன் வெப்பநிலை சார்ந்த பாலின நிர்ணயத்தைக் கொண்டுள்ளன.





## புதிய மாநகராட்சிகள் 2024

- புதுக்கோட்டை, நாமக்கல், திருவண்ணாமலை, காரைக்குடி ஆகிய நகரங்களை மாநகராட்சிகளாக தரம் உயர்த்தி தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
- இந்த நான்கு மாநகராட்சிகளுடன் தமிழகத்தில் உள்ள மொத்த மாநகராட்சிகளின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.
- புதுக்கோட்டை நகராட்சி மற்றும் 11 அண்டை கிராமப் பஞ்சாயத்துகள் சேர்த்து புதுக்கோட்டை மாநகராட்சியாக உருவாக்கப்பட்டுள்ளது.
- திருவண்ணாமலை நகராட்சி மற்றும் 18 அண்டை கிராமப் பஞ்சாயத்துகள் சேர்த்து புதிய திருவண்ணாமலை மாநகராட்சியாக உருவாக்கப்பட்டுள்ளது.
- நாமக்கல் நகராட்சி மற்றும் 12 அண்டை கிராமப் பஞ்சாயத்துகள் சேர்த்து புதிய நாமக்கல் மாநகராட்சியாக உருவாக்கப்பட்டுள்ளது.
- காரைக்குடி நகராட்சி, இரண்டு பேரூராட்சிகள் மற்றும் ஐந்து கிராமப் பஞ்சாயத்துகள் சேர்த்து காரைக்குடி மாநகராட்சியாக உருவாக்கப்பட்டுள்ளது.
- 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி இந்தப் புதிய மாநகராட்சிகள் நிறுவப் பட்டு உள்ளன.
- இந்தியாவின் மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்., என்பதோடு 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழகத்தின் நகர்ப்புற மக்கள் தொகை 48.45% ஆக உள்ளது.
- தற்போது இம்மாநிலத்தின் நகர்ப்புற மக்கள் தொகை 53% ஆக அதிகரித்துள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.




## காலை உணவுத் திட்டத்தின் தாக்கம்

- தமிழகத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள 1,543 அரசுப் பள்ளிகளுள் 1,319 பள்ளிகளில் இந்த ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையில் மாணவர்களின் வருகை அதிகரித்து உள்ளது.
- திருப்பத்தூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 100% வருகைப் பதிவு உள்ளது.
- இந்த மாவட்டங்களைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி (98.5%), கரூர் (97.4%) மற்றும் நீலகிரி (96.8%) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- 1,086 பள்ளிகளில், வருகை அதிகரிப்பு 20% ஆகவும், 22 பள்ளிகளில் 40 சதவீதத்திற்கு அதிகமாகவும் பதிவாகியுள்ளன.




## மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் தாக்கம்

- மக்களைத் தேடி மருத்துவம் (MTM) எனும் மக்களின் வீடு தேடி மருத்துவ சேவையினை

வழங்கும் திட்டம் ஆனது, கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் மற்றும் பட்டியலிடப் பட்ட சாதியினர்/பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் போன்ற மிகவும் பாதிக்கப்படக் கூடிய பிரிவினரைச் சென்றடைந்துள்ளது.

- ❖ நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகிய தொற்றா நோய்களுக்கு (NCD) இந்தத் திட்டத்தின் கீழ் மிகவும் அதிகளவில் சிகிச்சையளிக்கப் பட்டாலும், புற்றுநோய் பரிசோதனைப் பரவல் மிகவும் குறைவாக உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.
- ❖ இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்றவர்களில், 4,155 (60%) பேர் கிராமப் புறங்களையும், 2,701 (40%) பேர் நகர்ப்புறங்களையும் சேர்ந்தவர்கள் ஆவர்.
- ❖ இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்றவர்களில் சுமார் 78.84% பேர் MTM திட்டம் பற்றி அறிந்திருந்தனர் என்பதோடு இதில் 73% பேர் மகளிர் சுகாதாரத் தன்னார்வச் சேவை வழங்குநரின் (WHV) சேவையினைப் பெற்றுள்ளனர்.
- ❖ உயர் இரத்த அழுத்தத்திற்கான பரிசோதனையில், இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்ற 81.25% பேர் உயர் இரத்த அழுத்தத்திற்கான பரிசோனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்ற நிலையில் அவர்களில் சுமார் 93.8% பேர் கடந்த ஆண்டில் பரிசோனைக்கு உட்படுத்தப் பட்டனர்.
- ❖ கடந்த ஆண்டில் பரிசோனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 73.6% பேர் MTM திட்டத்தின் கீழ் பரிசோதனை வசதியினைப் பெற்றனர்.
- ❖ ஆண்களுடன் (79%) ஒப்பிடும் போது, பெண்களின் மத்தியில் அதிக விகிதத்தில் (82.6%) பரிசோதனை செய்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது என்பதோடு கடந்த ஆண்டில் MTM திட்டத்தின் கீழ் பெண்கள் அதிக எண்ணிக்கையில் (சுமார் 75.1% மற்றும் 71.2%) பரிசோதனை செய்துள்ளனர்.
- ❖ MTM திட்டத்தின் கீழான உயர் இரத்த அழுத்தத்திற்கான பரிசோதனை ஆனது நகர்ப் புறங்களில் 61.5% ஆகவும், கிராமப்புறங்களில் 82.9% ஆகவும் இருந்தது.
- ❖ இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்றவர்களில் சுமார் நான்கு சதவீதம் பேர் மட்டுமே வாய்ப் புற்றுநோய்க்கான பரிசோனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.
- ❖ வெறும் 11.06% பெண்கள் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கும், 14.24% பெண்கள் மார்பகப் புற்றுநோய்க்குமான பரிசோதனையினை செய்து கொண்டுள்ளனர்.



## சுறா உடல் பாகங்களின் சட்டவிரோத வர்த்தகம்




- தமிழ்நாடு மாநிலமானது, சுறா மீனின் உடல் உறுப்புகளின் சட்டவிரோத வர்த்தகத்தில் சுமார் 65% பங்கினைக் கொண்டுள்ளது.
- 2010 முதல் 2022 ஆம் ஆண்டு வரையில் சுமார் 16,000 கிலோ சுறா மீனின் துடுப்புகள் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில் இது சுறாவிலிருந்து பெறப்பட்டப் பொருட்களில் சுமார் 80% ஆகும்.
- பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் சிங்கப்பூர், ஹாங்காங் சிறப்பு நிர்வாகப் பகுதி, இலங்கை மற்றும் சீனாவின் பிரதான நிலப்பகுதிக்கு அனுப்பப்பட்டவை ஆகும்.
- சுறா மீனின் இறைச்சியானது உணவாகவும், அதன் தோல் தோல்பொருட்களாகவும், கல்லீரல் எண்ணெய் (ஸ்குவாலீன்) உயவுப் பொருளாகவும், பல்வேறு அழகுசாதனப் பொருட்களாகவும், வைட்டமின் A-இன் மூலமாகவும் உட்கொள்ளப் படுகிறது.
- இந்தியாவில் பதிவாகியுள்ள 160 சுறா வகைகளில், 26 சுறாக்கள் மற்றும் திருக்கை மீன்கள் ஆகியவற்றிற்கு மட்டுமே, 1972 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் உள்ள I மற்றும் II வது அட்டவணைகளில் பட்டியலிடப்பட்டு, மிக உயர்ந்தப் பாதுகாப்பு அந்தஸ்து வழங்கப் பட்டுள்ளன.

## புதுமைப் பெண் திட்டத்தின் தாக்கம்



- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்-புதுமைப் பெண் திட்டத்தின் கீழ், தமிழகம் முழுவதும் உள்ள உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் படிக்கும் 49,600க்கும் மேற்பட்ட மாணவிகள் பயனடைய உள்ளனர்.
- சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் பயிலும் 23,560 மாணவிகள் உட்பட தமிழ் வழியில் பயிலும் 49,664 மாணவிகள் உதவி பெறும் பள்ளிகளில் கல்வி பயின்று வருகின்றனர்.
- அனைத்து உதவி பெறும் பள்ளிகளிலும் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழ் வழியில் கல்வி பயின்ற மாணவர்களை உள்ளடக்கும் வகையில் இந்தத் திட்டத்தின் பரவலை விரிவுபடுத்துவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
- இத்திட்டம் ஆனது 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டது.
- ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் கல்வி பயின்ற பெண்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் 1,000 ரூபாய் ஊக்கத் தொகை வழங்குவதன் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சீர் மரபினர் சமூகங்களுக்கான ஒற்றைச் சான்றிதழ்




- சீர் மரபினர் சமூகங்கள் மற்றும் சீர் மரபினப் பழங்குடியினருக்கு வழங்கப்படும் தனித்தனிச் சான்றிதழ்களுக்குப் பதிலாக ஒரே சான்றிதழ் ஆக வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
- சுதந்திரத்திற்கு முந்தைய காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியின் போது குற்றப் பரம்பரைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் 'சீர் மரபினர்' பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டனர்.
- மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களில் அவர்களுக்கு 20% இடஒதுக்கீடு வழங்கப் படுகிறது.
- மாநில அரசு இடஒதுக்கீட்டினைப் பெறும் 68 சமூகங்கள் சீர் மரபினர் சமூகங்களாக வகைப்படுத்தப்பட்டன.
- ஆனால் மத்திய அரசின் சலுகைகளைப் பெறுவதற்காக, அக்குழுவினர் சீர் மரபினப் பழங்குடியினர் என வகைப்படுத்தப் பட்டனர்.

## PM SHRI பள்ளிகள் திட்டம்





- தமிழகத்தில் PM SHRI என்ற திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மத்தியக் கல்வித் துறை அமைச்சகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- பிரதான் மந்திரி - எழுச்சிபெறும் இந்தியாவிற்கான பள்ளிகள் (PM SHRI) திட்டம் என்பது ஒரு மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாகும்.
- இது 2020 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையின் அமலாக்கத்தைக் காட்சிப் படுத்துவதையும், ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் ஒரு முன்மாதிரியான பள்ளியாக உருவெடுப்பதையும் மற்றும் அவற்றின் அருகிலுள்ள மற்றப் பள்ளிகளுக்கு ஒரு வழிகாட்டுதலை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- PM SHRI பள்ளிகள் ஆனது மாணவர்களின் அறிவாற்றல் வளர்ச்சிக்குத் தரமான ஒரு கற்பித்தலை வழங்கும்.
- 21 ஆம் நூற்றாண்டின் முக்கியத் திறன்களைக் கொண்ட முழுமையான மற்றும் நல்ல மேம்பட்ட நபர்களை உருவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் இது பணியாற்றும்.

## வங்கிக் கடனில் பெண்களின் பங்கு

- 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்றைய நிலவரப்படி, வங்கிக் கடனில் தமிழ் நாட்டில் உள்ள பெண்களின் பங்கு 20.78% ஆக உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் அனைத்து வங்கிகளாலும் பெண்களுக்கு வழங்கப்பட்ட தமிழ்நாட்டின் கடன் தொகை 2,04,737.54 கோடி ரூபாயாக உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்றைய நிலவரப்படி, நிலுவையில் உள்ள அசல் தொகை 3,08,221.32 கோடி ரூபாயாக இருந்தது.


- கல்விக் கடன், நுகர்வோர் கடன், வணிகக் கடன் மற்றும் பெண்களுக்கான சொத்துக் கடன் ஆகியவற்றில் மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு 2வது இடத்தில் உள்ளது.
- வீட்டுக் கடன், வாகனக் கடன் மற்றும் கடன் அட்டை ஆகியவற்றின் அடிப்படையில் முதல் ஐந்து மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாக உள்ளது.





## புலிகள் வளங்காப்பகத்திற்காக நிலம் கையகப்படுத்துதல்

- ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் வளங்காப்பகத்தின் (SMTR) மையப் பகுதியில் அமைந்துள்ள 30.41 ஏக்கர் அளவிலான தனியார் பட்டா நிலத்தை முதன்முறையாக தமிழ்நாடு வனத்துறை கையகப் படுத்தியுள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட இந்த வளங்காப்பகம் ஆனது மாநிலத்தில் உள்ள ஐந்து புலிகள் வளங்காப்பகங்களில் சமீபத்திய வளங்காப்பகம் ஆகும்.

- 2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல், மறுசீரமைத்தல் மற்றும் மீள்குடியேற்ற சட்டத்தின் நியாயமான இழப்பீடு பெறுதல் மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான உரிமையின் கீழ் தனிப்பட்ட பேச்சுவார்த்தை மூலம் நிலம் கையகப்படுத்தப்பட்டது.
- காடு மற்றும் பல்லுயிர் வளங்காப்பிற்கான வணிக ரீதியான பயன்பாட்டிற்காக மாநில அரசு தனியார் நிலத்தை வாங்குவது இந்தியாவில் இதுவே முதல் முறையாகும்.




## மக்களவைத் தேர்தல் மற்றும் குற்றவியல் வழக்குகள்



**After 2019 Lok Sabha elections**

**26%** increase in MPs with criminal background since 2014

**44%** increase in MPs with declared criminal cases since 2009

Nearly half of elected members in LS have criminal charges

**116** are from the BJP

**29** from the Congress

**13** from the Janata Dal (United)

**10** from DMK

**9** from Trinamool Congress

Nearly **29%** of the cases against the current Lok Sabha members are related to rape, murder, attempt-to-murder or crime against women – which is double the number for this category as compared to 2009

- மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் தமிழகத்தில் 2024 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் தேதி முதல் தொடங்கியது.
- அரசியல் கட்சிகள் ஆனது, குற்றவியல் வழக்குகள் உள்ள வேட்பாளர்கள் குறித்த தகவல்களைப் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் வழங்குமாறு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ வலியுறுத்தியுள்ளார்.
- உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளின்படி, குற்றவியல் வழக்குகள் உள்ள (முன்னதாக நிலுவையில் உள்ள வழக்குகளோ அல்லது முன்னதாக தண்டனை பெற்ற வழக்குகளோ) வேட்பாளர்களைப் பரிந்துரைக்கும் அரசியல் கட்சிகள் செய்தித் தாள்கள் மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் இது குறித்த அறிவிப்பை வெளியிட வேண்டும்.
- வேட்புமனுவைத் திரும்பப் பெறுவதற்கான கடைசித் தேதிக்கு அடுத்த நாளிலிருந்து மூன்று வெவ்வேறு தேதிகளிலும், வாக்கெடுப்பு முடிவதற்கு சுமார் 48 மணி நேரத்திற்கு முன்பாகவும் அறிவிப்புகள் வெளியிடப்பட வேண்டும்.
- குற்றவியல் வழக்குகள் உள்ள வேட்பாளர்களைப் பரிந்துரைக்கும் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகள் பொது வெளிப்பாட்டுக்காக அவர்களின் இணைய தளங்களிலும் தொலைக்காட்சி ஊடகங்கள் மற்றும் செய்தித்தாள்களிலும் இந்த அறிவிப்பை வெளியிட வேண்டும்.

## தனியார் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் இரண்டாவது ஏவுகலம்

- தமிழ்நாடு மாநிலத்தில், விண்வெளி நுட்பம் சார் புத்தொழில் நிறுவனங்களில் ஒன்று தனது முதல் ஏவுகலத்தினை விண்ணில் செலுத்தி வரலாறு படைக்கவுள்ளது.
- சென்னையில் அமைந்துள்ள விண்வெளி நுட்பம் சார் புத்தொழில் நிறுவனமான அக்னிகுல் காஸ்மோஸ் பிரைவேட் லிமிடெட் அக்னிபான் சார் நிலை சுற்றுப்பாதை தொழில்நுட்ப சோதனை (SOrTeD) தனது முதல் ஏவுகலத்தினை விண்ணில் ஏவ உள்ளது.
- அக்னிபான், தனியார் ஏவுதளத்தில் இருந்து விண்ணில் ஏவப்படவுள்ள இந்தியாவின் முதல் ஏவுதல் ஆகும்.
- இது இந்தியாவின் முதல் பகுதியளவு கிரையோஜெனிக் எந்திரம் மூலம் இயங்கும் ஏவுகல ஏவுதல் செயல்பாடு ஆகும்.
- மேலும், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட உலகின் முதல் முப்பரிமாண முறையில் முழுமையாக அச்சிடப்பட்ட என்ஜின் இதுவாகும்.

## சோழர் கால கல்வெட்டுகள் – திருச்சி


- திருச்சி இராச்சந்தர் திருமலையில் உள்ள விராச்சிலை ஆண்டவர் கோயிலில் சோழர் காலத்தினைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- அவற்றுள் ஒன்று நிலப் பதிவேடு தொடர்பானது என்ற வகையில் மற்றொன்று அந்தக் கோவிலுக்கு வழங்கப்பட்ட வரி விலக்கு தொடர்பானதுமாகும்.
- மூன்றாம் குலோத்துங்கரின் கல்வெட்டு ஆனது நில ஆவணமாகத் கருதப்படுகிறது என்ற நிலையில் இது அந்தக் கோயிலில் உள்ள 'தேசநாயகப் பெருமாள்' என்று குறிப்பிடப் படும் வெண்கலச் சிலை குறித்தத் தகவல்களை அளிக்கிறது.

- கோயில் அதிகாரிகள் கரையூர் மற்றும் மேற்கரையூர் ஆகிய இடங்களில், மதுராந்தக சதுர்வேதிமங்கலத்தைச் சேர்ந்த சில பிராமணர்களிடமிருந்து 3,000 அன்றாடு நற்கூலி (நற்காசு) செலுத்தி இரண்டு நிலங்களை வாங்கியதாக கல்வெட்டு குறிப்பிடுகிறது.
- மற்றொரு கல்வெட்டு ஆனது மன்னரின் தலைமை ஆவண எழுத்தாளரான நேருடை சோழன் மூவேந்த வேலன் என்பவரால் எழுதப்பட்ட மூன்றாம் இராஜராஜனின் ஒரு அரசாணையினை வெளிக் கொணர்கிறது.
- இந்த ஆணையின்படி, கோவிலின் தேசநாயகர், நாச்சியார் என்ற இரு வெண்கலச் சிலைகளுக்குச் சொந்தமான இரண்டு வேலி நிலங்களுக்கு அந்தரயம் மற்றும் பட்டம் உள்ளிட்ட அனைத்து வரிகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டது.



## 2024 ஆம் ஆண்டில் தமிழகத்தின் உச்ச கட்ட மின் தேவை

- தமிழகத்தின் உச்சகட்ட மின் தேவையானது, மார்ச் 22 ஆம் தேதியன்று 19,409 மெகா வாட் என்ற புதிய உச்ச நிலையை எட்டியது.
- 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 தேதியன்று பதிவான 19,387 மெகாவாட் என்ற முந்தைய அதிக பட்ச அளவினை இது விஞ்சியுள்ளது.
- தென் மாநிலங்களுள், தமிழக மாநிலத்தில் அதிகபட்ச மின் தேவை உள்ளது.
- 2024 ஆம் ஆண்டு கோடை காலத்தில், மாநிலத்தின் உச்சகட்ட மின் தேவை 20,806 மெகா வாட்டை எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் (TANGEDCO) சொந்த அனல் மின் உற்பத்தி திறன் 4,320 மெகாவாட் ஆக உள்ளது.
- மாநிலத்தின் புதுப்பிக்கப்பட இயலாத ஆற்றல் சார்ந்த மின் உற்பத்தி மையங்களின் நிறுவப் பட்ட திறன் ஆனது 16,417.38 மெகாவாட்டாக உள்ளது.




## ஆற்காடு தள அருங்காட்சியகம்



- 16 ஆம் நூற்றாண்டின் போதான ஆற்காடு நவாப் முகமது அலி கான் வாலாஜாவின் இல்லம் ஆனது, விரைவில் ஆற்காடு தள அருங்காட்சியகத்திற்கான நிரந்தரத் தளமாக மாற உள்ளது.
- 1690 ஆம் ஆண்டில் ஔரங்கசீப் அவர்களால் ஜூல்பிஹர் கான் என்பவர் நவாப்பாக நியமிக்கப்பட்ட போது, ஆற்காடு கர்நாடகப் பகுதியின் தலைநகராக இருந்தது.

- நவாப் அலி, பிரிட்டிஷ் இராணுவத்துடன் நெருக்கமான தொடர்பு மேற்கொள்வதற்காக சென்னைக்குச் செல்வதற்கு முன், இந்தக் கட்டிடமானது பல ஆண்டுகளாக அவரது அதிகாரப் பூர்வ இல்லமாக இருந்தது.
- 1768 ஆம் ஆண்டில் சேப்பாக்கம் அரண்மனையைக் கட்டிய பிறகு அவர் இந்தக் கட்டிடத்தினை விட்டு முற்றிலுமாக வெளியேறினார்.
- அதிலுள்ள 1,200க்கும் மேற்பட்ட அரிய கலைப்பொருட்களில், கல் சிற்பங்கள், சுடுமண் சிலைகள், நாணயங்கள், இஸ்லாமியத் தொல்பொருட்கள், பீங்கான் பாத்திரங்கள், இரும்புக் கருவிகள், மர கலைப்பொருட்கள் மற்றும் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் இருந்து கிடைத்த பல்வேறு தொல்பொருட்கள் ஆகியவை இந்த அருங்காட்சியகத்தில் உள்ளன.

## ஜவ்வாது மலையின் மேற்பகுதியில் பெருங்கற்காலக் கல்லறை




- திருவண்ணாமலையில் உள்ள ஜவ்வாது மலையில் அமைந்த பட்டரகடு காப்புக்காடு பகுதியில் (RF) 100க்கும் மேற்பட்ட பெருங்கற்காலக் கல்லறைகளைத் தமிழக அரசின் தொல்லியல் துறை அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.
- இறந்தவர்கள் பயன்படுத்திய பொருள்கள் உட்பட எந்தப் பொருட்களும் கிடைக்க வில்லை என்பதால், இந்தப் பெருங்கற்கால கல்லறைகளில் மிகப் பெரும்பாலானவை நினைவுச் சின்னக் குத்துக்கல்லாக (கற்திட்டைகள்) உள்ளன.
- ஒவ்வொரு கற்திட்டையும் சராசரியாக 7.5 மீட்டர் விட்டம் மற்றும் 1.5 மீட்டர் உயரம் கொண்டது.
- பெரிய கிரானைட் கற்களால் ஆன பெரும்பாலான கற்திட்டைகள் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு திசையில் அமைந்துள்ளன.
- எந்தப் பொருட்களும் கிடைக்கப்பெறாத இதே போன்ற பெருங்கற்கால கற்திட்டைகள் ஆனது மல்லச்சந்திரம் (கிருஷ்ணகிரி) மற்றும் கோயம்புத்தூர் பகுதியிலும் கண்டறியப் பட்டுள்ளன.
- பெரிய நினைவுச் சின்னக் கல் என்பது ஒரு வரலாற்றுக்கு முந்தைய காலகட்ட அமைப்பு அல்லது நினைவுச் சின்னத்தை தனித்தனியாகவோ அல்லது மற்ற கற்களுடன் ஒன்றாகவோ சேர்த்து உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட ஒரு பெரிய கல் ஆகும்.
- இத்தகைய தளங்கள் பெட்டக வடிவிலான கல்லறைகள் (டால்மெனாய்டு கல்பதுக்கை) போன்ற உண்மையான கல்லறைகள் அல்லது வெறும் நினைவுச் சின்னக் குத்துக்கல் போன்ற நினைவுத் தளங்கள் என இரண்டு வகைகளாக உள்ளன.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் மொழி சார் வரைபடம்

- இந்திரா காந்தி தேசிய கலை மையம் (IGNCA) ஆனது, இந்தியாவின் 'மொழி சார் வரைபடத்தினை' உருவாக்குவதற்காக வேண்டி நாடு முழுவதும் மொழிவாரியான கணக்கெடுப்பினை நடத்துவதற்கு முன்மொழிந்துள்ளது.
- இந்தியாவில் எத்தனை மொழிகள் எந்தெந்த மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களில் பேசப்படுகின்றன என்பது குறித்த கணக்கெடுப்பினை மேற்கொள்வதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- IGNCA என்பது மத்தியக் கலாச்சார அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- இந்தியாவில் 22 மொழிகள் அலுவல் மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, அவை இந்திய அரசியலமைப்பின் 8 வது அட்டவணையின் ஒரு பகுதியாகும்.
- மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்திய மக்கள்தொகையில் 97% பேர் இந்த மொழிகளில் ஏதேனும் ஒரு மொழியைப் பேசுபவர்களாக உள்ளனர்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, பட்டியலிடப்படாத 99 மொழிகள் கூடுதலாக இந்தக் கணக்கெடுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.
- சுமார் 37.8 மில்லியன் மக்கள் இந்த பட்டியலிடப்படாத மொழிகளில் ஒன்றைத் தங்கள் தாய் மொழியாக கொண்டுள்ளனர்.
- 1971 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஒரு மொழியைப் பேசுபவர்களின் எண்ணிக்கை 10,000க்கும் குறைவாக இருந்தால் அந்த மொழிகளைக் கணக்கெடுப்பில் சேர்க்கக் கூடாது என்று மேற்கொள்ளப்பட்ட முடிவின் காரணமாக 1.2 மில்லியன் மக்களின் தாய்மொழிக் கணக்கெடுப்பில் பதிவு செய்யப் படாமல் உள்ளது.
- 1961 ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 1,554 மொழிகள் பேசப் பட்டன.



## 2023 ஆம் ஆண்டில் கருங்காய்ச்சல் பாதிப்புகள்

**NEED TO SUSTAIN IMPROVEMENT**

Kala Azar cases of top four states

| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| Bihar | 3423 | 2416 | 1427 | 893 | 547 |
| Jharkhand | 752 | 541 | 424 | 279 | 187 |
| UP | 110 | 97 | 55 | 49 | 22 |
| WB | 95 | 87 | 57 | 58 | 49 |
| INDIA | 4386 | 3145 | 1967 | 1276 | 810 |

Deaths due to Kala-Azar

| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| Bihar | 0 | 0 | 0 | 20 | 26 |
| Jharkhand | 0 | 0 | 0 | 5 | 8 |
| UP | 0 | 0 | 3 | 1 | 1 |
| WB | 3 | 6 | 3 | 1 | 1 |
| India | 3 | 6 | 6 | 28 | 39 |

- 2023 ஆம் ஆண்டில் அனைத்து தொகுதிகளிலும் 10,000 மக்கள்தொகைக்கு ஒன்றுக்கும் குறைவான பாதிப்புகள் பதிவு என்ற இலக்கை இந்தியா அடைந்துள்ளது.
- கடந்த ஆண்டில் நாடு முழுவதும் பதிவான 891 பாதிப்புகள் மற்றும் நான்கு உயிர் இழப்புகளுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் 595 பாதிப்புகள் மற்றும் மூன்று உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.
- இந்தியாவில் கருங்காய்ச்சல் பாதிப்புகளை ஒழிப்பதற்கான ஆரம்பகட்ட இலக்கு ஆண்டு 2010 ஆகும் என்ற நிலையில் இது பின்னர் 2015, 2017 ஆண்டாகவும் மற்றும் பின்னர் 2020 ஆம் ஆண்டாகவும் நீட்டிக்கப் பட்டது.
- கருங்காய்ச்சல் (அல்லது உள்ளுறுப்பு லீஷ்மேனியாசிஸ்) என்பது மணல் ஈக்களால் பரவும் ஒரு ஒட்டுண்ணி சார் தொற்று ஆகும்.
- உலக சுகாதார அமைப்பின் புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களுக்கான செயல் திட்டத்தில் இந்த நோயினை ஒழிப்பதற்கான இலக்கு 2030 ஆம் ஆண்டாக நிர்ணயிக்கப் பட்டிருந்தாலும், தற்போது கருங்காய்ச்சலினை 2023 ஆம் ஆண்டிற்குள் ஒழிக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## வாடகைத் தாய் (ஒழுங்குமுறை) திருத்த விதிகள், 2024

- மத்திய அரசானது, 2022 ஆம் ஆண்டு வாடகைத்தாய் (ஒழுங்குமுறை) விதிகளை மாற்றி அமைத்துள்ளது.
- திருமணமான தம்பதிகள் வாடகைத் தாய் முறையில் தானம் வழங்கப்பட்ட கரு முட்டைகள் அல்லது தானம் வழங்கப்பட்ட விந்தணுக்களைப் பயன்படுத்த அனுமதிப்பதை நோக்கமாகக் கொண்டு இத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இது உடலியல் கோளாறுகள் உள்ளவர்களுக்கு ஒரு பெரிய தீர்வாக அமையும்.

- அத்தகைய தானம் வழங்கப்பட்ட பால் அணுக்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கான விதிமுறையை சேர்த்த, 2023 ஆம் ஆண்டு (மார்ச் மாதத்தில் மேற் கொள்ளப் பட்ட) திருத்தத்தை இது ரத்து செய்தது.
- இந்தத் திருத்தம் ஆனது தற்போது, திருமணமான தம்பதிகளில் கணவன் அல்லது மனைவி உடல்நலக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சான்றளிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில், தானம் வழங்கப்பட்ட பால் அணுக்களைப் பயன்படுத்த அனுமதிக்கிறது.
- கடந்த ஆண்டு, மேயர்-ரோகிடான்ஸ்கி-குஸ்டர்-ஹவுசர் (MRKH) நோயினால் பாதிக்கப் பட்ட ஒரு பெண் 2023 ஆம் ஆண்டு திருத்தத்தினை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

**SC PROD AFTER FLOOD OF PETITIONS**

- After notification of March 14 last year, Rule 7 of Surrogacy (Regulation) Act said couple undergoing surrogacy **must use own eggs and sperm, donor gametes not allowed**
- SC was flooded with petitions from women after it granted relief to one woman and **prima facie found fault with Rule 7**
- On Jan 9, **SC referred to grievances raised by a large section of women** and said many of them could not afford to approach SC
- Now, couples can use donor gametes after **district medical board certifies either spouse has a condition preventing use of own gamete**. Single women must use own egg cells

## இந்தியாவின் மிக நீளமான கம்பிவட தாங்கு பாலம்



- குஜராத்தின் துவாரகா நகரில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் மிக நீளமான கம்பி வட தாங்கு பாலம் ஆனது திறக்கப்பட்டுள்ளது.
- 'சுதர்சன் சேது' எனப்படும் இந்தப் பாலம் ஆனது ஒகா மற்றும் பெய்ட் துவாரகா தீவு ஆகியப் பகுதிகளை இணைக்கிறது.

- 'சிக்னேச்சர் (அடையாள) பாலம்' என அழைக்கப்பட்ட இந்தப் பாலம், 'சுதர்சன் சேது' அல்லது சுதர்சன் பாலம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யும் தானியங்கி எந்திரம்





- இந்தியாவின் முதல் கழிவுநீர் தொட்டி/சாக்கடை சுத்தம் செய்யும் தானியங்கி எந்திரமானது, மனிதர்களால் நேரடியாக சுத்தம் செய்யப்படும் நடைமுறையை ஒழிப்பதற்கான ஒரு தீர்வாக அமைந்து ஸ்வச்சதா அபியானை வலுப்படுத்துகிறது.
- ஹோமோசெப் ஆட்டம் என்ற இந்தத் தொழில்நுட்பம் ஆனது சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் தொழில்நுட்ப வணிக காப்பு மையத்தின் ஆதரவு பெற்ற புத்தொழில் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.
- இது இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள 16 நகரங்களைச் சென்றடைந்துள்ளது மற்றும் விரிவான எந்திர வெட்டுத் தகடு சுத்தம் செய்தல், திடக்கழிவுகளை நீக்குதல், உறிஞ்சி வெளியேற்றுதல் மற்றும் ஒரு சாதனத்தில் சேமித்தல் ஆகியவற்றை மேம்படுத்துகிறது.
- இது சுத்திகரிப்பிற்காக பல்வேறு சாதனங்களின் பயன்பாட்டுச் செலவைக் குறைக்கிறது மற்றும் சாக்கடைகளில் தானியங்கி எந்திரச் சுத்திகரிப்பினை மேம்படுத்துகிறது.

## வீட்டு உபயோக நுகர்வுக் கணக்கெடுப்பு – மாநிலங்கள் தர வரிசை

- 2022-23 ஆம் ஆண்டு மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினம் (MPCE) ஆனது சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- சிக்கிம் மாநிலமானது, கிராமப்புற மற்றும் நகர்ப்புறக் குடும்பங்களில் அதிக செலவினங்களைப் பதிவு செய்துள்ள அதே சமயம் சத்தீஸ்கர் மாநிலமானது இரண்டு அளவுருக்களிலும் மிகக் குறைந்த மதிப்பினைப் பெற்றுள்ளது.
- சிக்கிம் மாநிலமானது கிராமப்புறங்களில் சராசரியாக 7,731 ரூபாய் மற்றும் நகர்ப் புறங்களில் 12,105 ரூபாய் மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினம் என்ற அளவில் முதல் இடத்தில் பதிவாகியுள்ளது.

- ஜார்க்கண்ட் மாநிலம் ஆனது சராசரியாக 2,763 ரூபாய் என்ற மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினத்துடன் சத்தீஸ்கர் மாநிலத்தினை முந்தியுள்ள நிலையில், அதற்கு முந்தைய இடத்தில் 2,950 ரூபாய் என்ற மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினத்துடன் ஒடிசா உள்ளது.
- நகர்ப்புற நுகர்வில், 4,768 ரூபாய் என்ற மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினத்துடன் பீகார் இரண்டாவது இடத்தையும், 4,880 ரூபாய் என்ற மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினத்துடன் மணிப்பூர் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.
- மாநிலங்களில், கிராமப்புற மற்றும் நகர்ப்புற நுகர்வு ஆகியவற்றில் முறையே சராசரியாக 7,367 ரூபாய் மற்றும் 8,734 ரூபாய் என்ற மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினத்துடன் கோவா மாநிலமானது இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.




- கிராமப்புறக் குடும்பங்களின் செலவினங்களில் 5,924 ரூபாய் என்ற மதிப்புடன் கேரளா மூன்றாவது இடத்தில் உள்ள நிலையில் மேலும் நகர்ப்புறங்கள் பிரிவில் அருணாச்சலப் பிரதேசம் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- மாநிலங்களுக்கிடையேயான சராசரி மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினத்தில் உள்ள கிராமப்புற-நகர்ப்புற வேறுபாடாடு ஆனது மேகாலயாவில் (83 சதவீதம்) அதிக அளவிலும், அதைத் தொடர்ந்து சத்தீஸ்கரில் (82 சதவீதம்) மிக அதிக அளவில் பதிவாகி இருப்பதாகவும் கண்டறியப்பட்டது.
- ஒன்றியப் பிரதேசங்களில், சண்டிகரில் மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினம் அதிகமாக உள்ளது (கிராமப்புறத்தில் சுமார் 7,467 ரூபாய் மற்றும் நகர்ப்புறத்தில் 12,575 ரூபாய்) என்பதோடு, கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களின் செலவினங்கள் முறையே

லடாக் (ரூ. 4,035) மற்றும் லட்சத்தீவு (ரூ. 5,475) ஆகியவற்றில் குறைந்தபட்ச செலவினம் என்ற வகையில் பதிவாகியுள்ளது.

- 21 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் பதிவான சராசரி மாதாந்திர தனி நபர் நுகர்வுச் செலவினம் ஆனது 2022-23 ஆம் ஆண்டின் ரூ.6,459 என்ற அளவில் தேசிய சராசரியை விட அதிகமாக இருந்தது.
- ஜம்மு & காஷ்மீர், மேற்கு வங்காளம் மற்றும் உத்தரப் பிரதேசம், அகில இந்திய எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது குறைந்த நுகர்வு அளவைக் கொண்டிருந்தன.

## பொருளாதாரப் பரிமாற்றத் திட்டம்

- மும்பை, சூரத், வாரணாசி மற்றும் விசாகப்பட்டினத்தின் பொருளாதாரப் பரிமாற்றத்திற்கான திட்டத்தை நிதி ஆயோக் அமைப்பு தயாரித்துள்ளது.
- இந்திய நாட்டினை வளர்ச்சிப் பெற்ற பொருளாதாரமாக மாற்றுதல் என்ற ஒரு பரந்த குறிக்கோளுடன் சேர்த்து, இந்த நகரங்களில் பல பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் 20 முதல் 25 நகரங்கள் பொருளாதார நடவடிக்கைகளின் முக்கிய மையமாக இருப்பதால், பொருளாதாரத் திட்டமிடல் அறிக்கையினைத் தயாரிக்கவும் நிதி ஆயோக் அமைப்பு திட்டமிட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், விக்சித் பாரத் @2047 (2047 ஆம் ஆண்டில் மேம்பட்ட இந்தியாவினை உருவாக்குதல்) என்ற ஒரு இலக்கிற்காக 10 துறை சார்ந்த கருப்பொருள் சார்ந்த குறிக்கோள்களை ஒருங்கிணைக்கும் பணி நிதி ஆயோக் அமைப்பிடம் வழங்கப் பட்டு உள்ளது.

## தக்சின் பாரத் சமஸ்கிருத கேந்திரா


- கலாச்சாரத் துறை அமைச்சகம் ஆனது, தற்போது ஹைதராபாத்தில் சங்கீத நாடக அகாதமியின் பிராந்திய மையத்தை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.
- இது தக்சின் பாரத் சமஸ்கிருத கேந்திரா என்று அழைக்கப்படும்.
- தென்னிந்தியாவில் இதுவரை இத்தகைய அகாதமி அமைக்கப்படவில்லை.
- "தக்சின் பாரத் சமஸ்கிருத கேந்திரா" வளாகத்தினுள் "பாரத் கலா மண்டபம்" என்று பெயரிடப்பட்ட ஓர் அரங்கம் கட்டமைக்கப்படும்.
- சங்கீத நாடக அகாதமி என்பது இசை, நடனம் மற்றும் நாடகத்திற்கான ஒரு தேசிய அகாதமி ஆகும்.
- 1953 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இது இந்தியாவின் பல்வேறு பரந்துபட்ட கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## 'பயிர்க் காப்பீட்டை' அதிகரிப்பதற்கான புதிய முன்னெடுப்புகள்




- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சகமானது, பயிர்க் காப்பீட்டை அதிகரிப்பதற்காகவும், இந்தியாவில் உள்ள ஒட்டு மொத்த விவசாயச் சமூகத்துக்கு உதவுவதற்காகவும் பின்வரும் மூன்று புதிய முன்னெடுப்புகளைத் தொடங்கியுள்ளது.
  - கிசான் ரக்சக் உதவி எண் 14447 மற்றும் இணைய தளம்,
  - வேளாண் காப்பீட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட சோதனைக் கட்டமைப்பு சார்ந்த SARTHI தளம் மற்றும்
  - கற்றல் மேலாண்மை அமைப்பு (LMS) தளம்
- KRPH 14447 தளமானது வெளிப்படையான தகவல் தொடர்பு மற்றும் இழப்பீடு வழங்கீட்டில் தாமதங்கள் மற்றும் காப்பீடு சார்ந்த வினவல்கள் தொடர்பான குறைகளுக்கான நிகழ்நேரத் தீர்வு ஆகியவற்றைச் செயல்படுத்துவதன் மூலம் மிகவும் பன்மொழி சார்ந்த தகவல் தொடர்பு வசதியினை வழங்குகிறது.
- SARTHI தளம் ஆனது விவசாயிகளுக்கும் கிராமப்புற இந்தியாவிற்குமென மிகவும் வெளிப்படையான வகையில் வடிவமைக்கப்பட்ட அரசாங்கத்தின் மானியம் கொண்ட PMFBY திட்டம் உள்ளிட்ட காப்பீட்டுத் தயாரிப்புகளின் விரிவான தொகுப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- SARTHI என்பது வேளாண்மை மற்றும் கிராமப்புற பாதுகாப்பு, தொழில்நுட்பம் மற்றும் காப்பீட்டுக்கான ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட ஒரு சோதனைக் கட்டமைப்பினைக் குறிக்கிறது.
- 2016 ஆம் ஆடனில் தொடங்கப்பட்ட பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) என்பது அரசாங்கத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க் காப்பீட்டுத் திட்டமாகும்.

## உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்புக் கிடங்கு திட்டம்




- கூட்டுறவுத் துறையில் மேற்கொள்ளப்படும் உலகின் மிகப்பெரிய தானியச் சேமிப்புக் கிடங்குத் திட்டம் ஆனது சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- 1.25 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டில் 700 லட்சம் டன் சேமிப்புத் திறன் கொண்ட மையமானது அடுத்த ஐந்து ஆண்டுகளில் உருவாக்கப்படும்.
- இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான கிடங்குகள் மற்றும் பண்டகச் சாலைகள் கட்டமைக்கப்படும்.
- இந்தியாவின் தானிய உற்பத்தியின் 100 சதவீத அளவிலான தானியங்களைச் சேமித்து வைப்பதற்கான சேமிப்புத் திறனை உருவாக்குவதை இந்தத் திட்டம் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## Island On The Air (IOTA) திட்டம்

- ஆந்திரப் பிரதேசத்தின் நச்சுகுண்டா தீவுப் பகுதியினைச் சேர்ந்த தொழில்முறை சாரா வானொலியாளர்கள்-வணிக நோக்கமின்றி தனி நபர்களின் பெரு சொந்த முயற்சியால் ஒலிபரப்பப்படும் வானொலி - (HAMs) அடங்கிய ஒரு பிரத்தியேகக் குழுவானது, Island On The Air (IOTA) என்ற பயணத் திட்டத்தில் பங்கேற்பதற்காக தனது பயணத்தை மேற்கொண்டது.
- இது 1964 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இது உலகெங்கிலும் உள்ள தொழில்சாரா வானொலியாளர்களைத் தீவுகளில் உள்ள வானொலி நிலையங்களுடன் இணைக்கின்ற ஒரு முன்னோடித் திட்டமாகும்.
- அமெச்சூர் வானொலி (தொழில்முறை சாரா வானொலி) என்பது வணிக நோக்கமின்றி வானொலி அலைக்கற்றை அலைவரிசையைப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய ஒரு பிரபலமான பொழுதுபோக்குச் செயல்பாடு ஆகும்.
- HAM வானொலியாளர்கள், போட்டிகள், அவசர தகவல் தொடர்பு ஆதரவு, பரிசோதனை, தொழில்நுட்பக் கற்றல் மற்றும் சமூக ஈடுபாடு போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, சில குறிப்பிட்ட வானொலி அலைவரிசைகளைப் பயன்படுத்தி தொடர்பு கொள்கின்றனர்.

## 2047 ஆம் ஆண்டிற்குள் ஆறு மாபெரும் துறைமுகங்கள் உருவாக்கம்





- இந்தியா தனது இலட்சிய மிக்க கடல் சார் செயல்பாடுகள் விரிவாக்கத் திட்டங்களின் ஒரு பகுதியாக 2047 ஆம் ஆண்டிற்குள் ஆறு மாபெரும் துறைமுகங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2047 ஆம் ஆண்டில் அமிர்த காலம் என்ற குறிக்கோளில் குறிப்பிட்டுக் காட்டப் பட்டுள்ள துறைமுகங்களின் சரக்குப் பொருட்கள் கையாளும் திறனை கணிசமாக அதிகரிக்கும்.
- இந்தத் துறைமுகங்கள் உருவாக்கம் ஆனது பின்வரும் இரண்டு வகை பிரிவுகளில் கவனம் செலுத்தும்.
- ஆண்டிற்கு 500 மில்லியன் டன்களுக்கு மேலான சரக்குப் பொருட்களை கையாளும் திறன்
    - தீன்தயாள் மற்றும் டுனா டெக்ரா துறைமுகத் தொகுதி (குஜராத்)
    - ஜவஹர்லால் நேரு - வாதவன் துறைமுகத் தொகுதி (மகாராஸ்டிரா)
- ஆண்டிற்கு 300 மில்லியன் டன்களுக்கு மேலான சரக்குப் பொருட்களை கையாளும் திறன்
    - கொச்சி - விழிஞ்சம் துறைமுகத் தொகுதி (கேரளா)
    - கலாத்தியா தெற்கு விரிகுடா துறைமுகம் (அந்தமான்)
    - சென்னை - காமராஜர் - கடலூர் துறைமுகத் தொகுதி (தமிழ்நாடு)
    - பாராதீப் மற்றும் இதர சிறு துறைமுகங்கள் (ஒடிஸா)

## கடலடித் துறைமுகப் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்பு


- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள INS உட்க்ரோஷ் மையத்தில் ஒரு வான ஊர்திப் போக்குவரத்து நெறிப்படுத்தி ரேடார் (PAR) தொடங்கப்பட்டது.

- இது "கனமழை மற்றும் மூடுபனி போன்ற குறைந்த கட்புலனாகும் நிலைகளில் விமானங்களைக் கிடைமட்ட மற்றும் செங்குத்து நிலையில் பாதுகாப்பாக தரை இறக்குவதற்காக மிகவும் துல்லியமான வழிகாட்டுதலை" வழங்கும்.
- போர்ட் பிளேயர் துறைமுகத்திலுள்ள கடல்சார் கப்பல் துறையில் ஒருங்கிணைந்த கடலடித் துறைமுகப் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்பு (IUHDSS) ஆனது திறக்கப் பட்டது.
- இது கடல்சார் கப்பல் துறைக்கு அருகில் உள்ள மேற்பரப்பு மற்றும் கடலுக்கடியில் உள்ள இலக்குகளைக் கண்டறிந்து, அடையாளம் கண்டு மற்றும் கண்காணிக்கும் திறன் கொண்டதால், போர்ட் பிளேயர் துறைமுகத்தின் பெரும் பாதுகாப்பை அது மேம்படுத்துகிறது.



## இந்தியாவில் முதியோர் பராமரிப்புச் சீர்திருத்தங்கள்

- நிதி ஆயோக் அமைப்பானது, 'இந்தியாவில் முதியோர் பராமரிப்புச் சீர்திருத்தங்கள் - முதியோர் பராமரிப்பு அணுகுமுறையினை மறுவடிவமைத்தல்' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- நிதி ரீதியாக முதியோர்களை மேம்படுத்துவதற்கும், நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பில் அவர்களை முழுமையாக ஒருங்கிணைப்பதற்கும் தேவையான அத்தியாவசிய நடவடிக்கைகளை இந்த அறிக்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் ஆனது சுகாதாரம், சமூகம், பொருளாதாரம் / நிதி மற்றும் எண்ணிம துறை ஆகியவற்றில் அதிகாரமளித்தல், சேவை வழங்குதல் மற்றும் உள்ளடக்கல் ஆகியவற்றின் அடிப்படையில், தேவைப்படும் சில குறிப்பிட்ட நடவடிக்கைகளை வகைப்படுத்துகின்றன.
- தற்போது இந்தியாவின் மக்கள் தொகையில் 10 சதவீதத்திற்கும் அதிகமாக (சுமார் 104 மில்லியன்) முதியோர்கள் உள்ளனர்.
- இது 2050 ஆம் ஆண்டிற்குள் மொத்த மக்கள் தொகையில் 19.5% ஆக இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.




## திருநர்களுக்கு சம வாய்ப்பளிக்கும் கொள்கை




- இந்திய அரசு முதன்முறையாக, திருநர்களுக்கு சம வாய்ப்பளிக்கும் கொள்கையை அறிவித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு திருநர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) விதிகளின் படி, திருநர்களின் பாலின அடையாளத்தை அவர்களின் அனுமதியின்றி வெளியிடச் செய்வதை இந்தக் கொள்கை தடை செய்ய உள்ளது.
- இது திருநர்களை நல்ல (நியாயமான) முறையில் நடத்துவதை ஊக்குவிக்கும் மற்றும் பாரபட்சம், துன்புறுத்தல் மற்றும் சார்பு நிலை இல்லாத அளவில் பணியிடங்களை உருவாக்கும்.
- பிரதி பெயர், பாலினம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெயரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை திருநர் ஊழியருக்கு உறுதி செய்ய இந்தக் கொள்கை முயல்கிறது.

## சர்க்கரைக் கழிவுப் பாகுகளிலிருந்து பொட்டாஷ் உரம் தயாரிப்பு

- சர்க்கரை ஆலைகள் இனி சர்க்கரைக் கழிவுப் பாகுகளிலிருந்து தயாரிக்கப்பட்ட பொட்டாஷ் உரத்தினை உர விற்பனை நிறுவனங்களுக்கு விற்று கூடுதல் வருவாயைப் பெற இயலும்.

- மேலும் அத்தகைய விற்பனை மீது உர ஊட்டம் அடிப்படையிலான மானியங்களையும் அவை பெற இயலும்.
- பொட்டாசியம் நிறைந்த உரமான PDM, கரும்பு உற்பத்தி அடிப்படையிலான எத்தனால் தொழிற்துறையின் துணை விளைபொருள் ஆகும்.
- இது சர்க்கரைக் கழிவுப் பாகு வடிப்பான்களில் உள்ள (சாம்பல்) கழிவில் இருந்து பெறப் படுகிறது.
- தற்போது, தனது நாட்டின் உர உற்பத்திக்குத் தேவையான 100% பொட்டாஷினை (Muriate of Potash-MOP என்ற வடிவில்) இந்தியா இறக்குமதி செய்கிறது.
- வடிப்பான்கள் ஆனது, எத்தனால் உற்பத்தியின் போது எஞ்சிய திரவக் கழிவு எனப்படும் கழிவு இரசாயனத்தை உற்பத்தி செய்கின்றன என்ற நிலையில். இவற்றை எரித்து சாம்பல் உருவாக்கப்படுகிறது.
- இந்த சாம்பலைப் பதப்படுத்தி 14.5% பொட்டாஷ் உட்கூறு கொண்ட PDM உரத்தினை உருவாக்கப் படுகிறது.
- 60% அளவு கொண்ட பொட்டாஷ் உள்ள MOP உரத்திற்கு மாற்றாக விவசாயிகள் இதைப் பயன்படுத்தலாம்.




## சுவயம் பிளஸ் இயங்குதளம்

- மத்திய கல்வி அமைச்சகம் ஆனது, தொழில்துறையுடன் இணைந்து உருவாக்கப்பட்ட கல்விப் படிப்புகளை வழங்குவதற்காக என்று 'சுவயம் பிளஸ்' என்ற இயங்கு தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது இந்த 'சுவயம் பிளஸ்' இயங்குதளத்தை இயக்கும்.
- இது கல்லூரி மாணவர்கள் மற்றும் வாழ்நாள் முழுவதும் கல்வி கற்பவர்களின் வேலை வாய்ப்பை மேம்படுத்த முயல்கிறது.
- இந்த தொழிற்துறை-கல்வி கூட்டாண்மையானது, கல்விசார் இயங்கு தளத்தின் தீவிரத் தன்மையை தொழில்துறை பங்குதாரர்கள் வழங்கும் நிஜ உலக நிபுணத்துவம் மற்றும் இணக்கம் ஆகியவற்றுடன் இணைக்கும் வகையில் இருக்கும்.

## இந்தியாவின் 3வது விமான அருங்காட்சியகம்

- ❖ இந்தியக் கடற்படையின் TU-142M என்ற புகழ்பெற்ற விமானம் அதன் படையிலிருந்து ஓய்வளிக்கப் பட்டு ஆந்திரப் பிரதேசத்தின் காக்கிநாடாவில் ஒரு விமான அருங் காட்சியகமாக உருவாக்கப்பட்டது.
- ❖ இந்த அருங்காட்சியகம் ஆனது விசாகப்பட்டினம் மற்றும் கொல்கத்தா அருங் காட்சியகம் ஆகியவற்றிற்கு அடுத்ததாக பட்டியலில் இணைகிறது.
- ❖ மேலும், இந்த மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள இது போன்ற இரண்டாவது விமான அருங்காட்சியகம் இதுவாகும்.

## நிலக்கரித் தளவாடங்கள் திட்டம் மற்றும் கொள்கை

- ❖ இந்திய அரசாங்கம் ஆனது, நிலக்கரித் தளவாடத் திட்டம் மற்றும் கொள்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ இது முக்கியமாக மின் உற்பத்தி நிலையங்களுக்கு நிலக்கரி விநியோகத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ நிலக்கரித் தளவாடங்கள் என்பது சுரங்கங்களிலிருந்து நிலக்கரியை அவை தேவைப் படும் இடங்களுக்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கைகளை குறிக்கிறது.
- ❖ நிலக்கரித் தளவாடங்களை மலிவாகவும், விரைவில் சென்றடையச் செய்வதாகவும், தூய்மையாகவும் மாற்றுவதே இந்தக் கொள்கையின் நோக்கமாகும்.



## திரை அரங்குகள் அணுகல் சார்ந்த வழிகாட்டுதல்கள்

- திரைப்படத் திரையிடல் திரையரங்குகளில் திரையாகும் பொதுக் காட்சிகளை செவித் திறன் மற்றும் பார்வைக் குறைபாடு உள்ளவர்கள் காண்பதற்கு ஏற்ற வகையிலான அணுகல் தரநிலைகளின் வரைவு வழிகாட்டுதல்களைத் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- வணிக நோக்கங்களுக்காக திரையரங்குகளில் பொதுக் காட்சிக்காக வெளியிடச் செய்வதற்கு மத்திய திரைப்படச் சான்றிதழ் வாரியத்தால் (CBFC) சான்றளிக்கப்பட்ட திரைப் படங்களுக்கு இது பொருந்தும்.
- மாற்றுத்திறனாளிகள் திரை அரங்குகளில் திரைப்படங்களை கண்டு களிக்க எதுவாக தேவையான தகவல் மற்றும் உதவி சாதனங்கள் தொடர்பான வசதிகள் இந்த வழி காட்டுதல்களில் உள்ளன.

## இந்தியாவில் தீவிர வறுமையில் உள்ள மக்கள்

- உலக வறுமைக் கடிகாரம் என்ற கணக்கெடுப்பின் படி, இந்தியா தனது மக்கள் தொகையில் தீவிர வறுமையில் உள்ள மக்களின் எண்ணிக்கையினை சுமார் 3 சதவீதத்திற்கும் கீழாக குறைத்துள்ளது.
- உலக வறுமைக் கடிகாரம் கணக்கெடுப்பு ஆனது, 2030 ஆம் ஆண்டு வரையில் உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டின் நிகழ் நேர வறுமை குறித்த மதிப்பீடுகளை வழங்குகிறது.
- இந்தக் கணக்கெடுப்பு ஆனது, ஒரு நாளுக்கு 2.15 டாலர் வருமானத்தினை ஈட்டும் பிரிவினரைக் கண்டறிந்து இந்தத் தகவல்களை வழங்கியுள்ளது.
- அதன்படி, 2022 ஆம் ஆண்டில் சுமார் 4.69 கோடி தீவிர வறுமையில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் சுமார் 3.44 கோடி ஆக குறைந்துள்ளதாக இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- மொத்த மக்கள்தொகையில், 2022 ஆம் ஆண்டில் சுமார் 3.3 சதவீதமாக இருந்த தீவிர வறுமையில் வாழும் மக்களின் எண்ணிக்கையானது 2.4 சதவீதமாகக் குறைந்துள்ளது.

| | Total population (in crore) | Number of people living in extreme poverty (in crore) | % |
|---|---|---|---|
| 2016 | 132.37 | 7.59 | 5.7 |
| 2018 | 135.29 | 6.26 | 4.6 |
| 2020 | 138.21 | 6.73 | 4.9 |
| 2022 | 140.85 | 4.69 | 3.3 |
| 2024 | 143.48 | 3.44 | 2.4 |

## தபால் வாக்கு அளிப்பதற்கான குறைந்தபட்ச வயது நிர்ணயம்

- தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியான முதியோர்களுக்கான குறைந்தபட்ச வயதை 80 வயதிலிருந்து 85 ஆக உயர்த்துவதற்காக 1961 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளை அரசாங்கம் திருத்தியமைத்துள்ளது.
- முன்னதாக 80 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் கோவிட் பாதிப்பு கொண்ட நபர்களுக்கு தேர்தல் நடத்தை விதியின் 27Aவது பிரிவின் கீழ் தபால் வாக்கு அளிக்கும் வசதி நீட்டிக்கப் பட்டது.
- 80 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களின் மொத்த எண்ணிக்கையானது சுமார் 1.75 கோடி என்ற நிலையில், 80 முதல் 85 வயது நபர்களின் எண்ணிக்கையானது சுமார் 98 லட்சம் ஆகும்.




## பாராளுமன்றத்தில் வாக்களிக்க லஞ்சம் வாங்கும் சட்டமன்ற உறுப்பினர்கள்



- பாராளுமன்றம் அல்லது மாநில சட்டமன்றங்களில் சாதகமாக வாக்களிக்க அல்லது பேசுவதற்கு லஞ்சம் வாங்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் மீது பதிவாகும் குற்றவியல் வழக்குகளில் இருந்து பாராளுமன்றச் சிறப்புரிமைகள் அவர்களைப் பாதுகாக்காது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.
- தற்போது, சட்டமன்ற உறுப்பினர் லஞ்சம் கொடுப்பவருக்கு ஆதரவாகப் பேசினாலும் அல்லது வாக்களித்தாலும் குற்றவியல் வழக்கை எதிர்கொள்ள நேரிடும்.
- 1998 ஆம் ஆண்டின் JMM லஞ்ச வழக்கின் தீர்ப்பில் குறிப்பிடப் பட்ட, உச்ச நீதிமன்றத்தின் 25 ஆண்டு கால பெரும்பான்மையான கருத்தினை இந்த ஒருமனதாக மேற்கொள்ளப்பட்ட தீர்ப்பானது முறியடித்துள்ளது.
- லஞ்சம் வாங்கிய சபை உறுப்பினர்கள், சபையில் ஒப்புக் கொண்டபடி வாக்களித்தால் அல்லது பேசினால், அவர்கள் ஊழல் வழக்குகளை எதிர்கொள்ள வேண்டியதில்லை என்று அந்தத் தீர்ப்பில் கூறப் பட்டது.

## INS ஜடாயு

- இந்தியக் கடற்படையானது, INS ஜடாயு கடற்படைத் தளத்தினை லட்சத்தீவுகளில் உள்ள மினிகாய் தீவில் நிறுவி இயக்கத் தொடங்கியுள்ளது.
- கவராத்தியில் உள்ள INS த்வீப் ரக்சக்கிற்குப் பிறகு லட்சத்தீவில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது தளம் இதுவாகும்.
- INS ஜடாயு, ஒன்பது பாகை கோட்டு நீரிணை மற்றும் முக்கியமான கடல் பாதைகளுக்கு அருகில் உள்ள உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த வகையில் அமைந்துள்ள தீவுகளில் இந்தியாவின் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நிலையை வலுப்படுத்துவதற்கான ஒரு கட்ட வாரியான விரிவாக்கத் திட்டத்தின் தொடக்கமாகும்.
- மேலும் இந்தியக் கடற்படையானது, 'சீஹாக்ஸ்' எனப்படும் தனது முதலாவது MH-60R என்ற பல்பயன்பாட்டு ஹெலிகாப்டர் (INAS 334) படைப் பிரிவினைக் கொச்சியில் உள்ள படையில் இணைத்தது.

## சக்சு இயங்கு தளம்




- மத்திய அரசானது, 'சக்சு' மற்றும் 'எண்ணிம உளவு (நுண்ணறிவு) இயங்கு தளம்' ஆகிய இரண்டு புதிய எண்ணிம தளங்களைத் தொடங்கியுள்ளது.

- சந்தேகத்திற்குரிய மோசடித் தொலைபேசி அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் குறித்துப் புகாரளிப்பதற்காக என்று சந்தாதாரர்களுக்கு அதிகாரம் அளிப்பதை இந்த இயங்கு தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 'சக்சு' மற்றும் 'எண்ணிம உளவு இயங்கு தளம்' ஆகிய புதிய தளங்களானது சஞ்சார் சாத்தி இணைய தளத்துடன் ஒருங்கிணைக்கப் படும்.

## ஸ்வச்சதா பசுமை இலை மதிப்பீடு முன்னெடுப்பு

- குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையானது சுற்றுலா அமைச்சகத்துடன் இணைந்து ஸ்வச்சதா பசுமை இலை மதிப்பீட்டு முன்னெடுப்பினைத் தொடங்கி உள்ளது.
- தங்கும் விடுதிகள், உல்லாச விடுதிகள் மற்றும் சகல வசதிகள் கொண்ட தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் உலகத் தரம் வாய்ந்த சுகாதாரம் மற்றும் துப்புரவினை உறுதி செய்வதை இந்த மதிப்பீடு அமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தற்போது வரை எந்த மாநிலமும் இதைத் தேர்வு செய்யாத நிலையில் தொடக்க நிலை திட்டமாகவே இது உள்ளது.
- முதல் ஐந்து ஸ்வச்சதா பசுமை இலை மதிப்பீட்டுச் சான்றிதழைப் பெற்று மத்தியப் பிரதேசம் முதலடியினை மேற்கொண்டுள்ளது.

## DefConnect 2024

- 'DefConnect 2024' என்ற திட்டமானது பாதுகாப்பு துறை சார்ந்த உற்பத்தியில் உள்நாட்டு கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்நிகழ்வு ஆனது கூட்டாண்மைகளை உருவாக்குதல் மற்றும் அதிகரித்து வரும் பாதுகாப்புத் துறை சார்ந்த சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த நிகழ்வின் போது, சிறப்பான பாதுகாப்புத் துறைக்கான புத்தாக்கம் (iDEX) என்ற திட்டத்துடன் இணைந்து புதுமையான தொழில்நுட்பங்களின் மேம்பாடு (ADITI) என்ற திட்டமானது தொடங்கப்பட்டது.
- இது சிறப்பான பாதுகாப்புத் துறைக்கானப் புத்தாக்கம் - பாதுகாப்புப் புத்தாக்க அமைப்பினால் (iDEX-DIO) ஏற்பாடு செய்யப்பட்டது.

## மரண வாக்குமூலம் மீதான தீர்ப்பு


- மரண வாக்குமூலம் ஆனது உண்மையானது மற்றும் மனமார வழங்கப்பட்டது என்று நீதிமன்றம் திருப்தி அடைந்தால், வேறு எந்த ஆதாரமும் இல்லாமல் அதை மட்டுமே கருத்தில் கொண்டு தண்டனை விதிப்பதற்கான அடிப்படை மூலமாக அதை மாற்ற முடியும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- இது நயீம் எதிர் உத்தரப் பிரதேச மாநில அரசு இடையிலான வழக்கில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.
- அத்பீர் மற்றும் டெல்லியின் தேசிய தலைநகர் பகுதி அரசாங்கம் இடையிலான வழக்கின் போது, உச்ச நீதிமன்றம் மரண வாக்குமூலத்தின் அடிப்படையில் தண்டனையை அறிவிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய சில காரணிகளை வகுத்தது.

## நான்காவது மின்துறை ஊழியர்கள் தினம்


- மின்சார அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மத்திய மின்சார ஆணையம் (CEA) ஆனது, நான்காவது மின்துறை ஊழியர்கள் தினத்தினை ('லைன்மேன் திவாஸ்') வெகுவாக கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.
- மின்கம்பிகளை பழுது பார்த்து பேணிக் காக்கும் மின்துறை ஊழியர்கள் மற்றும் செயல்பாட்டு தளப் பராமரிப்புப் பணியாளர்களின் ஆகியோரின் அயராத தொழில் ஈடுபாடு மற்றும் சேவையை அங்கீகரிக்கும் வகையில் இந்தத் தினம் கொண்டாடப் படுகிறது.
- நான்காவது மின்துறை ஊழியர்கள் தினத்தின் கருத்துரு, 'சேவா, சுரக்ஷா, ஸ்வாபிமான்' என்பதாகும்.

## 10 இராணுவக் குடியிருப்புகள் (கண்டோன்மென்ட்) நிலை நீக்கம்

- நாட்டில் உள்ள மொத்தம் 58 இராணுவக் குடியிருப்பு பகுதிகளில் 10 இல் உள்ள குடிமைப் பகுதிகளை அப்பட்டியலில் இருந்து நீக்குவதற்கான அரசிதழ் அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- இந்தப் பகுதிகள் தற்போது அந்தந்த மாநில நகராட்சிகளுடன் (உள்ளாட்சி அமைப்புகள்) இணைக்கப்படும்.
- இமாச்சலப் பிரதேசத்தின் ஆறு பகுதிகள் உட்பட, பிற இராணுவக் குடியிருப்புகளில் உள்ள குடிமைப் பகுதிகளை அப்பட்டியலில் இருந்து அகற்றுவதற்கான செயல்முறை நடைபெற்று வருகிறது.
- இந்த 10 இராணுவக் குடியிருப்புகளில்;
    - உத்தரக்காண்டில் உள்ள டேராடூன் மற்றும் கிளமென்ட் நகர இராணுவக் குடியிருப்புகள்;
    - உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஃபதேகர், பாபினா, ஷாஜஹான்பூர் மற்றும் மதுரா இராணுவக் குடியிருப்புகள்;
    - மகாராஷ்டிராவில் உள்ள தியோலாலி இராணுவக் குடியிருப்பு;
    - ஜார்க்கண்டில் உள்ள ராம்கர் இராணுவக் குடியிருப்பு;
    - ராஜஸ்தானில் உள்ள அஜ்மீர் மற்றும் நசிராபாத் இராணுவக் குடியிருப்புகள்.
- இராணுவக் குடியிருப்புகள் என்பது பொதுமக்கள் மற்றும் இராணுவ வீரர்கள் வசிக்கும் இடங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.
- 1924 ஆம் ஆண்டு இராணுவக் குடியிருப்புகள் சட்டத்தின் (தற்போது 2006 ஆம் ஆண்டு இராணுவக் குடியிருப்புகள் சட்டம்) கீழ் இராணுவக் குடியிருப்புகள் அறிவிக்கப் படுகின்றன.
- மத்திய அரசானது, மாநில அரசுகள் மற்றும் இராணுவக் குடியிருப்பு வாரியங்களைக் கலந்தாலோசித்த பிறகு, குறிப்பிட்ட சில பகுதிகளை விலக்கி, அந்தப் பகுதிகளை மாநில உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைக்க அறிவிக்கலாம்.




## குடியுரிமை திருத்தச் சட்டம் 2019




- மத்திய உள்துறை அமைச்சகம் ஆனது, குடியுரிமை திருத்தச் சட்டத்தின் (CAA) விதிகளை சமீபத்தில் அறிவித்தது.
- நாடு முழுவதிலும் இந்தச் சட்டத்தினை அமலாக்குவதற்கு இது வழி வகுக்கிறது.
- 2024 ஆம் ஆண்டு குடியுரிமை (திருத்தம்) விதிகள் என அழைக்கப்படும் இந்த விதிகள் ஆனது, 2019 ஆம் ஆண்டு குடியுரிமை திருத்தச் சட்டத்தின் கீழ் தகுதி பெற்ற நபர்கள் இந்தியக் குடியுரிமை பெறுவதற்கு விண்ணப்பிக்க உதவும்.
- ஆப்கானிஸ்தான், வங்காளதேசம் மற்றும் பாகிஸ்தானில் இருந்து வரும் இந்து, சீக்கிய, சமண, புத்த, கிறிஸ்தவ மற்றும் பாரசீக அகதிகள் இந்தியக் குடியுரிமையினைப் பெறுவதை இந்தச் சட்டம் எளிதாக்குகிறது.

- 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்கு முன்னதாக இந்த நாடுகளில் இருந்து இந்தியாவிற்கு வந்து குடியேறிய முஸ்லிம் அல்லாதவர்களுக்கு குடியுரிமை வழங்கச் செய்வதை இந்தச் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் CAA நிறைவேற்றப்பட்டு, அதன்பின் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றது.

## தேர்தல் ஆணையர் பதவி விலகல்

- மக்களவை தேர்தலுக்கு சில வாரங்களே உள்ள நிலையில், தேர்தல் ஆணையர் அருண் கோயல் ராஜினாமா செய்ததையடுத்து, அவரது ராஜினாமாவை குடியரசுத் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்.
- மூன்று உறுப்பினர்களைக் கொண்ட இந்திய தேர்தல் ஆணையத்தில் ஏற்கனவே ஒரு காலிப் பணியிடம் இருந்ததையடுத்து, தற்போது ஆணையத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் மட்டுமே உள்ளார்.
- கடந்த ஆண்டு மார்ச் மாதம் வழங்கப்பட்ட ஒரு முக்கிய தீர்ப்பில், பின்வருபவர்கள் அடங்கிய ஒரு குழுவினால் தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப் படுவர் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
  - பிரதமர்,
  - எதிர்க்கட்சித் தலைவர் மற்றும்
  - இந்தியத் தலைமை நீதிபதி
- பாராளுமன்றத்தினால் தகுந்தச் சட்டம் இயற்றப்படும் வரை இந்த உத்தரவு அமலில் இருக்கும் என்றும் நீதிமன்ற அமர்வு கூறியது.
- டிசம்பர் மாதத்தில், நியமனக் குழுவில் இந்தியத் தலைமை நீதிபதிக்குப் பதிலாக மத்திய அமைச்சரவைக் குழுவின் அமைச்சரை சேர்ப்பதற்கான மசோதா ஒன்றினைப் பாராளுமன்றம் நிறைவேற்றியது.
- 2023 ஆம் ஆண்டு தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் (நியமனம், சேவை நிபந்தனைகள் மற்றும் பதவிக் காலம்) என்ற ஒரு மசோதாவானது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது.

## EFTA ஒப்பந்த நாடுகளுடன் இலவச வர்த்தக ஒப்பந்தம்

- இந்திய அரசானது புது டெல்லியில் நான்கு நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐரோப்பிய தடையற்ற வர்த்தகச் சங்கத்துடன் (EFTA) தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- ஐஸ்லாந்து, நார்வே, சுவிட்சர்லாந்து மற்றும் லிச்சென்ஸ்டீன் ஆகிய நான்கு நாடுகள் ஆனது EFTA சங்கத்தின் உறுப்பினர் நாடுகள் ஆகும்.
- இந்த ஒப்பந்தமானது இனிமேல் அதிகாரப்பூர்வமாக வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம் (TEPA) என அழைக்கப்படுகிறது.
- அடுத்த 15 ஆண்டுகளில் 100 பில்லியன் டாலர் முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- இந்த ஒப்பந்தம் கையொப்பமாவதற்கு முன்னதாக, அந்த ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப் பட்ட முதல் 10 ஆண்டுகளில் சுமார் 50 பில்லியன் டாலர் முதலீட்டினை மேற்கொள்வதற்கான உறுதிப்பாட்டினை இந்தியா கோரியது.
- இந்த சங்கத்தின் உறுப்பினர் நாடுகளிடமிருந்து அதற்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் மேலும் 50 பில்லியன் டாலர் முதலீடு கிடைக்கப்பெறும்.

## வர்த்தக இரகசியங்கள் மீதான 22வது சட்ட ஆணையம்




- 22வது சட்ட ஆணையம் ஆனது, தகவல் அளிப்போருக்கான பாதுகாப்பு, கட்டாய உரிமம், அரசு பயன்பாடு மற்றும் பொது நலன் ஆகியவை தொடர்பான பல்வேறு விதி விலக்குகளுடன் வர்த்தக ரகசியங்களைப் பாதுகாப்பதற்காக என்று புதியச் சட்டத்தை அறிமுகப் படுத்துவதற்குப் பரிந்துரைத்துள்ளது.
- நீதிபதி ரிது ராஜ் அவஸ்தி தலைமையில் 22வது சட்ட ஆணையம் அமைக்கப்பட்டது.
- வர்த்தக இரகசியங்கள் என்பது விற்கப்படும் அல்லது உரிமம் பெற்ற இரகசியத் தகவல்களின் அறிவுசார் சொத்துரிமைகள் ஆகும்.
- அவை இரகசியமாக வைக்கப்படுவதால் அவை உயர் மதிப்பைப் பெறுகின்றன.
- தற்போது, வர்த்தக இரகசியங்களைப் பாதுகாப்பதற்கான ஒரு குறிப்பிட்ட சட்டம் இந்தியாவில் இல்லை.
- அதற்கு மாறாக, ஒப்பந்தங்கள், பொதுச் சட்டம், குற்றவியல் சட்டம் மற்றும் நம்பிக்கை மற்றும் சமபங்கு மீறல் கொள்கைகளை நிர்வகிக்கும் பொதுச் சட்டங்களின் கீழ் அவை பாதுகாக்கப் படுகின்றன.

## உலகின் மிக நீளமான இரட்டைவழிப் பாதை சேலா சுரங்கப்பாதை

- அருணாச்சலப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிக நீளமான இரட்டை வழிப் பாதை கொண்ட சேலா சுரங்கப்பாதையானது சமீபத்தில் திறக்கப் பட்டது.
- 13,000 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த சுரங்கப் பாதையானது மெய்க் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதிக்கு (LAC) அருகில் இருப்பதால் உத்திசார் நிலையில் முக்கியத்துவம் வாய்ந்தது.
- சேலா சுரங்கப் பாதையானது, புதிய ஆஸ்திரிய சுரங்கப்பாதை முறையை (NATM)

பயன்படுத்திக் கட்டமைக்கப்பட்டுள்ளது.




## உணவற்ற குழந்தைகள்

- குறிப்பிட்ட கால இடைவெளியில் எந்தவொரு உணவும் பெறாத குழந்தைகள் (உணவற்ற குழந்தைகள்) இந்தியாவில்தான் அதிக எண்ணிக்கையில் (6.7 மில்லியன்) உள்ளனர்.
- இது 92 நாடுகளில் உள்ள, குறிப்பிட்ட கால இடைவெளியில் எந்தவொரு உணவும் பெறாத குழந்தைகள் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட பாதியளவாகும்.
- நைஜீரியாவில் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான உணவற்ற குழந்தைகள் (962 000) உள்ளனர்.
- அதைத் தொடர்ந்து பாகிஸ்தான் (8,49,000), எத்தியோப்பியா (7,72,000), காங்கோ ஜனநாயகக் குடியரசு (3,62,000) ஆகியவை உள்ளன.
- உணவற்ற குழந்தைகள் என்பது 6 முதல் 23 மாதங்களுக்கு இடைப்பட்ட வயதிலான குழந்தைகள், கடந்த 24 மணி நேரத்தில் பால், இதர அவசிய உணவு அல்லது எந்தவொரு உணவையும் உட்கொள்ளாத குழந்தைகள் ஆவர்.

**Table 2. Categorization of Countries by the Estimated Number of Zero-Food Children and Zero-Food Prevalence[a]**

| Country | No., thousands (%) |
|---|---|
| **Many children and high prevalence** | |
| India | 6732.2 (19.3) |
| Nigeria | 961.9 (8.8) |
| Pakistan | 848.5 (9.2) |
| Ethiopia | 771.9 (14.8) |
| Democratic Republic of the Congo | 362.4 (7.4) |
| Egypt | 254.5 (6.8) |

## தேசியக் கூட்டுறவுத் தரவுத் தளம்




- ❖ நாட்டில் கூட்டுறவு அமைப்புகளின் விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டிற்கு உதவும் வகையில் தேசியக் கூட்டுறவுத் தரவுத்தளம் ஆனது தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ இது தேசிய/மாநில கூட்டமைப்புகள் உட்பட அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் தரவுகளும் சேகரித்து வைக்கப்பட்டுள்ள ஓர் இணைய அடிப்படையிலான எண்ணிம கட்டுப்பாட்டகம் ஆகும்.
- ❖ இது 30 கோடிக்கும் அதிகமான மக்கள் இணைந்துள்ள 8 லட்சம் கூட்டுறவு அமைப்புகளைப் பற்றிய தகவல்களை சேகரித்துள்ளது.
- ❖ 'தேசியக் கூட்டுறவுத் தரவுத் தளம் 2023: ஓர் அறிக்கை' என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையும் சமீபத்தில் வெளியிடப்பட்டது.

## 'மாநிலங்களுக்கான நிதி ஆயோக்' இணைய தளம்

- ❖ நிதி ஆயோக் அமைப்பானது மாநிலங்களுக்கான நிதி ஆயோக் என்ற எண்ணிம பல்துறை இடைமுக தகவல் பகிர்வு தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- ❖ இது கொள்கை மற்றும் ஆளுமைக்கான எண்ணிமப் பொது உள்கட்டமைப்பை (DPI) உருவாக்கும்.
- ❖ இது அரசாங்கத்தின் விக்சித் பாரத் செயல் திட்டத்திற்குத் தேவையான பல ஆவணங்கள் மற்றும் தரவுத் தொகுப்புகளை வழங்கும் ஓர் ஒருங்கிணைந்த தளம் ஆகும்.
- ❖ மாநிலங்களுக்கான நிதி ஆயோக் தளமானது, 7,500 சிறந்த நடைமுறைகள், 5,000 கொள்கை ஆவணங்கள், 900க்கும் மேற்பட்ட தரவுத்தொகுப்புகள், மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் தொகுதிகள் ஆகியவற்றின் 1,400 தரவு விவரங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய ஒரு பல் துறை நேரடிக் களஞ்சியமாக இருக்கும்.
- ❖ இது மக்கள்தொகை மற்றும் சமூகப் பொருளாதாரக் குறிகாட்டிகள் மற்றும் 350 நிதி ஆயோக் அமைப்பின் வெளியீடுகளால் வெளிக் கொணரப் பட்டது.




## இ-கிசான் உபஜ் நிதி

- எண்ணிம தளமான இ-கிசான் உபஜ் நிதி, பதிவு செய்யப்பட்ட கிடங்குகளில் வைக்கப் பட்டுள்ள விவசாயிகள் தங்கள் விளைபொருட்கள் மீது விவசாயிகள் கடன் பெற உதவும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது.
- இதன் மூலம் விவசாயிகள் எந்த உத்தரவாதமும் இல்லாமல் 7 சதவீத வட்டி விகிதத்தில் எளிதாக கடன் பெற முடியும்.
- விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன்கள் ஆனது, மின்னணு வகையில் பரிமாற்றம் செய்யக் கூடிய கிடங்கு ரசீது (e-NWR) அடிப்படையில் வழங்கப்படும்.
- கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் கீழ் தற்போது 5,500க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட கிடங்குகள் உள்ளன.
- மொத்த வேளாண் சேமிப்புக் கிடங்குகளின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சம் என மதிப்பிடப் பட்டுள்ளது.



## UNNATI - 2024




- ❖ மத்திய அமைச்சரவையானது 2024 ஆம் ஆண்டு உத்தரப் பூர்வா பரிமாற்ற ரீதியிலான தொழில்மயமாக்கல் திட்டத்தினை (UNNATI - 2024) மேலும் 10 ஆண்டுகளுக்கு நீட்டிக்க ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இது அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அமைக்கப் பட்டு உள்ளதோடு, எட்டு ஆண்டு கால உறுதிப்பாடுகளுடன் 2034 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரையில் இது இயங்கும்.
- ❖ இந்தத் திட்டம் ஆனது வடகிழக்குப் பிராந்தியத்தில் தொழில்துறைகளை மேம்படுத்தச் செய்வதையும், வேலைவாய்ப்பை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டது ஆகும்.
- ❖ இது உற்பத்தி மற்றும் சேவைகள் துறையில் மிகவும் ஆக்கப்பூர்வமிக்கப் பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்க முயல்கிறது.
- ❖ இதன்படி மாவட்டங்கள் இரண்டு மண்டலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன: மண்டலம் A (தொழில்துறையில் முன்னேற்றம் அடைந்த மாவட்டங்கள்) மற்றும் மண்டலம் B (தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டங்கள்).
- ❖ A மண்டலத்தின் செலவினத்தில் 60% ஆனது எட்டு வடகிழக்கு மாநிலங்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ள நிலையில் மீதமுள்ள 40% ஆனது முதல் பதிவு (FIFO) அடிப்படையில் ஒதுக்கப்படும்.

## இந்தியாAI திட்டம்

- ❖ அடுத்த ஐந்தாண்டுகளுக்கு 10,372 கோடி ரூபாய் செலவில் இந்தியாAI திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ நாட்டில் செயற்கை நுண்ணறிவு சார் கணினி திறன் மையங்களை நிறுவ விரும்பும் தனியார் நிறுவனங்களுக்கு மானியம் வழங்குவதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கும்.
- ❖ இது நாட்டிற்கான கணினி சார் உள்கட்டமைப்பு, பல்முனையப் பெரிய மொழி மாதிரிகளுக்கான செயற்கை நுண்ணறிவு மையங்கள், 10,000 இயங்கு பட தொழில் நுட்பச் செயலாக்க அலகுகள் மற்றும் பலவற்றை உருவாக்கப் பயன்படும்.

## 2024 ஆம் ஆண்டு மழைநீர் சேமிப்பு பிரச்சாரம்

- ஜல் சக்தித் துறை அமைச்சகம் ஆனது 'ஜல் சக்தி அபியான்: மழைநீர் சேமிப்பு-2024' என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இது மழைநீர்ச் சேகரிப்பு மற்றும் பிற நிலையான நீர் மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நீர் வளங்காப்பு, மழைநீர்ச் சேகரிப்பு, நீர்நிலைகளுக்குப் புவிசார் குறியீடு வழங்குதல், ஜல் சக்தி கேந்திராக்களை (செயலகங்களை) நிறுவுதல், தீவிரமான காடு வளர்ப்புத் திட்டம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்தப் பிரச்சாரம் உள்ளது.

## உயிருள்ள விலங்கு இனங்கள் (அறிக்கையிடல் மற்றும் பதிவு செய்தல்) விதிகள், 2024




- 2024 ஆம் ஆண்டு உயிருள்ள விலங்கு இனங்கள் (அறிக்கையிடல் மற்றும் பதிவு செய்தல்) விதிகள் ஆனது மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது.
- பஞ்சவர்ணக்கிளி, சீனக்கிளி (கொண்டைக்கிளி) அல்லது பலவிதமான மென்மையான ஓடுகள் கொண்ட ஆமைகள் போன்ற கண்கவர் செல்லப் பிராணிகளைக் கொண்டு உள்ளவர்கள் அவற்றை மாநில வனவிலங்குத் துறையில் பதிவு செய்ய வேண்டும்.
- இந்த விதிகளின் கீழ் உள்ளடங்கிய இனங்கள், அருகி வரும் வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் (CITES) வர்த்தகம் தொடர்பான ஒரு சர்வதேச உடன்படிக்கையின் கீழ் பட்டியலிடப் பட்டுள்ளன.
- 'விலங்கு இனங்கள்' என்பது, உடன்படிக்கையின் கீழ் உள்ள உயிரினங்களை உள்ளடக்கிய ஒரு சட்டத்துடன் இணைக்கப்பட்ட IVவது அட்டவணையில் பட்டியலிடப் பட்டுள்ள உயிருள்ள விலங்கு இனங்களாகும்.

- ❖ வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஏற்கனவே பாதுகாக்கப்பட்ட மற்றும் வளர்ப்பிற்குப் பயன்படுத்த முடியாத பிற வனவிலங்குகளுக்கு என்று இந்த விதிகள் பொருந்தாது.
- ❖ 2022 ஆம் ஆண்டு வனவிலங்குகள் (பாதுகாப்பு) திருத்தச் சட்டத்தின் 49M என்ற பிரிவானது, CITES உடன்படிக்கையின் பின் இணைப்புகளில் பட்டியலிடப்பட்ட இனங்கள் மற்றும் சட்டத்தின் IV வது அட்டவணையில் பட்டியலிடப்பட்ட உயிருள்ள அட்டவணைப் படுத்தப்பட்ட விலங்கு இனங்களை உடைமையாகக் கொண்டிருத்தல், இடமாற்றம், பிறப்பு மற்றும் இறப்பு ஆகியவற்றைப் பதிவு செய்வதற்கான பல்வேறு விதிமுறைகளைக் கொண்டுள்ளது.

## KIRTI திட்டம்





- ❖ கேலோ இந்தியா எழுச்சி பெறும் திறமைகளை அடையாளம் காணுதல் (KIRTI) திட்டம் சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- ❖ இந்தத் திட்டம் ஆனது ஒன்பது முதல் 18 வயது வரையிலான பள்ளிக் குழந்தைகளை இலக்காகக் கொண்டது.
- ❖ இது மிகவும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான ஒரு கருவியாக விளையாட்டைப் பயன்படுத்துவதில் நன்கு கவனம் செலுத்துவதோடு, முதன்மையாக போதைப் பொருள் மற்றும் மின்னணுச் சாதனங்களின் மூலம் உருவாகும் பல்வேறு கவனச் சிதறல்களிலிருந்து இளையோர்களை விலக்கி வைக்கிறது.

- தடகளம், குத்துச்சண்டை, மல்யுத்தம், ஹாக்கி, கால்பந்து மற்றும் மல்யுத்தம் உள்ளிட்ட 10 விளையாட்டுத் துறைகளில் முதல் கட்டமாக ஐம்பதாயிரம் விண்ணப்பதாரர்கள் குறித்த மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## UNDP பாலினச் சமத்துவமின்மைக் குறியீடு 2022


- 2022 ஆம் ஆண்டு பாலினச் சமத்துவமின்மைக் குறியீட்டில் (GII) மதிப்பிடப்பட்ட 193 நாடுகளில் 0.437 மதிப்பெண்களுடன் இந்தியா 108வது இடத்தைப் பெற்றுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு பாலினச் சமத்துவமின்மைக் குறியீட்டில் மதிப்பிடப்பட்ட 191 நாடுகளில் இந்தியா 122வது இடத்தில் இருந்தது.
- கடந்த 10 ஆண்டுகளில், பாலினச் சமத்துவமின்மைக் குறியீட்டில் இந்தியாவின் தர வரிசை தொடர்ந்து சிறப்பான நிலையில் உள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் 127 ஆக இருந்த இந்தத் தரவரிசையானது தற்போது 108 ஆக மாறி உள்ளது.
- இருப்பினும், இந்தியா அதன் தொழிலாளர் பங்கேற்பு விகிதத்தில் மிகப்பெரிய பாலின இடைவெளியைக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் தொழிலாளர் பங்கேற்பு விகிதத்தில் பெண்களின் பங்கேற்பிற்கும் (28.3 சதவீதம்) ஆண்களின் பங்கேற்பிற்கும் (76.1 சதவீதம்) இடையிலான இடைவெளி 47.8 சதவீதமாக உள்ளது.




## NFECS மற்றும் NECCE அறிமுகம்

- இந்திய அரசானது, ஆரம்பக் குழந்தைப் பருவக் கல்விக்கான (ECCE) தேசியப் பாடத் திட்டத்தையும், குழந்தைப் பருவ ஊக்குவிப்பிற்கான ஒரு தேசியக் கட்டமைப்பையும் அறிமுகப் படுத்துகிறது.


- ECCE ஆனது மூன்று வயது முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகளுக்கான கல்வி நிலையை உள்ளடக்கியது ஆகும் என்பதோடு NFECS ஆனது பிறந்தது முதல் மூன்று வயது வரையிலான குழந்தைகளுக்கான ஆரம்பகாலக் குழந்தைப் பருவ (ஊக்குவிப்பு) தூண்டுதலுடன் தொடர்புடையது.
- இந்த முன்னெடுப்புகளானது குழந்தை வளர்ச்சியின் ஆரம்ப ஆண்டுகளின் முக்கியப் பங்கை அங்கீகரித்து அதன் மூலம் இந்தியாவின் ஆரம்பகாலக் குழந்தைப் பருவப் பராமரிப்பு மற்றும் கல்விக் கட்டமைப்பினை வலுப்படுத்த முயல்கின்றன.
- NECCE ஆனது 3 முதல் 8 வயது வரையிலான குழந்தைகளின் கல்வி நிலையில் கவனம் செலுத்துவதோடு, "விளையாட்டு மிக்க மகிழ்ச்சியுடனான கற்றல் முறையில்" கவனம் செலுத்துகிறது.
- NFECS ஆனது, மையம் மற்றும் இல்லம், உட்புற மற்றும் வெளிப்புற, குழந்தைகள் தலைமையிலான மற்றும் கல்வியாளர் தலைமையிலான மற்றும் வலுவான மதிப்பீட்டு கருவிகள் உள்ளிட்டச் செயல்பாடுகளின் கலவையைக் கொண்ட செயல்முறைகளை உள்ளடக்கியுள்ளது.




## தேர்தல் பத்திரங்கள் தரவு

- பாரதிய ஜனதா கட்சியானது, கடந்த ஐந்தாண்டுகளில் அரசியல் நன்கொடையாக சுமார் 6,061 கோடி பெற்றதன் மூலம் தேர்தல் பத்திரங்கள் திட்டத்தின் கீழான மிகப் பெரியப் பயனாளியாக இருந்துள்ளது.
- இது 2019-20 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து அரசியல் கட்சிகளால் பணமாக்கப் பட்ட அனைத்து தேர்தல் பத்திரங்களின் மதிப்பில் 48 சதவீதமாகும்.
- 1,610 கோடி ரூபாய் நிதி திரட்டிய திரிணாமுல் காங்கிரஸ் இரண்டாவது இடத்தில் உள்ள நிலையில் சுமார் 1,422 கோடி ரூபாய் மதிப்புடன் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மூன்றாவது இடத்தில் உள்ளது.

- ❖ 1,215 கோடி ரூபாய் நிதியுடன் பாரதிய ராஷ்ட்ரிய சமிதி கட்சி, முந்தைய தெலுங்கானா இராஷ்ட்ரிய சமிதி, மற்றும் 776 கோடி ரூபாய் நிதியுடன் பிஜு ஜனதா தளம் ஆகியவை முறையே 4வது மற்றும் 5வது இடங்களில் இடம் பெற்றுள்ளன.




## மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் 2024

- ❖ இந்திய தேர்தல் ஆணையம் (ECI) ஆனது, மார்ச் 16 ஆம் தேதியன்று மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் (MCC) அமலுக்கு வருவதாக அறிவித்துள்ளது.
- ❖ நாடு முழுவதும் ஏப்ரல் 19 முதல் ஜூன் 01 ஆம் தேதி வரையில் 7 கட்டங்களாக மக்களவைத் தேர்தலில் வாக்குப் பதிவு செய்யப்பட்டு அதற்கான முடிவுகள் ஜூன் 04 ஆம் தேதியன்று அறிவிக்கப்பட உள்ளது.
- ❖ தேர்தல்களின் போது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் பிரச்சாரத்தை ஒழுங்குமுறைப் படுத்துவதற்காக தேர்தல் ஆணையத்தினால் வழங்கப்படும் பல்வேறு வழிகாட்டுதல்களின் தொகுப்பே மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் ஆகும்.
- ❖ வாக்காளர்களினிடத்தில் கருத்துத் தாக்கத்தினை ஏற்படுத்தும் அல்லது வாக்கெடுப்பு செயல்முறையை சீர்குலைக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் தடுப்பதன் மூலம் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதே இதன் முக்கிய நோக்கம் ஆகும்.
- ❖ கேரளாவில் 1960 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போதுதான் மாதிரி தேர்தல் நடத்தை விதி முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது.
- ❖ அதன் வெற்றிகரமாகப் பின்பற்றலைத் தொடர்ந்து, 1962 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது தேர்தல் ஆணையம் இந்த விதிகளை நாடு முழுவதும் அறிமுகப் படுத்தியது.

- 1991 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது, மீண்டும் மீண்டும் நடைபெற்ற தேர்தல் விதி மீறுதல் மற்றும் ஊழல் நடைமுறைகள் காரணமாக மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை மேலும் கடுமையாக அமல்படுத்துவதற்கு தேர்தல் குழு முடிவு செய்தது.
- மாதிரி தேர்தல் நடத்தை விதிகளுக்கு எந்தவித சட்டப்பூர்வ அங்கீகாரம் இல்லை.
- அதாவது, மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை மீறும் ஒருவர் மீது எந்தவொரு சட்டத்தின் கீழும் வழக்கு தொடர முடியாது.
- தேர்தல் ஆணையமானது, அதன் அமலாக்கத்திற்கு வேண்டி தார்மீக அனுமதி அல்லது தணிக்கையைப் பயன்படுத்துகிறது.




## நாடு முழுவதும் ஒரே தேர்தல் நடத்துவது குறித்த குழு

- 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' தொடர்பான உயர்மட்டக் குழு தனது அறிக்கையை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களிடம் சமர்ப்பித்துள்ளது.
- முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களின் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டது.
- நாடு முழுவதும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று குழு ஒருமனதாக கருத்து தெரிவித்துள்ளது.
- முதலில், மக்களவைத் தேர்தல் மற்றும் மாநில தேர்தல்கள் ஒரே நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதோடு அதைத் தொடர்ந்து 100 நாட்களுக்குள் ஒத்திசைக்கப் பட்ட உள்ளாட்சி தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.
- "முழு பதவிக்காலம்" மற்றும் "நிறைவடைந்த பதவிக்காலம்" (மக்களவை அல்லது சட்ட சபை அதன் "முழு பதவிக் காலம்" நிறைவடைவதற்கு முன்பாகவே விரைவில் கலைக்கப் படுதல்) என்ற கருத்தாக்கங்களை அறிமுகப்படுத்துவதற்கு வேண்டி அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

- மேலும், மக்களவை அல்லது சட்ட சபை அதன் "முழு பதவிக் காலத்திற்கு" முன்பாக விரைவில் கலைக்கப்படுவதால் நடத்தப்படும் தேர்தல் "இடைக்கால" தேர்தலாகக் கருதப் படும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
- ஐந்தாண்டுகள் முடிந்த பிறகு நடத்தப்படும் தேர்தல் "பொதுத் தேர்தலாகக் கருதப் படும்.
- இடைக்கால அவைக் கலைப்பு ஏற்பட்டால், மீண்டும் அமைக்கப்பட்ட சட்டமன்றத்தின் பதவிக்காலம், அதன் முழு காலமான ஐந்தாண்டுகளில் மீதமுள்ள பதவிக் காலம் வரை மட்டுமே இருக்கும்.
- பின்னர் சம்பந்தப்பட்ட சட்டமன்றத்திற்காக நடத்தப்படும் அடுத்த தேர்தல் "பொதுத் தேர்தலுடன்" நடத்தப்படும்.
- 1967 ஆம் ஆண்டு வரை ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்துவது இந்தியாவில் ஒரு வழக்கமாக இருந்த நிலையில் நான்கு தேர்தல்கள் இவ்வாறு ஒரே நேரத்தில் நடத்தப் பட்டன.
- 1968-69 ஆம் ஆண்டில் சில மாநிலச் சட்டசபைகள் முன்கூட்டியே கலைக்கப்பட்டதால் இந்த நடைமுறை நிறுத்தப்பட்டது.
- மக்களவையும் முதன்முறையாக, 1970 ஆம் ஆண்டில் ஒரு வருடம் முன்னதாகவே கலைக்கப் பட்டு 1971 ஆம் ஆண்டில் இடைக்காலத் தேர்தல்கள் நடத்தப் பட்டன.



HOW, WHAT & WHEN OF JOINT ELECTIONS

**How will elections be synchronised?**
In 2 stages, says panel report. **Step 1:** Simultaneous polls to be held for Lok Sabha, state assemblies. **Constitutional amendment needed, but no ratification by states required. Step 2: Local body polls** to be held **within 100 days of LS & assembly elections.** Amendment for this will require ratification by at least half the states.

**How will a cutoff date be fixed and varying assembly tenures adjusted?**
President will, through a notification, bring simultaneous polls into force on the date of first sitting of Lok Sabha after a general election. This becomes the 'appointed date'. Assemblies for which elections are held after this date will have tenure only till next Lok Sabha elections (which will be simultaneous)

**What happens if there is a hung House or governing party loses trust vote?**
Elections will be held for the remaining period of the five-year term


**When will simultaneous elections kick in?**
After legislative changes are undertaken, President will notify the 'appointed date' on the first day the newly elected LS sits

Former President Kovind gives report to President Murmu

## மின்சார வாகனம் (EV) கொள்கை 2024

- மத்திய அரசானது, புதிய மின்சார வாகன (EV) கொள்கையை அறிவித்துள்ளது.
- இந்தியாவில் தனது உற்பத்திச் செயல்பாடுகளைத் தொடங்குவதற்கான டெஸ்லாவின் திட்டங்களுக்கு இது பெரும் ஊக்கத்தை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தப் புதிய கொள்கையின் ஒரு பகுதியாக, சில மின்சார வாகனங்கள் மீதான இறக்குமதி வரிகளை அரசாங்கம் குறைக்கும்.
- ஆர்வமுள்ள நிறுவனங்கள் குறைந்தபட்சம் 4150 கோடி ரூபாய் (500 மில்லியன் டாலர்) முதலீடு செய்ய வேண்டும்.
- இருப்பினும், அதிகபட்ச முதலீட்டிற்கு வரம்பு இல்லை.

- மின்சார வாகனங்களுக்கான (EVs) உள்நாட்டு உற்பத்தி மையங்களை நிறுவுவதற்கு அவற்றிற்கு மூன்று வருட கால அவகாசம் வழங்கப்படும்.
- அவை அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்குள் 50 சதவீத உள்நாட்டு மதிப்பு கூட்டல் (DVA) நிலையை அடைய வேண்டும்.
- உள்நாட்டு மதிப்பு கூட்டல் (DVA) என்பது உற்பத்தியில் பயன்படுத்தப்படும் உள்ளூர் மயமாக்கப் பட்ட கூறுகளின் சதவீதத்தைக் குறிக்கிறது.
- நிறுவனங்கள் நிறுவப்பட்ட 3 ஆம் ஆண்டிற்குள் 25 சதவீதமும், 5ஆம் ஆண்டிற்குள் 50 சதவீதமும் உள்ளூர்மயமாக்கல் நிலையை அடைய வேண்டும்.





## 'அக்ரே' மற்றும் 'அக்சய்' அறிமுகம்

- 'அக்ரே' மற்றும் 'அக்சய்' ஆகிய இரண்டு கப்பல்கள் சமீபத்தில் அறிமுகப்படுத்தப் பட்டன.
- இவற்றிற்கு இந்தியக் கடற்படையில் முன்னதாக இருந்த அபய் ரக போர்க்கப்பலில் அக்ரே மற்றும் அக்சய் ஆகியவற்றின் பெயரால் பெயரிடப்பட்டுள்ளது.
- இவை SWC திட்டத்தின் தொடரில் உருவாக்கப்பட்ட 5வது மற்றும் 6வது கப்பல்கள் ஆகும்.
- அவை கடலோரப் பகுதிகளில் நீர்மூழ்கி எதிர்ப்புச் செயல்பாடுகள், குறைந்த முக்கியத்துவம் கொண்ட கடல்சார் செயல்பாடுகள் (LIMO) மற்றும் கண்ணி வெடிகளை அமைக்கும் செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.



## NAP-SE

- இந்தியாவில் பாம்புக்கடித் தாக்குதலைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான ஒரு தேசிய செயல் திட்டம் (NAP-SE) ஆனது தொடங்கப்பட்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் பாம்புக்கடியினால் ஏற்படும் உயிரிழப்பினைப் பாதியாகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 'ஒரே சுகாதாரம்' என்ற அணுகுமுறையின் மூலம் பாம்புக்கடி நிகழ்வுகளை நிர்வகித்தல், தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றிற்கான தங்கள் சொந்த செயல் திட்டத்தை உருவாக்குவதற்கான ஒரு பரந்தக் கட்டமைப்பை மாநிலங்களுக்கு NAPSE வழங்குகிறது.
- மனிதர்கள், வனவிலங்குகள், பழங்குடியினர் மற்றும் விலங்குகள் ஆகியவற்றின் சுகாதாரக் கூறுகளுக்கான நடவடிக்கைகள் ஆனது அனைத்து மட்டங்களிலும் சம்பந்தப் பட்ட பங்குதாரர்களால் மேற்கொள்ளப்படும்.




## PM-SURAJ இணைய தளம்

- 'பிரதான் மந்திரி சமாஜிக் உத்தன் மற்றும் ரோஸ்கர் ஆதாரித் ஜன்கல்யான்' (PM-SURAJ) என்ற தேசிய இணைய தளம் ஆனது சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த இணைய தளமானது, சமூகத்தின் விளிம்பு நிலைப் பிரிவினருக்கு கடன் உதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதைப் பயன்படுத்தி, சமூகத்தின் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்தவர்கள் கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற விண்ணப்பிக்கவும், தாங்கள் ஏற்கனவே பெற்றுள்ள அனைத்து கடன்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும் இயலும்.




## குற்றவியல் வழக்கு மேலாண்மை அமைப்பு




- ஒரு தனித்துவமான அடிப்படையிலான குற்றவியல் வழக்கு மேலாண்மை அமைப்பு ஆனது புது டெல்லியில் தொடங்கப்பட்டுள்ளது.
- இது தேசியப் புலனாய்வு முகமையின் பணியாளர்கள், தீவிரவாதம் மற்றும் நன்கு ஒழுங்கமைக்கப் பட்ட குற்ற வழக்குகளைச் சிறப்பாக ஒருங்கிணைத்து, அதன் மூலம் நீதி வழங்கலை மேம்படுத்த உதவும்.
- ‘சங்கலன்’ என்ற கைபேசி செயலியும் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) புதிய குற்றவியல் சட்டங்களின் தொகுப்பாகும்.

- இந்தச் செயலியானது பழைய மற்றும் புதிய குற்றவியல் சட்டங்களுக்கு இடையே ஓர் இணைப்புப் பாலமாக இருந்து புதிய குற்றவியல் சட்டங்களின் வழியே கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தச் செயலி ஆனது அனைத்துப் பங்குதாரர்களுக்கும் ஒரு விரிவான வழிகாட்டியாக செயல்படும்.

## வளிமண்டல சோதனைத் தளம்

- மத்தியப் பிரதேசத்தின் செஹோர் மாவட்டத்தில் உள்ள சில்கேடாவில் அமைக்கப் பட்டுள்ள இந்தியாவின் வளிமண்டல ஆராய்ச்சி சோதனைக் கூடத்தின் - மத்திய இந்தியா- முதல் கட்டம் (ART-CI) ஆனது சமீபத்தில் திறக்கப்பட்டது.
- மத்திய இந்தியாவின் பருவமழை நிறை மண்டலத்தில் (MCZ), பருவமழையுடன் தொடர்புடைய முக்கிய மேகச் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்காக 25 உயர்நிலை வானிலைக் கருவிகளை இந்த மையம் கொண்டுள்ளது.
- வெப்பநிலை, காற்றின் வேகம் போன்ற வானிலை அளவுருக்களை நிலத்தில் இருந்த படி கண்காணிப்பதனை இந்த மையம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அழைப்பாளர் பெயர் அறிவிப்பு வசதி





- இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை வாரியம் ஆனது, சமீபத்தில் தொலைத் தொடர்பு சேவை வழங்கும் நிறுவனங்கள் அழைப்பாளர் பெயர் அறிவிப்பு வசதியை (CNAP) அறிமுகப்படுத்துமாறு பரிந்துரைத்துள்ளது.
- இந்த அம்சம் ஆனது, பயனர்கள் அழைப்பாளரின் பெயரைப் பார்க்க வழி வகை செய்து, தேவையற்ற மற்றும் அடையாளம் அறியப்படாத (ஸ்பேம்) தொலைபேசி அழைப்புகளைத் தவிர்க்க உதவும்.

- ட்ரூகாலர் என்ற செயலியினைப் போன்ற ஒரு சேவையான CNAP என்பது தொலைபேசி அழைப்பாளரின் பெயரைத் திரையிடும்.
- TRAI அமைப்பின் படி, சேவை வழங்குநர்கள் CNAP வசதியில் உள்ளிடுவதற்கு, தங்களது வாடிக்கையாளர் விண்ணப்பப் படிவத்தில் (CAF) தொலைபேசிச் சந்தாதாரர்களால் வழங்கப் பட்ட பெயர் அடையாளத்தைப் பயன்படுத்த வேண்டும்.
- அனைத்து சேவை வழங்குநர்களும், தங்கள் சந்தாதாரர்களுக்கு அவர்களின் கோரிக்கையின் பேரில் இந்த வசதியை வழங்க வேண்டும்.
- SIM அட்டை வாங்கும் போது நாம் பயன்படுத்தும் பெயர் நாம் அழைக்கும் நபருக்குத் திரையில் தெரியும்.

## குறை தீர்ப்பு மதிப்பீட்டுக் குறியீடு 2023-24

- உள்துறை அமைச்சகம் ஆனது 2023-24 ஆம் ஆண்டு குறை தீர்ப்பு மதிப்பீட்டுக் குறியீட்டில் (GRAI) இடம் பெற்றுள்ள முதல் 10 அமைச்சகங்களுள் ஒன்றாக தொடர்ந்து இடம் பெற்றுள்ளது.
- இது குறிப்பிட்ட 15 குறிகாட்டிகளிலும் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது.
- 2023-24 ஆம் ஆண்டில், 48,837 பொதுக் குறைகளை நிவர்த்தி செய்து உள்துறை அமைச்சகம் சிறப்பாகச் செயலாற்றியுள்ளது.
- இது குறை தீர்ப்பிற்காக நிர்ணயிக்கப்பட்ட 30 நாட்களுக்குப் பதிலாக எட்டு நாட்கள் என்ற சராசரி குறை தீர்ப்பு காலத்திற்குள் தீர்வினை வழங்கியுள்ளது.



## செய்திப் பகிர்வுச் சேவை பிரசார் பாரதி





- ஊடகங்கள் முழுவதும் பல இலவசத் தகவல்களை வழங்குவதற்காக செய்தி கம்பிவட இணைப்பு மூலமான செய்தி பரவல் போன்ற சேவையைப் பிரசார் பாரதி அறிமுகப் படுத்தியுள்ளது.
- அவற்றிற்கு பதிப்புரிமை அல்லது மதிப்பு வழங்கல் ஆகியவை இல்லாத வகையில் அனைவருக்கும் கிடைக்கப் பெறும்.
- இந்த சேவை PB-SHABD (பிரசார் பாரதி-ஒளிபரப்பு மற்றும் பரப்புதலுக்கான பகிரப்பட்ட ஒலி-ஒளி காட்சிகள்) என அறியப்படுகிறது.
- இது அமைச்சகத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து செய்தி நிறுவனங்களுக்கும் ஒரு வருடத்திற்கான இலவச சேவையாக வழங்கப்படும்.

## நமோ திதி ஆளில்லா விமானத் திட்டம்

- இந்த முன்னெடுப்பின் கீழ், கிராமப்புறப் பெண்களுக்கு வேளாண் பயன்பாட்டிற்காக ஆளில்லா விமானங்களை இயக்குவதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- பெண்கள் மத்தியில், குறிப்பாக கிராமப்புறங்களில் பொருளாதார ரீதியான அதிகாரமளிப்பு மற்றும் நிதிச் சுயாட்சியை மேம்படுத்துவதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பயிர்க் கண்காணிப்பு, உரங்கள் தெளித்தல் மற்றும் விதைகளை விதைத்தல் போன்ற பணிகளில் உதவுவதற்காக வேண்டி 15,000 பெண்கள் தலைமையிலான சுய உதவிக் குழுக்களுக்கு (SHGs) வேளாண் பயன்பாட்டிற்கான ஆளில்லா விமானங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பல பெண்களுக்கு கூடுதல் வருமான வாய்ப்புகளையும் வழங்கும்.





## 'உங்கள் வேட்பாளரை அறிந்து கொள்ளுங்கள்' செயலி




- ❖ உங்கள் வேட்பாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC) என்ற புதிய கைபேசி செயலியை அறிமுகப் படுத்தியுள்ளதாக இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
- ❖ இந்தச் செயலியானது தங்கள் தொகுதியில் தேர்தலில் நிற்கும் வேட்பாளர் மீது குற்றவியல் வழக்குப் பதிவு உள்ளதா என்பதைச் சரி பார்க்க வாக்காளர்களுக்கு இது வாய்ப்பளிக்கிறது.

- ஆண்ட்ராய்டு மற்றும் iOS இயங்குதளங்களில் பதிவிறக்கம் செய்யும் வகையில் இந்த செயலி கிடைக்கப்பெறுகிறது.
- மக்களவையில் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த முயற்சிக்கும் வேட்பாளர், குற்றப் பின்னணி உள்ளவரா என்பதை வாக்காளர்கள் கண்டறிய இது உதவும்.


## காப்புரிமைகள் (திருத்தம்) விதிகள், 2024




- வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ஆனது, 2003 ஆம் ஆண்டு காப்புரிமை விதிகளை ("திருத்தப்பட்ட விதிகள்") திருத்தியமைப்பதற்காக 2024 ஆம் ஆண்டு காப்பு உரிமைகள் (திருத்தம்) விதிகளை அறிவித்துள்ளது.
- திருத்தப்பட்ட விதிகள் ஆனது ஏற்கனவே வெளியிடப்பட்ட தேதி முதல் (அதாவது மார்ச் 15, 2024) நடைமுறைக்கு வந்துள்ளன.
- முந்துரிமை தேதி அல்லது விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யும் தேதியிலிருந்து (இரண்டில் எது முந்தையதோ அதன் படி) 48 மாதங்கள் வரை நிர்ணயிக்கப்பட்டிருந்த, மதிப்பீட்டுக் கோரிக்கையினை (RFE) தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவானது தற்போது 31 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.
- சம்பந்தப்பட்ட வெளிநாட்டு விண்ணப்பங்கள் தொடர்பான எந்தவொரு "புதுப்பிக்கப் பட்ட" தகவலும் முதல் மதிப்பீட்டு அறிக்கையைப் (FER) பெற்ற மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- 24B மற்றும் 24C ஆகிய விதிகளின் கீழ், விண்ணப்பதாரர் மதிப்பீட்டு அறிக்கைக்கான பதில் குறிப்பினைத் தாக்கல் செய்வதற்கு மூன்று மாதங்கள் வரை நீட்டிப்பு கோரலாம்.
- முன்னதாக, 138 வது விதி (பரிந்துரைக்கப்பட்ட நேரத்தை நீட்டிக்கும் அதிகாரம்) 1 மாத காலத்திற்கு ஒரு சில விதிவிலக்குகளுடன், தாமதங்களை ஏற்றுக் கொள்வதற்கு என்று கட்டுப்பாளருக்கு அதிகாரம் வழங்குகிறது.
- 138வது விதியின் தலைப்பு ஆனது தற்போது 'குறிப்பிட்ட நேரத்தை நீட்டிக்கும் அல்லது தாமதத்தை ஏற்றுக் கொள்ளும் அதிகாரம்' என மாற்றப்பட்டுள்ளது.

- ❖ முன்னதாக, ஒவ்வோர் ஆண்டும் செயல்பாட்டு அறிக்கையானது தாக்கல் செய்யப்பட வேண்டும்.
- ❖ தற்போது, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே செயல்பாட்டு அறிக்கையானது சமர்ப்பிக்கப் பட வேண்டும்.

## மின்சார வாகன ஊக்குவிப்புத் திட்டம் 2024




- ❖ FAME-II திட்டம் மார்ச் 31 ஆம் தேதியன்று காலாவதியாகும் நிலையில், 2024 ஆம் ஆண்டு மின்சார வாகனப் பயன்பாட்டு ஊக்குவிப்புத் திட்டத்தினை (EMPS 2024) மத்திய அரசு அறிவித்துள்ளது.
- ❖ இத்திட்டமானது மின்சார இரு சக்கர வாகனங்கள் (e-2W) மற்றும் மூன்று சக்கர வாகனங்களின் (e-3W) பயன்பாட்டினை விரைவாக ஏற்றுக் கொள்வதை வெகுவாக ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ EMPS 2024 திட்டத்தின் கீழ் தகுதிபெறும் மின்சார வாகன வகைகளில், பதிவு செய்யப் பட்ட மின்சார வாடகை வாகன, மின்சார இழுவை வண்டிகள் மற்றும் L5 வகை வாகனங்கள் உள்ளிட்ட மின்சார இருசக்கர வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் அடங்கும்.
- ❖ இந்தத் திட்டம் முதன்மையாக வணிக நோக்கங்களுக்காகப் பதிவு செய்யப்பட்ட மின்சார இருசக்கர வாகனங்கள் (e-2W) மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் (e-3W) ஆகியவற்றினை இலக்காகக் கொண்டுள்ளது.
- ❖ தனிப்பட்ட அல்லது பெருநிறுவனத்திற்குச் சொந்தமான பதிவு செய்யப்பட்ட மின்சார இருசக்கர வாகனங்களுக்கும் இந்தத் திட்டத்தின் பலன்கள் நீட்டிக்கப்படுகின்றன.

- மேம்பட்ட மின்கல அமைப்புகள் பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு மட்டுமே ஊக்கத் தொகை வழங்கப்படும்.
- FAME-II திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியங்கள் மார்ச் 31 ஆம் தேதி வரை விற்கப்படும் வாகனங்களுக்குப் பொருந்தும், அல்லது இத்திட்டத்திற்கான நிதி தீரும் வரை (இவற்றுள் எது முந்தையதோ) பொருந்தும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

## முகாமில் அடைக்கப்பட்ட யானைகள் (இடமாற்றம் அல்லது போக்குவரத்து) விதிகள், 2024

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், 2024 ஆம் ஆண்டு முகாமில் அடைக்கப்பட்ட யானைகள் (இடமாற்றம் அல்லது போக்குவரத்து) விதிகளை அறிமுகம் செய்துள்ளது.
- இது யானைகளின் இடமாற்றம் மற்றும் போக்குவரத்தை மிகவும் எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முகாமில் அடைக்கப்பட்ட யானைகளை இடம் மாற்றம் செய்வதற்கான சூழ்நிலைகள்
    - உரிமையாளர் யானையைப் பராமரிக்க முடியாத நிலையில் இருக்கும்போது,
    - யானைகள் தற்போதையச் சூழ்நிலையை விட வேறொரு சூழ்நிலையில் சிறந்தப் பராமரிப்பைப் பெறும் என்ற நேரங்களில்; அல்லது
    - ஒரு மாநிலத்தின் தலைமை வனவிலங்கு காப்பாளர் யானையைச் சிறப்பாகப் பராமரிப்பதற்கான சூழ்நிலை "பொருத்தமாகவும் சரியானதாகவும் இருக்கும் என கருதும்" போது.
- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை, வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் ஆனது வன மற்றும் முகாமில் அடைக்கப்பட்ட யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகளின் மீதான வர்த்தகத்தைத் திட்டவட்டமாகத் தடை செய்தது.
- இருப்பினும், அந்தச் சட்டத்தில் பல்வேறு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு, முகாமில் அடைக்கப் பட்ட யானைகளை இடம் மாற்றச் செய்வதற்கு முதல்முறையாக விலக்கு அளிக்கப் பட்டது.
- கேரளாவில் முகாமில் அடைக்கப்பட்ட யானைகளின் எண்ணிக்கை இதுவரையில் இல்லாத அளவிற்கு 400 ஆகக் குறைந்துள்ளது.

## STEAG குழு

- இந்திய இராணுவம் ஆனது, முதல் வகையான சமிஞ்சைகள் தொழில்நுட்ப மதிப்பீடு மற்றும் ஏற்புக் குழுவை (STEAG) நிறுவியுள்ளது.
- இது எதிர்கால நோக்கிலான தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களை ஆய்வு செய்து மதிப்பீடு செய்யும் ஓர் உயரடுக்கு தொழில்நுட்பப் பிரிவாக செயல்படும்.
- இதில் AI, 5G, 6G, இயந்திர கற்றல் மற்றும் பாதுகாப்பு பயன்பாடுகளுக்கான குவாண்டம் (துளிமம்) தொழில்நுட்பங்கள் போன்ற தொழில்நுட்பங்கள் உள்ளன.




## உலகக் கூட்டுறவுப் பொருளாதார மன்றம்

- உலகக் கூட்டுறவுப் பொருளாதார மன்றமானது இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் மத்திய மிதவெப்பமண்டல தோட்டக்கலை கல்வி நிறுவனம் உள்ளிட்ட பல நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட உள்ளது.
- இந்தக் கூட்டுறவு ஆனது இமயமலைப் பகுதியில் அயல்நாட்டு தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துவதற்காக இந்த மன்றம் அமைக்கப் பட்டுள்ளது.
- ஆரம்ப கட்டத்தில் 13 இமயமலை மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களில் ஹேசல்நட், வால்நட் மற்றும் பிற அயல்நாட்டுப் பயிர்களை விளைவிப்பதை ஊக்குவிப்பதில் நன்கு கவனம் செலுத்தப்படும்.
- புது டில்லியை மையமாக கொண்டு உலகப் பொருளாதார மன்றத்தின் மாதிரியில் இது அமைக்கப் பட்டுள்ளது.


## கல்ப சுவர்ணா

- மத்தியத் தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம் (CPCRI) ஆனது, 'கல்ப சுவர்ணா' என்ற புதிய குட்டை ரக தேங்காய் ரகத்தினையும், இரண்டு புதிய கலப்பின கோக்கோ ரகங்களையும் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- அறிமுகப்படுத்தப்பட்ட கோக்கோ ரகங்களில் ஒன்று, கர்நாடகா மற்றும் கேரளாவின் அதிக மழைப்பொழிவு மிக்க பகுதிகளில் அதிகமாக காணப்படும் நெற்று கரும்புள்ளி அழுகல் நோய்த் தாக்குதலை எதிர்க்கும் திறன் கொண்டது.
- 'கல்ப சுவர்ணா' ரகம் ஆனது இளநீர் மற்றும் கொப்பரை தேங்காய் உற்பத்திக்கு ஏற்றது.
- VTL CH I மற்றும் VTL CH II எனப்படும் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கோக்கோ வகைகள் அதிக கொழுப்பு மற்றும் ஊட்டச்சத்துகளைக் கொண்டுள்ளன.
- VTL CH I ரகமானது அதிக மகசூல் தரக்கூடியது என்பதோடு இதனைப் பாக்கு மற்றும் தென்னைத் தோட்டங்களில் ஊடு பயிராகவும் பயிரிட இயலும்.

## SAKHI செயலி

- ❖ விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் (VSSC) ஆனது, 'SAKHI' என்ற பல்பயன்பாட்டு செயலியை உருவாக்கியுள்ளது.
- ❖ SAKHI என்பது 'பணியாளர் குழுக்களுக்கு இடையிலான தகவல் தொடர்பிற்கான விண்வெளி சார்ந்த உதவி மற்றும் தகவல் மையம்' என்பதைக் குறிக்கிறது.
- ❖ ககன்யான் விண்வெளி ஆய்வுப் பயணத்தில் ஈடுபட்டுள்ள விண்வெளி வீரர்களுக்குத் தேவையான தொழில்நுட்பத் தகவல்களைத் தேடுவது அல்லது ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வது போன்ற பல பணிகளைச் செய்ய இது உதவும்.
- ❖ இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு மற்றும் ஆக்ஸிஜன் செறிவு போன்ற விண்வெளி வீரர்களின் ஆரோக்கியம் சார்ந்த தகவல்களையும் SAKHI செயலி மிக உன்னிப்பாகக் கண்காணிக்கும்.

## உண்மை சரிபார்ப்புப் பிரிவு குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு




- ❖ உச்ச நீதிமன்றமானது திருத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப (IT) விதிகளின் மீதான செயலாக்கத்தினை நிறுத்தி வைத்துள்ளது.
- ❖ "உண்மை சரிபார்ப்புப் பிரிவு" (FCU) மூலம் சமூக ஊடக தளங்களில் பரவும் "போலிச் செய்திகளை" அடையாளம் காண இந்த விதி அரசாங்கத்திற்கு அதிகாரம் அளித்தது.
- ❖ மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆனது, FCU பிரிவினைப் பத்திரிகைத் தகவல் வாரியத்தின் கீழ் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக அறிவித்தது.
- ❖ சமூக ஊடகத் தளங்களில் மத்திய அரசு மற்றும் அதன் முகமைகள் தொடர்பான தவறான தகவல் பரவலை நிறுத்தும் அதிகாரம் இதற்கு உண்டு.

- முன்னதாக, மும்பை உயர் நீதிமன்றம் ஆனது, "அரசு ஆனது ஒரு உரையினை உண்மை அல்லது பொய் என்று கட்டாயப்படுத்தி வகைப்படுத்த முடியாது மற்றும் அதனை வெளியிடக் கூடாது என்று கட்டாயப்படுத்த முடியாது எனக் கூறியது.
- மேலும் இந்த விதிகள் ஆனது அரசியலமைப்பின் 14, 19(1)(a) மற்றும் (g), மற்றும் 21 ஆகிய சட்டப் பிரிவுகள் மற்றும் 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 79வது பிரிவு (IT சட்டம்) ஆகியவற்றை மீறுவதாக வாதிடப் படுகிறது.

## FLNAT மதிப்பீட்டுத் தேர்வு

- அரசாங்கம் ஆனது நவ் பாரத் சாக்சர்தா காரியக்ராம் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக 23 மாநிலங்களில் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணியல் மதிப்பீட்டுத் தேர்வை (FLNAT) மேற்கொண்டது.
- இந்த மதிப்பீடானது – படித்தல், எழுதுதல் மற்றும் எண்ணியல் – என்ற மூன்று பாடங்களைக் கொண்டுள்ள நிலையில் அவை ஒவ்வொன்றிற்கும் 50 மதிப்பெண்கள் என மொத்தம் 150 மதிப்பெண்களுக்கு இந்தத் தேர்வு நடத்தப்பட்டது.
- FLNAT ஆனது, அடிப்படை கல்வியறிவு மற்றும் எண்ணியல் திறன்களை மதிப்பிடச் செய்வதற்காக படித்தல், எழுதுதல் மற்றும் எண்ணியல் திறன்களை மதிப்பிடுகிறது.
- ULLAS எனப் பிரபலமாக அறியப்படும் புதிய இந்திய எழுத்தறிவுத் திட்டம் ஆனது 2022-2027 ஆம் காலக் கட்டத்திற்கான மத்திய அரசின் நிதியுதவியினைப் பெறும் திட்டம் ஆகும்.
- ULLAS சமூகத்தில் உள்ள அனைவருக்குமான வாழ்நாள் முழுவதுமான கற்றல் குறித்து புரிந்து கொள்தல் என்பதைக் குறிக்கிறது.

## புத்தொழில் நிறுவனங்களின் மஹாகும்ப் நிகழ்ச்சி 2024

- புது டெல்லியில் புத்தொழில் நிறுவனங்களின் சூழல் அமைப்பை மேம்படுத்தச் செய்வதற்காகவும், இந்தத் துறையில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும் மூன்று நாட்கள் அளவிலான "புத்தொழில் நிறுவனங்களின் மஹாகும்ப்" நிகழ்ச்சி அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இது நாட்டின் புத்தொழில் நிறுவனங்களின் சூழல் அமைப்பில் உள்ள அனைத்துப் பங்குதாரர்களுக்கும் ஓர் இயங்கு தளமாக செயல்படுகிறது.
- நாடு முழுவதும் உள்ள புதுமை மற்றும் தொழில்முனைவினை வளர்ப்பதை பெரும் நோக்கமாகக் கொண்ட இந்த நிகழ்ச்சியானது, முன்னணி முதலீட்டாளர்கள், முக்கியக் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களின் மிகப் பெரும் பங்கேற்பினை ஈர்த்துள்ளது.

## பாஷாநெட் இயங்கு தளம்

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) மற்றும் இந்திய தேசிய இணையப் பரிமாற்ற ஆணையம் (NIXI) ஆகியவை இணைந்து பாஷாநெட் (BhashaNet) என்ற இயங்கு தளத்தினை வெளியிட்டுள்ளன.
- இணைய தளத்தின் பெயர்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளை பல்வேறு உள்ளூர் மொழிகளில் அணுகக் கூடிய பன்மொழி இணைய சூழலை உருவாக்குவதற்காக இந்த இயங்கு தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இந்த முன்னெடுப்பானது, பயனர்களுக்கு அவர்களின் சொந்த மொழிகளில் சேவை வழங்குவதன் மூலம், ஒரு உள்ளடங்கிய சேவை வழங்கீட்டினை மேம்படுத்துவதோடு, அதன் அணுகலையும் மேம்படுத்துகிறது.





## இந்தியாவில் வருமானம் மற்றும் செல்வ வளத்தில் நிலவும் சமத்துவமின்மை 1922-2023


- "இந்தியாவில் வருமானம் மற்றும் செல்வ வளத்தில் நிலவும் சமத்துவமின்மை, 1922-2023: பில்லியனர்கள் இராஜ்ஜியத்தின் எழுச்சி" என்ற அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- சமத்துவமின்மையானது இந்தியாவில் 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் இருந்து அதிகரித்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில், நாட்டின் மக்கள்தொகையில் அதிக செல்வ வளம் மிக்க ஒரு சதவீத மக்களின் வருமானம் மற்றும் செல்வ வளத்தின் பங்குகள் ஆகியவை முறையே 22.6 சதவீதம் மற்றும் 40.1 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டிற்குள், அதிக செல்வ வளம் மிக்க ஒரு சதவீத மக்களின் வருமானம் மற்றும் செல்வ வளத்தின் பங்குகள் ஆனது (22.6 சதவீதம் மற்றும் 40.1 சதவீதம்) இது வரையில் இல்லாத அளவிற்கான மிக அதிக அளவில் இருந்தன.
- இந்தியாவின் அதிக செல்வ வளம் மிக்க ஒரு சதவீத மக்களின் வருமானப் பங்கு, தென்னாப்பிரிக்கா, பிரேசில் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் பதிவானதை விடவும், உலகிலேயே மிக அதிகமானதாகவும் உள்ளது.
- 1950 ஆம் ஆண்டுகளில் அதிகரித்த, அதிக செல்வ வளம் மிக்க ஒரு சதவீத மக்களின் வருமானப் பங்குகள் ஆனது, அடுத்த இருபது ஆண்டுகளில் தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து 1982 ஆம் ஆண்டில் 6.1 சதவீதத்தை எட்டியது.
- அடுத்த 30 ஆண்டுகளில் தொடர்ந்து அதிகரித்து 2022 ஆம் ஆண்டில், 22.6 சதவீதத்தை எட்டி இதுவரையில் இல்லாத அளவிற்கு இது உயர்ந்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 167 பணக்காரக் குடும்பங்களின் நிகரச் செல்வத்தின் மீது விதிக்கப் படும் இரண்டு சதவீத "மிகை வரி" ஆனது தேசிய வருமானத்தில் 0.5 சதவீத

வருவாயினை ஈட்டும்.

- 1922 ஆம் ஆண்டில் 13 சதவீதமாக இருந்த, அதிகச் செல்வ வளம் மிக்க ஒரு சதவீத மக்களின் வருமானப் பங்கு ஆனது, இரு போர்களுக்கு இடைபட்ட காலத்தில் 20 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.




## வீட்டிலிருந்தபடியே வாக்களித்தல்





- இந்தியத் தேர்தல் ஆணையமானது மக்களவை தேர்தல் வரலாற்றில் முதன்முறையாக, மாற்றுத் திறனாளிகள் (PwD) மற்றும் 85 வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட முதியோர்களுக்கு 'வீட்டிலிருந்த படியே வாக்களிக்கும்' ஒரு வசதியை விரிவுபடுத்தி உள்ளது.
- இந்த நடவடிக்கையின் மூலம் சுமார் 85 லட்சத்துக்கும் அதிகமான முதியோர்களும், 88.4 லட்சத்துக்கும் அதிகமான மாற்றுத் திறனாளிகளும் தபால் வாக்கு மூலம் வாக்களிக்க முடியும்.

- படிவம் 12D ஆனது வீட்டில் இருந்தபடியே வாக்களிக்க உதவும்.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் தேதி நிலவரப் படி, நாட்டில் 85 வயதிற்கு மேற்பட்ட 81,87,999 முதியோர்களும், 100 வயதிற்கு மேற்பட்ட 2,18,442 வாக்காளர்களும் உள்ளனர்.

## ANAGRANINF திட்டம்

- தொழில்நுட்ப மேம்பாட்டு வாரியம் (TDB) ஆனது M/s பெப்ட்ரிஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மற்றும் புறக்கணிக்கப்பட்ட நோய் ஆராய்ச்சிக்கான அறக்கட்டளை (FNDR) ஆகியவற்றுடன் சமீபத்தில் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- இந்த வாரியமானது இந்த ஒப்பந்தத்தின் கீழ், அதிக மருந்து எதிர்ப்புத் திறன் கொண்ட "ANAGRANINF - கிராம்-நெகட்டிவ் பாக்டீரியா தொற்றுகளுக்கு எதிரான ஒரு புதிய வகை நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் உருவாக்கம்" என்ற ஒரு திட்டத்திற்கு 75 லட்சம் ரூபாய் நிதி வழங்கியுள்ளது.
- இது ஃபேபில் வகை நொதியைத் தடுப்பதிலும், முக்கியமான கிராம்-நெகட்டிவ் நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராடுவதிலும் மிகத் திறம் மிக்க ஒரு புதுமையான கூறினை, குறிப்பாக ஒரு நுண்ணுயிர் எதிர்ப்பினை உருவாக்குவதை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சிவசக்தி தளம்




- சர்வதேச வானியல் ஒன்றியம் (IAU) ஆனது சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் தரையிறங்கு கலத்தின் தரையிறக்கத் தளத்திற்கு 'சிவசக்தி' என்று பெயரிடுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது இயற்கையின் ஆண்பால் (சிவன்) மற்றும் பெண்பால் (சக்தி) வடிவங்களின் இருமையைக் குறிக்கும் இந்தியப் புராணச் சொற்கூறுகளை கொண்ட ஒரு கூட்டுச் சொல்லாகும்.
- இந்தியாவின் சந்திரயான்-1 கலத்தின், நிலவின் மீது மோதி தரையிறக்கச் சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்யும் ஒரு கருவியானது (MIP) 2008 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் தேதியன்று நிலவின் மேற்பரப்பில் மோதி இறங்கியது.
- இது மோதிய தளத்திற்கு 'ஜவஹர் புள்ளி' அல்லது 'ஜவஹர் ஸ்தலம்' என்று பெயரிடப் பட்டது.

## பாரத் பயோடெக் நிறுவனத்தின் காசநோய் தடுப்பூசி

- ஐதராபாத்தில் அமைந்துள்ள பாரத் பயோடெக் நிறுவனமானது, MTBVAC என்ற ஒரு தடுப்பூசியின் மருத்துவப் பரிசோதனைகளைத் தொடங்கியுள்ளது.
- இந்தியாவில் மனித மூலத்திலிருந்து பெறப்பட்ட உலகின் முதல் மைக்கோபாக்டீரியம் காசநோய் தடுப்பூசி இதுவே ஆகும்.
- ஸ்பெயின் நாட்டிலுள்ள உயிரி மருத்துவ நிறுவனமான பயோஃபாப்ரி நிறுவனம், பாரத் பயோடெக் நிறுவனத்துடன் இணைந்து இந்தத் தடுப்பூசியினை உருவாக்கி வருகிறது.
- MTBVAC ஆனது 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையான BCG தடுப்பூசியை விட மிகவும் பயனுள்ள மற்றும் நீண்ட காலம் நீடிக்கும் தடுப்பூசியாக உருவாக்கப்பட்டு வருகிறது.

**FIGHTING TB**

- It's claimed to be **world's first Mycobacterium tuberculosis vaccine (MTBVAC)** from a human source
- MTBVAC is considered a **more effective** and **potentially longer-lasting vaccine** than the over 100-year-old BCG
- The **live attenuated vaccine** is meant for **newborns** as well as **adolescents and adults**

## சிப்கோ இயக்கத்தின் 50வது ஆண்டு நிறைவு

- 1973 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தற்போதைய உத்தரகாண்ட் மாநிலத்தில் (சாமோலி கோபெஸ்வர்) தொடங்கிய சிப்கோ என்ற இயக்கமானது அதன் 50வது ஆண்டினை நிறைவு செய்துள்ளது.
- இதில் கிராம மக்கள், குறிப்பாக கிராமப் புறப் பெண்கள், காடழிப்பு மற்றும் வணிகப் பயன்பாட்டிற்காக மரங்கள் வெட்டப்படுவதைத் தடுப்பதற்காக மரங்களைக் கட்டிப் பிடித்து அதற்கான எதிர்ப்பினை தெரிவித்தனர்.
- இந்த இயக்கத்திற்கு இந்தி மொழியில் "அணைத்துக் கொள்ளுதல்" என்று பொருள் படும் சிப்கோ என்ற சொல் கொண்டு பெயரிடப்பட்டது.
- சுந்தர்லால் பகுகுணா மற்றும் சாந்தி பிரசாத் பட் போன்ற சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் உள்ளூர்ச் சமூகங்களை அணி திரட்டுவதிலும், இந்த இயக்கத்திற்கான தேசிய மற்றும் சர்வதேச அளவிலான ஆதரவினைத் திரட்டுவதிலும் முக்கியப் பங்கு வகித்தனர்.
- இதன் 50வது ஆண்டு நிறைவானது, மாறுதலைக் கொண்டு வருவதில் பொது மக்களின் பங்களிப்பு கொண்டுள்ள ஆற்றல் குறித்த நினைவூட்டலாகவும், உலகம் முழுவதும் நடைபெற்று வரும் சுற்றுச்சூழல் இயக்கங்களுக்கு ஊக்கமளிப்பதாகவும் உள்ளது.




## அஃபனசி நிகிடின் கடல்குன்று (Seamount)




- இந்திய அரசானது, இந்தியப் பெருங்கடலின் கடல்சார் நிலப்பரப்பில் உள்ள தனது அதிகார வரம்பிற்குள் உட்படாத இரண்டு மாபெரும் பகுதிகளில் ஆய்வுகள் மேற் கொள்வதற்கான உரிமைகளை கோரி ஜமைக்காவில் உள்ள சர்வதேசக் கடற்படுகை ஆணையத்திடம் (ISBA) விண்ணப்பித்துள்ளது.
- இவற்றுள் ஒரு பகுதியான அஃபனசி நிகிடின் கடல்குன்று என அழைக்கப்படும் கோபால்ட் நிறைந்த முகட்டினை ஆய்வு செய்வதற்காக வேண்டி கோரப்பட்ட இந்த விண்ணப்பமானது இந்தியாவின் உத்தி சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முயற்சி ஆகும்.
- இலங்கை அரசானது, ஏற்கனவே ஒரு தனிச் சட்டங்களின் கீழ் இப்பகுதியில் ஆய்வுகள் மேற்கொள்வதற்கான உரிமைகளை கோரியுள்ளது.
- ஆனால் இந்தியாவின் விண்ணப்பம் ஆனது, அதே பகுதியில் உளவுப் பணிகளை மேற் கொண்ட சீனக் கப்பல்கள் மூலம் பெறப்பட்ட அறிக்கைகளின் தகவல்கள் மூலம் ஒரு வலுவான ஆதரவினைப் பெற்றுள்ளது.

- அஃபனசி நிகிடின் கடல்குன்று என்பது இந்தியப் பெருங்கடலின் மத்தியப் படுகையில் உள்ள 400 கி.மீ. நீளமும் 150 கி.மீ அகலமும் கொண்ட ஒரு நிலம் சார் அம்சமாகும்.
- இது இந்தியக் கடற்கரையிலிருந்து சுமார் 3,000 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.
- சுமார் 4,800 கி.மீ. ஆழத்தில் இருந்து, சுமார் 1,200 மீட்டர் வரையிலான தொலைவிற்கு கோபால்ட், நிக்கல், மாங்கனீசு மற்றும் தாமிரம் ஆகியவற்றினை உள்ளடக்கிய படிவுகள் நிறைந்துள்ளது.
- உலக நாடுகளுக்கு கடல்பரப்பில் 200 நாட்டிகல் மைல்கள் வரையிலான தொலைவு வரையிலும், அந்தத் தொலைவிலான கடல்பரப்பின் கீழமைந்த கடல் படுகைகள் மீதுமான பிரத்தியேக உரிமைகள் உள்ளன.
- கடலால் சூழப்பட்ட சில நாடுகளானது அவற்றின் எல்லை மற்றும் கண்டத்திட்டு என அழைக்கப்படும் கடல்பரப்பின் ஒரு பகுதியான 200 நாட்டிகல் மைல்களுக்கும் அப்பாற் பட்ட ஆழ்கடல் விளிம்பு பகுதியை இணைக்கும் வகையிலான இயற்கையான நிலப் பரப்பைக் கொண்டிருக்கலாம்.

# சர்வதேசச் செய்திகள்

## 1,000 ஆண்டுகள் பழமையான சோமின்சாய் திருவிழா


- ஜப்பானின் கொகுசேகி கோயிலின் புகழ்பெற்ற "அரை நிர்வாண ஆண்கள்" திருவிழா சமீபத்தில் கடைசியாக நடைபெற்றது.
- வயதான மக்களின் பங்கேற்பு மற்றும் அடுத்த தலைமுறையின் குறைவான பங்கேற்பு காரணமாக இந்தத் திருவிழாவை நிறுத்துவதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.
- 1,000 ஆண்டுகளுக்கு முன்பு முதன்முறையாக நடத்தப்பட்ட இந்தத் திருவிழாவானது அதிகாரப் பூர்வமாக சோமின்சாய் என்று அழைக்கப்பட்டது.
- நற்பேறினைத் தருவதாகக் கருதப்படும் ஷிங்கி எனப்படும் புனித மரக் குச்சிகளைக் கைப்பற்றுவதற்காக ஆண்கள் போட்டியிடுவர்.
- இதில் போட்டியின் வெற்றியாளர் "ஃபுகுவோடோகோ (அதிர்ஷ்டசாலி)" என்று அழைக்கப் படுகிறார் என்பதோடு மேலும் அவர் அடுத்து வரும் ஆண்டுகளில் சிறந்த ஆரோக்கியத்தையும் நற்பேறினையும் பெறுவார் என்று கூறப்படுகிறது.

## FATF அமைப்பின் சாம்பல் நிறப் பட்டியல்

- ஐக்கிய அரபு அமீரகமானது நிதியியல் நடவடிக்கை பணிக்குழுவின் சாம்பல் நிறப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.
- பார்படாஸ், ஜிப்ரால்டர் மற்றும் உகாண்டா ஆகியவை சாம்பல் நிறப் பட்டியலில் இருந்து நீக்கப் பட்டுள்ளன என்பதோடு, கென்யா மற்றும் நமீபியா ஆகியவையும் அந்தப் பட்டியலில் இடம் சேர்க்கப்பட்டுள்ளன.
- FATF என்பது தீவிரவாதத்திற்கு ஆதரவளிக்கும் சர்வதேச நிதிக் குற்றங்களைத்

தடுப்பதற்காக பல்வேறு சர்வதேச தரநிலைகளை நிர்ணயிக்கின்ற ஓர் அரசுகளுக்கு இடையேயான அமைப்பாகும்.

- FATF அமைப்பானது 1989 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பாரீஸ் நகரில் நடைபெற்ற G-7 உச்சி மாநாட்டின் மூலம் நிறுவப்பட்டது.
- இதன் முதன்மை நோக்கமானது ஆரம்பத்தில் பணமோசடியை எதிர்த்துப் போராடச் செய்வதற்கான நடவடிக்கைகளை ஆய்வு செய்து மேம்படுத்துவதாகும்.
- இந்தியா 2010 ஆம் ஆண்டு முதல் FATF அமைப்பில் உறுப்பினராக உள்ளது.





## பாகிஸ்தானின் முதல் பெண் முதல்வர்

- மூன்று முறை பிரதமர் பதவி வகித்த முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் மகளும், மூத்த தலைவருமான மரியம், பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தின் முதல் பெண் முதலமைச்சரானார்.
- பஞ்சாப் மாகாணத்தில் 120 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர்.
- அவரது எதிரணி கட்சியானது தேர்தலைப் புறக்கணித்ததால் அந்தக் கட்சித் தலைவர் ராணா அஃப்தாப் எந்த வாக்குகளும் பெறாததால் நவாஸ் வெற்றி பெற்றார்.



## தென் கொரிய நாட்டின் கருவுறுதல் விகிதம்


- ஏற்கனவே உலகின் மிகக் குறைவானதாக உள்ள தென் கொரியாவின் கருவுறுதல் விகிதத்தில் 2023 ஆம் ஆண்டில் மோசமான அளவில் சரிவு பதிவானது.
- 2022 ஆம் ஆண்டில் 0.78 ஆக இருந்த ஒரு தென் கொரியப் பெண்ணின் இனப்பெருக்க வயது வாழ்க்கையில் சராசரியாக பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையானது 0.72 ஆகக் குறைந்துள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டில் மேலும் 0.68 ஆக குறையும் என்று முந்தைய கணிப்புகள் மதிப்பிடுகின்றன.
- இது ஒரு நிலையான மக்கள்தொகைக்கு தேவையான எண்ணிக்கையான ஒரு பெண்ணுக்கு 2.1 குழந்தைப் பிறப்பு என்ற எண்ணிக்கையை விட மிகவும் குறைவாக உள்ளது மற்றும் இது 2015 ஆம் ஆண்டில் 1.24 ஆகப் பதிவான விகிதத்தினை விட பின்தங்கியுள்ளது.
- தென் கொரியா, பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டு அமைப்பு நாடுகளுள் மிக மோசமானப் பாலின ஊதிய இடைவெளியையும் கொண்டுள்ளது.
- தென் கொரிய நாட்டுப் பெண்கள் ஆண்களை விட மூன்றில் இரண்டு பங்கு அதிக வருமானத்தை ஈட்டுகின்றனர்.
- மேலும், 2022 ஆம் ஆண்டில் சீனா மற்றும் ஜப்பான் போன்ற அண்டை நாடுகளில், பதிவான கருவுறுதல் விகிதம் ஆனது முறையே 1.09 மற்றும் 1.26 என்ற குறைந்த அளவை எட்டியது.




## உலக வர்த்தக அமைப்பின் சேவைகள் தொழில்துறை ஒப்பந்தம்

- உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தத்தின் கீழ் சேவைத் தொழில் துறையில் கூடுதல் பொறுப்புகளை ஏற்க ஒப்புக் கொண்டுள்ள ஐக்கியப் பேரரசு, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற 70க்கும் மேற்பட்ட நாடுகளின் நடவடிக்கைகளால் இந்தியா பயனடையும்.
- இந்த உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினர் நாடுகள் சேவை தொழில்துறை வர்த்தகம் மீதான பொது ஒப்பந்தத்தின் (GATS) கீழ் சில கூடுதல் கடமைகளை ஏற்றுக் கொள்கின்றன.

- இது தங்களுக்குள் சரக்குப் பொருட்கள் சாராத வர்த்தகத்தை எளிதாக்குவதையும், உலக வர்த்தக அமைப்பின் மற்ற அனைத்து உறுப்பினர் நாடுகளுக்கும் இதே போன்ற சலுகைகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- GATS ஒப்பந்தத்தின் கீழ் அந்நாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட பட்டியலின் கீழான கடமைகள் ஆனது,
  - திட்டமிடப் படாத வர்த்தக கட்டுப்பாட்டு விளைவுகளைத் தணித்தல் அல்லது
  - உரிமத் தேவைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான நடவடிக்கைகள்,
  - தகுதித் தேவைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும்
  - தங்களுக்குள் (நாடுகளுக்குள்) பிரத்யேக தொழில்நுட்ப தரநிலைகள்
- இந்த நடவடிக்கையானது குறைந்த-நடுத்தர-வருமானம் கொண்ட நாடுகளுக்கு 10 சதவீதமும், அதிக- நடுத்தர-வருமானம் கொண்ட நாடுகளுக்கு 14 சதவீதமும் சேவை சார் வர்த்தகச் செலவினங்களைக் குறைக்க உதவும் என்ற வகையில் இதன் மூலம் ஒட்டு மொத்தமாக 127 பில்லியன் டாலர் சேமிக்கப்படும்.




## PANGEA திட்டம்


- PANGEA என்ற திட்டத்திற்கு வழிகாட்டுவதற்காக தகவல்-பகிர்வு முன்னெடுப்பினைத் தொடங்குவதற்காக உலகெங்கிலும் உள்ள அறிவியலாளர்கள் கேமரூன் நகரில் கூடி உள்ளனர்.
- PANGEA என்பது உயிரி-புவி-வேதியியல் மற்றும் சூழலியல் ஏற்பு குறித்த வெப்ப மண்டலப் பகுதி முழுவதுமான ஆய்வு என்பதைக் குறிக்கிறது.
- கண்டங்களுக்குள்ளும் கண்டங்களுக்கு இடையிலும் வெப்ப மண்டலக் காடுகளில் உள்ள பருவநிலை மற்றும் நிலப் பயன்பாட்டு மாற்றத்தின் ஒருங்கிணைந்த விளைவுகளைப் புரிந்து கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது வெப்பமண்டலப் பகுதிகளில் உள்ள காடுகளின் உருவாக்கம், அமைப்பு மற்றும் உயிர் வேதியியல் சுழற்சி ஆகியவற்றில் உள்ள ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகளை ஆய்வு செய்யும்.
- இது, பருவநிலை மாற்றத் தணிப்பு மற்றும் ஏற்பு மற்றும் பல்லுயிர்ப்பெருக்க வளங் காப்பு ஆகியவற்றுக்கான சமூக நடவடிக்கைகளை ஆதரிக்கும் வகையில் முடிவுகளை மேற்கொள்வதற்கு வழிகாட்டுகிறது.




## பாண்டாக்களைப் பரிசாக வழங்கும் கொள்கையின் மறுமதிப்பீடு

- பாண்டா வளங்காப்பு தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் உள்ள இரண்டு உயிரியல் பூங்காக்களுடன் சீனா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- விரைவில் ஒரு ஜோடி பாண்டாக்கள் அமெரிக்க உயிரியல் பூங்காவிற்கு அனுப்பப்பட உள்ளன.
- இது 'பாண்டாக்களை பரிசாக வழங்கும் அரசு முறைக் கொள்கை' முறையை மீண்டும் தொடங்குவதாக கருதப்படுகிறது.
- பாண்டாக்கள் சீனாவை பூர்வீகமாகக் கொண்டவை என்ற நிலையில், தற்போது அவை காடுகளில் மட்டுமே காணப்படுகின்றன.



- 1957 முதல் 1982 ஆம் ஆண்டு வரை, சோவியத் ஒன்றியம், வட கொரியா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி, ஜப்பான், ஸ்பெயின் மற்றும் மெக்சிகோ ஆகிய ஒன்பது நாடுகளுக்கு மொத்தம் 23 பெரிய பாண்டாக் கரடிகளை சீனா பரிசாக வழங்கியுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில், IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் பாண்டாக்களுக்கான அச்சுறுத்தல் நிலை "அருகி வரும் இனம்" என்ற நிலையில் இருந்து "எளிதில் பாதிக்கப் படக் கூடிய இனம்" என்று குறைக்கப்பட்டது.

## பெரு - டெங்கு சுகாதார அவசரநிலை

- அதிகரித்து வரும் டெங்கு பாதிப்புகள் காரணமாக நாட்டின் பெரும்பாலான மாகாணங்களில் சுகாதார அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.
- எல் நினோ எனப்படும் வானிலை நிகழ்வு ஆனது, சராசரி நிலையை விட அதிக வெப்ப நிலையை ஏற்படுத்தியக் காலங்களில் பாதிப்புகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவானது.
- இதில் அவசர நிலையானது 90 நாட்களுக்கு கடைப்பிடிக்கப்படும்.
- சுகாதார அமைச்சகம் ஆனது, இந்த நோய் காரணமாக 2023 ஆம் ஆண்டில் இதுவரை 11,500க்கும் மேற்பட்டப் பாதிப்புகள் மற்றும் 16 உயிரிழப்புகள் பதிவானதாக கூறி உள்ளது.
- 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் பதிவானதை விட 72 சதவிகிதம் "கணிசமான அதிகரிப்பு" இதுவாகும்.
- கடந்த ஆண்டு, அந்த நாட்டில் 72,800க்கும் மேற்பட்ட டெங்கு பாதிப்புகள் மற்றும் 84 உயிரிழப்புகள் பதிவாகின.




## உலகளாவிய நன்மைக்கான கூட்டணி - பாலினச் சமத்துவம் மற்றும் சமத்துவம்

- உலகளாவிய நன்மைக்கான கூட்டணி : பாலினச் சமத்துவம் மற்றும் சமத்துவம் ஆனது 2024 ஆம் ஆண்டு டாவோஸ் உச்சிமாநாட்டின் போது தொடங்கப்பட்டது.
- இந்தக் கூட்டணிக்கான முத்திரைச் சின்னம் மற்றும் இணையதளத்தை இந்திய அரசு வெளியிட்டது.

- ❖ பல்வேறு நிலையான மேம்பாட்டு இலக்குகளுக்கு ஏற்ப, உலகளாவிய பல்வேறு சிறந்த நடைமுறைகளை ஒருங்கிணைத்தல், தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்துதல் மற்றும் பெண்களின் உடல்நலம், கல்வி மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றில் முதலீடுகளை ஈர்த்தல் ஆகியவற்றினை இந்தக் கூட்டணி நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ சமத்துவம் மற்றும் நடுநிலையின் சாராம்சத்தினை அடையாளப்படுத்தும் இந்தக் கூட்டணியின் முத்திரைச் சின்னம் ஆனது உள்ளார்ந்த முக்கியத்துவத்தைக் கொண்டு உள்ளது.


## பிரெஞ்சு அரசியலமைப்பு சட்டத்தில் கருக்கலைப்பு தொடர்பான விதிகள்

- ❖ பிரான்சு நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் கருக்கலைப்பு செய்வதற்கான உரிமையை உள்ளடக்கும் மசோதாவிற்கு பிரான்சு நாட்டின் சட்டமியற்றுபவர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர்.
- ❖ இந்த நடவடிக்கையானது, பிரான்சு நாட்டினை அதன் அடிப்படைச் சட்டத்தில் கர்ப்பத்தைக் கலைப்பதற்கான வெளிப்படையான பாதுகாப்பை (உரிமையினை) வழங்கும் உலகின் முதல் நாடாக மாற்றியுள்ளது.
- ❖ கருக்கலைப்பு செய்வதற்கான பெண்ணின் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் அரசியலமைப்பின் 34வது சட்டப்பிரிவைத் திருத்துவதற்கான மசோதாவினை பிரான்சு அரசு ஏற்கனவே ஏற்றுக் கொண்டது.
- ❖ 1974 ஆம் ஆண்டு முதல் பிரான்சு நாட்டில் கருக்கலைப்பு செய்வதற்கான சட்டப்பூர்வ உரிமை பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## வலுவான எல் நினோ 2023-24

- ❖ இது வரை பதிவு செய்யப்பட்ட ஐந்து வலிமையான எல் நினோ நிகழ்வுகளில் ஒன்றாக 2023-24 ஆம் ஆண்டு எல் நினோ நிகழ்வு பதிவாகியுள்ளது.
- ❖ இது ஒரு பலவீனமான போக்காக இருக்கும் போதிலும், வரும் மாதங்களில் உலகளாவிய பருவநிலையை தொடர்ந்து பாதிக்கும்.
- ❖ 2023 ஆம் ஆண்டானது இதுவரையில் பதிவு செய்யப்பட்ட வெப்பமான ஆண்டாக உள்ள நிலையில், தற்போது நிலவி வரும் எல் நினோ சூழ்நிலைகள், உலகெங்கிலும் அதிக பட்ச வெப்பநிலை மற்றும் தீவிர நிகழ்வுகளைத் தூண்டியுள்ளது.
- ❖ இது கிழக்கு மற்றும் மத்திய வெப்பமண்டல பசிபிக் பெருங்கடல் பகுதிகளில், 1991 முதல் 2020 ஆம் ஆண்டு வரையில் பதிவான சராசரி கடல் மேற்பரப்பு வெப்பநிலையை விட சுமார் 2.0 டிகிரி செல்சியஸ் என்ற உச்ச மதிப்பைப் பதிவு செய்துள்ளது.
- ❖ இதனால் இந்த ஆண்டு எல் நினோ நிகழ்வானது, 1997-98 மற்றும் 2015-2016 ஆகிய ஆண்டுகளில் பதிவான எல் நினோ நிகழ்வுகளை விட பலவீனமானதாக இருந்தாலும், ஐந்து வலுவான எல் நினோ நிகழ்வுகளில் இதுவும் ஒன்றாக பதிவாகியுள்ளது.
- ❖ உலக சராசரி வெப்பநிலையானது ஜனவரி மாதத்தில் முதல் முறையாக ஓராண்டு முழுவதிற்குமான 1.5 டிகிரி செல்சியஸ் என்ற வெப்பநிலை வரம்பை விஞ்சியது.
- ❖ 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒரு புதிய மாதாந்திர அதிக பட்ச வெப்பநிலை பதிவாகியுள்ளது என்பதோடு 2023 ஆம் ஆண்டானது இதுவரையில் பதிவு செய்யப்பட்ட வெப்பமான ஆண்டாகும்.

- எல் நினோ என்பது மத்திய மற்றும் கிழக்கு வெப்பமண்டல பசிபிக் பெருங்கடல்களின் மேற்பரப்பில் அவ்வப்போது பதிவாகும் வெப்பமயமாதல் நிகழ்வு ஆகும்.
- சராசரியாக இரண்டு முதல் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழ்கின்ற இந்த நிகழ்வு பொதுவாக ஒன்பது முதல் 12 மாதங்கள் வரை நீடிக்கும்.




## டோலுடெக்ராவிர் பற்றிய உலக சுகாதார அமைப்பின் அறிக்கை

- உலக சுகாதார அமைப்பின் புதிய அறிக்கையின்படி, HIV நோயாளிகள் மத்தியில் டோலுடெக்ராவிர் எனப்படும் HIV எதிர்ப்பு மருந்து சிகிச்சை மருந்திற்கான எதிர்ப்புத் திறன் அதிகரித்து வருகிறது.
- 2018 ஆம் ஆண்டு முதல், உலக சுகாதார அமைப்பானது அதன் செயல்திறன், பயன்பாட்டின் எளிமை மற்றும் குறைந்த பக்க விளைவுகள் காரணமாக டோலுடெக்ராவிர் மருந்தினை முன்னுரிமை அடிப்படையில் பயன்படுத்துவதற்கான முதல் மற்றும் இரண்டாம் நிலை நிலை HIV சிகிச்சையாக பரிந்துரைத்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், உலகளவில் HIV பாதிப்புடன் வாழும் 39 மில்லியன் மக்களில் 75 சதவீதத்திற்கும் அதிகமானோர் HIV சிகிச்சையைப் பெற்றுள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டில் 1.3 மில்லியன் புதிய HIV தொற்றுகளும், 630,000 HIV தொடர்பான உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.


## மனிதனால் உருவாக்கப்பட்ட 2வது மிகப்பெரிய மீத்தேன் கசிவு நிகழ்வு

- தென்மேற்கு கஜகஸ்தானின் மங்கிஸ்டாவ் பகுதியில் உள்ள ஒரு எண்ணெய்க் கிணற்றில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தோண்டுதல் நடவடிக்கை ஆனது மனிதனால் உருவாக்கப்பட்ட இரண்டாவது பெரிய மீத்தேன் கசிவு நிகழ்வாகும்.
- எண்ணெய்க் கிணற்றில் மேற்கொள்ளப்பட்ட தோண்டுதல் நடவடிக்கை ஆனது 2023 ஆம் ஆண்டு ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடையில் ஒரு தீ விபத்தினை ஏற்படுத்தியதன் காரணமாக 127,000 டன் மீத்தேன் வளிமண்டலத்தில் வெளியானது.
- மீத்தேன் ஓர் ஆற்றல் வாய்ந்த பசுமை இல்ல வாயு ஆகும்.
- புதைபடிவ எரிபொருள் எடுப்புச் செயல்பாடுகளிலிருந்து வெளிவரும் மீத்தேன் கசிவு ஆனது மிகப்பெரிய மீத்தேன் உமிழ்வு மூலமாக உள்ளது.

- மனிதனால் ஏற்படும் மீத்தேன் உமிழ்வுகளில் சுமார் 40% உமிழ்வானது இத்தகைய செயல்பாடுகளால் வெளியாகிறது.




## புலம்பெயர்ந்தோருக்கான மோசமான ஆண்டு – 2023




- ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, 2023 ஆம் ஆண்டில் புலம்பெயரும் வழித் தடங்களில் உலகளவில் குறைந்தபட்சம் 8,565 பேர் உயிரிழந்துள்ளனர்.
- பத்தாண்டுகளுக்கு முன்பு இது குறித்த பதிவுகள் தொடங்கப் பட்டதிலிருந்து 2023 ஆம் ஆண்டு மிக மோசமான ஆண்டாக பதிவாகியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் பதிவான உயிரிழப்புகளின் எண்ணிக்கையில் 20 சதவிகிதம் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டின் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கையானது 2016 ஆம் ஆண்டில் புலம்பெயர்தலின் போது பதிவான முந்தைய அதிகபட்ச எண்ணிக்கையினை (8,084 பேர்) முறியடித்தது.

- வடக்கு ஆப்பிரிக்காவில் இருந்து தெற்கு ஐரோப்பாவை அடைய புலம் பெயர் நபர்கள் முயற்சிக்கும் மத்தியத் தரைக் கடல் பகுதியானது, புலம்பெயர்ந்தோருக்கு ஆபத்தான பாதையாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.

## ப்ளூ லீடர்ஸ் குழுவின் உயர்மட்ட நிகழ்வு

- தேசிய அளவிலான அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த ப்ளூ லீடர்ஸ் குழுவின் உயர்நிலை நிகழ்வு ஆனது பெல்ஜியம் நகரில் நடைபெற்றது.
- மாசுபாடு, பருவநிலை மாற்றம் மற்றும் அதிகப்படியான மீன்பிடித்தல் ஆகியவற்றிலிருந்து உயர் கடல்களைப் (குறிப்பிட்ட வரம்பிற்கு அப்பாற்பட்ட) பாதுகாப்பதற்கான புதிய ஒப்பந்தத்தை அங்கீகரிக்குமாறு உறுப்பினர் நாடுகளை இக்குழு வலியுறுத்துகிறது.
- பெல்ஜியம், கேப் வெர்டே, கிரீஸ், மொனாக்கோ, நைஜீரியா, நார்வே மற்றும் ஐக்கியப் பேரரசு போன்ற நாடுகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றன.
- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டப் பகுதிகளில் (BBNJ ஒப்பந்தம்) கடல் வாழ் உயிரியல் பன்முகத் தன்மையின் வளங்காப்பு மற்றும் நிலையான பயன்பாட்டிற்கான ஒரு புதிய ஒப்பந்தத்திற்கு இந்தக் குழுவின் உறுப்பினர் நாடுகள் ஒப்புக் கொண்ட நிலையில், இது இரண்டு மாதங்களுக்குப் பிறகு முறையாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இதுவரையில் 88 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதையடுத்து, சிலி மற்றும் பலாவ் ஆகிய இரண்டு நாடுகள் மட்டுமே இதுவரை ஒப்புதல் அளித்துள்ளன.
- BBNJ ஒப்பந்தமானது, குறைந்தபட்சமாக 60 நாடுகள் இதற்கு ஒப்புதல் அளிக்கும் போது "அமுலுக்கு வரும்".

## யாவுண்டே பிரகடனம்

- அதிக எண்ணிக்கையில் மலேரியா பாதிப்பு கொண்ட ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த சுகாதார அமைச்சர்கள் சமீபத்தில் மலேரியா உயிரிழப்புகளை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் யாவுண்டே பிரகடனத்தில் கையெழுத்திட்டனர்.
- உலகளவில், கோவிட்-19 பெருந்தொற்றிற்கு முந்தையக் காலத்துடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் 233 மில்லியனாக இருந்த மொத்தப் பாதிப்புகள் ஆனது 249 மில்லியனாக உயர்ந்துள்ளது.
- ஆப்பிரிக்க நாடானது, மலேரியா பாதிப்புகள் அதிகம் கொண்ட மலேரியா நோயின் மையப் பகுதியாக உள்ளது.
- இது உலகளாவிய மலேரியா பாதிப்புகளில் 94 சதவிகிதமும், 2022 ஆம் ஆண்டில் 580,000 உயிரிழப்புகளுடன் உலகளாவிய மலேரியா தொடர்பான உயிரிழப்புகளில் சுமார் 95 சதவிகிதப் பங்கினையும் கொண்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## "மரணத்திற்கு உதவுதல்" - பிரான்சு

- பிரான்சு நாட்டு அதிபர் இம்மானுவேல் மேக்ரான், "மரணத்திற்கு உதவுதல்" என்ற மருத்துவ நடைமுறையினைச் சட்டப்பூர்வமாக்குவதற்காக புதிய சட்டத்தை அறிவித்து உள்ளார்.


- இது நாட்டிலேயே முதன்முறையாக வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் கடும் நோயை எதிர்கொண்டுள்ள முதியவர்கள் மரணம் உண்டாக்கும் சில மருந்துகளை எடுத்துக் கொள்ள அனுமதி அளிக்கும்.
- தங்கள் சொந்தக் கருத்துக்களை உருவாக்கும் திறன் கொண்ட 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய நபர்கள் மட்டுமே இந்த முறையினைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப் படுவார்கள்.
- கடுமையான மனநலப் பாதிப்பு நிலைமைகள் மற்றும் அல்சைமர் நோய் போன்ற நரம்பியக் கடத்தல் கோளாறுகள் உள்ளவர்கள் இதனைக் கோர முடியாது.




## செயற்கை நுண்ணறிவுச் சட்டம் (AI சட்டம், 2024)


- தொழில்நுட்ப முதலீட்டில் முன்னணியில் உள்ள நடுநிலையான செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தினை மேலாண்மை செய்வதற்கான உலகின் முதல் முக்கிய அடிப்படை ஒழுங்குமுறை விதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்தது.
- ஒரு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமாக செயல்படுத்தப்படுவதை நோக்கமாகக் கொண்ட இந்தச் சட்டம், பிரச்சினையாக உள்ள செயற்கை நுண்ணறிவு தயாரிப்பின் அபாயத்தின் அடிப்படையில் பல்வேறு நிலை கட்டுப்பாடுகளை விதிக்கிறது.
- இந்த நிலைகள் பின்வருமாறு:
- ஏற்றுக் கொள்ள முடியாத ஆபத்து கொண்ட செயற்கை நுண்ணறிவு அமைப்புகள்:
  - சமூகத் தரங்களை வழங்குதல், பயனரின் உணர்ச்சிகளை ஊகித்தல், ஏமாற்றும் உத்திகளை திணித்தல், குற்றம் செய்யும் நபரின் ஆபத்தை மதிப்பிடுதல் மற்றும் பயனர்களின் நிகழ்நேர உடலியல் அங்க அடையாளத் தரவை எடுத்தல்;
- அதிக ஆபத்துள்ள AI அமைப்புகள்
  - ஒரு தனிநபரின் பணி செயல்திறன், பொருளாதார நிலை, உடல்நலம், இடம் பெயர்வு அல்லது மனித மதிப்பாய்வு இல்லாமல் முடிவெடுக்கும் முறைகள்; மற்றும்

- பொது நோக்கத்திற்கான AI அமைப்புகள்-
    - Chat GPT போன்ற சுய-கண்காணிப்பு கொண்ட, அதிக அளவிலான தரவுகளில் தேர்ந்த பயிற்சி பெற்ற AI மாதிரிகள்.
- ஏற்றுக் கொள்ள முடியாத ஆபத்து நிலை கொண்ட AI அமைப்புகளை இந்தச் சட்டம் தடை செய்கிறது.
- இந்தச் சட்டம் 2024 ஆம் ஆண்டு மே மாத இறுதியில் அமலுக்கு வரும் என எதிர்பார்க்கப் படுகிறது.




## ரஷ்ய அதிபர் தேர்தல்

- ரஷ்ய அதிபர் தேர்தலில் மகத்தான ஒரு வெற்றி பெற்றதையடுத்து விளாடிமிர் புதின் மேலும் ஆறு ஆண்டுகளுக்கு அதிபர் பதவி வகிக்க உள்ளார்.
- அவர் தனது அடுத்த ஆறு வருட பதவிக் காலத்தை நிறைவு செய்தால், பேரரசி கேத்தரினின் ஆட்சிக்குப் பிறகு மிக நீண்ட காலம் ரஷ்யத் தலைவராக பதவி வகித்தவர் என்ற பெருமையைப் புதின் பெறுவார்.
- முன்னாள் பேரரசி 1762 மற்றும் 1796 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 34 ஆண்டுகள் நான்கு மாதங்கள் வரை ரஷ்யாவை ஆட்சி செய்தார்.
- சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், 1923 முதல் 1954 ஆம் ஆண்டு வரை சுமார் 29 ஆண்டுகள் நாட்டின் அதிபராக பதவி வகித்தார்.
- புதின் அவர்களின் பதவிக் காலத்தை கணக்கில் கொண்டால், ஸ்டாலின் அவர்களின் ஆட்சியை மிஞ்சி கடந்த 200 ஆண்டுகளில் மிக நீண்ட காலம் பதவி வகித்த ரஷ்யத் தலைவர் என்ற பெருமையை அவர் பெறுவார்.
- 1999 ஆம் ஆண்டு முதன்முதலில் ஆட்சிக்கு வந்த 71 வயதான புதின் ஏற்கனவே 25 ஆண்டுகளாக இந்தப் பதவியினை வகித்து வருகிறார்.





## அஃபார் முக்கோணம்




- புவியியலாளர்களின் கூற்றுப்படி, வளமான மற்றும் பலவித நிலப்பரப்புகளுடன் கூடிய ஆப்பிரிக்கக் கண்டமானது தற்போது ஒரு புதிய பெருங்கடல் உருவாக்கத்திற்கு வழி வகுக்கும் ஓர் அரிய புவியியல் நிகழ்வை எதிர்கொண்டு வருகிறது.
- ஆப்பிரிக்கக் கொம்புமுனை எனப்படுகின்ற ஆப்பிரிக்காவின் முனைப்பகுதியில் அமைந்துள்ள அஃபார் குழிவுப் பகுதி என்றும் அழைக்கப்படும் அஃபார் முக்கோணம் என்ற இடத்தில் இந்த செயல்முறை நிகழ்ந்து வருகிறது.
- அஃபார் முக்கோணப் பகுதியில் ஏற்படும் ஆப்பிரிக்கக் கண்டத்தின் பிளவு 5 முதல் 10 மில்லியன் ஆண்டுகளில் ஒரு புதிய பெருங்கடல் உருவாக நன்கு வழி வகுக்கும் என்று புவியியலாளர்கள் கணித்துள்ளனர்.

- அஃபார் முக்கோணம் என்பது நுபியன், சோமாலி மற்றும் அரேபியத் தட்டுகள் ஆகிய மூன்று கண்டத் தட்டுகள் ஒன்றிணையும் ஒரு புவியியல் குழிவு நிலை ஆகும்.
- கிழக்கு ஆப்பிரிக்கப் பிளவு அமைப்பின் ஒரு பகுதியான இந்தப் பகுதியானது அஃபார் பகுதியிலிருந்து கிழக்கு ஆப்பிரிக்கா வழியாக நீண்டு காணப்படுகிறது.

## சீனாவின் திருமண விகிதங்கள்




- ஒன்பது ஆண்டுகளில் முதல் முறையாக சீனாவின் திருமண விகிதம் உயர்ந்துள்ளது.
- கடந்த ஆண்டில் புதுமணத் தம்பதிகளின் எண்ணிக்கை 7.7 மில்லியனாக உயர்ந்து உள்ளது.
- இந்த எண்ணிக்கையானது 2022 ஆம் ஆண்டில் 845,000 ஜோடிகளாக இருந்தது, ஆனால் 2013 ஆம் ஆண்டில் 13.5 மில்லியன் ஆக இருந்த உச்ச எண்ணிக்கையை விட மிகக் குறைவாக உள்ளது.

## ISA அமைப்பின் 29வது அமர்வு

- சர்வதேச கடற்படுகை ஆணையம் (ISA) ஆனது அதன் 29வது அமர்வின் முதல் பகுதியை சமீபத்தில் ஜமைக்காவில் கிங்க்ஸ்டன் நகரத்தில் தொடங்கியது.
- ISA என்பது, 1994 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு சர்வதேச தன்னாட்சி அமைப்பாகும்.
- இது கடல்சார் சட்டம் மீதான 1982 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் (UNCLOS) உடன்படிக்கை மற்றும் UNCLOS உடன்படிக்கையின் XI பகுதியினை செயல்படுத்துவது தொடர்பான 1994 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் நிறுவப்பட்டது.
- இது ஒட்டுமொத்த மனித குலத்தின் நலனுக்காக கடற்படுகையில் உள்ள அனைத்து கனிம வளங்கள் தொடர்பான செயல்பாடுகளையும் ஒழுங்குபடுத்தி, கட்டுப்பாட்டுச் செயல்முறைகளை மேற்கொள்கிறது.
- கடற்படுகை மற்றும் கடற்பரப்பு மற்றும் அதன் அடிப்பகுதி ஆகியவை தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டவையாகும்.

## 2024 ஆம் ஆண்டு மக்களாட்சிக்கான உச்சி மாநாடு

- மூன்றாவது மக்களாட்சிக்கான உச்சி மாநாடு (S4D3) ஆனது, தென் கொரியாவின் சியோல் நகரில் நடைபெற்றது.
- முதன்முறையாக அமெரிக்காவிற்கு வெளியே வேறொரு நாட்டில் நடத்தப்பட்ட இந்த உச்சி மாநாடு ஆனது, மக்களாட்சி (ஜனநாயகம்) பற்றிய கருத்தை உலகளவில் நன்கு பரப்புவதை நோக்கமாகக் கொண்டது.
- இந்நிகழ்வின் கருத்துரு, "எதிர்காலச் சந்ததியினருக்கான மக்களாட்சி" என்பதாகும்.
- இந்த ஆண்டிற்கான உச்சி மாநாட்டின் நிகழ்ச்சி நிரல் ஆனது, மக்கள் மத்தியில் ஏற்படும் தவறான தகவல் பரவல், செயற்கை நுண்ணறிவு மற்றும் போலிப் பதிவுகள் உள்ளிட்ட எண்ணிம ஊடகம் சார்ந்த அச்சுறுத்தல்களை மையமாகக் கொண்டது.
- அமெரிக்க அதிபர் ஜோ பிடன் 2021 ஆம் ஆண்டில் இந்த உச்சி மாநாட்டினை நிறுவச் செய்தார்.

## பார்பர்டன் கிரீன்ஸ்டோன் மண்டலம்




- 3.3 பில்லியன் ஆண்டுகள் அளவிலான பழமையான பாறைகளில் சில ஆரம்பகால நில நடுக்கங்களின் அறிகுறிகள் இருப்பதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் பாறைகள் ஆனது, புவியின் கண்ட மேலோடு ஆனது பெரிய தட்டுகளாகப் பிளவுபட்டு மூடகத்தின் மீது நகர்ந்து வருவதை விளக்குகின்ற கண்டத் தட்டுகள் பற்றிய ஆரம்பக் கட்ட ஆதாரங்களை வழங்குகின்றன.
- உயிர்கள் முதன்முதலில் பரிணமித்த போது எப்படிப்பட்டச் சூழ்நிலைகள் இருந்து இருக்கும் என்பதையும் இந்தப் பாறைகள் சுட்டிக் காட்டுகின்றன.
- தென்னாப்பிரிக்காவில் உள்ள ஒரு சிக்கலான புவியியல் அமைப்பான பார்பர்டன் கிரீன்ஸ்டோன் மண்டலத்தினை ஆய்வு செய்த போது இந்த தகவல் கண்டுபிடிக்கப் பட்டது.
- இந்த மண்டலமானது நியூசிலாந்தில் உள்ள சமீபத்தில் உருவான (இளம்) பாறைகளை போலவே உள்ளது.
- அவை ஹிகுரங்கி கீழமிழ்தல் மண்டலத்தில் நிலநடுக்கத்தினால் தூண்டப்பட்ட நீரில் மூழ்கிய நிலச்சரிவுகளை எதிர்கொண்டுள்ளன.

- அதன் பச்சை நிறத்தின் காரணமாக இப்பெயரினைப் பெற்ற பார்பர்டன் கிரீன் ஸ்டோன் மண்டலம் ஆனது, சுமார் 3.2 பில்லியன் மற்றும் 3.6 பில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய பூமியின் மிக விரிவான புவியியல் பதிவுகளில் ஒன்றை வழங்குகிறது.

## இந்திராவதி நடவடிக்கை





- இந்திய அரசானது, ஹைத்தி நாட்டில் உள்ள இந்தியர்களை வெளியேற்றுவதற்காக 'இந்திராவதி நடடிக்கையினை' தொடங்கியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அதிபர் ஜோவெனல் மோய்ஸ் படுகொலை செய்யப் பட்டதிலிருந்து கரீபியன் நாடான ஹைத்தியில் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பெருமளவிலான கும்பல் வன்முறையினை எதிர்கொண்டு வருகிறது.
- அவரின் படுகொலைக்குப் பிறகு, நாட்டின் அதிகாரப்பூர்வ தலைவர், பிரதமர் ஏரியல் ஹென்றி, பல நாடுகளின் ஆதரவுடன், ஆட்சியைக் கைப்பற்றினார்.
- பிரதமரை இராஜினாமா செய்ய வற்புறுத்தும் முயற்சியில் பல்வேறு ஆயுதமேந்திய குழுக்கள் ஹைத்தியில் உள்ள முக்கிய இடங்கள் மீது ஒருங்கிணைந்த தாக்குதல்களை மேற்கொண்டன.
- ஹைத்தியில் 2019 ஆம் ஆண்டு முதல் தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

## SSN-AUKUS நீர்மூழ்கிக் கப்பல் திட்டம்

- ஆஸ்திரேலியா, ஐக்கியப் பேரரசு மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஆனது AUKUS எனப்படும் முத்தரப்புப் பாதுகாப்பு கூட்டாண்மையினை மேற்கொண்டுள்ளன.
- இது ஆஸ்திரேலிய நாட்டின் கடற்படைக்கு அணுசக்தி மூலம் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பல்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- AUKUS கூட்டாண்மை குறித்து முதன்முதலில் 2021 ஆம் ஆண்டில் அறிவிக்கப் பட்டது.

- அணுசக்தி மூலம் இயங்கும் தாக்குதல் நீர்மூழ்கிக் கப்பல்கள் (SSNs) அடங்கிய நாட்டின் புதிய கடற்படையை உருவாக்குவதில், BAE சிஸ்டம்ஸ் நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றுவதற்காக ஆஸ்திரேலியாவின் ASC நிறுவனத்தினை ஆஸ்திரேலிய நாட்டு அரசாங்கம் தேர்ந்தெடுத்துள்ளது.




## செயற்கை நுண்ணறிவு மீதான ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம்


- ஐக்கிய நாடுகள் சபையின் செயற்கை நுண்ணறிவு தொடர்பான முதல் தீ ர்மானத்தை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அங்கீகரித்துள்ளது.
- இந்தத் தீர்மானமானது இந்த ஆற்றல் வாய்ந்த புதிய தொழில்நுட்பம் ஆனது அனைத்து நாடுகளுக்கும் பயனளிக்கிறது என்பதையும், மனித உரிமைகளை மதிக்கிறது என்பதையும், "பாதுகாப்பானது, காப்புறுதி கொண்டது மற்றும் நம்பகமானது" என்பதையும் உறுதி செய்வதற்கான சர்வதேச முயற்சிக்கு உலக நாடுகளின் ஆதரவை வழங்குகிறது.
- இந்த ஆற்றல் வாய்ந்த வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தின் மேம்பாடு மற்றும் பயன்பாட்டிற்கான முதல்-வகையான உலகளாவிய அணுகுமுறை இதுவாகும்.
- பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களைப் போலன்றி, பொதுச் சபைத் தீர்மானங்கள் சட்டப்பூர்வ பிணைப்பினை (செயல்படுத்துவதற்கான கட்டாயம்) கொண்டி இருப்பதில்லை, ஆனாலும் அவை உலக நாடுகளின் கருத்தினைப் பெறுவதற்கான ஒரு கருவியாக உள்ளன.




# பொருளாதாரச் செய்திகள்

## MSCI நிறுவனத்தின் உலகத் தரநிலைக் குறியீடு

- குறியீட்டு வெளியீட்டு நிறுவனமான MSCI, அதன் உலகத் தரநிலை (வளர்ந்து வரும் சந்தைகள்) குறியீட்டில் இந்தியாவின் மதிப்பினை 18.2% என்ற வரலாறு காணாத உச்சத்திற்கு உயர்த்தியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் இந்தக் குறியீட்டில் இந்தியாவின் மதிப்பு சுமார் இரு மடங்காக அதிகரித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் பதிவான இந்தியாவின் தரநிலைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு உரிம வரம்பு (FOL) தான் இந்த ஏற்றத்திற்குக் காரணமாக இருக்கலாம்.
- MSCI நிறுவனத்தின் உலகத் தரநிலைக் குறியீட்டில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது அதிக மதிப்பினைக் கொண்டுள்ளது.



## இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை விகிதம் 2023


- முந்தைய ஆண்டில் 3.6% ஆக இருந்த இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 3.1% ஆகக் குறைந்துள்ளது.
- வேலைவாய்ப்பின்மை விகிதம் குறைவதற்கு நகர்ப்புற வேலைவாய்ப்பின்மையில் பதிவான குறைவு ஒரு குறிப்பிடத் தக்க காரணம் ஆகும்.
- நகர்ப்புறங்களில், 2022 ஆம் ஆண்டில் 5.7 சதவீதமாகவும், 2021 ஆம் ஆண்டில் 6.5 சதவீதமாகவும் இருந்த ஒட்டு மொத்த வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 5.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- கிராமப்புறங்களில், 2022 ஆம் ஆண்டில் 2.8 சதவீதமாகவும், 2021 ஆம் ஆண்டில் 3.3 சதவீதமாகவும் இருந்த ஒட்டு மொத்த வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 2.4 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 3.3 சதவீதமாகவும், 2021 ஆம் ஆண்டில் 3.4 சதவீதமாகவும் இருந்த பெண்களின் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 3 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 3.7 சதவீதமாகவும், 2021 ஆம் ஆண்டில் 4.5 சதவீதமாகவும் இருந்த ஆண்களின் வேலைவாய்ப்பின்மை விகிதமானது 2023 ஆம் ஆண்டில் 3.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.




## 2024 ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் தங்க கொள்முதல்


- 2024 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் இந்திய ரிசர்வ் வங்கியின் நிகர தங்க கொள்முதல் (13.4 டன்) ஆனது, ஏற்கனவே அதன் 2023 ஆண்டிற்கான நிகர கொள்முதல் அளவை (16.2 டன்) விட 80% அதிகமாக உள்ளது.
- இது 2015 ஆண்டிற்குப் பிறகு, இந்தக் காலக் கட்டத்திற்கான மிகப்பெரிய கொள்முதல் ஆகும்.
- தங்கத்தைச் சீரான நிலையில் சேமித்து வரும் பல மத்திய வங்கிகளில் இந்திய ரிசர்வ் வங்கியும் ஒன்று ஆகும்.

- அதன் வருடாந்திர நிகர தங்க கொள்முதல் சராசரியாக 42 டன் (2018 முதல் 2023 வரை) ஆகும்.





## கையா AI திட்டம்

- சர்வதேச தீர்வுகளுக்கான வங்கியானது, (Bank for International Settlements) பருவநிலை தொடர்பான நிதி அபாயங்களை மதிப்பிடுவதற்கான தரவுகளைச் சேகரிப்பதற்காக செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி ஒரு புதிய தளத்தை உருவாக்கியுள்ளது.
- கார்பன் உமிழ்வுகள், பசுமைப் பத்திர வெளியீடு மற்றும் தன்னார்வ நிகர-சுழி உமிழ்வு உறுதிப்பாடுகள் குறித்த நிறுவனத்தின் பல்வேறு வெளிப்பாடுகளை மதிப்பாய்வு செய்வதற்காக அதன் சோதனை முறையிலான கையா AI திட்டம் பயன்படுத்தப் பட்டது.
- அதிகம் கோரப்படும் வெளிப்படைத்தன்மையை வழங்குவதற்காக வேண்டி, அதிகார வரம்புகளில் உள்ள வரையறைகள் மற்றும் தகவல் வெளிப்படுத்தல் கட்டமைப்பில் உள்ள வேறுபாடுகளை கையா AI தளத்தினால் எதிர்கொள்ள முடிந்தது.
- மேலும், இது பருவநிலை தொடர்பான நிதி அபாயங்களின் பல்வேறு குறிகாட்டிகளை ஒப்பிடுவதை எளிதாக்குகிறது.




## இந்திய வேலைவாய்ப்பு அறிக்கை 2024




- 2024 ஆம் ஆண்டு இந்திய வேலைவாய்ப்பு அறிக்கை ஆனது சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் மனித மேம்பாட்டு நிறுவனம் (IHD) ஆகியவற்றினால் இணைந்து வெளியிடப் பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், நாட்டின் மொத்த வேலை வாய்ப்பில்லாத மக்கள் தொகையில் 83% பேர் இளைஞர்கள் ஆவர்.
- மொத்த வேலைவாய்ப்பில்லாத மக்கள் எண்ணிக்கையில் 2000 ஆம் ஆண்டில் 54.2% ஆக இருந்த கல்வி கற்ற இளைஞர்களின் பங்கு ஆனது 2022 ஆம் ஆண்டில் 65.7% ஆக அதிகரித்துள்ளது.
- மேலும், தற்போது கல்வி கற்ற ஆனால் வேலை வாய்ப்பு என்று எதுவும் இல்லாத இளைஞர்களில் ஆண்களை விட (62.2%) பெண்களின் (76.7%) பங்கு அதிகமாக உள்ளது.
- 2000 ஆம் ஆண்டில், மொத்த வேலை வாய்ப்பு பெற்ற இளைஞர்கள் எண்ணிக்கையில் பாதி பேர் சுயதொழில் செய்பவர்கள், 13% தினசரி வேலைகள் செய்பவர்கள், மீதமுள்ள 37% பேர் பகுதி நேர வேலை செய்பவர்கள் என்ற வகையில் இருந்தனர்.
- ஏறக்குறைய 90% தொழிலாளர்கள் முறைசாரா பணிகளில் ஈடுபட்டுள்ளனர், அதே சமயம் 2000 ஆண்டிற்குப் பிறகு தொடர்ந்து அதிகரித்த தினசரி வேலைவாய்ப்புகளின் பங்கானது 2018 ஆம் ஆண்டிற்குப் பிறகு சரிந்துள்ளது.
- 75% இளைஞர்கள் ஆவண இணைப்புகளுடன் கூடிய மின்னஞ்சல்களை அனுப்ப இயலாதவர்களாகவும், 60% பேர் கோப்புகளை நகலெடுத்து இணைக்க இயலாமலும், 90% பேர் கணித சூத்திரத்தை விரிதாள் எனப்படும் அட்டவணை முறை கணித செயல் முறையில் (spreadsheet) சேர்க்க இயலாமலும் இருந்தனர்.
- அடுத்தப் பத்தாண்டுகளில் இந்தியாவின் தொழிலாளர் வளத்தில் 7-8 மில்லியன் (70-80 லட்சம்) இளைஞர்கள் இணைவர்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ‘10,000 மரபணு வகையிடல் திட்டம்





- உயிரித் தொழில்நுட்பத் துறை (DBT) ஆனது, ‘10,000 மரபணுத் தொகையாக்கல்’ என்ற திட்டத்தை நிறைவு செய்துள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- இது இந்தியா முழுவதற்குமான முழு-மரபணு படமிடலின் குறிப்பு பெறுதலுக்கான தரவுத் தளத்தை உருவாக்கும் முயற்சியாகும்.
- இந்தியா முதன்முதலில் 2006 ஆம் ஆண்டில் முழுமையான மனித மரபணுக்களைத் தொகைப் படுத்தியது.
- இந்திய மக்கள்தொகையின் பன்முகத்தன்மையின் தரவுத் தளத்தை உருவாக்குவது என்பது இந்தியாவின் மக்கள்தொகை குழுவில் உள்ள தனித்துவமான மரபணு மாறுபாடுகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், மருந்துகள் மற்றும் சிகிச்சைகளைத் தனிப்பயனாக்க அதைப் பயன்படுத்துவதற்கும் ஒரு முக்கிய படிநிலையாகக் கருதப் படுகிறது.
- 1.3 பில்லியன் இந்திய மக்கள்தொகை என்பது 4,600க்கும் மேற்பட்ட மக்கள்தொகை குழுக்களைக் கொண்டுள்ளது என்பதோடு அவற்றுள் பல உள் இன மரபுத் திருமண முறை கொண்டவையாகும்.
- ஐக்கியப் பேரரசு, சீனா மற்றும் அமெரிக்கா ஆகியவை குறைந்தபட்சம் 1,00,000 மரபணுக்களை தொகைப்படுத்துவதற்கான திட்டங்களைக் கொண்ட நாடுகளுள் சிலவாகும்.

## A வகை இரத்தம் உறையாமை நோய்க்கு மரபணு சிகிச்சை

- வேலூரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் ‘A வகை இரத்தம் உறையாமை நோய்க்கான மரபணு சிகிச்சையின் முதல் மனித மருத்துவப் பரிசோதனையை இந்தியா மேற்கொண்டுள்ளது.


- A வகை இரத்தம் உறையாமை நோய் என்பது இரத்தம் இறுகுதல் அல்லது உறைதல் திறனை பாதிக்கும் நிலைகளின் குழுவாகும்.
- ஒரு நபரின் உடலில் உள்ள இரத்தத்தில் உறைதல் காரணிகள் என்று அழைக்கப் படுகின்ற சில புரதங்கள் குறைவாக இருக்கும்போது இந்தப் பாதிப்பு ஏற்படுகிறது.
- A வகை இரத்தம் உறையாமை நோய் மற்றும் B வகை இரத்தம் உறையாமை நோய் ஆகியவை இரத்தம் உறையாமை நோயின் இரண்டு முக்கிய வகைகள் ஆகும்.
- இந்த இரண்டு வகை பாதிப்புகளிலும் சில ஒற்றுமைகள் உள்ளன, ஆனாலும் இரத்தம் உறைதல் என்ற பிரச்சனையை ஏற்படுத்தும் மரபணு மாறுபாட்டினைக் கொண்டு வேறுபடுத்தப் படுகின்றன.
- A வகை இரத்தம் உறையாமை நோய்ப் பாதிப்புடன் வாழும் மக்களின் VIII இரத்தம் உறைதல் காரணியை உருவாக்குவதற்கு காரணமாக உள்ள F8 மரபணுவில் ஒரு மரபணு மாறுபாடு உள்ளது.
- B வகை இரத்தம் உறையாமை நோய் பாதிப்பில், F9 மரபணுவில் ஒரு மரபணு மாறுபாடு உள்ளது என்பதனால் இதன் விளைவாக IX இரத்தம் உறைதல் காரணியின் உற்பத்தி குறைகிறது.




## உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதலுறு வேக ஈணுலை

- தமிழ்நாட்டில் கல்பாக்கத்தில் உள்ள 500 மெகாவாட் முதலுறு வேக ஈணுலையில் (PFBR) எரிபொருள் நிரப்பும் பணி தொடங்கியது.
- முதலுறு வேக ஈணுலைகள் ஆனது, இந்தியாவின் மூன்று-நிலை அணுசக்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் உருவாக்கப் படுகின்றன.
- PFBR என்பது அது பயன்படுத்துவதை விட அதிக அணுசக்தி எரிபொருளை உற்பத்தி செய்கின்ற ஓர் இயந்திரம் ஆகும்.
- PFBR உலையின் செயல்பாடாக்கம் ஆனது, இந்தியாவின் மூன்று நிலை அணுசக்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் தொடக்கத்தைக் குறிக்கும்.
- இந்தியாவானது முதன்முதலில் அழுத்தக் கனநீர் உலைகள் (PHWRs) மற்றும் இயற்கை யுரேனியம்-238 (U-238) ஆகியவற்றைப் பயன்படுத்தியது.
- இது U-235 ஐசோடோப்புகளை சிறிய அளவுகளில் பிளவுப் பொருளாக கொண்டுள்ளது.

- இந்த வினைகள், புளூட்டோனியம்-239 (Pu-239) மற்றும் ஆற்றலை உருவாக்குகின்றன.
- இரண்டாம் கட்டத்தில், ஆற்றல், U-233 மற்றும் அதிக Pu-239 ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கு அழுத்தக் கனநீர் உலைகளில் U-238 என்பதுடன் சேர்த்து Pu-239 என்ற ஐசோடோப்புகளைப் பயன்படுத்தப்படுகின்றது.
- இதன் மூன்றாம் கட்டத்தில், ஆற்றலையும் U-233 ஐசோடோப்பினையும் உற்பத்தி செய்வதற்காக உலைகளில் தோரியம்-232 (Th-232) ஐசோடோப்புடன் Pu-239 சேர்க்கப் படுகிறது.
- இந்திய நாடானது உலகின் தோரிய இருப்பில் சுமார் கால் பங்கினைக் கொண்டு உள்ளதால், ஹோமி J. பாபா அவர்கள் மூன்று நிலை அணு உலைகளை வடிவமைத்தார்.





## ஜூஸ் ஜாக்கிங்

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) பொது மின்னேற்ற முனையங்களைப் பயன்படுத்தி தங்கள் சாதனங்களை மின்னேற்றம் செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தி கைபேசி பயனர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்தியை வெளியிட்டுள்ளது.
- "ஜூஸ் ஜாக்கிங்" (பொதுப் பயன்பாட்டு மின்னேற்றிகளில் தீம் பொருளினை நிறுவி தரவுகளைத் திருடுதல்) எனப்படும் இணைய வெளி தாக்குதலால் ஏற்படும் பாதுகாப்பு அபாயங்கள் குறித்த கவலைகள் அதிகரித்து வரும் நிலையில் இந்த எச்சரிக்கை வெளி வந்துள்ளது.
- இணைய வெளி தாக்குதலின் ஒரு வகையான ஜூஸ் ஜாக்கிங் என்பதில் ஹேக்கர்கள் (கணினிக் கொந்தர்கள்) பொதுப் பயன்பாட்டு USB மின்னேற்றி முனையங்களைப் பயன்படுத்தி ஊடுருவுகின்றனர்.
- அவை தீநிரல் மூலம் அவற்றைத் தாக்குகின்றன அல்லது அவற்றுடன் இணைக்கப்பட்ட

சாதனங்களிலிருந்து தரவைத் திருட அனுமதிக்கும் வன்பொருள் மாற்றங்களைச் செய்கின்றன.




## வாழை இழைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கட்டுப் போடும் துணி





- ❖ அசாம் மாநிலத்தில் உள்ள மேம்பட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வுக் கழகத்தின் (IASST) அறிவியலாளர்கள் வாழை இழைகளைப் (நார்) பயன்படுத்தி, ஒரு நிலையான மற்றும் குறைந்த விலையிலான, காயங்களுக்கு கட்டுப் போடும் ஒரு துணியினை உருவாக்கியுள்ளனர்.
- ❖ அறிவியலாளர்கள் வாழை நார்களை, சிட்டோசன் மற்றும் குவார் கம் என்ற பசை போன்ற

உயிரி சார்ந்த பலபடிமச் சேர்மங்களுடன் இணைத்து இந்தப் புத்தாக்கமிக்க துணிகளை உருவாக்கியுள்ளனர்.


- கூடுதலாக, வைடெக்ஸ் நெகுண்டோ L. என்ற தாவரத்தில் இருந்து எடுக்கப்பட்ட சாறு ஏற்றப் பட்ட இந்தத் துணி ஆனது, செயற்கை முறை மருந்து உள்ளீடு மற்றும் பாக்டீரியா எதிர்ப்புச் செயல்பாடு ஆகியவற்றில் அதன் சிறப்பான செயல்திறன்களை வெளிப்படுத்தியுள்ளது.

## மீத்தேன்சாட்




- உலக அளவிலான மீத்தேன் உமிழ்வினைக் கண்காணித்து அளவிடும் மீத்தேன் சாட் எனும் செயற்கைக்கோள் சமீபத்தில் விண்ணில் ஏவப்பட்டது.
- அமெரிக்காவில் உள்ள ஓர் இலாப நோக்கற்ற சுற்றுச்சூழல் ஆலோசனை வழங்கீட்டுக் குழுவான சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியம் (EDF) ஆனது மீத்தேன்சாட் உருவாக்கத்தின் பின்னணியில் உள்ள நிறுவனம் ஆகும்.
- ஒரு நாளைக்கு சுமார் 15 முறை பூமியைச் சுற்றி வரும் மீத்தேன்சாட் எண்ணெய் மற்றும் எரிவாயு பிரிவுகளைக் கண்காணிக்கும்.
- "எங்கிருந்து எவ்வளவு மீத்தேன் வெளி வருகிறது எனவும், அதற்கு எது காரணம் என்றும், அந்த உமிழ்வுகள் காலப் போக்கில் அதிகமாகின்றனவா அல்லது குறைகின்றனவா" என்று ஆராய்ந்து தகவல் அளிக்கும் இது ஒரு பெரிய அளவிலான தரவை உருவாக்கும்.
- மீத்தேன் ஒரு கண்ணுக்குப் புலப்படாத ஆனால் வலுவான பசுமை இல்ல வாயுவாகும். மேலும் கார்பன் டை ஆக்சைடுக்குப் பிறகு புவி வெப்பமடைதலில் இரண்டாவது பெரிய பங்கினைக் கொண்டுள்ள வாயுவாகும்.
- தொழில்துறைப் புரட்சிக்குப் பின்னர் பதிவான 30 சதவீத உலக வெப்பமயமாதலுக்கு இதுவே முக்கியக் காரணமாக உள்ளது.

## ஹீலியம் வாயு நிறைந்த வெப்பமிகு சார் நிலை குறுநட்சத்திரங்கள்




- ஒரு பெரிய சர்வதேச வானியலாளர்கள் குழுவானது, இன்று வரை அறியப்பட்ட மிகச் சிறிய நட்சத்திரத்தைக் கண்டறிந்துள்ளது.
- மேலும், கூடுதலாக அது மற்றொரு சற்றே பெரிய நட்சத்திரத்துடன் இணையாக இருப்பதாகக் கண்டறியப் பட்டது.
- இவை அவற்றின் மையக்கருவில் ஹீலிய வாயுவினை எரிக்கின்றன என்பதோடு, இவை பொதுவாக அண்ட நட்சத்திரக் குழுக்களில் காணப்படுகின்றன.
- இந்த நட்சத்திரம் ஆனது J0526 எனப்படும் இரட்டை மண்டல அமைப்பின் ஒரு பகுதியாகும் என்ற நிலையில் இது பூமியிலிருந்து சுமார் 2,760 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- இதுவரை கண்டறியப்படாத இந்த இரண்டு நட்சத்திரங்களுக்கு J0526A பெரிய வெண் குறுநட்சத்திரம் மற்றும் J0526B வெப்பமிகு சார்நிலைக் குறு நட்சத்திரம் என்று பெயரிடப் பட்டுள்ளது.
- சிறிய நட்சத்திரம் ஆனது பூமியை விட தோராயமாக ஏழு மடங்கு பெரியது, அதாவது சனிக்கோளை விட சிறியது.
- இது தோராயமாக 2,226 டிகிரி செல்சியஸ் மேற்பரப்பு வெப்பநிலையைக் கொண்டு உள்ளது.
- இது தோராயமாக 20 நிமிடங்களுக்கு ஒரு முறையும் பெரிய நட்சத்திரத்தைச் சுற்றி வருகிறது.
- அதாவது இது சுமார் 72 ஆண்டுகளை ஒரு புவி நாளாக மாற்றுகிறது.
- TMTS J0526B நடச்சத்திரத்திற்கு முன்னதாக, பூமியிலிருந்து 600 ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ள செந்நிற நட்சத்திரமான EBLM J0555-57Ab என்பது இதுவரை கண்டறியப்பட்ட மிகச்சிறிய நட்சத்திரங்களில் ஒன்றாகும்.

## RAD51 புரதம்

- RAD51 புரதமானது புதிதாக ஒருங்கிணைக்கப்பட்ட டிஎன்ஏவுடன் மிகத் தற்காலிகமாக பிணைக்கப் படுவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- எனவே, மீண்டும் செயல்படுத்தப்பட்ட மூலங்களிலிருந்து உருவாகக் கூடிய மரபணு நகல்களை RAD51 தடுக்கிறது.


- ஒவ்வொரு முறையும் ஒரு செல் பிரியும் போது, அதன் டிஎன்ஏ நகலெடுக்கப்படுவதால், இரண்டு சேய் செல்கள் அவற்றின் பெற்றோர் செல்களைப் போலவே ஒரே மரபணு கூறினைக் கொண்டுள்ளன.
- இதன் பொருள் ஒரு நாளைக்கு மில்லியன் கணக்கான முறை டிஎன்ஏ மூலக்கூறின் நகலெடுப்பு என்ற ஓர் உயிர்வேதியியல் அதிசயம் உடலில் நடைபெறுகிறது.
- சில குறிப்பிட்ட புரதங்களால் மேற்கொள்ளப்படும் ஒரு உயர்-துல்லிய நிலை செயல்பாடான இது புற்றுநோய் போன்ற பல நோய்களுக்கு வழிவகுக்கும் சில சாத்தியமான பிறழ்வுகளிலிருந்து பாதுகாக்கும் அமைப்புகளை உள்ளடக்கியது.
- டிஎன்ஏவின் ஒரு பகுதி அதிகமாகப் பிரதியெடுக்கப்படும் போது, மூலக்கூறில் பல முறிவுகள் உருவாவதால், புற்றுநோய் தொடர்பான மரபணு மிகவும் அதிகமாக வெளிப்படுத்தப் படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது.
- எனவே, அதிகப் படியான நகலெடுப்பினைத் தவிர்ப்பது "டிஎன்ஏ சேதத்தைத் தடுத்து, புற்றுநோய்கள் பெருக்கப்படுவதற்கான வாய்ப்புகளைக் குறைக்கிறது.




## திவ்யாஸ்திரம் திட்டம்

- இந்தியா தனது 'திவ்யாஸ்த்ரம் திட்டத்தின்' ஒரு பகுதியாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அக்னி-5 ஏவுகணையின் முதல் பறத்தல் சோதனையை நடத்தியது.
- இந்த ஆயுதம் ஆனது பல்முனை இலக்கினை தன்னிச்சையாக தாக்கி விட்டு மீண்டும் திரும்ப வரும் (MIRV) தொழில்நுட்பத்தினைக் கொண்டுள்ளது.
- இந்தத் தொழில்நுட்பமானது பல ஆயுதங்களை வெவ்வேறு இலக்குகளின் மீது துல்லியமாக நிர்ணயிப்பதில் சிறந்த செயல்திறனை வழங்குகிறது.
- உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 5,000 கி.மீ. தொலைவிலான தாக்குதல் வரம்புடைய அக்னி-5 அணு ஆயுத ஏவுகணையின் முதல் சோதனை இதுவாகும்.

- தற்போது, அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு, பிரான்சு, சீனா, ரஷ்யா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் மட்டுமே இந்த தொழில்நுட்பத்தை கொண்ட நாடுகள் ஆகும்.
- ஐதராபாத்தில் உள்ள நாட்டின் ஏவுகணை வளாகத்தைச் சேர்ந்த பெண் அறிவியலாளர் ஷீனா இராணி இந்த திட்டத்திற்கு தலைமை தாங்கினார்.
- அவரது கணவர், PSRS சாஸ்திரி, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பில் ஏவுகணை சார்ந்த பணிகளில் ஈடுப்பட்டுள்ளார். மேலும் 2019 ஆம் ஆண்டில் இஸ்ரோவினால் விண்ணில் ஏவப்பட்ட கௌடில்யா செயற்கைக்கோள் திட்டத்தின் பொறுப்பாளராகவும் இருந்தார்.




## ஹைபர் செயற்கை நுண்ணறிவு மாதிரி

- கூகுளின் டீப் மைண்ட், டிக்டாக் ஆகியவற்றின் முன்னாள் உறுப்பினர்களால் நிறுவப்பட்ட ஹைபர் நிறுவனம் மற்றும் சில ஆராய்ச்சிக் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த சிறந்த ஆய்வகங்கள் ஆகியவை இணைந்து அவற்றின் தொடர்பு சார் பெயரிடப்பட்ட (eponymous), உரையினை ஒளிப்படக்காட்சியாக மாற்றும் புதிய செயற்கை நுண்ணறிவு மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- தொழில்நுட்பப் பயிற்சி பெற்றவரோ அல்லது இல்லாதவரோ என அனைவரும் உயர்தர ஒளிப்படக் காட்சிகளை எளிதாக உருவாக்க இது வழிவகை செய்கிறது.
- ஹைபர் மாதிரியானது, உரையினை ஒளிப்படக்காட்சியாக மாற்றும் நுட்பம், இயங்குபடம் நுட்பம் செலுத்தப்பட்ட நிலைபடங்கள், ஒளிப்படக்காட்சிகளை மீண்டும் வண்ணம் தீட்டுதலுக்கான கருவிகள் போன்ற கருவிகளை வழங்குகிறது.

## வானியல் சார்ந்த மாபெரும் சுழற்சிகள்

- புவியானது புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட சுமார் 2.4 மில்லியன் ஆண்டுகள் அளவிலான சுழற்சியில் பல்வேறு பருவநிலை மாற்றங்களுக்கு உள்ளாகிறது.

- ஆழ்கடலில் உள்ள பல்வேறு புவியியல் படிவு சான்றுகள், செவ்வாய்க் கிரகத்தின் சுற்றுப் பாதையுடன் இணைக்கப்பட்ட சுழற்சி ஒன்று இருப்பதாகக் கூறுகின்றன.
- புவியானது ஒரு வெப்பமயமாதல் சுழற்சியில் தற்போது சுமார் 200,000 ஆண்டுகள் என்ற நிலையில் உள்ளது.
- சுமார் 1 மில்லியன் ஆண்டுகளில், புவியானது அடுத்த உச்சக் கட்டத்தினை அடையும்.
- சூரிய குடும்பத்தில் உள்ள கோள்களின் ஈர்ப்பு புலங்கள், ஒன்றோடொன்று குறுக்கிடும் நிகழ்வு அதிர்வு எனப்படும்.
- இது அவற்றின் சுற்றுப் பாதைக்கு எவ்வளவு அருகில் உள்ளது என்பதை அளவிட்டு, அந்தக் கோள்களின் மையத் தன்மையை மாற்றுகிறது.
- இந்த குறுக்கீடுகள் ஆனது, பூமியில் 2.4 மில்லியன் ஆண்டுகள் என்ற அளவிலான பல சுழற்சிகளில் அதிக அளவிலான உள்வரும் சூரிய கதிர்வீச்சு மற்றும் வெப்பமான பருவ நிலைக்கு வழி வகுக்கிறது.



## டெவின் AI





- அமெரிக்காவைச் சேர்ந்த புத்தொழில் நிறுவனமான காக்னிஷன் டெவின் AI என்ற செயற்கை நுண்ணறிவு மென்பொருளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது நிரலில் பிழைத் திருத்தம், நிரல் எழுதுதல் மற்றும் நிரல் செயல்படுத்தப் படும் செயல் முறையை மாற்றியமைக்கிறது.

- இந்த வகைகளில் முதல் வகையான டெவின் AI ஓர் எளிய நிரல் கட்டளையை (உள்ளீட்டினை), செயல்படும் இணையதளம் அல்லது மென்பொருள் நிரலாக மாற்றும் திறனைக் கொண்டுள்ளது.
- இது மென்பொருள் செயலிகளை உருவாக்கிச் செயல்படுவதற்கான ஒரு முழு செயல் முறையையும் உருவாக்கக் கூடியது.

## மியாசைட் (Rh17S15)

- மியாசைட் எனப்படும் வழக்கத்திற்கு மாறான இயற்கையிலேயே காணப்படும் முதல் மீக்கடத்தியினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ஆய்வகத்தில் உருவாக்கப்படும் போது மீக்கடத்தித் திறனை வெளிப்படுத்தும் நான்கு தாதுக்களில் இதுவும் ஒன்றாகும்.
- மியாசைட் உயர் வெப்பநிலை மீக்கடத்திகளின் பண்புகளை ஒத்துள்ளது.
- மீக்கடத்துத் திறன் என்பது ஆற்றல் இழப்பு இல்லாமல் மின்சாரப் பரிமாற்றத்தை அனுமதிக்கிறது.




Unconventional superconductivity in mineral miassite - $Rh_{17}S_{15}$

## 2040 ஆம் ஆண்டிற்குள் நிலவில் மனிதக் குடியிருப்புகள்

- 2040 ஆம் ஆண்டிற்குள் நிலவில் மனிதக் குடியிருப்புகளை உருவாக்க நாசா நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
- மனிதர்களை நிலவின் மேற்பரப்பில் ஒரு நிலையானக் குடியிருப்பினை அமைப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு பன்முக முயற்சியான இது ஆர்ட்டெமிஸ் என்ற திட்டத்தை உருவாக்கியுள்ளது.
- நிலவில் நீண்ட காலம் மனித இருப்பு மற்றும் அறிவியல் முயற்சி மேற்கொள்ள ஏதுவாக வாழக்கூடிய கட்டமைப்புகளுக்கான கட்டிடக் கலையை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தீவிர வெப்பநிலை, நுண்ணிய விண்கல் தாக்கங்கள் மற்றும் காஸ்மிக் கதிர்வீச்சு போன்ற நிலவின் பல கடுமையான கூறுகளிலிருந்து பாதுகாக்கப்பட்ட வகையிலான பாதுகாப்பான வாழ்விடத்தினை உருவாக்குதல் இதற்கான சில முக்கிய சவால்களாக இருக்கும்.




## ஆந்த்ரோபோட்ஸ்



- ஓர் ஆய்வக அமைப்பில், நியூரான்களை இயக்கும் மற்றும் மறுசீரமைக்கும் திறன் கொண்ட மனித செல்களைப் பயன்படுத்தி ஆராய்ச்சியாளர்கள் ஒரு சிறிய ரோபோக்களை (எந்திரங்களை) உருவாக்கியுள்ளனர்.
- அவை 'ஆந்த்ரோபோட்ஸ்' என்று அழைக்கப்படுகின்றன.
- இந்த உயிரிப் பொறியியல் அமைப்புகள் மனித மூச்சுக்குழாய் செல்களைக் கொண்டிருக்கின்றன என்பதோடு பல்வேறு வடிவங்கள் மற்றும் பரிமாணங்களில் இவை தங்களைத் தானாகக் கட்டமைக்கும் திறனைக் கொண்டுள்ளன.
- மீளுருவாக்கம், மீட்பு மற்றும் நோய்களை மேலாண்மை செய்தல் ஆகிய பல்வேறு நோக்கங்களுக்காக இந்த உயிரி எந்திரங்கள் ஒரு புத்தாக்கமிக்க கருவிகளாக நன்கு பயன்படுத்தப் படலாம்.


## நுண் ஒளியணுவியல் எலக்ட்ரான் முடுக்கி



- உலகின் மிகச்சிறிய துகள் முடுக்கியை ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாக செயல் படுத்தியுள்ளனர்.
- இது மருத்துவச் சிகிச்சைகளில் சிறிய அளவிலான துகள் முடுக்கிகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் உட்பட பல்வேறு பயன்பாடுகளில் ஒரு புரட்சியை ஏற்படுத்தலாம்.
- புதிதாக உருவாக்கப்பட்ட இந்த இயந்திரம், நுண் ஒளியணுவியல் எலக்ட்ரான் முடுக்கி (NEA) என அழைக்கப்படுகிறது.
- இது தோராயமாக ஒரு சிறிய நாணயத்தின் அளவுள்ள ஒரு சிறிய தொழில்நுட்ப அதிசயமாகும்.
- இந்த சிறிய முடுக்கியானது, ஆயிரக்கணக்கான தனித்தனி "கட்டமைப்புகளால்" ஆன வெற்றிடக் குழாயைக் கொண்ட சிறிய நுண் சில்லுகளைச் சார்ந்துள்ளது.
- சுவிட்சர்லாந்தில் உள்ள CERN என்ற அமைப்பில் உள்ள 16.8 மைல் நீளம் (27 KM) கொண்ட லார்ஜ் ஹாட்ரான் கொலைடர் (LHC) உலகின் மிகப்பெரிய மற்றும் சக்திவாய்ந்த துகள் முடுக்கி ஆகும்.

## செவ்வாய்க் கிரகத்தில் உள்ள மாபெரும் எரிமலை

- செவ்வாய்க் கிரகத்தில் 'பிரம்மாண்டமான' எரிமலை இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.
- இந்தப் பிரம்மாண்டமான புவியியல் அம்சத்திற்கு ‘நோக்டிஸ் எரிமலை’ என்று பெயரிடப் பட்டுள்ளது.
- 29,600 அடி உயரம் கொண்ட இந்த எரிமலை, சுமார் 450 கிலோமீட்டர் அகலத்தில் நீண்டு உள்ளது.
- இந்த எரிமலை அமைந்துள்ள இடம் ஆனது கிழக்கு நோக்டிஸ் லாபிரிந்தஸில் செவ்வாய்க் கிரகத்தின் நிலநடுக்கோட்டிற்கு தெற்கிலும், அந்தக் கிரகத்தின் பரந்தப் பள்ளத்தாக்கு அமைப்பான வால்ஸ் மரைனெரிஸின் மேற்கிலும் அமைந்துள்ளது.




## செந்நிற மின்னிறக்கம்




- ஐரோப்பிய விண்வெளி முகமையின் (ESA) விண்வெளி வீரர் ஒருவர் சமீபத்தில் செந்நிற மின்னிறக்கம் (ரெட் ஸ்ப்ரைட்) என்று அழைக்கப்படும் ஓர் அசாதாரண நிகழ்வை புகைப் படம் எடுத்துள்ளார்.
- இந்தப் புகைப்படங்கள் டென்மார்க் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் தோர்-டேவிஸ் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டது.
- இந்தச் சோதனையானது மேல் வளிமண்டலத்தில் ஏற்படும் மின்னல் மற்றும் புவி வெப்பமடைதலில் தாக்கத்தினை ஏற்படுத்தும் பசுமை இல்ல வாயு அளவுகளில் அதன் தாக்கங்களை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அறிவியலாளர்கள், புகைப்படத்தில் உள்ள செந்நிற மின்னிறக்கத்தின் பரிமாணங்கள் தோராயமாக 26 கிலோமீட்டருக்கு 14 (16.2 மைலுக்கு 8.7) என்ற வேகம் வரை இருக்கும் என்று மதிப்பிட்டுள்ளனர்.
- ஒரு செந்நிற மின்னிறக்கம் ஆனது ஒரு நிலையற்ற ஒளிர்தல் நிகழ்வு (TLE) என வகைப் படுத்தப் பட்டுள்ள ஓர் அசாதாரணமான வானிலை நிகழ்வைக் குறிக்கிறது.
- அவ்வப்போது செந்நிற மின்னல் என்று அழைக்கப்படுகின்ற இந்த நிகழ்வு ஆனது, பூமியின் மேற்பரப்பில் இருந்து 40 முதல் 80 கிலோமீட்டர்கள் (25 - 50 மைல்கள்) என்ற உயரத்தில் இடி மேகங்களுக்கு மேலே நிகழ்கிறது.

## காசியோபியா A: நட்சத்திரத்தின் புதிய புகைப்படம்

- காசியோபியா A (காஸ் A) என்ற மீவொளிர் விண்முகிலின் எஞ்சிய பாகத்தில் வெடித்த ஒரு நட்சத்திரம் ஆனது நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியில் படம் பிடிக்கப்பட்டுள்ளது.
- காஸ் A என்பது ஒட்டுமொத்த பேரண்டத்திலும் முழுவதிலும், முழுமையாக ஆய்வு செய்யப் பட்ட மீவொளிர் விண்முகிலின் எஞ்சிய பாகங்களில் ஒன்றாகும்.
- ஒட்டுமொத்த காஸ் A, 10 ஒளியாண்டுகள் அல்லது சுமார் 60 டிரில்லியன் மைல்கள் தொலைவிலானது.
- காஸ் A எனப்படும் மீவொளிர் விண்முகிலின் எஞ்சிய பாகமானது, 11,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் காசியோபியா விண்மீன் திரளில் அமைந்துள்ளது.
- இது நமது கண்ணோட்டத்தில் சுமார் 340 ஆண்டுகளுக்கு முன்பு வெடித்ததாக என்று மதிப்பிடப் பட்டுள்ளது.




## நோயை உண்டாக்கும் பழமையான பூஞ்சை



- இலண்டனில் உள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில் 407 மில்லியன் ஆண்டுகள் பழமையான புதைபடிவமான பூஞ்சை ஒன்று கண்டறியப் பட்டுள்ளது.
- நோயை உண்டாக்கும் பூஞ்சையின் மிகப் பழமையான சான்று இதுவாகும்.

- புகழ்பெற்ற பூஞ்சையியல் நிபுணர் பீட்ரிக்ஸ் பாட்டர் என்பவரின் நினைவாக இதற்கு பொட்டெரோமைசஸ் அஸ்டெராக்சிலிகோலா எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## பூமியில் செவ்வாய்க் கிரகத்தின் ஒத்திசைவு




- செவ்வாய்க் கிரகம் ஆனது பூமியிலிருந்து சுமார் 140 மில்லியன் மைல்கள் தொலைவில் உள்ளது.
- இருப்பினும், புவியீர்ப்பு உந்துதல் அல்லது இழுவிசை காரணிகள் காரணமாக இது இன்னும் பூமியில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்ற நிலையில், இது பெரும்பாலும் ஒத்திசைவு விளைவு (உடனிசைவு) என்று அழைக்கப்படுகிறது.
- பூமியின் ஆழமான பெருங்கடல்களில் இராட்சதச் சுழல்கள் ஏற்படுவதற்கு செவ்வாய்க் கிரகத்தின் ஒத்திசைவு விளைவு காரணமாக இருக்கலாம்.
- இந்த நிகழ்வு ஆனது பூமியில் கடுமையான பருவநிலைச் சூழல்களை ஏற்படுத்தக் கூடும்.

## இறக்கைகள் கொண்ட ஏவு கலம் - புஷ்பக்



- இஸ்ரோ நிறுவனமானது புஷ்பக் எனப்படும் தனது RLV (மறுபயன்பாட்டு ஏவு கலம்) வாகனத்தின் இரண்டாவது தரையிறக்க சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டு உள்ளது.
- புஷ்பக் இசான் SUV (சாலைப் பயன்பாடுகள் மற்றும் இதர நிலப்பரப்புப் பயன்பாட்டுச் சார்ந்த வாகனம்) அளவிலான இறக்கைகள் கொண்ட ஒரு ஏவு கலமானது, "சுதேசி விண்வெளி கலம்" என்று அழைக்கப்படுகிறது.
- மறுபயன்பாட்டு ஏவு கலங்கள் பிரிவில் பல செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான நாட்டின் முயற்சியில் இது ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது.
- இந்த சோதனையின் ஒரு பகுதியாக விமானப்படை ஹெலிகாப்டரில் இருந்து இந்த ஏவு கலம் இறக்கப்பட்டு சோதிக்கப்பட்டது.

## வானியற்பியல் சார்ந்த நியூட்ரினோக்கள்

- அண்டார்டிகாவில் உள்ள ஐஸ்கியூப் நியூட்ரினோ ஆய்வகத்தின் தரவுகளைப் பயன்படுத்தி, "மர்மத் துகள்கள்" குறித்த முதல் ஆதாரத்தைக் கண்டறிந்துள்ளதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.
- நியூட்ரினோக்கள் (நுண்நொதுமிகள்) எந்தவொரு பொருளுடனும் வெகு அரிதாகவே தொடர்பு கொள்ளும் சிறிய அணு உட்கூறு துகள்கள் ஆகும்.
- வானியற்பியல் நியூட்ரினோக்கள் என்பது நமது அண்டத்திற்கு அப்பால் உள்ள தொலைதூரத்தில் இருந்து வரும் உயர் ஆற்றல் நியூட்ரினோக்கள் ஆகும்.
- இந்த துகள்கள் எலக்ட்ரான், மியூன் மற்றும் டௌ என்ற வகையிலான மூன்று வெவ்வேறு "வகைகளில்" பயணிக்கின்றன.
- இதன் இறுதி வகையானது ஆய்வு செய்வதற்கும் கண்டறிவதற்கும் மிகவும் கடினமாக உள்ளதால் "மர்மத் துகள்" என்ற பெயரைப் பெற்றுள்ளது.


## TOI-270 D கோள்

- வானியலாளர்கள், ஜேம்ஸ் வெப் என்ற விண்வெளித் தொலைநோக்கியினை (JWST) பயன்படுத்தி முழுவதுமாக ஆழ் கடலால் சூழப்பட்டிருக்கும் ஒரு தொலைதூரக் கிரகம் குறித்த குறிப்புகளைக் கண்டறிந்துள்ளனர்.
- TOI-270 D எனப்படும் இந்தக் கிரகம் ஆனது, 70 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்து உள்ளது என்பதோடு இது பூமியை விட இரண்டு மடங்கு பெரியதாகும்.
- இந்தக் கிரகத்தின் வளிமண்டலம் குறித்த ஆய்வுகள் ஆனது, நீரியல் உலகத்துடன் ஒத்துப் போகின்ற வகையில் நீராவி, மீத்தேன் மற்றும் கார்பன் டை ஆக்சைடு ஆகியவை அங்கு காணப் படுவது குறித்த தகவல்களை வெளிப்படுத்தியுள்ளது.
- சில ஆராய்ச்சியாளர்கள் TOI-270 d என்ற கிரகத்தின் வெப்பநிலையானது 4,000 டிகிரி செல்சியஸ் வரையில் உள்ளதால் அது திரவ நீருக்கு மிகவும் வெப்பமானதாக இருக்கலாம் என நம்புகின்றனர்.
- TOI-270d கிரகத்தின் வளிமண்டலத்தில் அம்மோனியா இருப்பது இன்னும் கண்டறியப் பட வில்லை என்பதால் அங்கு ஒரு கடல் இருக்கக் கூடும்.



## ஹைடோல் சமூகத் திறன் கொண்ட மனித எந்திரம்


- ஒரு தென் கொரிய நிறுவனமான ஹைடோல், மறதி நோய் உள்ள முதியவர்களிடையே நிலவும் தனிமையைப் போக்குவதற்காக செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்தும் வகையில் ஒரு வழியைக் கண்டுபிடித்துள்ளது.
- இது ஹைடோல் என்ற சமூகத் திறன்கள் கொண்ட எந்திர மனிதனை அறிமுகம் செய்து உள்ளது.
- அவற்றின் மேம்பட்ட மொழிச் செயலாக்கம் மற்றும் உணர்ச்சிகளை அடையாளம் காணும் திறன், பேசுதல் மற்றும் இசையை வாசிக்கும் திறன் ஆகியவை பல்வேறு முதியோர்களுடனான சில வகையான ஊடாடல்களை மேற்கொள்கிறது.





## சீனாவின் ஒலி சார் சீரொளிக் கற்றை

- சீன நாட்டின் அறிவியலாளர்கள், ஒளிக்குப் பதிலாக ஒலித்துகள்களை தாக்கும், இது வரை உருவாக்கப்படாத பிரகாசமான சீரொளிக் கற்றையினை உருவாக்கியுள்ளனர்.
- இது அதி சக்திவாய்ந்த "ஒலி சார் சீரொளிக் கற்றை" ஆகும்.

- ஃபோட்டான்கள் எனப்படும் ஒளித் துகள்களை வெளியிடும் வழக்கமான சீரொளிக் கற்றைக்களை போலல்லாமல், இந்த இயந்திரங்கள் ஃபோனான்கள் எனப்படும் துகள் போன்ற ஒலித் துகள்களை வெளியிடுகின்றன.
- இந்த இரண்டு வகைகளின் வெளியீடு ஆனது ஒத்ததாக உள்ள நிலையில், ஒளியிழை சீரொளிக் கற்றைகள் ஃபோட்டான்களை வெளியிடுவது போல, ஒலித் துகள்கள் குறுகிய கற்றைகளில் வெளியிடப் படுகின்றன.
- திரவங்கள் வழியாக நகரும் போது ஃபோனான்கள் குறைவாகவே தாக்கத்திற்கு உள்ளாகின்றன என்பதால் திரவம் போன்ற திசுக்களை படமாக்குவதிலும் உள்ளுறுப்பு கண்காணிப்பிலும் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
- டெராஹெர்ட்ஸ் என்பவை அதிர்வெண் வரம்பில் ஒலியை வெளியிடக் கூடியவை என்பதால், விமான நிலைய ஊடு கதிர் சோதனைகளிலும் இதனை நன்கு பயன்படுத்த இயலும்.




## ஜீனி – செயற்கை நுண்ணறிவு மாதிரி





- கூகுள் நிறுவனத்தின் டீப்மைன்ட் பிரிவானது, இரு பரிமாண இயங்குதளங்களில் விளையாட்டு சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள பயன்படும் ஊடாடும் வகையிலான மெய்நிகர் உலகங்களை உருவாக்குகின்ற ஜீனி எனப்படும் செயற்கை நுண்ணறிவு மாதிரியினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- ஜீனி மாதிரியானது செயற்கைப் படங்கள், புகைப்படங்கள், ஓவியங்கள் மற்றும் நிஜ உலகப் புகைப்படங்களிலிருந்தும் கூட விளையாட்டு சூழல்களை நன்கு உருவாக்கக் கூடியது.
- விளையாட்டினுள் உள்ள பாத்திரங்களுக்கான, பிரத்தியேகமாக இணைய ஒளிப்படக் காட்சிகளில் உள்ள கட்டுப்பாடுகளை கற்று மறு அறிமுகம் செய்யும் திறனையும் ஜீனி கொண்டுள்ளது.

## ஹனுமான்: பெரிய மொழி மாதிரிகளின் தொகுப்பு

- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் தலைமையிலான பாரத்GPT குழுவானது மற்ற ஏழு உயரடுக்கு இந்திய பொறியியல் நிறுவனங்களுடன் இணைந்து 'ஹனுமான்' இந்திய மொழி மாதிரி தொடர்களை உருவாக்கியுள்ளது.
- இது இந்தி, தமிழ் மற்றும் மராத்தி போன்ற 11 இந்திய மொழிகளில் பதிலளிக்கக் கூடியது என்பதோடு 20க்கும் மேற்பட்ட மொழிகளில் விரிவுபடுத்தவும் திட்டமிடப் பட்டுள்ளது.
- சுகாதாரம், நிர்வாகம், நிதிச் சேவைகள் மற்றும் கல்வி உள்ளிட்ட நான்கு துறைகளில் சேவை வழங்கும் வகையில் ஹனுமான் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- பெரிய மொழி மாதிரிகள், பெரிய அளவிலான உரையைச் செயலாக்குவதற்காக உள்ளார்ந்த கற்றல் நுட்பங்களைப் பயன்படுத்துகின்றன.


SPEECH-TO-TEXT ON OFFER TOO


- BharatGPT shared a sneak peek of its model Hanooman at a tech conference in Mumbai
- It will work in 11 local languages, and four key fields: health care, governance, financial services and education
- Hanooman will also offer speech-to-text capabilities, making it user-friendly given millions in the country still cannot read or write
- Large language models by larger cos like OpenAI involve workarounds due to computational constraints and simpler models affordable to smaller businesses and govt departments

## மிக பிரகாசமாக ஒளிரும் பொருள்

- ஆஸ்திரேலியாவில் உள்ள வானியலாளர்கள் குழு ஒன்று, மிகப்பெரிய கருந்துளையின் மூலம் ஆற்றலை பெறும் மாபெரும் துடிப்பண்டத்தினைக் கண்டறிந்துள்ளனர்.
- இது நமது சூரியனின் பிரகாசத்தை விட 500 டிரில்லியன் மடங்கிற்கும் அதிகமான ஒரு பிரகாசத்தினைக் கொண்டுள்ளது.
- இந்த துடிப்பண்டத்தின் (குவாசர்) மையத்தில் உள்ள கருந்துளை நமது சூரியனை விட 17 பில்லியன் மடங்கு அதிக நிறை கொண்டது.

- ஒவ்வொரு நாளும் நமது சூரியனின் அளவுக்கு இணையான ஒரு நிறையை இது உள்ளீர்க்கிறது.
- இந்தப் பேரளவிலான உள்ளீர்ப்பு ஆனது, குவாசரின் ஒளிர்தலுக்கு ஆற்றலூட்டுவதால், இது பிரகாசமாக ஒளிர்கிறது.
- அதன் ஒளியானது 12 பில்லியன் ஆண்டுகள் என்ற மிக அதிக தொலைவு பயணித்துப் புவியை அடையும்.

## நட்சத்திரங்களின் பழங்கால ஓட்டங்கள்





- ஐரோப்பிய விண்வெளி முகமையின் கயா விண்வெளி தொலைநோக்கியானது சிவன் மற்றும் சக்தி என பெயரிடப்பட்ட இரண்டு மிகப் பழங்கால நட்சத்திர ஓட்டங்களை (இயக்கங்கள்) வெளிக் கொணர்ந்துள்ளது.
- பால் வெளி அண்டத்தின் தோற்றம் பற்றிய நமது புரிதலை இவை மிகவும் கணிசமாக மேம்படுத்தியுள்ளன.
- இந்த வானியல் வடிவங்கள், 12 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஒன்றாக பிணைக்கப் பட்டவையாகும்.
- அவை நமது அண்டத்தின் உருவாக்கத்திற்கு வெகுவாகப் பங்களித்த ஆரம்பகாலக் கட்டமைப்புகளில் ஒன்றாகும்.
- அவை பால்வெளி அண்டத்தின் சுழல் பகுதி மற்றும் வட்டு ஆகியவற்றின் மிகப் பழமையான பகுதிகளை விட முந்தையவையாகும்.
- ஒவ்வொரு ஓட்டங்களும், குறிப்பிடத்தக்க வகையில் ஒத்த சுற்றுப்பாதைகள் மற்றும் கலவைகளில் நகரும் வகையிலான சும்மார் 12 முதல் 13 பில்லியன் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலான நட்சத்திரங்களுடன் சுமார் 10 மில்லியன் சூரியன்களைக் கொண்டு இயங்குகின்றன.

## பன்றியிலிருந்து மனிதருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை

- இறுதி நிலை சிறுநீரக நோய்ப் பாதிப்புள்ள 62 வயது முதியவர், மரபணு மாற்றப்பட்ட பன்றியிலிருந்துப் பெறப்பட்ட சிறுநீரகம் பொருத்தப்பட்ட முதல் மனிதர் ஆவார்.

- மாசசூசெட்ஸின் கேம்பிரிட்ஜ் நகரில் உள்ள eGenesis நிறுவனத்தினால் மரபணு மாற்றப் பட்ட ஒரு பன்றியிலிருந்து இந்த சிறுநீரகம் வழங்கப்பட்டது.
- இந்தச் சிறுநீரகத்தினை பெறும் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் மரபணுக்களை அகற்றவும், அந்த உறுப்பின் பொருந்தக் கூடிய தன்மையை மேம்படுத்துவதற்காக சில மனித மரபணுக்களைச் சேர்ப்பதற்காகவும் அந்த பன்றியின் மரபணுவில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.





## பட்ஜெட்ஸ் தவளை

- இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், பட்ஜெட்ஸ் தவளையில் உற்பத்தி செய்யப்படும் பெப்டைடுகள் (குறு புரதம்) நோயை உண்டாக்கும் நோய்க் கிருமிகளின் நொதிகளை எதிர்த்துப் போராடும் தன்மையினைக் கொண்டுள்ளதாக அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்த இரு வாழ்விகளின் தோலில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பெப்டைடுகள் (குறு புரதங்கள்) தீங்கு விளைவிக்கும் நோய்க்கிருமிகள் உட்பட சுற்றுச்சூழலில் உள்ள சாதகமற்றச் சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் திறன் கொண்டுள்ளதன் காரணமாக நீண்ட காலமாக அவை ஆய்வு செய்யப்பட்டுள்ளன.
- இந்த தவளையின் உடலில் சுரக்கும் பெப்டைடு, நோய்க்கிருமிகளால் உற்பத்தி செய்யப் படும் சப்டிலிசின் கார்ல்ஸ்பெர்க் மற்றும் புரோட்டினேஸ். K எனப்படும் இரண்டு முக்கிய நொதிகளைத் தடுக்கிறது.
- தென் அமெரிக்காவில் காணப்படும் பட்ஜெட்ஸ் தவளை, அதன் நுண்ணறிவு சார்ந்த நடத்தை காரணமாக பல நாடுகளில் செல்லப் பிராணியாக வளர்க்கப்படுகிறது.
- தவளைகள் தங்கள் தோலின் மூலம் தற்காப்பு அமைப்பினை உருவாக்கியுள்ளன.
- அவை தனது தோல்கள் மூலம் பொதுவாக நுண்ணுயிர்கள் மற்றும் பிற தீங்கு விளைவிக்கும் பொருட்களை எதிர்க்கின்றன.



## விண்வெளி வரலாற்றில் மிகப் பழமையான கருந்துளை




- ❖ அறிவியலாளர்கள் இதுவரையில் கண்டறியப்படாத, பெரு வெடிப்பிற்குப் பிறகு சுமார் 470 மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு உருவான மாபெரும் விண்வெளி அமைப்பான பழமையான கருந்துளையை கண்டறிந்துள்ளனர்.
- ❖ பேரண்டத்தின் காலம் 13.7 பில்லியன் ஆண்டுகள், இந்தக் கருந்துளையின் காலம் 13.2 பில்லியன் ஆண்டுகள் என ஆய்வுகள் கூறுகின்றன.
- ❖ இந்த கருந்துளை நமது பால்வெளி அண்டத்தில் உள்ள கருந்துளையை விட 10 மடங்கு பெரியதாகும்.
- ❖ இது அதன் அண்டத்தில் உள்ள அனைத்து நட்சத்திரங்களின் நிறையில் 10% முதல் 100% வரையிலான எடை கொண்டதாக நம்பப்படுகிறது.

## SAMAR-2 ஏவுகணை அமைப்பு

- ❖ SAMAR வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பு ஆனது முதல் முறையாக வாயுசக்தி பயிற்சியில் ஏவப்பட்டு சோதிக்கப்பட்டது.
- ❖ இது இந்திய விமானப்படையின் பராமரிப்பு படைப் பிரிவுகளால் உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்டது.
- ❖ SAMAR என்பது எதிர்தாக்குதலை உறுதி செய்யும் வகையிலான கண்டம் விட்டு வானில் உள்ள இலக்கினைத் தாக்கும் ஏவுகணை என்பதைக் குறிக்கிறது.
- ❖ இதன் உருவாக்கத்திற்காக, அப்படைப் பிரிவானது தனது ஆயுத இருப்புகளில் இருந்த ரஷ்யாவில் உருவாக்கப்பட்ட R-27 வானில் உள்ள ஒரு இலக்கினைத் தாக்கி அழிக்கும் பழைய ஏவுகணை அமைப்புகளைப் பயன்படுத்தியது.



## முப்பரிமாண அச்சிடல் நுட்பத்தில் உருவாக்கப்பட்ட மூளை திசு

- உலகில் முதல்முறையாக முப்பரிமாண அச்சிடல் என்ற நுட்பத்தில் மூளை திசுக்களை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ள நிலையில், இது இயற்கையான நிலை மூளை திசுக்களைப் போலவே செயலாற்றுகிறது.
- மனித உடலில் மூளை செல்கள் மற்றும் மூளையின் பகுதிகள் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள இந்த மாதிரி உதவும்.
- இது பெரிய அளவிலான நரம்பியல் சார்ந்த மற்றும் நரம்பியல் சம்பந்த வளர்ச்சிக் கோளாறுகளுக்கான சிகிச்சைகளுக்குப் பெரிதும் உதவும்.



## ரோன் ஒல்மி


- கோவா மாநிலத்தினைச் சேர்ந்த இரண்டு ஆராய்ச்சியாளர்கள், அந்தக் கடலோர மாநிலத்தில் பரவலாக அதன் சுவைக்காக உண்ணப்படும் ஒரு காட்டு காளான் இனத்திலிருந்து தங்க நுண் துகள்களை உருவாக்கியுள்ளனர்.
- கரையான் புற்றுகளில் வளரும் டெர்மிடோமைசஸ் (கரையானிக் காளான்) என்ற ஒரு இனத்தினைச் சேர்ந்த காளான்கள் அந்தப் பகுதியில் 'ரோன் ஒல்மி' என்று அழைக்கப் படுகிறது.

- இது கோவா மக்கள் மத்தியில் பிரபலமாக உள்ள உண்ணக்கூடிய காட்டு காளான் வகையாகும் என்பதோடு, இது மழைக்காலங்களில் உணவாக உட்கொள்ளப்படுகிறது.
- இந்த வகை காளான், தூய முப்பரிமாணத்திலான உருண்டை வடிவில் வளர்க்கப்பட்டு, நுண்ணிய தங்க துகள்களை உற்பத்தி செய்வதற்காக வெற்றிகரமாகப் பயன்படுத்தப் பட்டது.
- குறிப்பிட்ட பாதிப்பிற்கான மருந்து உள்ளீடு, மருத்துவ வரைபடமாக்கல் மற்றும் மின்னணு உபகரணங்கள் உற்பத்தி போன்ற பல்வேறு பயன்பாடுகளில் நுண்ணியத் தங்க துகள்களுக்கான தேவை மிகவும் அதிகமாக உள்ளது.
- 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், ஒரு மில்லி கிராம் நுண்ணிய தங்கத் துகள்களின் விலை சுமார் 80 டாலர் ஆகும் என்பதோடு, ஒரு கிராமிற்கு இதன் மதிப்பு சுமார் 80,000 டாலர்கள் ஆகும்.
- பிற நாடுகள் இவற்றின் உற்பத்திக்கு என்று மிகவும் நச்சுத்தன்மை கொண்ட ரசாயன காரணிகளைப் பயன்படுத்துகின்றன.




## POEM-3 கலம்

- PSLV சுற்றுப்பாதை ஆய்வுப் பெட்டகம்-3 (POEM-3) ஆனது பூமியின் வளிமண்டலத்தில் மீண்டும் நுழைந்ததன் மூலம் எந்தவொரு எஞ்சியப் பாகமும் (விண்வெளிக் குப்பை) இன்றி வெற்றிகரமான முடிவை அடைந்ததால் இஸ்ரோ மற்றொரு மைல்கல்லை எட்டி உள்ளது.
- PSLV-C58/XPoSat என்ற இந்தத் திட்டமானது விண்வெளிச் சுற்றுப்பாதையில் எந்தவொரு விண்வெளிக் குப்பைகளையும் உள்ளிடவில்லை.
- அனைத்துச் செயற்கைக் கோள்களையும் அவற்றிற்கு ஏற்றச் சுற்றுப்பாதையில் நிலை நிறுத்துவதற்கான அதன் முதன்மைப் பணியை நன்கு நிறைவு செய்த பிறகு, PSLV ஏவு கலத்தின் கடைசி நிலைப் பெட்டகமானது அதன் சுற்றுப்பாதையுடன் தொடர்புடைய நிலையான கோணத்தில் (3 சுழல் அச்சு) நிலைப்படுத்தப்பட்ட POEM-3 கலமாக மாற்றப் பட்டது.
- ஏவுகலத்தின் இந்த நிலையானது 650 கி.மீ. சுற்றுப்பாதையிலிருந்து அதன் ஆரம்பகட்ட மறு நுழைவினை எளிதாக்கும் 350 கி.மீ. சுற்றுப்பாதைக்கு நகர்த்தப்பட்டது என்பதோடு மேலும் எதிர்பாராத சில மோதல் அபாயங்களைக் குறைப்பதற்காக வேண்டி எஞ்சிய எரிபொருட்களை அகற்றுவதற்காகச் செயலிழக்கம் செய்யப்பட்டது.



## குறுங்கோள் 2005 EX296



- சர்வதேச வானியல் ஒன்றியம் (IAU) ஆனது ஒரு குறுங்கோள் ஒன்றிற்குப் பேராசிரியர் ஜெயந்த் மூர்த்தியின் பெயரைச் சூட்டியுள்ளது.
- 2005 EX296 (215884) என்ற குறுங்கோளிற்கு ஜெயந்த் மூர்த்தி எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த குறுங்கோள் ஆனது (215884), செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய கோள்களுக்கு இடையே உள்ள சுற்றுப்பாதையில் 3.3 ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றி வருகிறது.
- சர்வதேச வானியல் ஒன்றியத்தின் சிறிய அமைப்புகளின் பெயரிடல் மீதான பணிக் குழுவானது சூரிய குடும்பத்தில் உள்ள அனைத்துக் குறுங்கோள்கள், பல்வேறு வால் நட்சத்திரங்கள் மற்றும் இதர பிற சிறியப் பொருட்களுக்கு என்று அதிகாரப் பூர்வப் பெயர்களை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பக்ஸா புலிகள் வளங்காப்பகம் - உள் உறைவிடப் புலி





- ❖ பக்ஸா புலிகள் வளங்காப்பகத்தில் 40 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு ஒரு புலி தென்பட்டுள்ளது.
- ❖ எண்பதுகளின் முற்பகுதியில், இந்த காப்புக் காட்டில் அதிக எண்ணிக்கையிலான புலிகள் வசித்து வந்தன.
- ❖ 28 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பக்ஸா புலிகள் வளங்காப்பகத்தில் பொருத்தப்பட்ட ஒளிப்படக் கருவிகளில் புலி ஒன்று படம் பிடிக்கப்பட்டது.
- ❖ பக்ஸா புலிகள் வளங்காப்பகமானது வடக்கு வங்காளத்தின் அலிபுர்துவார் என்ற மாவட்டத்தில் 760 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

## மன்னார் வளைகுடாவில் உள்ள உயிருள்ள பவளப்பாறைகளின் பங்கு

- ❖ 'மன்னார் வளைகுடாவின் பவளப்பாறைகள்: நிலை மற்றும் மேலாண்மை முறைகளில் உள்ள பத்தாண்டு கால மாற்றங்கள்' என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையானது சென்னையில் சமீபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு பருவநிலை உச்சி மாநாடு 2.0 என்ற நிகழ்வில் வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ இந்தியாவின் முக்கிய பவளப்பாறைப் பகுதிகளில் ஒன்றான மன்னார் வளைகுடாவில் 2005 ஆம் ஆண்டில் 37% ஆக இருந்த உயிருள்ள பவளப்பாறைகளின் சராசரி பரவல் ஆனது 2021 ஆம் ஆண்டில் 27.3% ஆகக் குறைந்தது.
- ❖ உயிருள்ள பவளப்பாறைகளின் பங்கு 2009 ஆம் ஆண்டில் 42.9% என்ற வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்தது.
- ❖ இரண்டாவது (2010) மற்றும் மூன்றாவது (2016) உலகளாவிய பவளப்பாறை நிறமாற்ற நிகழ்வுகள் காரணமாக பெரும்பாலான பவளப்பாறைகள் அழிந்ததன் காரணமாக அவற்றின் எண்ணிக்கை குறைந்தது.

- கீழக்கரை மற்றும் தூத்துக்குடி பகுதிகளை விட மண்டபம் பகுதியில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது.
- 2005 ஆம் ஆண்டின் முதல்நிலைக் கணக்கெடுப்பில் 117 பவளப்பாறை இனங்கள் பதிவு செய்யப்பட்ட நிலையில், புதுப்பிக்கப்பட்ட பெயரிடல் ஆனது அந்த எண்ணிக்கையை 132 ஆக உயர்த்தியதுடன் 2021 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட அடுத்தடுத்த கணக்கெடுப்புகளில் மேலும் அதிக எண்ணிக்கையிலான பவளப் பாறைகள் பதிவு செய்யப் பட்டன.





## இடம் பெயர்ந்த உயிரினங்களின் வளங்காப்புத் தொடர்பான உடன்படிக்கை குறித்த COP14

- இடம் பெயர்ந்த வனவிலங்குகளின் வளங்காப்புத் தொடர்பான உடன்படிக்கையின் பங்குதாரர்கள் மாநாட்டின் 14வது கூட்டம் (CMS COP 14) ஆனது உஸ்பெகிஸ்தானின் சமர்கண்ட் நகரில் நடைபெற்றது.
- 14 புலம்பெயர்ந்த இனங்களைப் பட்டியலிடுவதற்கான முன்மொழிவுகள் மற்றும் உலகளாவிய வனவிலங்குகளுக்கான பல தீர்மானங்களை ஏற்றுக் கொள்ள இந்த உடன்படிக்கையின் பங்குதாரர் நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன.
- இந்தப் பட்டியலிடல் ஆனது, இந்த இனங்களுக்கான பாதுகாப்பு மற்றும் வளங்காப்பு முயற்சிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இடம் பெயர்ந்த உயிரினங்களுக்கு ஏற்படும் பல்வேறு அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதற்கும், ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும், வளங்காப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கும், அந்த இனங்கள் காணப்படும் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை இந்த முன்மொழிவுகள் வலியுறுத்தியுள்ளன.

- எண்ணிக்கைக் குறைவு மற்றும் பல்வேறு அச்சுறுத்தல்கள் காரணமாக IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் பல இனங்கள் 'எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனம்', 'அருகி வரும்' அல்லது 'மிக அருகி வரும் இனம்' என அங்கீகரிக்கப் பட்டுள்ளன.
- இடம் பெயர்ந்த உயிரினங்களின் வளங்காப்பு தொடர்பான உடன்படிக்கையானது பான் உடன்படிக்கை என்று பிரபலமாக அறியப்படுகிறது.
- 1979 ஆம் ஆண்டில் கையெழுத்தான இந்த உடன்படிக்கை 1983 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது.

## உலகின் இடம்பெயர்ந்த உயிரினங்களின் நிலை குறித்த அறிக்கை




- இடம் பெயர்ந்த உயிரினங்களின் வளங்காப்பு தொடர்பான உடன்படிக்கையில் (CMS) பட்டியலிடப்பட்ட இனங்களில் 44 சதவீத (520 இனங்கள்) இனங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகி வருகின்றன.
- ஐந்தில் ஒரு CMS இனங்கள் அழியும் அபாயத்தை எதிர்கொள்கின்றன.
- CMS உடன்படிக்கையின் கீழ் பட்டியலிடப்பட்ட 97 சதவீத இடம் பெயர்ந்த மீன் இனங்கள் அழிந்து போகும் அபாயத்தை எதிர்கொள்கின்றன.
- இந்த மீன் இனங்கள் சராசரியாக கடந்த 50 ஆண்டுகளில் ஒப்பீட்டளவில் அதிக சரிவைக் கண்டுள்ளன.
- அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் மொத்த மீன் வகைகளில் 28 இனங்கள் 'அருகி வரும் இனங்கள்' என வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- முதலாவது பிற்சேர்க்கையில் சேர்க்கப்பட்டுள்ள 82 சதவீதம் (பட்டியலிடப்பட்ட 180 இனங்களில் 142) இனங்கள் அழிந்து விடும் அபாயத்தினை எதிர்கொள்கின்றன.
- 76 சதவிகித (137 இனங்கள்) இனங்களில் எண்ணிக்கை சரிவு பதிவாகியுள்ளது.
- இரண்டாவது பிற்சேர்க்கையில் சேர்க்கப்பட்டுள்ள இனங்களில் 18 சதவிகிதம் அழியும் நிலையை எதிர்கொள்கின்றன மற்றும் சுமார் 42 சதவிகித (477 இனங்கள்) இனங்களில் எண்ணிக்கையில் சரிவுப் போக்குகள் பதிவாகியுள்ளன.

- 4,508 இனங்கள் இடம் பெயர்ந்ததாகக் கருதப்படுகின்றன.
- இவற்றில் 3,339 (74 சதவீதம்) இனங்கள் தற்போது CMS பிற்சேர்க்கையில் பட்டியலிடப் படவில்லை.
- CMS பட்டியலில் இடம் பெறாத 3,339 இனங்களில், 277 (எட்டு சதவீதம்) இனங்கள் 'உலகளவில் அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனமாகக்' கருதப்படுகின்றன.
- மேலும் 122 இனங்கள் (நான்கு சதவீதம்) 'அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனம்' ஆக வகைப்படுத்தப் பட்டுள்ளன.

## ஒற்றை இன வளங்காப்பு செயல் திட்டம் : CMS COP14

- CMS COP14 அழுங்காமை இனங்களைப் பாதுகாப்பதற்கான ஒற்றை இன வளங்காப்பு செயல் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இது ஆப்பிரிக்க-யூரேசிய இடம் பெயர்ந்த நீர்ப்பறவைகளின் (AEWA) வளங்காப்பு ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
- இடம் பெயர்ந்த நீர்ப்பறவை இனங்களை ஒரு சாதகமான வளங்காப்பு நிலையில் கொண்டு வருவதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை செயல்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அழுங்காமை இனமானது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் மிகவும் அருகி வரும் இனமாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.



## சிறுத்தைகளின் எண்ணிக்கை குறித்த அறிக்கை

- இந்தியாவில் 2018 ஆம் ஆண்டில் 12,852 ஆக இருந்த சிறுத்தைகளின் எண்ணிக்கையானது 13,874 ஆக உயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- மத்திய இந்தியா மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் அதிக எண்ணிக்கையில் சிறுத்தைகள் (8,820) காணப்படுகின்ற நிலையில், அதைத் தொடர்ந்து மேற்குத் தொடர்ச்சி மலைகள் (3,596) மற்றும் சிவாலிக் மலைகள் மற்றும் கங்கைச் சமவெளிகள் (1,109) ஆகியப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் சிறுத்தைகள் காணப்படுகின்றன.
- மாநிலம் வாரியாக பார்க்கையில், மத்தியப் பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையில் (3,907) சிறுத்தைகள் உள்ளன.

- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (1,985), கர்நாடகா (1,879) மற்றும் தமிழ்நாடு (1,070) ஆகிய மாநிலங்களில் உள்ளன.
- ஒடிசாவில் 2018 ஆம் ஆண்டில் 760 ஆக இருந்த சிறுத்தைகளின் எண்ணிக்கையானது 2022 ஆம் ஆண்டில் 562 ஆகவும், உத்தரகாண்டில் 2018 ஆம் ஆண்டில் 839 ஆக இருந்த எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 652 ஆகவும் குறைந்துள்ளது.
- கேரளா, தெலுங்கானா, சத்தீஸ்கர், பீகார் மற்றும் கோவா ஆகிய மாநிலங்களிலும் சிறுத்தைகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

## உலகின் மிகச்சிறிய தவளை



- பிரேசில் நாட்டின் காடுகளுள் ஒன்றில், ஒரு பட்டாணி அளவுள்ள தவளை காணப் படுவதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த ஒட்டுண்ணி போன்ற தேரையானது சராசரியாக 7.1 மில்லி மீட்டர் அளவு மட்டுமே உள்ள உலகின் மிகச் சிறிய முதுகெலும்பி இனமாக இருக்கலாம்.
- குட்டித் தவளையின் முதுகு பரப்பு ஆனது, வேறுபட்ட பழுப்பு நிறத்தில் நிலப்பரப்பின் நிறத்திற்கு ஒத்தவாறு சுற்றுப்புறங்களுடன் ஒன்றிவிடுகிறது.
- பிரேசிலிய ஒட்டுண்ணி வகை தேரை அல்லது பிராச்சிசெபாலஸ் புலெக்ஸ் முதன் முதலில் 2011 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது.
- இது சமீபத்தில் கண்டறியப்பட்ட இரண்டாவது சிறிய தவளையை விட சுமார் ஒரு மில்லி மீட்டர் சிறியது.

## பிரேசிலிய நாட்டின் ஹோல்லி மரம் மீண்டும் கண்டுபிடிப்பு

- இதுவரையில் எந்தவொரு உறுதிப்படுத்தப்பட்ட எந்தப் பதிவுமின்றி இருந்து சுமார் 200 ஆண்டுகளுக்குப் பிறகு வடகிழக்குப் பிரேசிலில் பெர்னாம்புகோ ஹோல்லி எனப்படும் அரிய வகை பிரேசிலிய மர இனம் சமீபத்தில் மீண்டும் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த பெர்னாம்புகோ ஹோலி மரம் (லெக்ஸ் சேப்பிஃபார்மிஸ்) ஆனது 12 மீட்டர் (சுமார் 40 அடி) உயரம் வரை வளரக் கூடியது.
- இந்த மரங்கள் அட்லாண்டிக் காடுகளின் பெரும்பாலான பகுதிகளில் காணப் படுகின்றன.
- ஆனால் தற்போது அதன் அசல் வன உயிரியல் பகுதியானது சுமார் 7 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது என்பதோடு அவை பெரும்பாலும் சிறு சிறு பகுதிகளாகவே உள்ளது.

- இதில் தொலைந்து போன இனங்களைத் தேடுதல் திட்டத்தின் மூலம் மீண்டும் கண்டு பிடிப்பதற்கு இலக்காக நிர்ணயிக்கப்பட்ட 25 "அதிகம் தேடப்படும்" தொலைந்து போன தாவர மற்றும் விலங்கு இனங்களில் ஹோல்லி மரமும் ஒன்றாகும்.
- இது, 2017 ஆம் ஆண்டில் இந்த முயற்சி தொடங்கப்பட்டதில் இருந்து "மீண்டும் கண்டு பிடிக்கப் பட்ட" ஒன்பதாவது இனமாகும்.



## வெள்ளப்பெருக்குச் சமவெளிகளில் உலோகச் சுரங்க மாசுபாடு

- உலகளவில் சுமார் 23 மில்லியன் மக்கள் உலோகச் சுரங்க நடவடிக்கைகளின் நச்சுக் கழிவுகளால் வெகுவாக மாசுபடுத்தப்பட்ட வெள்ளப் பெருக்குச் சமவெளி நிலங்களில் வாழ்கின்றனர் என்று சமீபத்திய ஆய்வுகள் மதிப்பிடுகின்றன.
- எஞ்சியக் கழிவுகளின் சேமிப்பு வசதிகள் உட்பட, செயல்படும் மற்றும் செயலற்ற உலோகச் சுரங்கத் தளங்களால் ஏற்படும் மாசுபாடுகளை உள்ளடக்கியது.
- இந்த மாசுபாடு சுமார் 479,200 கிலோமீட்டர் நதி வழித்தடங்களைப் பாதிக்கிறது.
- மேலும் உலகளவில் 164,000 சதுர கிலோமீட்டர் வெள்ளச் சமவெளிகளைப் பாதிக்கிறது.
- இந்தப் பகுதிகள் 5.72 மில்லியன் கால்நடைகளுக்கு உணவளிக்கின்றன.
- மேலும், 65,000 சதுர கிலோமீட்டருக்கும் அதிகமான பாசன நிலத்தை உள்ளடக்கியவை ஆகும்.



## பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பில் 1,036 இனங்கள் பதிவு




- ❖ நாடு முழுவதிலுமிருந்து கணக்கெடுப்பில் பங்கு பெற்ற பறவை ஆர்வலர்கள் 2024 ஆம் ஆண்டு பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பில் சுமார் 1036 பறவை இனங்களை ஆவணப் படுத்தியுள்ளனர்.
- ❖ பறவைகளின் மீதான பன்முகத் தன்மையை ஆவணப்படுத்துவதற்கான உலகளாவிய குடிமக்கள் அறிவியல் முன்னெடுப்பில் இந்தியா 1,000க்கும் மேற்பட்ட கணக்கெடுப்பு பட்டியலைச் சமர்ப்பித்துள்ளது.
- ❖ இது உலகிலேயே இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான சமர்ப்பித்தல் ஆகும்.
- ❖ இந்தியா இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான சரிபார்ப்புப் பட்டியலினை சமர்ப்பித்துள்ளது என்பதோடு இது இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்ற அனைத்து நாடுகளிலும் மூன்றாவது அதிகமான இனங்கள் கொண்ட பட்டியல் ஆகும்.
- ❖ அமெரிக்கா 172,025 இனங்களுடன் கூடிய சரிபார்ப்புப் பட்டியலைச் சமர்ப்பித்தது.
- ❖ அதைத் தொடர்ந்து இந்தியா இரண்டாவது இடத்திலும், 25,420 இனங்களுடன் கனடா மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- ❖ கொலம்பியா (1,363) மற்றும் ஈக்வடார் (1,130) அதிக இனங்களை சமர்ப்பித்துள்ளன.
- ❖ கேரளாவில் அதிக எண்ணிக்கையிலான இனங்களைப் பதிவு செய்துள்ளது (14,023) என்ற நிலையில் அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (13,661) மற்றும் மகாராஷ்டிரா (5,725) ஆகியவை உள்ளன.
- ❖ பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பானது ஒவ்வோர் ஆண்டும், வழக்கமாக பிப்ரவரி மாதத்தில் நான்கு நாட்களுக்கு நடைபெறும்.

## 6வது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் சபை


- ❖ 6வது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் சபையானது அல்லது UNEA-6 ஆனது, கென்யாவின் நைரோபி நகரில் நடைபெற்றது.
- ❖ UNEA-6, பருவநிலை மாற்றம், காற்று மாசுபாடு மற்றும் பாலைவனமாக்கல் உள்ளிட்ட புவியின் மிக நெருக்கடிமிக்க சுற்றுச்சூழல் சவால்களில் சிலவற்றை எதிர்கொள்ளும் நோக்கில் 15 தீர்மானங்களை ஏற்றுக் கொண்டது.
- ❖ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையில், ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து 193 உறுப்பினர் நாடுகளும் கூட்டாக இணைந்து புவி எதிர்கொள்ளும் முக்கியமான சுற்றுச் சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வாய்ப்பினைப் பெறுகின்றன.
- ❖ UNEA ஆனது 2012 ஆம் ஆண்டில் பிரேசிலில் நடைபெற்ற நிலையான மேம்பாட்டிற்கான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் (ரியோ+20) விளைவாக உருவாக்கப் பட்டது.

## மீண்டும் தென்பட்டுள்ள சாம்பல் திமிங்கலம்



- ❖ இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு அட்லாண்டிக் பெருங்கடலில் அழிந்து போனதாக அறிவிக்கப்பட்ட சாம்பல் திமிங்கலம் இனமானது நியூ இங்கிலாந்து பகுதிக்கு அப்பால் காணப்படுவதை அறிவியலாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.
- ❖ சாம்பல் திமிங்கலமானது 18 ஆம் நூற்றாண்டில் அட்லாண்டிக் பெருங்கடலில் அழிந்து போனதாக அறிவிக்கப்பட்டது.
- ❖ ஆனால் கடந்த 15 ஆண்டுகளில் அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் மத்தியத் தரைக் கடல் பகுதிகளில் இந்த விலங்கினங்கள் ஐந்து இடங்களில் தென்பட்டதாகப் பதிவுகள் உள்ளன.
- ❖ சமீபத்திய சில மதிப்பீடுகளின்படி, சுமார் 14,000 சாம்பல் திமிங்கலங்கள் இருப்பதாக நம்பப் படுகிற நிலையில் இது 2019 ஆம் ஆண்டில் 27,000 ஆக இருந்தது.

## வெப்பமயமாதலுக்கேற்ப நுண்பாசிகளின் தகவமைவு




- ❖ பெருங்கடலில் உணவுச் சங்கிலியின் அடித்தளமாக இருந்து வளிமண்டலத்தில் இருந்து கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சும் நுண்பாசிகள் (மைக்ரோஅல்காக்கள்) ஆனது புவி வெப்பமடைதலை எதிர்கொள்ள ஒரு தனித்துவமான உத்தியை சார்ந்திருப்பதாகத் தோன்றுகிறது.
- ❖ பருவநிலை மாற்றம் கடலில் ஊட்டச்சத்துக்கள் கிடைக்கும் அளவைக் குறைப்பதால், கடல் வாழ் நுண்ணுயிர்கள் அல்லது யூகாரியோடிக் (நிலையற்ற உட்கரு கொண்ட) செல் கொண்ட மிதவைத் தாவரங்கள் ரோடாப்சின் என்ற புரதத்தை எரித்து தனது ஊட்டத்தினைப் பெறுகின்றன.

- இது மங்கலான ஒளியில் கண் பார்வை தெளிவிற்குக் காரணமான மனித கண்ணில் உள்ள புரதத்துடன் தொடர்புடையதாகும்.
- இந்த ஒளி உணர் புரதம் ஆனது, வழக்கமான குளோரோபிலுக்குப் பதிலாக சூரிய ஒளியின் உதவியுடன் நுண்பாசிகள் செழித்து வாழ உதவுகிறது.
- அவை ஆற்றலையும் உணவையும் உருவாக்க ஒளியை உறிஞ்சுகின்ற குளோரோபில் அடிப்படையிலான ஒளிச்சேர்க்கையைப் போலவே கடலில் உள்ள அதிக ஒளியை உறிஞ்சுகிறது.

## IUCN பட்டியலில் ஆசிய சிங்கத்தின் நிலை

- 2008 ஆம் ஆண்டில் சர்வதேச இயற்கை வளங்காப்பு ஒன்றியத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் அருகி வரும் இனமாக வகைப்படுத்தப்பட்ட ஆசிய சிங்கங்கள், தற்போது எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனமாக மறுவகைப்படுத்தப் பட்டுள்ளன.
- ஆப்பிரிக்காவில், சிங்கங்களின் எண்ணிக்கை 33% வரை குறைவதற்கான வாய்ப்பு உள்ள நிலையில், இது இந்தியாவை விட 19 மடங்கு அதிகம் ஆகும்.
- ஆப்பிரிக்காவில் உள்ள சிங்கங்களின் எண்ணிக்கையானது, சிங்கங்களின் மூன்று தலைமுறைகளுக்குள் (கடந்த, நிகழ்கால மற்றும் எதிர்கால) மூன்றில் ஒரு பங்கு (33%) குறைவதற்கான 41% நிகழ்தகவு இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஆனால், இந்தியாவின் சௌராஷ்டிராவில் இந்த ஆபத்து வெறும் 2% ஆக மட்டுமே இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

## இந்தியாவின் தங்க நிற மந்திகளின் எண்ணிக்கை 2024





- சமீபத்தியக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 7,396 தங்க நிற மந்திகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- தங்க நிற மந்திகள் (டிராச்சிபிதேகஸ் கீயி), மனாஸ் உயிர்க்கோளக் காப்பகம் மற்றும் அசாமின் மேற்குப் பகுதியில் உள்ள அனைத்து சிறு சிறு காடுகளிலும் காணப்படுகின்றன.

- தங்க நிற மந்திகளின் எண்ணிக்கையானது வடக்கில் பரந்து விரிந்த பகுதியில் அதிகளவில் காணப்படுபவை மற்றும் தெற்கு சிறு சிறு பகுதிகளில் காணப்படுபவை என இரண்டு பெரிய துணை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- 2008-09 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முந்தைய கணக்கெடுப்பின் படி இந்தியாவில் 6,000 தங்க நிற மந்திகள் இருப்பதாகப் பதிவாகியிருந்தன.

## குனோ தேசிய பூங்காவில் உள்ள சிவிங்கிப் புலிகளின் எண்ணிக்கை

- இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ தேசிய பூங்காவில் உள்ள காமினி எனப்படும் தென்னாப்பிரிக்க சிவிங்கிப் புலி சமீபத்தில் ஐந்து குட்டிகளை ஈன்றதையடுத்து, இந்தியாவில் பிறந்த சிவிங்கிப் புலிகளின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது.
- குட்டிகள் உட்பட மொத்த சிவிங்கிப் புலிகளின் எண்ணிக்கை தற்போது 26 ஆக உள்ளது.
- இந்தியாவின் வளங்காப்புத் திட்டத்திற்கு இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.
- இந்தியாவில் தென்னாப்பிரிக்க சிவிங்கிப் புலிகளின் முதல் குட்டிகள் இதுவாகும்.
- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதியன்று எட்டு நமீபிய சிவிங்கிப் புலிகள் குனோ தேசிய பூங்காவிற்கு கொண்டு வரப்பட்டன.



## முட்டையிட்டு குட்டி ஈன்று பாலூட்டும் இருவாழ்வி இனங்கள்

- புழு போன்ற ஓர் இருவாழ்வி இனத்தின் ஒரு வகையானது கொழுப்பு நிறைந்த பால் போன்ற திரவத்தை அதன் குட்டிகளுக்கு ஊட்டுவது ஓர் ஒளிப்படக் கருவியில் படம் பிடிக்கப் பட்டுள்ளது.
- இந்த நீளமான, உருளை வடிவ உயிரினங்கள் ஆனது தனது குட்டிகளுக்கு இவ்வாறு உணவளிக்கின்ற, இதுவரை அறியப்பட்ட முதல் முட்டையிடும் இருவாழ்வி இனமாகும்.
- சிசிலியன் எனப்படும் இந்த உயிரினம், நிலத்தடியில் வாழ்கிறது.
- சிசிலியன்கள் என்பவை தவளைகள் மற்றும் சாலமண்டர்களின் (ஒரு வகைப் பல்லி) மரபு வழியைச் சேர்ந்தவையாகும்.
- நூற்றுக்கணக்கான மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, அவற்றின் முந்தைய இனங்கள் நிலத்தடியில் ஆழமானப் பகுதிகளில் புதையுண்டன.

## கருவுற்ற மெகாமவுத் சுறா

- ஓர் அரிய மற்றும் பிடிபடாத ஆழ்கடல் வாழ் இனமான ஒரு கருவுற்ற மெகாமவுத் சுறாவானது பிலிப்பைன்ஸ் நாட்டின் கடற்கரையில் கரை ஒதுங்கியது கண்டுபிடிக்கப் பட்டது.
- இது இதுவரை தென்பட்ட 60வது மெகாமவுத் சுறா இனம் ஆகும் என்பதோடு மேலும் கருவுற்ற ஒரு இனம் கண்டறியப்பட்டிருப்பது இது முதல் முறையாகும்.
- இந்த மர்ம உயிரினங்கள் குட்டிகளை ஈனும் என்பதை இது முதன்முறையாக உறுதிப் படுத்துகிறது.
- இந்த மெகாமவுத் சுறாக்கள், குறிப்பாக மெகாசாஸ்மா பெலாஜியோஸ் இனங்கள் ஆனது, உடலுக்குள்ளேயே முட்டைப் பொரித்துக் குஞ்சு பொரிக்கும் இனம் என்பதை இந்தப் புதிய கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்தியுள்ளன.
- இதன் பொருள், தாயின் உடலின் உள்ளேயே பொரிக்கப்படும் முட்டைகளில் இருந்து அவற்றின் குட்டிகள் உருவாகின்றன.
- மெகாமவுத் சுறாக்கள் என்பவை, பல ஆழ்கடல் வாழ் உயிரினங்களைப் போலவே, பெரும்பாலான நேரங்களில் 4,600 மீட்டர் (15,100 அடி) ஆழத்தில் வாழ்வதாக நம்பப் படுகிறது.



## பெருந்தடுப்புப் பவளத் திட்டுகளில் 4வது உலகளாவிய மாபெரும் பவளப் பாறை நிறமாற்ற நிகழ்வுகள்

- ஒரு மாபெரும் பவளப்பாறை நிறமாற்ற நிகழ்வு ஆனது, ஆஸ்திரேலியாவில் உள்ள பெருந் தடுப்புப் பவளத் திட்டினை (GBR) சூழ்ந்துள்ளது.
- இந்தப் பவளத் திட்டானது இத்தாலியை விட பெரிய பரப்பளவில் பரவியுள்ளது.
- பருவநிலை மாற்றம் என்பது பெருந்தடுப்புப் பவளத் திட்டு மற்றும் உலகின் பெருங் கடல்களில் உள்ள இதரப் பவளப்பாறை சூழல் அமைப்புகளுக்கு ஒரு மிகப்பெரிய அச்சுறுத்தலாகும்.
- பெருந்தடுப்புப் பவளத் திட்டானது 2,300 கி.மீ. வரை நீண்டுள்ளது மற்றும் சுமார் 3,000 தனித்தனி திட்டுகளால் ஆனது.
- கடந்த காலங்களில் பவளப்பாறை நிறமாற்ற நிகழ்வு ஆனது 1998 ஆம் ஆண்டில் தொடங்கி 2002, 2016, 2017, 2020, 2022 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற நிலையில், 2024 ஆம் ஆண்டில் சமீபத்திய பவளப்பாறை நிறமாற்ற நிகழ்வு பதிவானது.
- தற்போதைய பவளப்பாறை நிறமாற்ற நிகழ்வு ஆனது கடந்த எட்டு ஆண்டுகளில் பதிவான ஐந்தாவது நிறமாற்ற நிகழ்வைக் குறிக்கிறது.





## இயந்திரமயமாக்கப்பட்ட வெப்பமண்டலக் கடற்பாசிப் பண்ணை

- Sea6 எனர்ஜி நிறுவனமானது, உலகின் முதல் பெரிய அளவிலான இயந்திரமயமாக்கப் பட்ட வெப்பமண்டலக் கடற்பாசிப் பண்ணையை இந்தோனேசியாவின் லோம்போக் எனுமிடத்தில் தொடங்கியுள்ளது.
- இந்தப் பண்ணையானது லோம்போக் தீவில் உள்ள ஏகாஸ் பகுதியில் அமைந்துள்ளது.
- Sea6 எனர்ஜி என்பது பெங்களூரில் அமைந்துள்ள வெப்பமண்டலக் கடற்பாசி இனங்களை வளர்த்து செயல்முறைக்கு உட்படுத்துவதில் நிபுணத்துவம் பெற்ற ஒரு நிறுவனமாகும்.
- இந்நிறுவனம் ஆனது Sea Combine என்ற சாகுபடி செயல்முறையை உருவாக்கியுள்ளது.
- இதைப் பயன்படுத்தி, ஆழ்கடல் நீரில் வளரும் கடற்பாசிகளை நன்கு அறுவடை செய்து மீண்டும் நடவு செய்ய இயலும்.



## உலகளாவிய மீத்தேன் கண்காணிப்பு அறிக்கை 2024

- 2023 ஆம் ஆண்டில் எரிபொருள் பயன்பாட்டிலிருந்து வெளியான மீத்தேன் உமிழ்வு 120 மில்லியன் டன்கள் என்ற மிக உயர்ந்த அளவில் இருந்தது.
- வளிமண்டலத்தில் வெளியிடப்பட்ட 120 மெட்ரிக் டன் மீத்தேன்களில், 80 மெட்ரிக் டன்கள் ஆனது, அதிகளவில் மீத்தேன் உமிழ்வு பதிவான முதல் 10 நாடுகளில் இருந்து வெளியாகின.
- எண்ணெய் மற்றும் எரிவாயு சார்ந்த நடவடிக்கைகளில் இருந்து அதிக அளவில் மீத்தேன் வெளியேற்றும் நாடாக அமெரிக்கா முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து ரஷ்யாவும் உள்ளது.
- மீத்தேன் உமிழ்வு ஆனது, 2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் சுமார் 50 சதவிகிதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.
- உலகெங்கிலும் உள்ள முக்கியப் புதைபடிவ எரிபொருள் கசிவுகளால் 5 மெட்ரிக் டன்னுக்கு அதிகமான மீத்தேன் உமிழ்வுகள் பதிவானதாக கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- பெரும்பாலும் உயிரி எரிபொருள் பயன்பாட்டிலிருந்துப் பெறப்படும் பல்வேறு உயிர் ஆற்றல்களால் 10 மெட்ரிக் டன் மீத்தேன் உமிழ்வு பதிவாகியுள்ளது.




## 8 கண்கள் மற்றும் 8 கால்கள் கொண்ட தேள்

- ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று, இதுவரையில் அறியப்படாத ஒரு தேள் இனத்தைக் கண்டறிந்துள்ளது.
- இந்தப் புதிய இனம் ஆனது, யூஸ்கோபியோப்ஸ் என்ற துணை இனத்தைச் சேர்ந்தது ஆகும் என்ற நிலையில் தாய்லாந்தில் உள்ள தேசியப் பூங்காவின் பெயரால் இதற்கு யூஸ்கார்பியோப்ஸ் கிராச்சன் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- அவை இந்த துணை இனத்தின் மற்ற வகைகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறியவை ஆகும்.
- இந்தப் புதிய இனம் எட்டு கண்கள் மற்றும் எட்டு கால்களைக் கொண்டுள்ளன.




## பவளப்பாறைகளின் விரிவான அதிவேகத் தொடர்பு அமைப்பு

- செய்ஷெல்ஸ் முழுவதும் உள்ள தொலைதூரப் பவளப்பாறைகள் ஒரு மில்லியன் சதுர கிலோமீட்டருக்கும் அதிகமான பரப்பளவில் பரவியிருந்தாலும் நெருங்கிய தொடர்பு உடையவையாக உள்ளன.
- பெருங்கடல் நீரோட்டங்கள் இந்த தொலைதூரத் தீவுகளுக்கு இடையில் லார்வாக்களை பரவச் செய்து ஒரு வகையான "பவளப்பாறைகளின் விரிவான அதிவேகத் தொடர்பு அமைப்புகளை" உருவாக்குகின்றன.
- பவளப் பாறைகளை மீட்டெடுப்பதில் (புணரமைப்பதில்) லார்வாக்களின் இருப்பு ஒரு முக்கியக் காரணி என்பதால் இந்தக் கண்டுபிடிப்பு மிகவும் முக்கியமானது ஆகும்.



## உலகக் காற்றுத் தரக் குறியீடு 2023





- 2023 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் மற்றும் வங்காளதேசத்திற்கு அடுத்தபடியாக இந்தியா மூன்றாவது அதிக மாசுபட்ட நாடாக இருந்தது.
- இது 134 நாடுகளில் உள்ள 7,812 இடங்களில் உள்ள 30,000 க்கும் மேற்பட்ட காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையங்களின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்தக் குறியீடு வெளியிடப்பட்டுள்ளது.
- பாகிஸ்தானின் 73.7µg/m3 மற்றும் வங்காளதேசத்தின் 79.9µg/m3 என்ற காற்றுத் தர மதிப்புடன் ஒப்பிடும் போது இந்தியாவின் வருடாந்திர நுண்மத் துகள் மாசுபாடு (PM) 2.5 54.4µg/m3 ஆக இருந்தது.
- இந்தியாவின் வருடாந்திர சராசரி PM 2.5 மாசுபாடு, 2022 ஆம் ஆண்டில் 53.3µg/m3 ஆக இருந்ததையடுத்து, மிகவும் மாசுபட்ட 8வது நாடாக இருந்தது.
- புது டெல்லி (92.7µg/m3) உலகளவில் மிகவும் மாசுபட்ட தலைநகரமாக இருந்தது.
- இந்தியாவில் மிகவும் மாசுபட்ட நகரமாக பெகுசராய் (118.9µg/m3) இருந்தது. அதைத் தொடர்ந்து கௌகாத்தி (105.4µg/m3) இடம் பெற்றிருந்தது.
- டெல்லி ஒன்றியப் பிரதேசத்தில் PM 2.5 மாசுபாட்டின் சராசரி செறிவு 102.1µg/m3 ஆக உள்ள நிலையில் இது உலகின் மிகவும் மாசுபட்ட மூன்றாவது நகரமாக உள்ளது.

## உலக மின்னணுக் கழிவுகள் கண்காணிப்பு அறிக்கை 2024

- 2022 ஆம் ஆண்டில் உலகளவில் 62 பில்லியன் கிலோ மின்னணுக் கழிவுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- இதில் 31 பில்லியன் கிலோ உலோகங்கள், 17 பில்லியன் கிலோ நெகிழிகள் மற்றும் 14 பில்லியன் கிலோ மற்ற பொருட்கள் (கனிமங்கள், கண்ணாடி, கலவைப் பொருட்கள் போன்றவை) ஆகும்.
- இந்த எண்ணிக்கையானது 2030 ஆம் ஆண்டில் 82 பில்லியன் கிலோவாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2010 ஆம் ஆண்டில் உலகளவில் 34 பில்லியன் கிலோ மின்னணுக் கழிவுகள் உருவாக்கப் பட்டுள்ளது.

- இந்த 62 பில்லியனில், சுமார் 13.8 பில்லியன் கிலோவானது 'முறைப்படிச் சேகரிக்கப் பட்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் மறுசுழற்சி செய்யப் பட்டதாக ஆவணப் படுத்தப் பட்டுள்ளது.
- இந்த மறுசுழற்சி அளவானது 2010 ஆம் ஆண்டில் 8 பில்லியன் கிலோவாக இருந்தது.
- குறைவான மற்றும் மிகவும் குறைவான - நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் 18 பில்லியன் கிலோ கழிவுகள் பெரும்பாலும் முறைசாரா துறைகளால் கையாளப் படுகின்றது.
- ஒவ்வோர் ஆண்டும் 58,000 கிலோ பாதரசம் மற்றும் புரோமினேற்றம் செய்யப்பட்ட தீ தடுப்பான்களைக் கொண்ட சுமார் 45 மில்லியன் கிலோ நெகிழிகள் சுற்றுச்சூழலில் வெளியிடப்படுகின்றன.
- ஐரோப்பா (17.6 கிலோ), ஓசியானியா (16.1 கிலோ) மற்றும் அமெரிக்கா (14.1 கிலோ) ஆகியவை 2022 ஆம் ஆண்டில் தனிநபர் மின்னணுக் கழிவுகளை அதிக அளவில் உருவாக்கியுள்ளன.
- ஆசியாவில் உள்ள நாடுகள் உலகின் மின்னணுக் கழிவுகளில் மொத்தத்தில் கிட்டத் தட்டப் பாதியளவினை (30 பில்லியன் கிலோ) உற்பத்தி செய்கின்றன.





## 70 மில்லியன் ஆண்டுகள் பழமையான நத்தை

- ஃபெருசினா எனப்படுகின்ற அழிந்து போன நில வாழ் நத்தையின் புதிய இனத்தினை அறிவியலாளர்கள் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர்.
- இந்த மாதிரியானது சுமார் 72 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பிற்காலத்திய கிரெட்டேசியஸ் சகாப்தத்தின் மாஸ்ட்ரிக்டியன் காலத்தில் வாழ்ந்ததாக நம்பப் படுகிறது.
- புதிதாகக் கண்டறியப்பட்ட இனமான ஃபெருசினா பெட்டோஃபியானா, பேலியோஜீன் காலத்தில் இருந்த நில வாழ் நத்தைகளின் சிறிய வகையைச் சேர்ந்தது.
- இது தற்போது சைக்ளோபோராய்டியா என்ற ஒரு பெரு குடும்பத்தில் உள்ள அதன் குடும்பமான ஃபெருசினிடே குடும்பத்தில் ஒன்றாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

## அண்டார்டிக் ஓசோன் துளை மீள்வுப் போக்குகள்

- அண்டார்டிகாவின் மீதுள்ள ஓசோன் துளை ஆனது பெரிதாக வளர்ந்தது மட்டுமின்றி அதன் பெரும்பகுதியில் மெல்லியதாகவும் உள்ளது.
- 2000 ஆம் ஆண்டுகளில் இருந்து பரப்பளவிலும் தடிமனிலும் சில மீள்வுகள் இருந்து வந்தாலும், கடந்த நான்கு ஆண்டுகளில் அண்டார்டிக் ஓசோன் துளை பெரிய அளவில் உள்ளது.
- 19 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததோடு ஒப்பிடச் செய்கையில், ஓசோன் துளையின் மையத்தில் ஓசோன் மிகவும் குறைவாகவே உள்ளது என்ற நிலையில் இது மீண்டு வர அதிக காலம் ஆகலாம்.
- சராசரியாக 23.1 மில்லியன் சதுர கிலோமீட்டர்கள் அளவிலான (தோராயமாக வட அமெரிக்காவின் அளவிலான) இந்தத் துளை இந்த காலக் கட்டத்திலான 16வது பெரிய துளையாகும்.
- 2022 ஆம் ஆண்டின் நான்காண்டிற்கு ஒருமுறை நிகழும் ஓசோன் குறைப்புப் பொருட்கள் குறித்த மதிப்பீட்டின் மீதான மாண்ட்ரீல் நெறிமுறை, தடை செய்யப்பட்ட ஓசோன்-குறைப்பு பொருட்களில் சுமார் 99 சதவிகிதம் படிப்படியாக அகற்றப்பட்டதை உறுதிப்படுத்தியது.




## சாண்ட்ஜோர்டியா பக்கேசி

- 2002 ஆம் ஆண்டில், ஓர் ஆராய்ச்சிக் கப்பலில் பயணித்த அறிவியலாளர்கள் ஜப்பான் நாட்டிற்கு அருகிலமைந்த எரிமலை பள்ளத்திற்கு அருகில் மிகவும் ஒரு விசித்திரமான ஜெல்லி மீனைக் கண்டறிந்தனர்.
- 2020 ஆம் ஆண்டில் அறிவியலாளர்கள் மீண்டும் அதே உயிரினத்தைக் கண்டறிந்ததை அடுத்து, அது சான்ட்ஜோர்டியா பேஜ்சி என்ற புதிய இனம் என்பதை உறுதிப்படுத்தி உள்ளனர்.
- "சாண்ட்ஜோர்டியா" என்ற இதன் பெயர் ஆனது கேட்டலோனியாவின் புனித ஜார்ஜ் அவர்களின் பெயரைக் குறிக்கிறது.

- பிரகாசமான சிவப்பு நிறத்திலான, குறுக்கு (சிலுவை) வடிவ வயிறு இதன் மிகவும் தனித்துவமான அம்சம் ஆகும்.



## FARM திட்டம்

- வேளாண்மையில் வேதிப்பொருட்கள் பயன்பாட்டினைக் குறைத்தலுக்கு நிதியளித்தல் மற்றும் மேலாண்மைத் திட்டம் (FARM) என்பது வேளாண்மையில் வேதிப்பொருட்கள் பயன்பாட்டினால் ஏற்படும் மாசுபாட்டை எதிர்கொள்வதற்கான 379 மில்லியன் டாலர் மதிப்பிலான முன்னெடுப்பாகும்.
- இதற்கு உலக சுற்றுச்சூழல் நிதியம் மூலம் நிதியளிக்கப்படுகிறது என்பதோடு இந்தத் திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு தலைமை தாங்குகிறது.
- வங்கிகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள், விவசாயிகளுக்கு ஏற்ற வகையில் கொள்கை மற்றும் நிதி ஆதாரங்களை மறுசீரமைப்பதற்காக வேண்டி இது வணிக நடவடிக்கையினை விரிவுபடுத்துகிறது.
- இந்த வளங்கள், நச்சுத்தன்மை கொண்ட வேளாண் பயன்பாட்டு இரசாயனங்களுக்கு மாற்றாக குறைந்த மற்றும் இரசாயனமற்ற மாற்றுகளைப் பயன்படுத்தவும், சிறந்த நடைமுறைகளை நோக்கிய மாற்றத்தை மேற்கொள்ளவும் உதவும்.
- இந்த ஐந்தாண்டுத் திட்டமானது 51,000 டன் அளவிலான அபாயகரமான பூச்சிக் கொல்லிகள் மற்றும் 20,000 டன் அளவிலான நெகிழிக் கழிவுகள் உருவாவதைத் தடுக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இது 35,000 டன் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வினைத் தவிர்க்கும்.
- பண்ணைகள் மற்றும் விவசாயிகள் இரசாயனக் கூறுகள் குறைவாக உள்ள மற்றும் இரசாயனமற்ற மாற்றுகளுக்கு மாறுவதால், இது 3 மில்லியன் ஹெக்டேர் நிலத்தைப் பாதிப்பிலிருந்து பாதுகாக்கிறது.
- உலக சுற்றுச்சூழல் நிதியம் (GEF) என்பது பல்லுயிர் இழப்பு, பருவநிலை மாற்றம், மாசுபாடு மற்றும் நிலம் மற்றும் கடல் வளத்தின் மீதான தாக்கம் ஆகியவற்றினை எதிர்கொள்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பலதரப்பு நிதியாகும்.

## மூன்று நாடுகளின் COP தலைமைத்துவம்

- 28வது பங்குதார நாடுகளின் மாநாட்டின் (COP28) தலைவர் டாக்டர் சுல்தான் அல் ஜாபர், கோபன்ஹேகன் பருவநிலை அமைச்சகத்தில் உலகளாவிய பருவநிலை தலைவர்கள் மற்றும் அமைச்சர்களிடம் உரையாற்றினார்.
- உலகளாவியப் பருவநிலை முன்னெடுப்புகளை வலுப்படுத்தும் ஒரு நோக்கில் புதிய வரலாற்று முன்னெடுப்பினை அவர் அறிவித்தார்.
- COP28, COP29 மற்றும் COP30 ஆகியவற்றுக்கு இடையே ஒரு நிலையான அணுகுமுறை மற்றும் ஒரு தொடர்ச்சியை உறுதி செய்யும் நோக்கில் முன்வைக்கப்பட்ட மூன்று நாடுகளின் COP தலைமைத்துவம் என்ற கருத்தாக்கம் என்பது ஒரு துணிகரமிக்க முன்னெடுப்பு என்று அல் ஜாபர் விவரித்தார்.
- மூன்று நாடுகளின் COP தலைமைத்துவம் என்பது COP28 மாநாட்டினை அடுத்த இரண்டு COP தலைமைத்துவங்களான அஜர்பைஜான் மற்றும் பிரேசில் ஆகிய சில நாடுகளுடன் இணைப்பதற்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் ஒருமித்த கருத்திற்கான ஒரு முக்கியச் சாதனையாகும்.
- தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பல்வேறுப் பங்களிப்புகளின் அடுத்த முக்கியமான சுற்று என்பது உலக நாடுகளின் வெப்பமயமாதல் குறைப்பிற்கான ஒரு வழிகாட்டியாக விளங்கும் 1.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை வரம்பு என்ற இலக்கினை அடைவதற்கு ஏற்ப இருப்பதை உறுதி செய்ய இந்த ட்ரொய்கா (மூன்று நாடுகளின் தலைமைத்துவம்) உதவும்.



# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய அறிவுசார் சொத்துக் குறியீடு 2024

- அமெரிக்க வர்த்தகச் சபையானது அதன் 12வது சர்வதேச அறிவுசார் சொத்துக் குறியீட்டினை வெளியிட்டது.
- இந்தக் குறியீட்டில் மதிப்பிடப்பட்ட 55 நாடுகளில் 38.64 சதவீத மதிப்பெண்களுடன் இந்தியா 42வது இடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் முதலிடத்தில் அமெரிக்காவும், அதைத் தொடர்ந்து ஐக்கியப் பேரரசு மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளும் இடம் பெற்றுள்ளன.


Slow Progress

India's ranking and scores


| Year | Rank | Score (%) |
|---|---|---|
| 2019 | 36 | 36.04 |
| 2020 | 40 | 38.46 |
| 2021 | 40 | 38.40 |
| 2022 | 43 | 38.64 |
| 2023 | 42 | 38.64 |

Source: International IP Index report

## உலகக் கழிவு மேலாண்மை கண்ணோட்ட அறிக்கை 2024

- ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு மற்றும் சர்வதேச திடக்கழிவு சங்கம் (ISWA) ஆனது '2024 ஆம் ஆண்டு உலகக் கழிவு மேலாண்மை கண்ணோட்ட அறிக்கையினை' சமீபத்தில் வெளியிட்டது.
- நகர்ப்புற திடக்கழிவு ஆனது 2050 ஆம் ஆண்டிற்குள் 2.3 பில்லியன் டன்னில் இருந்து 3.8 பில்லியன் டன்னாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.
- உலகளாவிய தெற்கு மற்றும் உலகின் வளர்ந்து வரும் பகுதிகளில் 2.7 பில்லியனுக்கும் அதிகமான மக்களின் கழிவுகள் முறையாக மேலாண்மை செய்யப்படுவதில்லை.
- இந்த 2.7 பில்லியனில் இரண்டு பில்லியன் மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர் என்ற நிலையில், அதில் 700,000 பேர் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர்.
- உலகின் மொத்தக் கழிவுகளில் 27 சதவீதத்திற்குச் சமமான சுமார் 540 மில்லியன் டன் அளவு நகராட்சி திடக்கழிவுகள் சேகரிக்கப்படுவதில்லை.
- 2020 ஆம் ஆண்டில், கழிவு மேலாண்மைக்கான உலகளாவிய நேரடிச் செலவினம் 252 பில்லியன் டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2050 ஆம் ஆண்டில், இந்த உலகளாவிய வருடாந்திரச் செலவினம் சுமார் இரு மடங்காக 640.3 பில்லியன் டாலர்களாக இருக்கும்.


Figure 5: Municipal solid waste generation and how much of this waste was uncontrolled in 2020, with projections for 2050 unless urgent action is taken.




## சர்வதேச ஆயுத பரிமாற்றங்களின் போக்குகள் – 2023

- ❖ உலகின் மிகப்பெரிய ஆயுத இறக்குமதியாளர் நாடு என்ற இடத்தினை இந்தியா தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- ❖ 2019 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், உலகளாவிய மொத்த ஆயுத இறக்குமதியில் இந்தியாவின் பங்கு 9.8% ஆக இருந்தது.
- ❖ இந்தியாவின் ஆயுத இறக்குமதி 2014-18 மற்றும் 2019-23 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 4.7% அதிகரித்துள்ளது.
- ❖ இந்தியாவின் ஆயுத இறக்குமதியில் 36 சதவீதப் பங்குடன் ரஷ்யா, இந்தியாவின் முக்கிய ஆயுத வழங்கீட்டு நாடாக உள்ளது.
- ❖ 2019-23 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் ஆனது, 1960-64 ஆம் ஆண்டுகளில் இருந்து, ரஷ்ய ஆயுத விநியோகங்கள் இந்தியாவின் ஆயுத இறக்குமதியில் பாதிக்கும் குறைவானப் பங்கு பதிவான முதல் ஐந்தாண்டு கால இடைவெளியைக் குறிக்கிறது.
- ❖ பிரான்சு மற்றும் அமெரிக்கா ஆகியவை இந்தியாவிற்கு ஆயுதம் வழங்கும் முக்கிய நாடுகளாக உருவாகி வருகின்றன. இரண்டு நாடுகளும் சேர்த்து இந்தியாவின் ஆயுத இறக்குமதியில் 46% பங்கினை வகிக்கின்றன.
- ❖ ஆயுத இறக்குமதியில் முதல் இடத்தைக் கொண்டுள்ள இந்தியாவினைத் தொடர்ந்து சவூதி அரேபியா, கத்தார், உக்ரைன், பாகிஸ்தான், ஜப்பான், எகிப்து, ஆஸ்திரேலியா, தென் கொரியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.
- ❖ முன்னணி ஆயுத ஏற்றுமதி நாடுகளில், அமெரிக்கா 42% பங்குகளுடன் முன்னணியில் உள்ளது, அதைத் தொடர்ந்து பிரான்சு மற்றும் ரஷ்யா உள்ளன.
- ❖ அமெரிக்கா (42%), பிரான்சு (11%), ரஷ்யா (11%), சீனா (5.8%), ஜெர்மனி (5.6%), இத்தாலி (4.3%), ஐக்கியப் பேரரசு (3.7%), ஸ்பெயின் (2.7%), இஸ்ரேல் (2.4%), மற்றும் தென் கொரியா (2%) ஆகிய நாடுகள் ஆயுத ஏற்றுமதியில் முன்னணியில் உள்ளன.
- ❖ பாகிஸ்தான் நாட்டிற்கான முதன்மை ஆயுத வழங்கீட்டு நாடாக சீனா முக்கிய பங்கு வகிக்கிறது. சீனாவின் ஏற்றுமதியில் 61% பங்கு பாகிஸ்தானிற்கு வழங்கப்படுகிறது.

- இந்தியாவின் பாதுகாப்புத் துறைக்கான முதலீடுகள் 2001 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்டதில் இருந்து வெறும் 5,077 கோடி ரூபாய் மட்டுமே அந்நிய நேரடி முதலீடு பெறப்பட்டுள்ளது.





## ஜனநாயக அறிக்கை 2024




- V-Dem நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டு ஜனநாயக அறிக்கையின் படி, பல்வேறு கூறுகளுக்கான மதிப்பெண்களில் பதிவான வீழ்ச்சியுடன் இந்தியா இன்னும் தேர்தல் வழி எதேச்சதிகாரம் (சர்வாதிகாரம்) கொண்ட நாடாகவே உள்ளது.
- இந்தியா, 2023 ஆம் ஆண்டில் 10 முன்னணி சுய எதேச்சதிகாரம் கொண்ட நாடுகளின் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ளது.
- இந்திய நாடானது, மதிப்பாய்வு செய்யப்பட்ட 179 நாடுகளில் கீழ் நிலையில் உள்ள 40-50% நாடுகளுள் ஒன்றாக இருக்கும். தற்போது நைஜர் (சிறந்த) மற்றும் ஐவரி கோஸ்ட் (மோசமான) நாடுகளுக்கு இடையே அமைந்துள்ளது.
- 2.8 பில்லியன் மக்கள் அல்லது உலக மக்கள் தொகையில் 35% பேர் வசிக்கும் 42 நாடுகளில் எதேச்சதிகார மயமாக்கல் நடந்து வருகிறது.
- உலக மக்கள்தொகையில் 18% பேர் உள்ள இந்தியா, எதேச்சதிகார நாடுகளில் வசிக்கும் மக்கள்தொகையில் பாதியளவினைக் கொண்டுள்ளது.

- இந்த அறிக்கையானது, "தெற்கு மற்றும் மத்திய ஆசியா தற்போது உலகின் இரண்டாவது மிகவும் எதேச்சதிகாரம் மிக்க பிராந்தியமாக உள்ளதாக" குறிப்பிட்டுள்ளது.

## பெண்கள், வணிகம் மற்றும் சட்ட அறிக்கை 2024




- உலக வங்கி (WB) குழுமம் ஆனது, பெண்கள், வணிகம் மற்றும் சட்டம் 2024 என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது பெண்கள் உலகளாவிய பணியாளர் வளத்தில் நுழைவதில் எதிர்கொள்ளும் தடைகள் மற்றும் அதிக செழுமைக்கு - தங்களுக்கு, தங்களின் குடும்பங்கள் மற்றும் தன்னைச் சுற்றியுள்ள சமூகங்களுக்கு - அவர்கள் ஆற்றும் பங்கு குறித்த ஒரு விரிவான தகவலை வழங்குகிறது.
- ஆண்கள் பெறும் சட்டப் பாதுகாப்புகளில் பெண்கள் சராசரியாக 64% மட்டுமே பெறுகின்றனர் என்ற நிலையில் இது முந்தைய மதிப்பீட்டான 77 சதவீதத்தினை விட மிகக் குறைவாகும்.
- 98 நாடுகள் மட்டுமே சம வேலைக்கு பெண்களுக்கும் சம ஊதியம் வழங்குவதை கட்டாயப் படுத்தும் ஒரு சட்டத்தை இயற்றியுள்ளன.
- மேலும் 35 நாடுகள் மட்டுமே ஊதிய இடைவெளியை நிவர்த்தி செய்ய என்று ஊதிய-வெளிப்படைத் தன்மை நடவடிக்கைகள் அல்லது அமலாக்க வழிமுறைகளை ஏற்றுக் கொண்டுள்ளன.
- 2023 ஆம் ஆண்டில், அரசாங்கங்கள் மூன்று வகை - ஊதியம், பெற்றோரின் உரிமைகள் மற்றும் பணியிடப் பாதுகாப்புகள் - சட்டமுறை சம வாய்ப்புச் சீர்திருத்தங்களை மேற் கொள்வதில் உறுதியாக இருந்தன.
- குடும்ப வன்முறை, பாலியல் துன்புறுத்தல், குழந்தை திருமணம் மற்றும் பெண்கள் கொலை செய்யப்படுதல் ஆகியவற்றிற்கு எதிராக தேவையான பலவேறு சட்டப் பாதுகாப்புகளில் மூன்றில் ஒரு பங்குப் பாதுகாப்பினையே பெண்கள் பெறுகின்றனர்.
- 151 நாடுகளில், பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தலைத் தடை செய்யும் சட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும், வெறும் 39 நாடுகளில் மட்டும் தான் பொது இடங்களில் அத்தகையக் குற்றங்களைத் தடுக்கும் சட்டங்கள் உள்ளன.

- ஊதியத்தில், ஆண்களுக்கு வழங்கப்படும் ஒவ்வொரு 1 டாலருக்கும் பெண்கள் வெறும் 77 சென்ட் மட்டுமே ஊதியம் பெறுகின்றனர்.
- பெண்கள், ஆண்களை விட சராசரியாக ஒரு நாளைக்கு 2.4 மணிநேரத்தினை ஊதியம் இல்லாத வீட்டுப் பராமரிப்பு வேலையில் செலவிடுகிறார்கள் என்பதோடு அதில் மிகப் பெரும்பாலான நேரம் ஆனது குழந்தைகளின் பராமரிப்பிற்காக செலவிடப்படுகிறது.

## குழந்தைகள் உயிரிழப்பு மதிப்பீட்டிற்கான ஐநா சபையின் இடைமுகமை

**How many newborns, children, adolescents and youth died globally in 2022?**

| | Neonatal deaths | Under-five deaths | Adolescent deaths |
|---|---|---|---|
| Entire year | 2.3 million | 4.9 million | 0.9 million |
| Every month | 192,000 | 408,000 | 76,000 |
| Every day | 6,300 | 13,400 | 2,500 |

One neonatal death occurred every 14 seconds, one under-five death every 6 seconds and one adolescent death every 35 seconds.

1 in 27 children died before their fifth birthday

1 in 58 newborns died

1 in 50 children between the ages of 1 month and 59 months died


1 in 61 children, adolescents and youth aged 5 to 24 years died

1 in 142 adolescents died

1 in 19 children, adolescents and youth between ages 0 and 24 years died

- குழந்தைகள் உயிரிழப்பு மதிப்பீட்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் இடைமுகமை குழுவின் சமீபத்திய மதிப்பீடுகளின்படி, 2022 ஆம் ஆண்டில் உலகளாவிய குழந்தைகள் உயிரிழப்பு வரலாறு காணாத அளவிலான குறைந்த அளவை எட்டியுள்ளன.
- 2000 ஆம் ஆண்டில் 9.9 மில்லியனாக இருந்த உலகளாவிய ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்புகளின் எண்ணிக்கையானது 2022 ஆம் ஆண்டில் சுமார் 4.9 மில்லியனாக பாதிக்கு மேல் குறைந்துள்ளது.
- உலகளவில், பச்சிளம் குழந்தை உயிரிழப்புகள் அல்லது பிறந்த 28 நாட்களுக்குள் ஒரு குழந்தை இறப்பது, ஒவ்வொரு 14 வினாடிகளுக்கும் நிகழ்ந்தது.
- 2022 ஆம் ஆண்டில் ஒவ்வோர் ஆறு வினாடிக்கும் ஐந்து வயதிற்குட்பட்ட ஒரு குழந்தையும், 35 வினாடிகளுக்கு ஓர் இளம் பருவத்தினரும் இறந்தனர்.
- 1990 ஆம் ஆண்டின் மதிப்பீடுகளை விட, குழந்தை உயிரிழப்புகள் சுமார் 62 சதவிகிதம் குறைந்துள்ளதாக அறிக்கை குறிப்பிடுகிறது.
- 2000 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், உலகளவில் 221 மில்லியன் குழந்தைகள், இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.
- 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 162 மில்லியன் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் உயிரிழப்பு சுமார் 72 மில்லியன் ஆகும் என்ற நிலையில் பச்சிளம் குழந்தைகளின் உயிரிழப்பில் ஐந்து வயதிற்குட்பட்ட இறப்புகள் அதிக அளவில் உள்ளன.
- 2000 ஆம் ஆண்டில் சுமார் 41 சதவீதமாக இருந்த பச்சிளம் குழந்தை பருவத்தில் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு போக்கு 2022 ஆம் ஆண்டில் 47 சதவீதமாக அதிகரித்துள்ளது.

## INFAAR 2019-22 அறிக்கை




- FAO மற்றும் ICAR ஆகிய அமைப்புகள் இணைந்து, 2019-22 ஆம் ஆண்டிற்கான இந்திய மீன்வளம் மற்றும் விலங்கு நுண்ணுயிர் எதிர்ப்பிகள் வலையமைப்பின் (INFAAR) கண்காணிப்புத் தரவை வெளியிட்டுள்ளன.
- இந்தியாவில் வெளியிடப்படும் மீன்வளம் மற்றும் கால்நடைத் துறையில் நுண்ணுயிர் எதிர்ப்பு (AMR) பற்றிய கண்காணிப்புப் போக்குகள் குறித்த முதல் அறிக்கை இது ஆகும்.
- உணவிற்காகப் பயன்படுத்தப்படும் விலங்குகளின் உற்பத்தியில் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பயன்பாடு நுண்ணுயிர் எதிர்ப்புத் திறனுக்கு ஓர் இயக்கி ஆக அறியப் படுகிறது.
- இ. கோலை ஐசோலேட்டுகளில், செஃபோடாக்சிம் (46 சதவீதம்) மற்றும் ஆம்பிசிலின் (41 சதவீதம்) ஆகியவற்றிற்கு எதிராக குறிப்பிடத் தக்க எதிர்ப்புத் திறன் உள்ளது.
- S ஆரியஸ் மற்றும் CONS ஐசோலேட்டுகளில், பென்சிலினுக்கு எதிரான எதிர்ப்புத் திறன் சுமார் 75 சதவீதம் உள்ளது.
- கூடுதலாக, மொத்த S.ஆரியஸ் ஐசோலேட்டுகளில் (452) சுமார் 41 ஐசோலேட்டுகள் மெதிசிலின் எதிர்ப்பு கொண்ட S.ஆரியஸ் (MRSA) எனக் கண்டறியப்பட்டது என்ற நிலையில் இது ஸ்டேஃபைலோகாகஸின் ஒருவகை மருந்து-எதிர்ப்பு மாறுபாடு ஆகும்.
- மற்ற அனைத்து உணவுப் பயன்பாட்டு விலங்குகளுடன் ஒப்பிடுகையில், கோழி இறைச்சியில் இருந்து பெறப்பட்ட ஐசோலேட்டுகளான இ.கோலை மற்றும் ஸ்டேஃபை - லோகாகி ஆகிய இரண்டு நுண்ணுயிர்களுக்கு எதிராக சோதனை செய்யப் பட்ட அனைத்து நுண்ணுயிர் எதிர்ப்பிகளும் அதிக எதிர்ப்புத் திறன் விகிதங்களை நன்கு வெளிப்படுத்துகின்றன.

## உலக இணைப்பு அறிக்கை, 2024

| GDP | Rank | Country | Score | Change 2017 to 2022 Rank | Change 2017 to 2022 Score |
|---|---|---|---|---|---|
| 1. | 44 | United States | 57 | -10 | 0 |
| 2. | 80 | China | 50 | -10 | -1 |
| 3. | 50 | Japan | 55 | -1 | +1 |
| 4. | 13 | Germany | 64 | +1 | +2 |
| 5. | 62 | India | 52 | +1 | +1 |
| 6. | 9 | United Kingdom | 69 | -1 | +2 |
| 7. | 23 | France | 61 | -2 | +1 |
| 8. | 91 | Russian Federation | 49 | -31 | -3 |
| 9. | 29 | Canada | 59 | 0 | +1 |
| 10. | 36 | Italy | 58 | +3 | +2 |

- DHL மற்றும் நியூயார்க் பல்கலைக்கழகத்தின் ஸ்டெர்ன் வணிகக் கல்லூரி ஆகியவை "புதிய DHL உலக இணைப்பு அறிக்கை 2024" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளன.
- இந்த அறிக்கையானது வர்த்தகம், மூலதனம், தகவல் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் உலகம் முழுவதும் மக்கள் எவ்வாறு இடம் பெயர்கின்றனர் என்பதைக் கண்காணிப்பதோடு, 181 நாடுகள் மற்றும் பிரதேசங்களின் உலகமயமாக்கலை மதிப்பிடுகிறது.
- உலகமயமாக்கல் ஆனது 2022 ஆம் ஆண்டில் சாதனை அளவிலான உச்சத்தை எட்டிய நிலையில், 2023 ஆம் ஆண்டில் அதிக அளவிலேயே இருந்தது.
- சர்வதேச அளவில் வர்த்தகம் செய்யப்படும் உலகளாவிய உற்பத்தியின் பங்கு 2022 ஆம் ஆண்டில் ஒரு சாதனை உச்சத்தினை எட்டியது.
- இந்த அறிக்கையானது, அதிகளவில் உலகமயமாக்கப்பட்ட ஒரு நாடாக சிங்கப்பூர் நாட்டினை மதிப்பிட்டுள்ள நிலையில் அதைத் தொடர்ந்து நெதர்லாந்து இடம் பெற்று உள்ளது.
- அதன் படி, 143 நாடுகள் உலகளவில் அதிக அளவில் இணைப்பினைக் கொண்டுள்ள அதே சமயம் 38 நாடுகளில் மட்டுமே அவற்றின் இணைப்பு நிலைகள் குறைந்துள்ளன.
- ஐரோப்பா அதிகளவில் உலகளாவிய இணைப்பு கொண்ட பிராந்தியமாகும் என்ற நிலையில் அதைத் தொடர்ந்து வட அமெரிக்கா மற்றும் 'மத்தியக் கிழக்கு & வட ஆப்பிரிக்கா' ஆகியப் பிராந்தியங்கள் உள்ளன.

## மனித வள மேம்பாட்டுக் குறியீடு 2023-24

- 2023/24 ஆம் ஆண்டிற்கான மனித வள மேம்பாட்டுக் குறியீட்டு அறிக்கையானது, "இடையூறுகளைத் தகர்த்தல்: பிரிவினை மிகுந்த உலகில் பெரும் ஒத்துழைப்பினை மீளுருவாக்குதல்" என்ற தலைப்பில் சமீபத்தில் வெளியிடப்பட்டது.


- 2022 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டுக் குறியீட்டில் இந்தியாவின் மதிப்பு 0.644 ஆக அதிகரித்து, 193 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் 134 வது இடத்தைப் பிடித்துள்ளது.
- பணக்கார நாடுகள் அதிக அளவிலான மனித வள மேம்பாட்டு நிலையை அடைந்து உள்ள நிலையில், ஏழ்மை நிலையில் உள்ள பாதி நாடுகள் பெரும் முன்னேற்றத்தின் நெருக்கடிக்கு முந்தைய நிலைக்கு கீழே உள்ளன.
- 2022 ஆம் ஆண்டின் மனித மேம்பாட்டுக் குறியீட்டில் இந்தியா ஆயுட்காலம், கல்வி மற்றும் தனிநபர் மொத்தத் தேசிய வருமானம் என அனைத்துக் குறிகாட்டிகளிலும் முன்னேற்றங்களைக் கண்டது.
- ஆயுட்காலம் (வாழ்நாள் எதிர்பார்ப்பு) ஆனது சுமார் 67.2லிருந்து 67.7 ஆக உயர்ந்தது என்ற நிலையில் எதிர்பார்க்கப் பட்ட பள்ளிக் கல்வி ஆண்டுகள் சுமார் 12.6 என்ற எண்ணிக்கையினை எட்டியது.
- சராசரி பள்ளிக் கல்வி ஆண்டுகள் சுமார் 6.57 ஆகவும், தனிநபர் மொத்த தேசிய வருமானத்தின் தனிநபர் தொகை சுமார் 6,542 டாலரிலிருந்து 6,951 டாலராகவும் அதிகரித்துள்ளது.
- பாலினச் சமத்துவமின்மையை குறைப்பதில் இந்தியா முன்னேற்றம் கண்டுள்ளது.
- இந்தியாவின் உலகச் சமத்துவமின்மைக் குறியீட்டு மதிப்பு (0.437) என்ற உலகளாவிய மதிப்பை விடவும், தெற்காசியச் சராசரியை விடவும் சிறப்பாக உள்ளது.
- இந்தியா பாலினச் சமத்துவமின்மையைக் குறைப்பதில் முன்னேற்றத்தைக் கண்டு உள்ள நிலையில் 2022 ஆம் ஆண்டு உலகச் சமத்துவமின்மைக் குறியீட்டில் மதிப்பிடப் பட்ட 166 நாடுகளில் 108வது இடத்தில் உள்ளது.





## உலக மகிழ்ச்சி அறிக்கை 2024

- பின்லாந்து நாடானது தொடர்ந்து ஏழாவது ஆண்டாக உலகின் மகிழ்ச்சியான நாடாக மீண்டும் தனது முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- டென்மார்க், ஐஸ்லாந்து மற்றும் சுவீடன் ஆகியவை பின்லாந்திற்கு அடுத்தபடியாக உள்ள நிலையில் நார்டிக் நாடுகள் தொடர்ந்து முதலிடத்தைப் பிடித்துள்ளன.
- இதற்கிடையில், மதிப்பிடப்பட்ட 143 நாடுகளுள், பட்டியலில் கடைசி இடத்தில் உள்ள ஆப்கானிஸ்தான் தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இந்தியாவும் முந்தைய ஆண்டைப் போலவே 126வது இடத்தைப் பெற்றுள்ளது.

❖ சீனா 60, நேபாளம் 93, பாகிஸ்தான் (108), மியான்மர் (118), இலங்கை (128), மற்றும் வங்காள தேசம் (129) போன்ற அண்டை நாடுகள் இந்தியாவை விட முன்னணியில் உள்ளன.




## கட்டாயத் தொழிலாளர் இலாபம் பற்றிய ILO அறிக்கை





❖ சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் (ILO) ஆய்வின்படி, கட்டாய தொழிலாளர் முறை ஆண்டிற்கு சுமார் 36 பில்லியன் டாலர் மதிப்புள்ள சட்டவிரோதமான இலாபத்தினை ஈட்டுகிறது.

❖ 2014 ஆம் ஆண்டு முதல் இது போன்ற சட்டவிரோத இலாபங்கள் 37% அதிகரித்துள்ளது.

❖ 'இலாபம் மற்றும் வறுமை: கட்டாயத் தொழிலாளர் முறையின் பொருளாதாரம்' என்ற தலைப்பிலான அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது.

- ஒரு தசாப்தத்திற்கு முன்பு 8,269 டாலர் (பணவீக்க மதிப்பிற்கு ஏற்ப நிகர் செய்யப்பட்டது) இலாபம் ஈட்டிய கடத்தல்காரர்கள் மற்றும் குற்றவாளிகள் தற்போது 10,000 டாலர் வரை இலாபம் ஈட்டுகிறார்கள் என்றும் இந்த அறிக்கை மதிப்பிடுகிறது.
- கட்டாயத் தொழிலாளர் முறையின் மூலம் ஈட்டப்படும் மொத்த வருடாந்திர சட்ட விரோத இலாபம் ஆனது ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் (84 பில்லியன் டாலர்) அதிகமாக உள்ளது.
- அதைத் தொடர்ந்து ஆசியா மற்றும் பசிபிக் (62 பில்லியன் டாலர்), அமெரிக்கா (52 பில்லியன் டாலர்), ஆப்பிரிக்கா (20 பில்லியன் டாலர்), மற்றும் அரபு நாடுகள் (18 பில்லியன் டாலர்) ஆகியப் பகுதிகளில் அதிக இலாபங்கள் பதிவாகியுள்ளன.


## உலகப் பருவநிலை அறிக்கை 2023




- பசுமை இல்ல வாயு அளவுகள், மேற்பரப்பு வெப்பநிலை, கடல் வெப்பம் மற்றும் அமில மயமாக்கல் மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகியவை 2023 ஆம் ஆண்டில் ஒரு அதிகபட்ச அளவை எட்டியுள்ளன.
- உலக வானிலை அமைப்பின் (WMO) "உலகப் பருவநிலை 2023" என்ற தலைப்பிலான புதிய அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- 174 ஆண்டு காலக் கண்காணிப்புப் பதிவில் 2023 ஆம் ஆண்டுதான் மிக வெப்பமான ஆண்டு என்பதை இந்த அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.
- உலக நாடுகளில் பதிவான சராசரி மேற்பரப்பு அருகுநிலை வெப்பநிலையானது தொழில் துறைக்கு முந்தைய அடிப்படை வெப்பநிலை மதிப்பினை விட (1850-1900) 1.45 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டில் $CO_2$ செறிவு தொடர்ந்து உயர்ந்தது, அதே சமயம் உலகளாவியச் சராசரி கடல் மட்டம் அதிகபட்ச அளவை எட்டியது.

- ❖ கடந்த 10 ஆண்டுகளில் (2014-2023) பதிவான கடல் மட்ட உயர்வு விகிதம் ஆனது, முதல் பத்தாண்டு காலச் செயற்கைக்கோள் தரவுப் பதிவை (1993 - 2002) விட இரு மடங்காக அதிகரித்துள்ளது.
- ❖ 2022-2023 என்ற நீரியல் ஆண்டிற்கான (1950-2023) மதிப்பீட்டுக் குறிப்பிற்கான உலகளாவியப் பனிப்பாறைகளில் மிகப்பெரிய பனி இழப்புகள் பதிவாகியுள்ளன.

## உலக வர்த்தக மதிப்பாய்வு 2023 மற்றும் கண்ணோட்டம் 2024





- ❖ சர்வதேச வர்த்தகம் ஆனது, கடந்த ஆண்டு வீழ்ச்சியை மாற்றியமைத்து 2024 ஆம் ஆண்டில் மீண்டும் எழுச்சி பெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாட்டு (UNCTAD) அமைப்பானது இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ UNCTAD, உலக நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது 2024 ஆம் ஆண்டில் சுமார் 3 சதவீதமாக இருக்கும் என்று கணித்துள்ளது.
- ❖ 2023 ஆம் ஆண்டில், வளர்ச்சி பெற்று வரும் நாடுகளின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகியவை முறையே சராசரியாக 5 மற்றும் 7 சதவிகிதம் குறைந்துள்ளது.
- ❖ அதே வேளையில், வளர்ச்சியடைந்த நாடுகளின் வர்த்தகம் ஆனது இறக்குமதியில் சுமார் 4 சதவீதமும், ஏற்றுமதியில் 3 சதவீதமும் குறைந்துள்ளது.
- ❖ 2023 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் இந்தியாவின் சரக்கு இறக்குமதியானது 3 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்பதோடு ஏற்றுமதியானது 5 சதவிகிதம் அதிகரித்து உள்ளது.
- ❖ இருப்பினும், 2023 ஆம் ஆண்டில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகிய இரண்டும் குறைந்தன.

## UN உலக நீர் மேம்பாட்டு அறிக்கை 2024

- ❖ நன்னீர்ப் பயன்பாடு ஆனது ஆண்டிற்கு 1 சதவீதத்திற்கும் குறைவான விகிதத்திலேயே அதிகரித்து வருகிறது.
- ❖ நிலத்தடியில் இருந்து எடுக்கப்படும் நன்னீர் பயன்பாட்டில் வேளாண்மையானது மிக தோராயமாக 70% பங்கினைக் கொண்டுள்ளது.

- அதைத் தொடர்ந்து தொழில்துறை (≈20%) மற்றும் வீட்டு உபயோகம் (≈10%) சார்ந்த பயன்பாடுகள் தண்ணீர்த் தேவையை அதிகரிப்பதற்கான முக்கிய காரணிகள் ஆகும்.
- உலக மக்கள்தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் 'மிக அதிக' அளவிலான தண்ணீர் நெருக்கடியினை (பற்றாக்குறையினை) எதிர்கொள்கின்றனர்.
- அதிக வருமானம் உள்ள நாடுகளில், வேளாண்மையில் வீணடிக்கப்படும் நீர் மிகவும் தீவிரமான பிரச்சனையாக உள்ளது.
- கவலை கொள்ள வைக்கும் வகையில் வளர்ந்து வரும் மாசுபாடுகளில், பெர்- மற்றும் பாலி-ஃபுளோரோஅல்கைல் கூறுகள் (PFAS), மருந்துகள், ஹார்மோன்கள், தொழில் துறை இரசாயனங்கள், சலவைப் பொருட்கள், சயனோடாக்சின்கள் மற்றும் நுண் பொருட்கள் ஆகியவை அடங்கும்.
- சரியான முறையில் சுத்திகரிக்கப்படாத வீட்டுக் கழிவு நீர், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளர்ப்பு ஆகியவற்றிலிருந்து உருவாகும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் மிக அதிகச் செறிவுகள் ஆனது அனைத்துப் பகுதிகளிலும் கண்டறியப்பட்டுள்ளன.


**Figure P.1**
Water withdrawal by sector (% of total freshwater withdrawal) by income group, 2020




## ஆரோக்கியம் மற்றும் சுகாதார நலனில் சம பங்கு உழைப்பு அறிக்கை

- உலக சுகாதார அமைப்பானது 'ஆரோக்கியம் மற்றும் சுகாதார நலனில் சமபங்கு உழைப்பு : பாலினம் மற்றும் ஆரோக்கியம் மற்றும் சுகாதார நலனில் சமபங்கு உழைப்புகளின் மதிப்புக் குறைப்பு' என்ற தலைப்பிலான அறிக்கையினை சமீபத்தில் வெளியிட்டது.
- உலக சுகாதாரம் மற்றும் சமூகப் நலப் பணியாளர்களில் 67 சதவீதம் பேர் பெண்கள் ஆவர்.
- 76% பெண்கள் ஊதியம் கிடைக்கப் பெறும் வேலைகளோடுச் சேர்த்து, ஊதியம் கிடைக்கப் பெறாத பல்வேறு இதர பராமரிப்பு நடவடிக்கைகளிலும் பணி செய்வதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

- உலகளவில் சராசரியாக, ஆண்களின் வருவாயில் 30-40 சதவீதமானது குடும்ப நலனுக்காக ஒதுக்கப் படுவதுடன் ஒப்பிடுகையில், பெண்களின் வருவாயில் 90 சதவீதமானது அவர்களது குடும்ப நலனுக்காகவே ஒதுக்கப்படுகிறது.
- இந்தியாவில், பெண்கள் தங்களின் மொத்த தினசரி வேலை நேரத்தில் சுமார் 73 சதவீத நேரத்தினை ஊதியம் கிடைக்கப் பெறாத வேலைகளில் செலவிடுகிறார்கள்.
- ஆனால் ஆண்கள் தங்கள் தினசரி வேலை நேரத்தில் சுமார் 11 சதவீதத்தை மட்டுமே ஊதியம் கிடைக்கப் பெறாத வேலையில் செலவழித்தனர்.




## ஹூருன் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை

- ஷாங்காய் நகரில் உள்ள ஹூருன் ஆராய்ச்சி நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கையின் படி, மும்பை நகரானது ஆசியாவின் செல்வந்தர்களின் தலைநகரான பெய்ஜிங்கை பின்னுக்குத் தள்ளியது.
- மும்பை மாநகரானது சுமார் 92 செல்வந்தர்களுடன், நியூயார்க் (119) மற்றும் இலண்டன் (97) ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக ஆசியாவின் மூன்றாவது செல்வந்தர்களின் தலைநகர் என்ற நிலையைப் பெற்றுள்ளது.
- இந்தியாவின் பொருளாதாரம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 7.5% வளர்ச்சி அடைந்தது.
- இதன் மூலம் 94 செல்வந்தர்கள் சேர்க்கப்பட்டதுடன், 2013 ஆம் ஆண்டு முதல் அதிக செல்வந்தர்கள் கொண்ட நகராக மாறியுள்ளது.
- 814 செல்வந்தர்களுடன் சீனா இந்த அறிக்கையில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- ஆனால் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 155 செல்வந்தர்களுடன், சீனா அதி உயர் பணக்காரர்களின் எண்ணிக்கையில் சரிவைச் சந்தித்துள்ளது.
- இந்தப் பட்டியலில் 73 நாடுகளைச் சேர்ந்த 3,279 செல்வந்தர்கள் இடம் பெற்றதோடு, உலகளாவிய செல்வப் பரவலை இது எடுத்துக் காட்டுகிறது.

**Hurun Rich List 2024**
**Global Top 10**

| Rank | Name | Wealth ($bn) | Change YOY | Main Company | Age | Country of Residence |
|---|---|---|---|---|---|---|
| 1 | Elon Musk | 231 | 47% | Tesla | 52 | USA |
| 2 | Jeff Bezos | 185 | 57% | Amazon | 60 | USA |
| 3 | Bernard Arnault | 175 | -13% | LVMH | 74 | France |
| 4 | Mark Zuckerberg | 158 | 132% | Meta | 39 | USA |
| 5 | Larry Ellison | 144 | 44% | Oracle | 79 | USA |
| 6 | Warren Buffett | 144 | 24% | Berkshire Hathaway | 93 | USA |
| 7 | Steve Ballmer | 143 | 41% | Microsoft | 67 | USA |
| 8 | Bill Gates | 138 | 26% | Microsoft | 68 | USA |
| 9 | Larry Page | 123 | 64% | Alphabet | 50 | USA |
| 10 | Mukesh Ambani | 115 | 40% | Reliance Industries | 66 | India |

]

# மாநிலச் செய்திகள்

## மொத்த வாகன விற்பனையில் முன்னணியில் உள்ள மாநிலம்

- 2023 ஆம் ஆண்டின் அக்டோபர்-டிசம்பர் மாதக் காலாண்டில் உத்தரப் பிரதேசத்தில் அதிகபட்சமாக 23,859 அலகுகள் முச்சக்கர வாகனங்கள் விற்பனையானது.
- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (20,495), குஜராத் (19,743) மற்றும் பீகார் (14,955) ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.
- அதே போல், இரு சக்கர வாகனப் பிரிவில், மொத்தம் 6,73,962 அலகுகள் அளவிற்கு விற்பனையானதுடன் அதில் உத்தரப் பிரதேசம் மாநிலத்தில் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (5,15,612), மத்தியப் பிரதேசம் (3,35,478) மற்றும் தமிழ்நாடு (3,24,918) ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.
- இருப்பினும், பயணியர் வாகன விற்பனையில், 1,21,030 அலகுகள் விற்பனையானதை அடுத்து மகாராஷ்டிராவில் அதிகபட்ச வாகன விற்பனை பதிவாகியுள்ளது.
- அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (1,01,568), குஜராத் (85,599) மற்றும் கர்நாடகா (71,549) ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.

- வர்த்தகப் பயன்பாட்டு வாகனப் பிரிவிலும், 31,055 அலகுகளுடன் மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (23,083), குஜராத் (20,391) மற்றும் கர்நாடகா (16,966) ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.

**RETAIL SALES: MIXED SIGNALS**

| Category | Nov 2022 | Nov 2023 | % change |
|---|---|---|---|
| 2W | 1,856,108 | 2,247,366 | 21.08 |
| 3W | 81,007 | 99,890 | 23.31 |
| PV | 307,550 | 360,431 | 17.19 |
| Tractor | 78,720 | 61,969 | -21.28 |
| CV | 86,150 | 84,586 | -1.82 |
| Total | 2,409,535 | 2,854,242 | 18.46 |

2W:Two-wheeler; 3W: Three-wheeler; PV: Passenger vehicle; Tractor;
CV: Commercial vehicle

## ஆற்றுக்கால் பொங்கல் திருவிழா

- திருவனந்தபுரத்தில் உள்ள ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோயிலில் பெண் பக்தர்கள் 'பண்டார அடுப்பு' களுடன் கூடியுள்ளனர்.
- ஆற்றுக்கால் பொங்கல் திருவிழா ஆனது, உலகிலேயே பெண்கள் அதிக எண்ணிக்கையில் கூடும் விழாக்களில் ஒன்றாகும்.
- இது ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் பத்து நாட்கள் அளவிலான திருவிழாவின் ஒன்பதாம் நாளில் நடைபெறுகிறது.
- பெண்கள் மட்டுமே இந்தச் சடங்குகளை மேற்கொள்வதால் ஆற்றுக்கால் கோயில் "பெண்களின் சபரிமலை" என்று அழைக்கப்படுகிறது.
- 2009 ஆம் ஆண்டில், ஒரே நாளில் 2.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டதையடுத்து, இந்த சடங்கு மிகப்பெரிய மதம் சார்ந்த பெண்கள் கூட்டமாக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றது.


## பொது மற்றும் தனியார் சொத்து சேத மீட்பு மசோதா

- அரசு மற்றும் தனியார் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப் படும் பெரும் சேதங்களுக்கு வன்முறையாளர்கள் பொறுப்பேற்கச் செய்யும் ஒரு மசோதாவை உத்தரகாண்ட் அரசு தாக்கல் செய்ய உள்ளது.
- இதற்கு உத்தரகாண்ட் மாநிலப் பொது மற்றும் தனியார் சொத்து சேத மீட்பு மசோதா என்று பெயரிடப் பட்டுள்ளது.
- கலவரம் மற்றும் பிற இடையூறுகளை ஏற்படுத்திய நபர்கள் இந்த மசோதாவின் கீழ் அதற்கான இழப்பீடுகளை வழங்க வேண்டும்.
- உத்தரப் பிரதேச மாநில அரசு ஆனது 2020 ஆம் ஆண்டில் இதே போன்ற மசோதாவை நிறைவேற்றியது.

- இதைத் தொடர்ந்து ஹரியானா மாநில அரசும் அத்தகைய சட்டத்தை இயற்றியுள்ள நிலையில் அத்தகையச் சட்டத்தை இயற்றிய மூன்றாவது மாநிலமாக உத்தரகாண்ட் விளங்கும்.




## கியாசனூர் வன நோய்




- பொதுவாக குரங்குக் காய்ச்சல் என்று அழைக்கப்படும் கியாசனூர் வன நோய் (KFD) பாதிப்புடன் கர்நாடகா மாநிலம் போராடி வருகிறது.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல், மாநிலத்தில் 49 குரங்கு காய்ச்சல் பாதிப்புகள் பதிவாகியுள்ளன.
- ஃபிளவிவிரிடே வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த கியாசனூர் வன நோய் வைரஸால் (KFDV) குரங்குக் காய்ச்சல் ஏற்படுகிறது.

- இந்த வைரஸ் முதன்முதலில் 1957 ஆம் ஆண்டில் கர்நாடகாவின் கியாசனூர் வனப் பகுதியில் ஒரு நோய்வாய்ப்பட்டக் குரங்கிலிருந்து கண்டறியப்பட்டது.
- முதன்மையாக ஒட்டு உண்ணி கடித்தல் அல்லது பாதிக்கப்பட்ட விலங்கு, குறிப்பாக நோய் வாய்ப்பட்ட அல்லது சமீபத்தில் இந்தப் பாதிப்பினால் உயிரிழந்த குரங்குடன் தொடர்பு கொள்வதன் மூலம் மனிதர்களுக்கு இந்தப் பாதிப்பு ஏற்படுகிறது.
- ஒரு மனிதரிடம் இருந்து மற்றொருவருக்குப் பரவியதற்கான எந்தவொருப் பதிவும் தற்போது வரையில் இல்லை.

## புதிய புவிசார் குறியீடுகள்




- ஒடிசாவின் புகழ்பெற்ற கட்டாக் ரூபா தாரகாசிக்கு (வெள்ளிக் கசவுப் பூவேலைப் பாடுகள்) புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- கசவுப் பூவேலைப்பாடுகள் ஆனது பாரம்பரியமாக சிறந்த கைவினைத் திறன் மற்றும் பாரம்பரிய நகைகளில் செழிப்பு மிக்க வடிவமைப்புகளைக் கொண்டது.
- தொல்லியல் சான்றுகள் ஆனது, மெசபடோமியாவில் கி.மு. 3500 ஆம் ஆண்டில் இந்த வேலைப்பாடுகள் நகைகளில் பயன்படுத்தப் பட்டதாகக் கூறுகின்றன.
- வங்காளத்தின் பிரபலமான பாரம்பரியக் கைத்தறி துணியான பங்களார் மஸ்லின், ஆந்திரப் பிரதேசத்தின் நர்சாபூர் கொக்கிப்பின்னல் வேலைப்பாடுகள் கொண்ட சரிகைத் தயாரிப்புகள் மற்றும் குஜராத்தின் கட்ச் ரோகன் கைவினைப் பொருள்கள் ஆகியவற்றிற்கும் புவிசார் வழங்கப்பட்டுள்ளது.
- பங்களார் (வங்காள) மஸ்லின் ரகத் துணியானது, வங்காளத்தின் பிரபலமான பாரம்பரியக் கைத்தறி கைவினைப் பொருட்களில் ஒன்றாகும்.
- இந்த சிறந்த வகை மஸ்லின் என்பது பருத்தியால் ஆனது.
- ஆந்திரப் பிரதேசத்தின் மேற்கு கோதாவரிப் பகுதியில் உள்ள கொக்கிப் பின்னல் வேலைப் பாடுகள் கொண்ட சரிகைத் தயாரிப்புகளுக்குப் பெயர் பெற்ற நர்சாபூர், அதன் நுணுக்கமான கைவினைத் திறனுக்காக உலகளவில் புகழ் பெற்றுள்ளது.
- மத்தியப் பிரதேசத்தின் ரத்லம் மாவட்டத்தில் உள்ள ரியாவான் கிராமத்தின் பெயரால் பெயரிடப்பட்ட ரத்லம் ரியாவான் லஹ்சுன் (பூண்டு) வகை மற்றும் குஜராத்தின் அம்பாஜி சலவைக் கல் (பளிங்கு) ஆகியவையும் புவிசார் குறியீட்டினைப் பெற்று உள்ளன.

- கடுமையான அழுத்தம் மற்றும் வெப்பம் காரணமாக பூமியின் கண்ட மேலோட்டின் கீழ் உள்ள சுண்ணாம்புக் கல் மீண்டும் படிகமாக்கப் படும் போது இந்தப் பளிங்குக் கல் உருவாகிறது.
- திரிபுரா ரிசா ஜவுளி வகைகள், ஹைதராபாத் லாக் (அரக்கு) வளையல்கள், அசாமின் மஜூலி முகமூடி மற்றும் அசாம் மஜூலி கையெழுத்துப் பிரதி ஓவியம் ஆகியவை புவிசார் குறியீட்டினைப் பெற்ற மற்றத் தயாரிப்புகள் ஆகும்.

## ஷாபூர் கண்டி அணை திட்டம்

- ஜம்மு காஷ்மீர் எல்லையை ஒட்டியவாறு பஞ்சாபில் வழியே பாயும் ராவி நதியின் மீது கட்டமைக்கப்படும் ஷாபுர்கண்டி அணையின் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப் பட்டுள்ளது.
- 55.5 மீட்டர் உயரமுள்ள இந்த அணை ஷாபுர்கண்டி பல்நோக்கு நதிப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இது 206 மெகாவாட் நிறுவப்பட்ட திறன் கொண்ட இரண்டு நீர்மின் நிலையங்களையும் கொண்டுள்ளது.
- பஞ்சாப் மாநில அரசினால் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம், ராவி நதியின் அதிகப் படியான நீரைக் குறைக்க உதவும்.
- சிந்து நதி கட்டமைப்பின் மூன்று கிழக்கு ஆறுகளில் ராவியும் ஒன்று ஆகும் என்பதோடு, அதன் நீர் ஆனது சிந்து நீர் ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவின் பங்கினைச் சாரும்.
- ஷாபுர்கண்டி அணை, ராவி நதியின் மீது ரஞ்சித் சாகர் அணையின் தாழ்மட்டத்தில் 11 கி.மீ. தொலைவிலும், மாதோபூர் அணைக்கு மேல்மட்டத்தில் 8 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.
- ராவி நதி நீரை இந்தியா சிறப்பாகப் பயன்படுத்த இது உதவும்.




## மாநில ஆற்றல் திறன் குறியீடு 2023

- மாநில ஆற்றல் திறன் குறியீடு (SEEI) என்பது பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் வருடாந்திர ஆற்றல் திறன் செயல்திறனை மதிப்பிடுவதற்கும் ஒப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு மதிப்பீட்டுக் கருவியாகும்.

- இந்த மதிப்பீட்டில் மிகவும் முன்னேற்றம் கண்டுள்ள மாநிலங்கள் மகாராஷ்டிரா மற்றும் ஹரியானா ஆகும்
- ஆற்றல் திறன் கொள்கைகளை செயல்படுத்துவதில் கர்நாடகா முதலிடம் வகிக்கிறது என்ற நிலையில் ஆந்திரப் பிரதேசம் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது
- சண்டிகர் நிர்வாகம் ஆனது குரூப் 4 பிரிவில் மதிப்புமிக்க முதல் பரிசைப் பெற்றுள்ளது.
- அதிக ஆற்றல் சார் உணர்வுள்ள எதிர்காலத்திற்கான சுற்றுச் சூழலுக்கு நன்கு உகந்த பல்வேறு நடைமுறைகளுக்கான வலுவான உறுதிப்பாடுகளுக்காக வேண்டி சண்டிகர் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்தப் பரிசினை வென்றுள்ளது.




## சாப்சார் குட் திருவிழா

- சாப்சார் குட் என்பது மிசோரம் மாநிலத்தின் பொன் அறுவடை (ஜூம் சாகுபடி) என்ற திருவிழாவினை முன்னிட்டு நடத்தப்படும் ஒரு கொண்டாட்டமாகும்.
- சமீபக் காலங்களில், ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை அன்று இந்தத் திருவிழா கொண்டாடப்படுகிறது.
- சாப்சார் குட் திருவிழாவின் ஒரு மிகச்சிறந்த சிறப்பம்சம் ஆனது, செராவ் எனப்படும் பிரபலமான மூங்கில் நடனம் ஆகும்.

## ஹைதராபாத்தின் அரக்கு வளையல்கள்

- ஹைதராபாத்தின் அரக்கு அல்லது லாக் வளையல்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- லாட் சந்தையின் வளையல்கள் பிரமிப்பூட்டும் கல் வேலைப்பாடுகளுக்கு மிகப் பெயர் பெற்றவையாகும்.

- அரக்கு வளையல்கள் என்பவை மரப்பிசின் (பசை) கொண்டு தயாரிக்கப் படுகின்றன என்பதோடு, இது வெப்பத்தினால் உருகக் கூடியது மற்றும் நிறத்தை உறிஞ்சும் சிறப்பு திறன் கொண்டது ஆகும்.
- அரக்கு வளையல்கள் புவிசார் குறியீடு பெற்ற தெலுங்கானாவின் 17வது தயாரிப்பு ஆகும்.



## மறுமண ஊக்குவிப்புத் திட்டம் - ஜார்க்கண்ட்

- இந்தியாவிலேயே முதன்முறையாக ஜார்க்கண்ட் மாநில அரசானது, 'வித்வா புனர் விவாஹ் ப்ரோட்சஹன் யோஜனா' (விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம்) என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இதன் கீழ், தனது கணவர் இறந்த பிறகு மீண்டும் திருமணம் செய்து கொள்ள விரும்பும் பெண்களுக்கு, அரசு சார்பில் 2 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற, ஒரு பயனாளி திருமண வயதுடையவராக இருக்க வேண்டும் மற்றும் அரசு ஊழியர், ஓய்வூதியம் பெறுபவர் அல்லது வருமான வரி எதுவும் செலுத்துபவராக இருக்கக் கூடாது.

## தொழில்துறை புரட்சிக்கான மையம்

- உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) நான்காவது தொழில் துறைப் புரட்சிக்கான மையத்தின் (C4IR) திறப்பு விழா ஹைதராபாத் நகரில் நடைபெற்றது.
- சுகாதாரம் மற்றும் வாழ்க்கை அறிவியலில் கவனம் செலுத்தும் உலகின் முதலாவது கருப்பொருள் சார் மையம் இதுவாகும்.
- C4IR என்பது நிகழ் உலகச் சான்றுகள், சுகாதாரப் பகுப்பாய்வு மற்றும் தகவல், மற்றும் மென்பொருளினை ஒரு மருத்துவச் சாதனமாகக் கருதுதல் ஆகிய மூன்று முக்கியப் பகுதிகளின் மீது கவனம் செலுத்துகிறது.

## பூங்காவில் புலிகளைக் காண்பதற்கான சுற்றுப் பயணத்திற்குத் தடை

- ஜிம் கார்பெட் தேசியப் பூங்காவின் முக்கியப் பகுதிகளில் புலிகளைக் காண்பதற்காக சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் வசதிக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.
- வனவிலங்குகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் காப்புக்காட்டில் சட்ட விரோதமாக பல்வேறு கட்டுமானப் பணிகள் மேற்கொண்டதற்காகவும், மரங்களை வெட்டியதற்காகவும் உத்தரகாண்ட் அரசைக் கடுமையாக கண்டித்துள்ளது.

- ஜிம் கார்பெட் தேசியப் பூங்காவானது, தெராய் பகுதிகள் நிலப்பரப்புத் திட்டத்தின் கீழ் உலக இயற்கை நிதியத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட 13 பகுதிகளில் ஒன்றாகும்.
- ஐந்து நிலவாழ் இனங்களில் புலிகள், ஆசிய யானைகள் மற்றும் பச்சைக் கொம்புகள் கொண்ட காண்டாமிருகம் ஆகிய மூன்று இனங்களைப் பாதுகாப்பதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அரசிற்குச் சொந்தமான OTT இயங்குதளம்


- கேரள முதல்வர் அவர்கள், CSpace எனப்படும் மாநில அரசிற்குச் சொந்தமான இணைய தள ஒளிப்பரப்புச் சேவை வழங்கும் (OTT) தளத்தினை சமீபத்தில் தொடங்கி வைத்து உள்ளார்.
- இந்தியாவின் முதல் அரசாங்க ஆதரவு பெற்ற இந்த OTT இயங்குதளமானது ஒரு உள்ளடக்கத்தைத் தேர்ந்தெடுத்து ஒளிப்பரப்புவதில் உள்ள பல்வேறு சவால்களை எதிர்கொள்கிறது.
- இது கேரள மாநில திரைப்பட மேம்பாட்டுக் கழகத்தினால் (KSFDC) நிர்வகிக்கப்படும்.
- CSpace இயங்கு தளமானது, கேரள மாநில அரசின் கலாச்சார விவகாரங்கள் துறையின் ஆதரவின் கீழ் இயங்குகிறது.





## மணிப்பூரின் உள்நாட்டிலேயே புலம்பெயர்ந்தவர்களுக்கான திட்டம்

- இந்திய தேர்தல் ஆணையம் (ECI) ஆனது மணிப்பூரின் உள்நாட்டிலேயே புலம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரண முகாம்களிலேயே அவர்கள் வாக்களிப்பதற்கான ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது.
- உள்நாட்டிலேயே புலம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு, நிவாரண முகாம்களில் அமைக்கப் படும் "சிறப்பு வாக்குச் சாவடிகளில்" வாக்களிக்கும் வசதி வழங்கப்படும் என்று ECI கூறியுள்ளது.

- 2023 ஆம் ஆண்டு மே 03 ஆம் தேதியன்று வெடித்த இன வன்முறையின் காரணமாக சில வாரங்களுக்குள் 60,000 க்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்தனர்.
- அவர்களில் பெரும்பாலானோர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.
- மேலும் 9,000 பேர் மிசோரமில் தஞ்சம் புகுந்துள்ளனர்.




## குறிப்பிட்ட மாநிலம் சார்ந்த பேரிடர் – கேரளா




- கேரள மாநில அரசானது மனித-விலங்கு மோதலை குறிப்பிட்ட மாநிலம் சார்ந்த ஒரு பேரிடராக அறிவித்து, இத்தகைய அறிவிப்பினை வெளியிட்ட முதலாவது இந்திய மாநிலமாக மாறியுள்ளது.
- தற்போது, மனித-விலங்கு மோதலை மேலாண்மை செய்வது வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் படி செயல்படுகின்ற வனத்துறையின் பொறுப்பாகும்.
- இப்பிரச்சினை குறிப்பிட்ட மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவிக்கப்பட்டவுடன், அதை எதிர்கொள்ளும் பொறுப்பு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு மாற்றப் படும்.

- இதற்கு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் தீர்வு வழங்கப்படும் என்பதால் இதன் மூலம் அவர்கள் விரைவாகவும் தீர்க்கமாகவும் நடவடிக்கை எடுக்க முடியும்.
- மாவட்டப் பேரிடர் அமைப்பின் தலைவர் என்ற முறையில் மாவட்ட ஆட்சியர்கள் நேரடியாக இந்த நடவடிக்கைகளில் தலையிடலாம்.
- 2015 ஆம் ஆண்டில், ஒடிசா பாம்புக் கடியை குறிப்பிட்ட மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவித்தது.
- 2020 ஆம் ஆண்டில், கேரளா கோவிட் பெருந்தொற்றினை குறிப்பிட்ட மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவித்தது.
- இது தவிர, 2019 ஆம் ஆண்டில் வெப்ப அலைகள், வெங்குரு மற்றும் வெப்பத் தாக்கம் ஆகியவையும், 2017 ஆம் ஆண்டில் நிலத்தடியில் குழிவுகள் உருவாதல் நிகழ்வு மற்றும் 2015 ஆம் ஆண்டில் மின்னல் மற்றும் கடல் கரையோர அரிப்பு ஆகியவையும் ஒரு குறிப்பிட்ட மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவிக்கப் பட்டுள்ளன.

## அகநாசினி கழிமுகம்




- கர்நாடகாவின் மத்திய உத்தர கன்னடா மாவட்டத்தில் உள்ள அகநாசினி நதி ராம்சர் அந்தஸ்து பெறுவதற்குப் பரிந்துரை செய்யப்பட உள்ளது.
- அகநாசினி நதியானது, மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகி மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக்கடலில் கலக்கிறது என்பதோடு இந்த நதியின் வழித்தடத்தின் பெரும் பகுதியானது காடுகள் மிகுந்த மலையிடுக்குகள் மற்றும் பள்ளத்தாக்குகளில் பாய்ந்து செல்கின்றது.
- இந்த அந்தஸ்தினைப் பெறுவதற்கான பட்டியலில் போட்டியாக உள்ள மற்றொரு இடம் கர்நாடகாவின் மாண்டியா மாவட்டத்தில் உள்ள ரங்கனதிட்டு பறவைகள் சரணாலயம் ஆகும்.

## பாண்டவுல குட்டா


- பாண்டவுல குட்டா தெலுங்கானாவின் ஒரே புவிசார் பாரம்பரிய தளமாக அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- இது இமயமலையை விட பழமையானது மற்றும் பச்சை, சிவப்பு, மஞ்சள் மற்றும் வெள்ளை போன்ற பல்வேறு வண்ணங்களிலான பண்டைய காலத்தியப் பாறை ஓவியங்களை கொண்டுள்ளது.
- இந்த ஓவியங்கள் ஸ்வஸ்திகை சின்னங்கள், வட்டங்கள், சதுரங்கள் மற்றும் காட்டு எருமை, மறிமான், புலி மற்றும் சிறுத்தை போன்ற விலங்குகள் போன்ற குறியீடுகளை சித்தரிக்கின்றன.
- புவிசார் பாரம்பரியம் என்பது புவி அறிவியலில் புவியின் பரிணாம வளர்ச்சி அல்லது வரலாறு பற்றிய பல தகவல்களை வழங்கச் செய்வதோடு, கல்விக்காக அவற்றைப் பயன்படுத்தக் கூடிய வகையில் முக்கியத்துவம் வாய்ந்த புவியியல் அம்சங்களைக் கொண்டுள்ள இடத்தினைக் குறிக்கிறது.



## திட்டம் 414

- இந்தியத் தேர்தல் ஆணையம் (EC) ஆனது இமாச்சலப் பிரதேசத்தில் "திட்டம் 414" என்ற சிறப்புப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- கடந்த மக்களவைத் தேர்தலில் 60 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகள் பதிவான 414 வாக்குச் சாவடிகளில் அதிகபட்ச வாக்குப் பதிவினை பெறச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



- இந்த 414 நிலையங்களை மாதிரி வாக்குச்சாவடிகளாக மாற்றுவதோடு, விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளும் நடத்தப்படும்.
- 22 சட்டமன்றத் தொகுதிகளிலும் இதே போன்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கடந்த மக்களவைத் தேர்தலில் 70 சதவீதத்திற்கும் குறைவான வாக்குப்பதிவு பதிவான வாக்குச் சாவடிகளில் வாக்குப் பதிவினை 72% என்று அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் இமாச்சலப் பிரதேசத்தில் சராசரியாக 72.42% வாக்குகள் பதிவாகி இருந்தன.

## யுனெஸ்கோவின் தற்காலிகப் பாரம்பரியத் தளங்கள் பட்டியலில் மத்தியப் பிரதேச தளங்கள்

- மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஆறு பாரம்பரியத் தளங்கள் யுனெஸ்கோவின் தற்காலிகப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன.
- அவையாவன;
  - குவாலியர் கோட்டை- அதன் வரலாற்றுச் சிறப்பிற்காக முக்கியத்துவம் வாய்ந்தது;
  - தம்னார் வரலாற்று சிறப்புமிகு பகுதி – இந்தப் பகுதியின் வளமான கலாச்சாரப் பாரம்பரியத்தை முன்னிலைப்படுத்துகிறது;
  - பண்டைய காலக் கலைத் திறனை வெளிப்படுத்தும் சம்பல் பள்ளத்தாக்கின் கண்கவர் பாறை கலைக் கூடங்கள்;
  - மதம் சார்ந்த பக்தியின் சின்னமான போஜேஷ்வர் மகாதேவ் கோயில்,
  - கூனி பண்டாரா, புர்ஹான்பூர், மற்றும்
  - இராம்நகரின் கடவுள் நினைவகம், மண்ட்லா.



## சௌரௌயா பூண்டுவானா – மணிப்பூர்

- மணிப்பூரின் தமெங்லாங் மாவட்டத்தில், அருகி வரும் உயிரினமான சௌரௌயா பூண்டுவானா தாவரம் முதன்முறையாக தென்பட்டுள்ளது.
- கோள வடிவிலான பளபளக்கும் வெள்ளை நிறத்தில் உள்ள இதன் பழங்கள் ஆனது, கால்நடை மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது.

- இந்த இனமானது பூர்வீகமாக பூட்டான் முதல் தென்கிழக்கு திபெத் வரையிலான பகுதி வரை காணப்படுகிறது.



## ராஜஸ்தான் - நீர் வளத் தரவுக் கட்டுப்பாட்டகம்

- முதன்முதலாக நீர் வளத்திற்காக என்று பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட இணைய தளமானது ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் தொடங்கப்பட்டுள்ளது.
- இது அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் உள்ள நீர்மட்டம் மற்றும் ராஜஸ்தானின் பல்வேறு பகுதிகளில் உள்ள கால்வாய்களில் உள்ள நீரின் அளவு பற்றிய நிகழ்நேரத் தகவல்களை வழங்கும்.
- இந்த இணைய தளம் ஆனது திறன்மிகு நீர் மேலாண்மைக்கு உதவுவதோடு, வெள்ளம் மற்றும் வறட்சி ஆகியவை குறித்து கணிக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- நீர் இருப்பு பற்றியத் தகவல்களைப் ஒரு பொதுவான தளத்தில் கொண்டு வரும் ஓர் அமைப்பினை உருவாக்கிய முதல் மாநிலம் ராஜஸ்தான் ஆகும்.
- இந்த இணைய தளமானது, 805 அணைகளின் முழுத் தரவுகளையும், 242 அணைகளின் தினசரித் தரவுகளையும், 88 அணைகளின் நேரடித் தரவுகளையும் வழங்கும்.

## இந்தியாவின் பழமையான கோவில்

- இந்தியாவின் மிகப் பழமையான கோவிலைக் கண்டறிவதற்காக, மத்தியப் பிரதேச மாநிலத்தின் பன்னா மாவட்டத்தில் உள்ள நாச்னே என்ற கிராமத்தில் உள்ள இரண்டு மேட்டுப் பகுதிகளில் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை ஆய்வு ஒன்றினை மேற் கொண்டு வருகிறது.
- இந்த அகழ்வாராய்ச்சித் தளங்கள் குப்தர் காலப் பார்வதி கோவில் மற்றும் காலச்சூரி வம்சத்தால் கட்டமைக்கப்பட்ட சௌமுகி கோவில் ஆகிய இரண்டு மிகப் பழமையான கோவில்களுக்கு அருகில் உள்ளன.
- மத்தியப் பிரதேசத்தில், குப்தர்கள் காலத்தைச் சேர்ந்த, கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய 'சாஞ்சி 17' உட்பட பல பழமையான கோயில்கள் உள்ளன.
- இக்கோயில் ஆனது இன்று வரையில் இந்தியாவில் எஞ்சியிருக்கும் மிகப் பழமையான முழுமையான கோயிலாகக் கருதப்படுகிறது.
- அகழ்வாராய்ச்சிக் குழுவானது குப்தர் காலத்துக்கு முற்பட்ட பல்வேறு கோயில்களைக் கண்டறியக் கூடும் என்று நம்புகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ககன்யான் திட்டத்தின் விண்வெளி வீரர்கள்

- விண்வெளிக்கு மனிதர்களை கொண்டு செல்லும் விண்வெளிப் பயணத் திட்டமான ககன்யான் திட்டத்தின் "விண்வெளி வீரர்கள்" சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டனர்.
- இதன் குழுத் தலைவர்களான பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர் (47), அங்கத் பிரதாப் (41), அஜித் கிருஷ்ணன் (41) மற்றும் விங் கமாண்டர் சுபான்ஷு சுக்லா (38) ஆகிய நான்கு விண்வெளி வீரர்கள் இத்திட்டத்தில் விண்வெளிக்குப் பயணிக்க உள்ளனர்.
- அவர்கள் அனைவரும் இந்திய விமானப்படையின் அதிகாரிகள் ஆவர்.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த கேப்டன் அஜித் கிருஷ்ணன் ஒரு போர் விமானி ஆவார்.
- இவர் தேசிய இராணுவக் கல்லூரி ஒரு முன்னாள் மாணவர் மற்றும் விமானப்படை கல்லூரியில் குடியரசுத் தலைவரின் தங்கப் பதக்கம் மற்றும் கௌரவ வாள் விருது பெற்றவர் ஆவார்.



## மனோகர் ஜோஷி

- மகாராஷ்டிர மாநிலத்தின் முன்னாள் முதல்வர் மனோகர் ஜோஷி சமீபத்தில் காலமானார்.
- அமைப்பு சார் திறன்கள் மற்றும் அடிமட்டச் சமூகத்துடனான தொடர்பிற்கு பெயர் பெற்ற ஜோஷி சிவசேனாவின் முக்கிய தலைவராக உருவெடுத்தார்.
- 1995 ஆம் ஆண்டில் இவர் மகாராஷ்டிராவின் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்.
- அவர் இந்திய தேசிய காங்கிரஸின் சரத் பவாரை அடுத்து பதவியேற்றார் என்ற நிலையில் இது அந்த மாநிலத்தில் முதல் முறையாக சிவசேனா கட்சி ஆட்சியைக் கைப்பற்றியதைக் குறிக்கிறது.
- பாராளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 2002 முதல் 2004 ஆம் ஆண்டு வரை மக்களவையின் சபாநாயகராகப் பணியாற்றினார்.

## இந்தியாவின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர்- ஷஃபிகுர் ரஹ்மான் பார்க்

- சமாஜ்வாதி கட்சியின் மூத்த தலைவரும், உத்தரப் பிரதேச மாநிலத்தின் சம்பல் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினருமான ஷஃபிகுர் ரஹ்மான் பார்க் சமீபத்தில் காலமானார்.
- இவர் இந்தியப் பாராளுமன்றத்தின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர் ஆவார்.

- நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்த பார்க், 2019 ஆம் ஆண்டில் ஐந்தாவது முறையாக சம்பால் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- சமாஜ்வாதி கட்சியில் இருந்த பார்க் முராதாபாத் மக்களவைத் தொகுதியில் மூன்று முறையும் (1996, 1998, மற்றும் 2004) மற்றும் சம்பல் மக்களவைத் தொகுதியில் இரண்டு முறையும் (2009 மற்றும் 2019) வெற்றி பெற்றார்.
- அவர் உத்தரப் பிரதேச மாநில அரசாங்கத்தில் ஒரு காபினெட் அமைச்சராகவும் பணி ஆற்றினார் என்பதோடு, சம்பல் தொகுதியில் இருந்து அவர் நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## டைலர் பரிசு 2024

- சுற்றுச்சூழல் சார்ந்த சாதனைக்கான 2024 ஆம் ஆண்டு டைலர் பரிசு ஜோஹன் ராக்ஸ்ட்ரோம் என்பவருக்கு வழங்கப்பட உள்ளது.
- இது கோள்களின் எல்லைக் கட்டமைப்பு என்ற கருத்தாக்கத்தின் உருவாக்கத்திற்கு அவர் ஆற்றிய அற்புதமானப் பங்களிப்புகளையும் முன்னோடியான பணிகளையும் அங்கீகரிக்கிறது.
- ராக்ஸ்ட்ரோம், போட்ஸ்டாம் பருவநிலை தாக்க ஆராய்ச்சி கல்வி நிறுவனத்தின் (PIK) இயக்குநராகவும், புவி ஆணையத்தின் இணைத் தலைவராகவும் உள்ளார்.
- கிரக எல்லைகள் என்பது பல்புவி அமைப்பு அறிவியல் துறைகளில் மேற்கொள்ளப் படும் சர்வதேச ஒத்துழைப்பாகும்.
- இந்தக் கோட்பாடு ஒன்பது புவி அமைப்புகளுக்கு வரையறுக்கப்பட்ட எல்லைகளை வரையறுக்கிறது.
- உயிரினங்களைப் பாதுகாப்பதில் அவற்றின் நிலைத்தன்மை மற்றும் நெகிழ்திறன் ஆகியவற்றின் அதீத முக்கியத்துவத்தை இவை வலியுறுத்துகின்றன.
- மதிப்புமிக்க டைலர் பரிசு ஆனது, சுற்றுச்சூழலுக்கான நோபல் பரிசு என்று அறியப் படுகிறது.

## சங்கீத நாடக அகாடமி விருதுகள் 2022 மற்றும் 2023

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், சமீபத்தில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான 94 சங்கீத நாடக அகாடமி விருதுகளை வழங்கினார்.
- இசை, நடனம், நாடகம், நாட்டுப்புற மற்றும் பழங்குடியினக் கலைகள் உள்ளிட்ட நிகழ்த்து கலைகளில் சிறந்த கலைஞர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
- 2023 ஆம் ஆண்டிற்கான அகாடமி விருதுகளை இசைத் துறையில் 12 பேரும், நடனத் துறையில் 12 பேரும், நாடகத் துறையில் 9 பேரும், நாட்டுப்புற மற்றும் பழங்குடியினக் கலைகளில் 11 பேரும் பெற்றுள்ளனர்.
- இந்த விருது பெற்ற சில புகழ்பெற்ற கலைஞர்கள்
    - தமிழ்நாட்டைச் சேர்ந்த கர்நாடக சங்கீத பாடகர் பாம்பே ஜெயஸ்ரீ ராம்நாத்,
    - கர்நாடக இசைக் கருவி (மிருதங்கம்) பிரிவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நெய்வேலி நாராயணன்,

- பரதநாட்டியம் பிரிவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஊர்மிளா சத்தியநாராயணன் மற்றும்
- மோகினியாட்டம் பிரிவில் கேரளாவைச் சேர்ந்த பல்லவி கிருஷ்ணன்.

❖ இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் 6 சிறந்த கலைஞர்களுக்கு சங்கீத நாடக அகாடமி அங்கத்தினர் அந்தஸ்தையும் வழங்கினார்.

- விநாயக் கேடேகர், கோவா, இந்திய இசைக்கலை
- R. விஸ்வேஸ்வரன், கர்நாடகா, இந்திய இசைக்கலை
- சுனயனா ஹசாரிலால், மகாராஷ்டிரா, இந்திய நடனக்கலை
- ராஜா & ராதா ரெட்டி, டெல்லி, இந்திய நடனக்கலை
- துலால் ராய், அசாம், இந்திய நாடகக்கலை
- T.P. சின்ஹா, உத்தரப் பிரதேசம், இந்திய நாடகக்கலை

❖ சங்கீத நாடக அகாடமி அங்கத்தினர் அந்தஸ்து அல்லது "அகாடமி ரத்னா" என்பது நிகழ்த்து கலை வடிவங்களில், கலைத் துறையில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் ஆற்றிய சிறப்பானப் பங்களிப்பிற்காக வழங்கப்படும் ஒரு மிக உயரிய கௌரவம் ஆகும்.

❖ இந்த உறுப்பினர் அந்தஸ்து 40 ஆக வரையறுக்கப் பட்டுள்ளது.

## உலக அழகி 2024

❖ மும்பையில் நடைபெற்ற உலக அழகிப் போட்டியில் செக் குடியரசின் கிறிஸ்டினா பிஸ்கோவா 2024 ஆம் ஆண்டிற்கான உலக அழகி பட்டத்தை வென்றார்.

❖ லெபனான் அழகி யாஸ்மினா ஜெய்டவுன் இரண்டாம் இடத்தினைப் பிடித்தார்.

❖ 2006 ஆம் ஆண்டு அழகிப் போட்டியில் பட்டம் வென்ற டாடானா குச்சரோவாவுக்குப் பிறகு, உலக அழகி பட்டம் வென்ற செக் குடியரசு நாட்டில் இரண்டாவது நபர் பிஸ்கோவா ஆவார்.

❖ 28 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் இந்தியா சார்பாக 22 வயதான சினி ஷெட்டி பங்கேற்றார்.

❖ இந்தியா இந்த மதிப்புமிக்கப் பட்டத்தை ஆறு முறை வென்றுள்ளது.



## தேசியப் படைப்பாளிகள் விருது 2024

❖ புது டெல்லியில் நடைபெற்ற விழா ஒன்றில் முதலாவது தேசியப் படைப்பாளிகள் விருதுகளைப் பிரதமர் அவர்கள் வழங்கினார்.

- இந்த விருது ஆனது நேர்மறையான சமூக மாற்றம் மற்றும் புதுமைகளைக் கொண்டு வந்த எண்ணிம ஊடகப் படைப்பாளர்களின் பங்களிப்பைக் கொண்டாடுகிறது.
- பின்னணிப் பாடகி மைதிலி தாக்கூர் 'ஆண்டின் கலாச்சார தூதுவர்' விருதினைப் பெற்றார்.
- இந்த விருதுகளை வென்ற இதர வெற்றியாளர்கள்:
  - கௌரவ் சௌத்ரி - தொழில்நுட்ப பிரிவில் சிறந்தப் படைப்பாளர்
  - R.J. ரௌனாக் (பாவா) - மிகவும் ஆக்கப்பூர்வமான படைப்பாளி - ஆண்
  - ஷ்ரத்தா - மிகவும் ஆக்கப்பூர்வமான படைப்பாளி - பெண்
  - ஜான்வி சிங் - பாரம்பரிய நாகரீக சின்னம் விருது
  - லக்சய் தபாஸ் - மிகவும் தாக்கத்தை ஏற்படுத்திய வேளாண் படைப்பாளி
  - கீர்த்திகா கோவிந்தசாமி - சிறந்த கதைசொல்பவர்.




## எராஸ்மஸ் பரிசு 2024



- புகழ்பெற்ற எழுத்தாளர் அமிதவ் கோஷ் 2024 ஆம் ஆண்டின் மதிப்புமிக்க எராஸ்மஸ் பரிசினைப் பெற்றுள்ளார்.
- 'கற்பனைக்கும் எட்டாதவற்றினைக் கற்பனை செய்தல்' என்ற கருப்பொருளில் அவரது உணர்ச்சி மிக்க எழுத்து சார்ந்தப் பங்களிப்புக்காக அவர் இந்தப் பரிசைப் பெற்று உள்ளார்.

- இவர் 2018 ஆம் ஆண்டில் இந்தியாவின் மிக உயரிய இலக்கிய விருதான ஞானபீட விருதைப் பெற்றுள்ளார்.
- நெதர்லாந்தின் இளவரசர் பெர்ன்ஹார்ட் 1958 ஆம் ஆண்டில் பிரீமியம் எராஸ்மியனம் என்ற நிறுவனத்தினை நிறுவினார்.

## 96வது அகாடமி விருதுகள்

- 96வது அகாடமி விருது வழங்கும் விழாவானது, அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள டால்பி அரங்கில் நடைபெற்றது.
- கிறிஸ்டோபர் நோலனின் பெரும்படைப்பான வாழ்க்கை வரலாற்று திரைப்படமான ஓபன்ஹைமர் ஏழு விருதுகளை வென்றது.
- மற்ற விருது பெற்றவர்களின் பட்டியல்
    - சிறந்த திரைப்படம் - ஓபன்ஹைமர்
    - சிறந்த இயக்குனர் - கிறிஸ்டோபர் நோலன், ஓபன்ஹைமர்
    - சிறந்த நடிகர் - சில்லியன் மர்பி, ஓபன்ஹைமர்
    - சிறந்த நடிகை - எம்மா ஸ்டோன், புவர் திங்ஸ்
    - ஒளிப்பதிவு - ஓபன்ஹைமர்
    - சிறந்த துணை நடிகர் - ராபர்ட் டவுனி ஜூனியர், ஓபன்ஹைமர்
    - தொகுப்பாளர் - ஓபன்ஹைமர்
    - சிறந்த இசை - ஓபன்ஹைமர்
    - ஆவணப்படம் - 20 Days in Mariupol
    - சிறந்த பாடல் - "What Was I Made For?" (பார்பி)

## பிரிட்ஸ்கர் கட்டிடக்கலை பரிசு 2024

- ஜப்பானிய கட்டிடக் கலைஞரான ரிகன் யமமோட்டோ 2024 ஆம் ஆண்டு பிரிட்ஸ்கர் கட்டிடக் கலை பரிசை வென்றுள்ளார்.
- இது "கட்டிடக்கலைத் துறையின் நோபல் பரிசு" என்று குறிப்பிடப்படுகின்ற கட்டிடக் கலைத் துறையின் மிக உயர்ந்த சர்வதேச விருது ஆகும்.
- 1979 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பரிசு வழங்கப் படுகிறது.
- யமமோட்டோ, இந்தப் பரிசினைப் பெற்ற ஒன்பதாவது ஜப்பானிய நாட்டவர் ஆவார்.
- இந்த விருது ஆனது, கட்டிடக்கலை மூலம் மனிதகுலம் மற்றும் கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழலுக்கு வழங்கப்படும் நிலையான மற்றும் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கிய, திறமை, தொலைநோக்கு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை வெளிப் படுத்தும் ஒரு கட்டிடக் கலைஞரைக் கௌரவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சென்னை இசை அகாடமி விருதுகள் 2024

- கர்நாடகப் பாரம்பரியப் பாடகர் தோடூர் மடபுசி கிருஷ்ணாவிற்கு சங்கீத கலாநிதி விருது வழங்கப்பட்டுள்ளது.
- இது சென்னை இசை அகாடமியால் வழங்கப்படுகின்ற, கர்நாடக இசைத்துறையின் மிகவும் மதிப்புமிக்க அங்கீகாரம் ஆகும்.
- பேராசிரியர் பரஸ்சலா ரவி (V. இரவீந்திரன் நாயர்) மற்றும் கீதா ராஜா ஆகியோருக்கு சங்கீத கலா ஆச்சார்யா விருதுகள் வழங்கப்பட உள்ளது.
- திருவையாறு சகோதரர்கள் என்று அழைக்கப்படும் நரசிம்மன் மற்றும் S.வெங்கடேசன் மற்றும் H.K.நரசிம்மமூர்த்தி ஆகியோர் TTV விருதுகளுக்கு தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.
- டாக்டர் மார்கரெட் பாஸ்டின் இசையமைப்பாளர் விருதையும், டாக்டர் நீனா பிரசாத் நிருத்ய கலாநிதி விருதையும் பெற உள்ளார்.

## டயானா மரபு விருதுகள்

- உலகில் மொத்தம் 20 பேருக்கு 'டயானா நினைவு விருது' வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளது.
- இந்தியாவின் உதய் பாட்டியா மற்றும் மானசி குப்தா ஆகியோருக்கு 'டயானா நினைவு விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- உதய்யின் குறைந்த விலையிலான கண்டுபிடிப்பு ஆனது மின்வெட்டுகளில் இருந்து நிவாரணம் அளிக்கும்.
- பெருந்தொற்றுகளின் போது, மானசி குப்தா ஆற்றிய மனநலச் சேவைகளுக்கு நல்ல அங்கீகாரம் வழங்கப்பட்டு அவருக்கு இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- இளவரசி டயானாவின் நினைவாக இந்த விருது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப் படுகிறது.

- இந்த விருது உலகின் மகத்தான இளைஞர்களுக்கு அவர்களின் சமூகப் பணி அல்லது மனிதாபிமானச் சேவைகளுக்காக வழங்கப்படுகிறது.



## தங்கப் புத்தகம் விருது 2024

- எழுத்தாளர் ராக்கி கபூர் Breaking Free Embracing Me – healing from childhood abuse and Toxic Conditioning என்ற தலைப்பிலான அவரது 26வது புத்தகத்திற்காக தனது இரண்டாவது கோல்டன் புக் (தங்கப் புத்தகம்) விருதை வென்றுள்ளார்.
- இந்த மதிப்புமிக்க விருது ஆனது, வாசகர்களை கவரும் மற்றும் இலக்கிய உலகிற்கு குறிப்பிடத் தக்கப் பங்களிப்பை வழங்கும் இலக்கியச் சாதனைகளை அங்கீகரித்து பாராட்டுகிறது.
- 2024 ஆம் ஆண்டு தங்கப் புத்தக விருதுகள் பெற்ற இதர சில வெற்றியாளர்கள்:
    - ஸ்ரீவித்யா பாலகிருஷ்ணன் - Tales in verse from distant lands,
    - நவீன் பாலனி - Echoes of Tomorrow: The Responsible AI Awakening,
    - B.K. ஷிவானி - The Power of One Thought: Master Your Mind, Master Your Life,
    - சஹானா முரளி - Fish can fly,
    - பிரகாஷ் நர்கடே - Unbox Your Creativity.

## ஆபெல் பரிசு 2024

- நார்வேஜிய அறிவியல் மற்றும் ஆய்வுக் கட்டுரைக் கல்வி நிறுவனம் ஆனது பிரான்ஸ் நாட்டின் பாரீஸ் நகரில் உள்ள பிரெஞ்சு தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் (CNRS) மைக்கேல் தலக்ராண்ட் அவர்களுக்கு வழங்கியுள்ளது.
- இந்த விருதானது, மைக்கேல் தலக்ராண்டின் "கணித இயற்பியல் மற்றும் புள்ளியியல் ஆகியவற்றில் அவற்றின் சிறந்த முறையிலானப் பயன்பாடுகளின் மூலம், நிகழ்தகவு கோட்பாடு மற்றும் செயல்பாட்டுப் பகுப்பாய்விற்கான அவரின் மிகவும் மகத்தானப் பங்களிப்புகளுக்காக" வழங்கப் படுகிறது.
- அவரது பெரும்பாலான ஆராய்ச்சிகள் ஆனது "இயல்நிலைப் பரவல்" அல்லது "பெல் பரவல்" என்று அழைக்கப்படும் "காசியன் பரவல்" பற்றிய ஒரு புரிதல் மற்றும் அதன் பயன்பாடுகளை உள்ளடக்கியதாக உள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் 2024

- 2024 ஆம் ஆண்டு கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டன.
- ஜம்மு மற்றும் காஷ்மீரில் நடத்தப்பட்ட 2020, 2021 மற்றும் 2023 ஆகிய மூன்று முந்தைய போட்டிகளிலும் ஜம்மு மற்றும் காஷ்மீர் அணி வெற்றி பெற்றன.
- லடாக் ஒன்றியப் பிரதேசம் ஆனது இந்த ஆண்டு போட்டிகளை முதல் முறையாக எடுத்து நடத்தியது.
- இந்திய இராணுவ அணியானது 10 தங்கம், ஐந்து வெள்ளி மற்றும் ஆறு வெண்கலம் வென்று KIWG 2024 பட்டத்தை வென்றது.
- கர்நாடகா அணி 9 தங்கப் பதக்கங்கள் மற்றும் 2 வெள்ளிப் பதக்கங்களுடன் வெள்ளி பதக்கம் (இரண்டாமிட பதக்கம்) வென்றது.

| Rank | State/UT/Team | Gold medals | Silver medals | Bronze medals | Total medals |
|---|---|---|---|---|---|
| 1 | Army | 10 | 5 | 6 | 21 |
| 2 | Karnataka | 9 | 2 | 0 | 11 |
| 3 | Maharashtra | 7 | 8 | 7 | 22 |
| 4 | Himachal Pradesh | 4 | 4 | 9 | 17 |
| 5 | Uttarakhand | 3 | 3 | 1 | 7 |

# முக்கிய தினங்கள்

## பாகுபாடுகள் ஒழிப்பு தினம் - மார்ச் 01

- இத்தினமானது ஒருவரின் பின்னணி அல்லது அடையாளத்தைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் சமத்துவம் மற்றும் கண்ணியத்திற்கான அடிப்படை உரிமையின் சக்தி வாய்ந்த நினைவூட்டலாகச் செயல்படுகிறது.
- UNAIDS திட்டத்தின் பாகுபாடுகள் ஒழிப்புப் பிரச்சாரத்திற்குப் பிறகு முதன்முதலில் 2014 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் தேதியன்று இந்தத் தினம் கொண்டாடப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அனைவரின் ஆரோக்கியத்தையும் பாதுகாத்தல், அனைவரின் உரிமைகளையும் பாதுகாத்தல்" என்பதாகும்.

## உலக கடற்புல் தினம் - மார்ச் 01

- 2022 ஆம் ஆண்டு மே மாதத்தில், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது இந்த நாளை அறிவிக்கும் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- கடல் புற்கள் ஆனது உலகின் பல பகுதிகளில் உள்ள ஆழமற்ற நீரில் காணப்படும் கடல் வாழ் பூக்கும் தாவரங்கள் ஆகும்.
- அவை ஆயிரக்கணக்கான மீன்கள், கடல் குதிரைகள், ஆமைகளுக்கு உணவு மற்றும் தங்குமிடங்களை வழங்குகின்றன என்பதோடு, அவை உலகின் மிகப்பெரிய மீன் வளங்களுக்கான ஆதார அமைப்பாகவும் உள்ளன.
- அவை உலகின் கடல்சார் கரிமத்தில் 18 சதவீதம் வரை சேமித்து வைக்கக் கூடியவை என்பதால் பருவநிலை மாற்ற தாக்கங்களைச் சமாளிக்க ஒரு சக்தி வாய்ந்த இயற்கை சார்ந்த தீர்வாக அமையும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "வளமான கடல் புல், வளமான கிரகம்" என்பதாகும்.


## உலக குடிமைப் பாதுகாப்பு தினம் - மார்ச் 01

- உலக குடிமைப் பாதுகாப்பு தினம் ஆனது 1990 ஆம் ஆண்டில், சர்வதேச குடிமைப் பாதுகாப்பு அமைப்பால் அறிவிக்கப்பட்டது.
- விபத்துக்கள், இயற்கை பேரிடர்கள் மற்றும் பிற நெருக்கடிகளில் இருந்து மக்களையும் அவர்களின் உடைமைகளையும் பாதுகாப்பதை ஊக்குவிப்பதை இந்த நாள் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மனித உயிர்களைக் காப்பாற்றும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் வீரர்களைக் கொண்டாடும் விதமாகவும் இத்தினம் அனுசரிக்கப் படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையானது சர்வதேசக் குடிமைப் பாதுகாப்புஅமைப்பை நிறுவியது.
- இது உலகளவில் குடிமைப் பாதுகாப்பு வீரர்களின் முயற்சிகளை ஒருங்கிணைத்து மேம்படுத்துவதற்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு ஆகும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "பாதுகாப்பு வீரர்களை கௌரவப் படுத்துதல் மற்றும் பாதுகாப்புத் திறன்களை மேம்படுத்துதல்" என்பதாகும்.

## சுய தீங்கு விளைத்தல் குறித்த விழிப்புணர்வு தினம் - மார்ச் 01


- தமக்குத் தாமே காயப்படுத்திக் கொள்ளும் மற்றும் தொழில்முறை உதவியைக் கோருவதில் தயங்குகின்ற நபர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- உடல் நலனுக்கு ஒவ்வாத இந்த நடத்தை முறையை நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நோயாளிகள் விரைவில் உதவி பெறவும் இது உதவுகிறது.
- 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், மனநோய்க்கான அறிகுறிகளில் ஒன்றாக சுய-தீங்கு விளைவித்தல் நடத்தை அறிவிக்கப்பட்டது.

- 1995 ஆம் ஆண்டில், சுய சிதைவு பற்றிய முதல் சர்வதேச மாநாடு ஏற்பாடு செய்யப் பட்டது.
- 1997 ஆம் ஆண்டில், சுய காயம் பற்றிய ஆய்வுக்கான சர்வதேச சங்கம் நிறுவப்பட்டது.




## உலக நிலையான ஆற்றல் தினம் - மார்ச் 02

- இது அன்றாட வாழ்வில் நிலையான ஆற்றல் மூலங்களின் மீதான பயன்பாட்டை மேம்படுத்துகிறது.
- புதுமையான மற்றும் பயனுள்ள நிலையான ஆற்றல் தொழில்நுட்பங்களைக் காட்சிப் படுத்தவும் இது பங்களிக்கிறது.
- இது முதன்முதலில் 1992 ஆம் ஆண்டில் ஆஸ்திரிய நாட்டு எரிசக்தி முகமையால் (AEA) அனுசரிக்கப் பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "வேகமான, திறன்மிக்க, நெகிழ் திறன் மிக்க ஆற்றல் பரிமாற்றம்!" என்பதாகும்.




## உலக வனவிலங்கு தினம் - மார்ச் 03

- 1973 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான், அருகி வரும் வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் (CITES) இனங்களின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தம் எனபது கையெழுத்தானது.

- பல்லுயிர்ப் பெருக்கத்தினைப் பாதுகாக்க உதவும் பல நிலையான நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காகவும், விலங்குகளைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய பொது விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இத்தினம் கொண்டாடப் படுகிறது.
- இது முதன்முதலில் 2013 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் தாய்லாந்து அரசினால் முன்மொழியப்பட்டது.
- பொதுச் சபையானது 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் தேதியன்று இந்த நாளை அனுசரிப்பதற்கான தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "மக்களையும் கோளினையும் இணைத்தல் : வனவிலங்குப் பாதுகாப்பில் எண்ணிமம் சார்ந்த புத்தாக்கங்களை ஆராய்ந்து செயல்படுத்துதல்" என்பதாகும்.

## உலக செவித் திறன் தினம் - மார்ச் 03

- காது கேளாமை மற்றும் செவித்திறன் இழப்பைத் தடுப்பது மற்றும் உலகம் முழுவதும் காது மற்றும் செவிப்புலன் பராமரிப்பை மேம்படுத்துவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் என்பது முதன்முதலில் 2007 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பினால் அங்கீகரிக்கப் பட்டது.
- முன்னதாக, இந்த நாள் சர்வதேச காது பராமரிப்புத் தினமாக அங்கீகரிக்கப்பட்டது.
- 2016 ஆண்டிற்குப் பிறகு, உலக சுகாதார அமைப்பானது இத்தினத்தின் பெயரை உலக செவித் திறன் தினமாக மாற்றியது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "மாறும் மனநிலைகள்: அனைவருக்குமான காது மற்றும் செவிப்புலன் நலனை நனவாக்குதல்" என்பதாகும்.





## தேசியப் பாதுகாப்புத் தினம் - மார்ச் 04

- 1966 ஆம் ஆண்டில் தொழிலாளர் துறை அமைச்சகத்தினால் இந்தியத் தேசியப் பாதுகாப்பு சபை (NSC) நிறுவப்பட்டதைக் குறிக்கும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.
- தேசியப் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக வாதிடுவது இச்சபையின் முதன்மை நோக்கமாகும்.

- இந்த நாள் முதன்முதலில் 1972 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "சுற்றுச்சூழல் சமூக ஆளுமைச் சிறப்புக்காக பாதுகாப்புத் தலைமையின் மீது கவனம் செலுத்துதல்" என்பதாகும்.


## உலக உடல் பருமன் தினம் - மார்ச் 04

- உடல் பருமன் குறித்தக் கண்ணோட்டங்களை மாற்றுதல், தவறான எண்ணங்களை சரி செய்தல், சமூக விலக்கல்களை (களங்கங்களை) முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் இந்த மருத்துவ நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இதய நோய்கள், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், கடுமையான முடக்கு வாதம் மற்றும் சில புற்றுநோய்கள் போன்ற கடுமையான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.
- உலக சுகாதார அமைப்பின் கருத்துப் படி, 25 அல்லது அதற்கு மேற்பட்ட உடல் நிறை குறியீட்டு (BMI) எண் ஆனது அதிக எடை ஆகவும் மற்றும் 30 அல்லது அதற்கு மேற்பட்ட BMI எண் ஆனது உடல் பருமனாகவும் கருதப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'உடல் பருமன் மற்றும்... சில பற்றிய கருத்துகளை வெளிக் கொணர்தல்' என்பதாகும்.




## இந்தியப் புவியியல் ஆய்வு மையத்தின் ஸ்தாபன தினம் - மார்ச் 04

- இந்தியப் புவியியல் ஆய்வு மையம் (GSI) ஆனது மார்ச் 04 ஆம் தேதியன்று அதன் 174வது ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- இந்தியப் புவியியல் ஆய்வு மையமானது 1851 ஆம் ஆண்டில் மிகவும் முதன்மையாக ரயில்களுக்கான நிலக்கரி இருப்புகளைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்டது.
- 1848 ஆம் ஆண்டில் ஜான் மெக்லேலண்ட் தனது அறிக்கையில் இந்தியப் புவியியல் ஆய்வு என்ற வார்த்தையை முதன்முதலில் பயன்படுத்தினார்.
- GSI மையத்தின் தலைமையகம் ஆனது கொல்கத்தாவில் உள்ளது.
- மேலும், லக்னோ, ஜெய்ப்பூர், நாக்பூர், ஹைதராபாத், ஷில்லாங் மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் இதன் ஆறு பிராந்திய அலுவலகங்கள் அமைந்துள்ளன.




## நிலையான மேம்பாட்டிற்கான உலக பொறியியல் தினம் - மார்ச் 04

- நிலையான மேம்பாட்டினை அடைவதில் பொறியியலின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் இத்தினம் நிறுவப்பட்டது.
- நவீன வாழ்க்கை மற்றும் நிலையான மேம்பாட்டிற்கு பொறியியல் மற்றும் தொழில் நுட்பம் எவ்வாறு மையக்கருவாக உள்ளன என்பதைப் பற்றிய ஒரு பொதுப் புரிதலை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "ஒரு நிலையான உலகத்திற்கான பொறியியல் தீர்வுகள்" என்பதாகும்.


## சர்வதேச HPV விழிப்புணர்வு தினம் - மார்ச் 04

- இந்த நாள் 2018 ஆம் ஆண்டில் சர்வதேச பாப்பிலோமா வைரஸ் சங்கத்தினால் (IPVS) உருவாக்கப் பட்டது.
- இது மனித பாப்பிலோமா வைரஸ் மற்றும் புற்றுநோய்களுடனான அதன் தொடர்பு மற்றும் இந்த வைரஸுக்கு எதிரான தடுப்பு முறைகள் பற்றி கற்பிப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மனித பாப்பிலோமா வைரஸ் என்பது உடலின் பல்வேறு பாகங்களை, முதன்மையாக பிறப்புறுப்புப் பகுதியைப் பாதிக்கக் கூடிய சார்புநிலை வைரஸ்களின் குழுவாகும்.
- 100க்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான HPV வைரஸ்களில், சில மிகவும் அதிக ஆபத்தானவை என வகைப்படுத்தப் பட்டு இருக்கின்றன என்ற நிலையில் இவை புற்று நோய் உருவாகும் வாய்ப்பையும் அதிகரிக்கச் செய்கின்றன.

## பாலியல் சுரண்டலுக்கு எதிரானப் போராட்டத்திற்கான உலக தினம் - மார்ச் 04

- அனைத்து வகையான பாலியல் சுரண்டல்களுக்கும் எதிராக ஒரு நிலைப்பாட்டை மேற் கொள்வதற்காக உலக நாடுகளை ஒன்றிணைப்பதே இந்த நாளின் முதன்மையான குறிக்கோள் ஆகும்.

- இந்தக் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களில் 98 சதவீதம் பேர் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆவர்.
- 2009 ஆம் ஆண்டில் பாலியல் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்திற்கான முதல் உலக தினம் ஆனது ஓர் உலகளாவிய இயக்கமாக அனுசரிக்கப் பட்டது.





## ஆயுதக் குறைப்பு மற்றும் பரவல் தடுப்பு விழிப்புணர்விற்கான சர்வதேச தினம் - மார்ச் 05

- பொது மக்களிடையே, குறிப்பாக இளைஞர்களிடையே ஆயுதக் குறைப்பு மீதான பல பிரச்சினைகள் குறித்த சரியான விழிப்புணர்வு மற்றும் புரிதலை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், உலகளாவிய இராணுவச் செலவினம் 2.24 டிரில்லியன் டாலரை எட்டியது.
- 2,500 அணு ஆயுதங்கள் இன்று மனித குலத்திற்கு ஓர் இருப்பில் உள்ள அச்சுறுத்தலாகத் திகழ்கின்றன.


## அடையாளத் தொடர்பறும் கோளாறு குறித்த விழிப்புணர்வு தினம் - மார்ச் 05

- அடையாளத் தொடர்பறும் கோளாறு உள்ளவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நாம் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பல்வகை அடையாள கோளாறு என்றும் அழைக்கப்படுகிறது.

- இது ஒரு நபர் தனது மனதில் பல நபர்கள் வாழ்வது போல் என்று நம்பும் மன நிலை ஆகும்.
- அவர்கள் பெரும்பாலும் பல அடையாளங்களால் பெருமளவில் கட்டுப்படுத்தப் படுவதோடு, அவர்களின் இயல்பான வாழ்க்கையைத் திரும்பப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வர்.




## சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 08




- பெண்களின் பல சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் சாதனைகளை அங்கீகரிக்கும் விதமாக இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- பாலினச் சமத்துவத்தை விரைவுப்படுத்தச் செய்வதற்கான நடவடிக்கைக்கான ஒரு அழைப்பையும் இந்த நாள் குறிக்கிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'பெண்களின் முன்னேற்றத்தில் முதலீடு செய்யுங்கள்: முன்னேற்றத்தை விரைவுபடுத்துங்கள்' மற்றும் இந்தத் தினத்திற்கான பிரச்சாரத்தின் கருத்துரு, 'உள்ளடக்கத்தினை ஊக்குவித்தல்' என்பது ஆகும்.

- 1910 ஆம் ஆண்டில், கோபன்ஹேகனில் நடைபெற்ற சர்வதேச மகளிர் மாநாட்டில் கிளாரா ஜெட்கின் என்பவர் சர்வதேச மகளிர் தினத்தை முன்மொழிந்தார்.
- ஐக்கிய நாடுகள் சபையானது 1975 ஆம் ஆண்டில் இந்தத் தினத்தைக் கொண்டாடத் தொடங்கியது.
- 1977 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த நாள் குறித்த அறிவிப்பினை வெளியிடுமாறு உறுப்பினர் நாடுகளுக்கு அழைப்பு விடுத்தது.


## CISF எழுச்சி தினம் - மார்ச் 10

- இந்தியாவின் சொத்துக்கள் மற்றும் உள்கட்டமைப்புகளைப் பாதுகாப்பதில் மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படை முக்கியப் பங்கு வகிக்கிறது.
- 1968 ஆம் ஆண்டு CISF சட்டத்தின் கீழ், அதிகரித்து வரும் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படை உருவாக்கப்பட்டது.
- அரசின் உள்கட்டமைப்புத் திட்டங்கள், தொழில்துறை ஸ்தாபனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றினைப் பாதுகாப்பதில் அவை உதவுகின்றன.
- 165000 பணியாளர்களுடன், இது நாட்டின் மிகப்பெரிய மற்றும் மிகவும் வலிமையான பாதுகாப்புப் படைகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

## சர்வதேச பெண் நீதிபதிகள் தினம் - மார்ச் 10

- உலகெங்கிலும் உள்ள பெண் நீதிபதிகளின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- நீதித்துறையில் பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில், அன்னா சாண்டி என்பவர் 1937 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி ஆனார்.
- 1989 ஆம் ஆண்டில், பாத்திமா பீவி இந்திய உச்ச நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி ஆனார்.


## இணையவெளி தணிக்கைக்கு எதிரான உலக தினம் - மார்ச் 12



- அம்னஸ்டி இன்டர்நேஷனல் மற்றும் ரிப்போர்ட்டர்ஸ் வித்வெளட் பார்டர்ஸ் ஆகியவை 2008 ஆம் ஆண்டில் இந்த தினத்தை முதன்முதலில் அனுசரித்தன.
- தடையற்ற சம இணையத்திற்கு ஆதரவாக மக்களை ஒன்றிணைக்க இந்த நாள் முயல்கிறது.
- கூடுதலாக, அவை அனைவரும் இணையத்தை அணுக முடியும் என்ற நிலையினை உருவாக்குவதை உறுதி செய்ய விரும்புகின்றன.

## புகைபிடித்தல் எதிர்ப்பு தினம் - மார்ச் 13

- இந்தத் தினமானது, ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை அன்று அனுசரிக்கப்படுகிறது.
- இது புகைபிடிப்பதால் ஏற்படும் தீமைகள் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதையும், இந்த ஆபத்தான பழக்கத்தை விட்டுவிட மக்களை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் முதன்முதலில் 1984 ஆம் ஆண்டில் சாம்பல் புதன் (திருநீற்றுப் புதன்) அன்று அனுசரிக்கப்பட்டது.
- புகையிலை என்பது பாலிசைக்ளிக் நறுமண ஹைட்ரோகார்பன்கள் (PAHs), நறுமண அமைன்கள், ஆவியாகும் கரிம ஹைட்ரோகார்பன்கள் மற்றும் பல்வேறு உலோகங்கள் உட்பட 60க்கும் மேற்பட்ட புற்றுநோய் காரணிகளின் ஒரு கொடிய கலவை ஆகும்.



## பை தினம் - மார்ச் 14




- இந்தத் தினத்திற்கான தேதியை மாதம் மற்றும் தேதி என்ற வடிவத்தில் எழுதினால், அது பை (π) மதிப்பின் முதல் மூன்று இலக்கங்களுடன் பொருந்துகிறது.
- பை என்பது வட்டத்தின் சுற்றளவுக்கும் விட்டத்திற்கும் உள்ள ஒரு விகிதமாகும்.
- இந்த விகிதத்தின் மதிப்பு 3.14 PI என்ற மாறிலியாகும்.
- பையின் நிலையான மதிப்பை சைராகுஸ் நகரினைச் சேர்ந்த ஆர்க்கிமிடிஸ் என்ற கணிதவியலாளர் முதன் முதலில் கணித்தார்.
- 1737 ஆம் ஆண்டில், லியோன்ஹார்ட் ஆய்லர் என்பவர் பையின் குறியீட்டினைப் பயன்படுத்தினார், எனவே அது அறிவியல் சமூகத்தில் பயன்பாட்டிற்கு ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- 1988 ஆம் ஆண்டில், அமெரிக்க இயற்பியலாளர் லாரி ஷா என்பவர் முதலாவது பை தினத்தைக் கொண்டாடினார்.
- தற்செயலாக, புகழ்பெற்ற இயற்பியலாளர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் பிறந்த நாளன்று பை தினம் அனுசரிக்கப் படுகிறது.


## உலக ரோட்ராக்ட் தினம் - மார்ச் 13

- உலகெங்கிலும் உள்ள ரோட்ராக்டர்கள் (சுழற் சங்கங்கள்) வழங்கும் சேவைகளை இந்த நாள் அங்கீகரிக்கிறது.
- உலக ரோட்ராக்ட் வாரத்தின் ஒரு வார கால அனுசரிப்புடன் சேர்த்து இந்தத் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- ரோட்ராக்ட் முதன்முதலில் 1968 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் வட கரோலினாவில் நிறுவப்பட்டது.
- இப்போது உலகம் முழுவதிலும் இருந்து சுமார் 10,000க்கும் மேற்பட்டச் சங்கங்களில் 250,000 உறுப்பினர்கள் உள்ளனர்.

## சர்வதேச கணித தினம் - மார்ச் 14

- யுனெஸ்கோ அமைப்பானது, 2019 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் தேதியன்று நடைபெற்ற 40வது பொது மாநாட்டில் இந்த சர்வதேச தினத்தை அறிவித்தது.
- பருவநிலை மாற்றம், ஆற்றல், செயற்கை நுண்ணறிவு, மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற பல்வேறு துறைகளில் கணிதத்தின் முக்கியத்துவத்தை இந்தத் தினம் வெளிக் கொணர்கிறது.
- இத்தினம் ஆனது சர்வதேச பை (π) தினத்துடன் ஒன்றி வருகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'கணிதத்துடன் விளையாடு' என்பது ஆகும்.


## நதிகளுக்கான நடவடிக்கை தொடர்பான சர்வதேச தினம் - மார்ச் 14




- அனைத்துச் சமூகங்களுக்கும் சுத்தமான, தடையின்றிக் கிடைக்கப் பெறும் தண்ணீருக்கான அணுகலை உறுதி செய்வதன் ஒரு முக்கியத்துவத்தை இது எடுத்து உரைக்கிறது.
- முன்பை விட வெகுவாக தற்போது இந்த உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நதிகளைப் பாதுகாப்பதற்குமான கூட்டுப் பொறுப்பைக் கொண்டு வர இத்தினம் வலியுறுத்தச் செய்கிறது.
- இந்த நாள் ஆனது 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பிரேசிலின் குரிடிபாவில் நடைபெற்ற அணைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் முதல் சர்வதேசக் கூட்டத்தில் அங்கீகரிக்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அனைவருக்கும் தண்ணீர்" என்பதாகும்.

## உலக சிறுநீரக தினம் - மார்ச் 14

- இந்த நாள் ஆரோக்கியமான சிறுநீரகத்தின் பெரும் முக்கியத்துவம் மற்றும் சிறுநீரக ஆரோக்கியத்தை எவ்வாறு நன்றாகப் பராமரிப்பது மற்றும் சிறுநீரகம் தொடர்பான நோய்களைத் தடுப்பது பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதத்தின் இரண்டாவது வியாழன் அன்று அனுசரிக்கப் படுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'அனைவருக்குமான சிறுநீரக ஆரோக்கியம்' என்பதாகும்.




## உலக நுகர்வோர் உரிமைகள் தினம் - மார்ச் 15



- பாகுபாடு, நியாயமற்ற நடைமுறைகள் மற்றும் சுரண்டலில் இருந்து பாதுகாக்கக் கூடிய நுகர்வோரின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1962 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் தேதியன்று, அமெரிக்கக் காங்கிரஸில் உரையாற்றிய அதிபர் ஜான் F. கென்னடி நுகர்வோர் உரிமைகள் குறித்து உரையாற்றினார்.
- உலகத் தலைவர் ஒருவர் நுகர்வோர் உரிமைகளைப் பற்றிப் பேசிய முதல் நிகழ்வாக இந்தச் சம்பவம் அமைந்தது.
- 1983 ஆம் ஆண்டில், முதல் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் அனுசரிக்கப்பட்டது.
- அன்றிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை இந்தச் சிறப்புத் தினத்தை அங்கீகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் 'நுகர்வோர்களுக்கான நியாயமான மற்றும் பொறுப்பான செயற்கை நுண்ணறிவு' ஆகும்.

## உலக தூக்க தினம் - மார்ச் 15

- இது மருத்துவம், கல்வி, சமூகப் பணி மற்றும் வாகனம் ஓட்டுதல் ஆகியவற்றில் தூக்கம் தொடர்பான பல்வேறு பிரச்சனைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், சிறப்பான (முறையான) தூக்கத்தைக் கொண்டாடுவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- உலக தூக்க தினம் ஆனது, 2008 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து வடக்கு அரைக் கோளத்தில் மார்ச் மாத சம இரவு பகல் நாளுக்கு முந்தைய வெள்ளிக்கிழமை அன்று கொண்டாடப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான உலக தூக்க தினத்தின் கருத்துரு என்பது 'உலகளாவிய ஆரோக்கியத்திற்கான தூக்க சமநிலை' ஆகும்.

## தேசியத் தடுப்பூசி தினம் - மார்ச் 16




- தடுப்பூசியின் நன்மைகளைப் பற்றி மக்களுக்குக் கற்பித்தல் மற்றும் தடுப்பூசிகள் பற்றிய கட்டுக்கதைகள் அல்லது தவறான கருத்துக்களை அகற்றுவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 1988 ஆம் ஆண்டில், புவியில் இருந்து போலியோ நோயை ஒழிப்பதற்கான ஒரு முதல் படியாக உலக சுகாதார அமைப்பானது ஒரு உலகளாவிய போலியோ ஒழிப்பு முன்னெடுப்பினைத் தொடங்கியது.
- 1995 ஆம் ஆண்டில், அதே நாளில், இந்தியாவில் போலியோ நோயை ஒழிப்பதற்கான முதல் முயற்சியாக இந்திய அரசானது பல்ஸ் போலியோ நோய்த்தடுப்புத் திட்டத்தைத் தொடங்கியது.
- அன்றிலிருந்து மார்ச் 16 ஆம் தேதியானது தேசியத் தடுப்பூசி தினமாக கொண்டாடப் படுகிறது.

### ஆயுதத் தொழிற்சாலைகள் தினம் (இந்தியா) - மார்ச் 18




- கொல்கத்தாவின் காசிப்பூரில் உள்ள ஆயுதத் தொழிற்சாலை உருவான தினத்தை நினைவு கூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- 1775 ஆம் ஆண்டில், கொல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் ஆயுத வாரியம் உருவாக்கப்பட்டது.
- 1787 ஆம் ஆண்டில், இஷாப்பூரில் ஒரு துப்பாக்கித் தொழிற்சாலையும், கொல்கத்தாவின் காசிப்பூரில் துப்பாக்கி (ஆயுதந்தாங்கி) வண்டித் தொழிற்சாலையும் உருவாக்கப் பட்டது.
- தற்போது இது துப்பாக்கி மற்றும் துப்பாக்கிக் குழல் தொழிற்சாலை, காசிப்பூர் என்று அழைக்கப் படுகிறது.

### உலக மறுசுழற்சி தினம் - மார்ச் 18

- அத்தியாவசிய வளங்களின் நிலையைப் பற்றி மக்களுக்குக் கற்பிப்பதன் மூலம் மறுசுழற்சி மற்றும் வளங்காப்பினை ஊக்குவிப்பதற்காக இந்தத் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- உலக மறுசுழற்சி அறக்கட்டளையானது, உலகளாவிய மறுசுழற்சி மற்றும் வளங் காப்பினை மேம்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "வாக்குறுதிகளைக் கடைப்பிடித்தல்: நிலைத் தன்மைக்கான உறுதிப்பாடு" என்பதாகும்.

## எண்ணிம வழிக் கற்றலுக்கான சர்வதேச தினம் - மார்ச் 19

- யுனெஸ்கோ அமைப்பின் உறுப்பினர் நாடுகளால் 2024 ஆம் ஆண்டில் இருந்து முதல் முறையாக இந்த நாள் கொண்டாடப் பட்டது.
- கல்வி சார்ந்தச் சவால்களை நன்கு எதிர்கொள்வதிலும், நிலையான மேம்பாட்டினை ஊக்குவிப்பதிலும் எண்ணிம வழிக் கற்றலின் மதிப்பை இது அங்கீகரிக்கிறது.
- 2005 ஆம் ஆண்டில், உலக மக்கள்தொகையில் வெறும் 16% பேர் இணைய வசதியினை பெற்றிருந்தனர்.
- 2023 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 67% ஆக உயர்ந்துள்ளது.
- 40% ஆரம்பப் பள்ளிகள் மட்டுமே இணையச் சேவைகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியில் உள்ள கிராமப்புற மக்களில் 70% பேர் மின்சாரம் வசதி பெறாமல் உள்ளனர்.





## சர்வதேச மகிழ்ச்சி தினம் - மார்ச் 20

- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) இந்த சிறப்பு தினத்தினை முதன்முதலில் 2013 ஆம் ஆண்டில் அறிவித்தது.
- எல்லா இடங்களிலும் உள்ள மக்களால் பகிரப்படும் உலகளாவிய நோக்கங்கள் மற்றும் விருப்பங்களாக மகிழ்ச்சி மற்றும் நல்வாழ்வை அங்கீகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எளிய மற்றும் தினசரி மகிழ்ச்சிப் பழக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு என்று மக்களை ஊக்குவிப்பதன் மூலம் உலகத்தைக் கனிவான மற்றும் மிக மகிழ்ச்சியான இடமாக மாற்றுவதே இந்த நாளின் குறிக்கோள் ஆகும்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "மகிழ்ச்சிக்காக மீண்டும் இணைதல்: நெகிழ்திறன் மிக்க சமூகங்களை உருவாக்குதல்" என்பதாகும்.

## உலக வாய் சுகாதார தினம் - மார்ச் 20

- இது வாய் ஆரோக்கியம் மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்துடன் அது கொண்டுள்ள உள்ளார்ந்த தொடர்பைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதை பெரும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் முதன்முதலில் 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதியன்று உலகப் பல் மருத்துவக் கூட்டமைப்பின் நிறுவனர் டாக்டர் சார்லஸ் கோடனின் பிறந்த நாளன்று கொண்டாடப் பட்டது.
- அதிகளவில் முன்கூட்டிய தடுக்கக் கூடிய வாய்வழி நோய்கள் உலகம் முழுவதிலும் 3.5 பில்லியன் மக்களை பாதிக்கின்றன.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு என்பது, "ஆரோக்கியமான வாய்....ஆரோக்கியமான உடல் (A happy mouth is....a happy body)" ஆகும்.





## உலக சிட்டுக்குருவி தினம் - மார்ச் 20

- நேச்சர் ஃபாரெவர் சொசைட்டி ஆஃப் இந்தியா அமைப்பானது, உலகெங்கிலும் உள்ள மற்ற அமைப்புகளுடன் இணைந்து 2010 ஆம் ஆண்டில் உலக சிட்டுக்குருவி தினத்தை அனுசரிக்கத் தொடங்கியது.
- சிட்டுக்குருவிகள் அழகான சிறியப் பறவைகள் என்பதை விட அதற்கும் மேலான ஒரு மதிப்பினைக் கொண்டுள்ளன.
- நமது சுற்றுச்சூழல் அமைப்பில் அவை முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- உலகம் முழுவதும் 60க்கும் மேற்பட்ட வெவ்வேறு சிட்டுக்குருவி இனங்கள் உள்ளன.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்திற்கான அதிகாரப்பூர்வ கருத்துரு "நான் சிட்டுக் குருவிகளை நேசிக்கிறேன்" (I Love Sparrows) என்பதாகும்.




### மார்ச் சம இரவு நாள் - மார்ச் 20


- மார்ச் மாத வசந்த கால (இளவேனிற்) சம இரவு நாள் ஆனது ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 20 அல்லது 21 ஆம் தேதிகளில் நிகழ்கிறது.
- இந்த நாளில், சூரியன் வானியல் சார் நிலை நிலநடுக்கோட்டு ரேகையைக் கடந்து, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நகர்கிறது.
- இந்த நேரத்தில், உலகம் முழுவதும் பகல் மற்றும் இரவு நேரங்களின் நீளம் என்பது தோராயமாகச் சமமாக இருக்கும்.
- இந்த வானியல் நிகழ்வு மார்ச் மாத சம இரவு நாள் அல்லது இளவேனிற் கால சம இரவு நாள் என்று அழைக்கப்படுகிறது.




### உலக வன வள தினம் - மார்ச் 21

- நமது வாழ்வில் காடுகள் மற்றும் மரங்களின் பெரும் முக்கியத்துவத்தை மக்களுக்கு நினைவூட்டுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 1971 ஆம் ஆண்டு ஐரோப்பிய வேளாண் கூட்டமைப்பின் பொதுச் சபையால் உலக வன வள தினம் என்ற கருத்தாக்கம் முன்மொழியப்பட்டது.
- மார்ச் 21 ஆம் தேதியானது, வடக்கு மற்றும் தெற்கு அரைக்கோளங்களில் முறையே இளவேனிற் கால மற்றும் இலையுதிர் கால சம இரவு- பகல் நாளுடன் ஒன்றி வருவதால் ஐக்கிய நாடுகள் சபையால் இந்தத் தேதி தேர்ந்தெடுக்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு - காடுகள் மற்றும் புதுமை: ஒரு சிறந்த உலகத்திற்கான புதிய தீர்வுகள் என்பதாகும்.




## உலக மன நலிவு நோய் தினம் - மார்ச் 21




- இந்த நாள் என்பது மன நலிவு நோய் (டவுன் சிண்ட்ரோம்) பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிப்பதையும், அந்த நிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதையும் ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மன நலிவு நோய் என்பது 21வது குரோமோசோமின் ஒரு கூடுதல் நகல் இருப்பதால் ஏற்படும் ஒரு மரபணு நிலையாகும்.

- இந்த கூடுதல் மரபணு பொருள் ஒரு நபரின் வளர்ச்சியைப் பாதிக்கிறது என்பதோடு, இது மாறுபட்ட உடல் மற்றும் அறிவாற்றல் பண்புகளுக்கும் வழி வகுக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'பழமையான கருத்துகளை முடிவுக்கு கொண்டு வருதல்' என்பதாகும்.

## உலக கவிதை தினம் - மார்ச் 21

- இந்த நாளானது கவிஞர்களை கௌரவிப்பதையும் கவிதை வாசிப்பு நடைமுறையை மீண்டும் கொண்டு வருவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பானது, 1999 ஆம் ஆண்டில் பாரீஸ்சு நகரில் நடைபெற்ற 30வது பொது மாநாட்டின் போது இந்த நாளை ஆண்டுதோறும் கொண்டாட முடிவு செய்தது.
- இன்றும் சில நாடுகள், ரோமானியக் கவிஞர் விர்ஜிலின் பிறந்த நாளான அக்டோபர் 15 ஆம் தேதியினை கவிதை தினமாகக் கொண்டாடுகின்றன.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Standing on the Shoulders of Giants' என்பதாகும்.

## உலகப் பொம்மலாட்ட தினம் - மார்ச் 21

- பொம்மலாட்டத்தினை ஒரு உலகளாவிய கலை வடிவமாக அங்கீகரிக்க இந்த நாள் முயல்கிறது.
- சர்வதேசப் பொம்மலாட்டச் சங்கம் (UNIMA) ஆனது, 1929 ஆம் ஆண்டில் செக் குடியரசின் பிராக் நகரில் உருவாக்கப்பட்டது.
- 2002 ஆம் ஆண்டில் UNIMA இந்த நாளை அறிவித்தது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'பருவநிலை' என்பதாகும்.


## சர்வதேச நவ்ரூஸ் தினம் - மார்ச் 21

- நோரூஸ் அல்லது நவ்ரூஸ் என்றும் உச்சரிக்கப் படுகின்ற நௌரஸ் என்பது ஈரானிய புத்தாண்டு ஆகும். இது வடக்கு அரைக்கோளத்தில் வசந்தகால சம இரவு-பகல் காலத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- ஜோராஸ்ட்ரியனிசத்தில் (பார்சி இனம்) தோற்ற வேர்களைக் கொண்ட ஒரு பண்டைய திருவிழாவான நவ்ரூஸ் ஈரானிய சூரிய ஹிஜ்ரி நாட்காட்டியின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- இது பொதுவாக மார்ச் 19 மற்றும் மார்ச் 21 ஆகிய தேதிகளுக்கு இடையில், வசந்த கால சம இரவு-பகல் நாளன்று அல்லது அதை நெருங்கிய பிற தேதிகளில் வரும்.
- இந்த ஆண்டு, ஈரானின் தெஹ்ரானில் காலை 6:36 மணிக்கு இளவேனிற் கால சம இரவு-பகல் நிகழ்வு நிகழ்ந்ததையடுத்து மார்ச் 20 ஆம் தேதியன்று இந்தத் தினம் கொண்டாடப் பட்டது.
- இருப்பினும், ஐக்கிய நாடுகள் சபையானது அதன் உலகளாவிய அனுசரிப்பு மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தை வலியுறுத்தி மார்ச் 21 ஆம் தேதியை சர்வதேச நவ்ரூஸ் தினமாக அங்கீகரிக்கிறது.

## சர்வதேச இனப் பாகுபாடு ஒழிப்பு தினம் - மார்ச் 21

- 1960 ஆம் ஆண்டு இதே நாளில், தென்னாப்பிரிக்காவின் ஷார்ப்வில்லியில், நிறவெறி சார்ந்த "வெள்ளையர் அல்லாதவருக்கான அனுமதி வழங்கீட்டுச் சட்டங்களுக்கு" எதிராக அமைதியான முறையில் நடத்தப்பட்ட போராட்டத்தின் போது காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தி 69 பேரைக் கொன்றது.
- 1979 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது இனவெறி மற்றும் இனப் பாகுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கான திட்டத்தை ஏற்றுக்கொண்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: " பத்தாண்டு கால அங்கீகாரம், நீதி மற்றும் மேம்பாட்டு: ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான சர்வதேசத் தசாப்தத்தைச் செயல்படுத்துதல்" என்பதாகும்.

## உலக தண்ணீர் தினம் - மார்ச் 22





- இந்த நாள் ஆனது நன்னீர் வளங்களின் மிகவும் நிலையான ஒரு மேலாண்மைக்காகப் போராடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1992 ஆம் ஆண்டு, ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாடு மீதான மாநாட்டில் இந்த நாளைக் கொண்டாடச் செய்வதற்கான முன்மொழிவு ஆனது முன்வைக்கப்பட்டது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்குமான நீர் மற்றும் சுகாதாரம் என்ற 6வது நீடித்த நிலையான மேம்பாட்டு இலக்கினை (SDG) அடைவதை ஆதரிப்பதே உலகத் தண்ணீர் தினத்தின் முக்கிய நோக்கமாகும்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'செழிப்பு மற்றும் அமைதிக்கான நீர்' என்பதாகும்.


## உலக வானிலை தினம் - மார்ச் 23

- இது உலக வானிலை அமைப்பு (WMO) அதிகாரப் பூர்வமாக நிறுவப்பட்டதை நினைவு கூரும் விதமாக அனுசரிக்கப் படுகிறது.

- 1950 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதியன்று, உலக வானிலை அமைப்பு உடன்படிக்கை என்பது நடைமுறைக்கு வந்த நிலையில், அது 1951 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு முகமையாக மாறியது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "At the Frontline of Climate Action" என்பதாகும்.





## தியாகிகள் தினம்/ ஷாஹீத் திவாஸ் - மார்ச் 23




- இந்தியச் சுதந்திரத்திற்காக துணிவுடன் போராடிய துணிவுமிக்க சுதந்திரப் போராட்ட வீரர்களைக் கௌரவிக்கும் விதமாக இத்தினம் கடைபிடிக்கப் படுகிறது.
- 1931 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதியன்று, லாகூர் சிறையில், பகத்சிங், இராஜ்குரு மற்றும் சுக்தேவ் போன்ற இளம் சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஆங்கிலேய அரசால் தூக்கிலிடப் பட்டனர்.

- ஒவ்வோர் ஆண்டும் ஷாஹீத் திவாஸ் தினத்தன்று இந்தியாவின் சுதந்திரத்திற்காக அவர்கள் மேற்கொண்ட தியாகத்திற்கு கௌரவமளிக்கப் படுகிறது.

## உலக காசநோய் (TB) தினம் - மார்ச் 24




- இது நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, இந்த நோயை ஒழிப்பதற்கான முயற்சிகளை அதிகரிப்பது மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒரு ஆதரவைத் திரட்டுவது ஆகியவற்றினை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- காசநோய் ஆனது முதன்மையாக நுரையீரலைப் பாதிக்கிறது என்பதோடு இது 2022 ஆம் ஆண்டில் 1.3 மில்லியன் உயிரிழப்புகளுக்கு வழிவகுத்த முதன்மையான உயிர்க் கொல்லி நோய்களில் ஒன்றாகும்.
- இது மைக்கோபாக்டீரியம் டியூபர்குலோசிஸ் எனப்படும் ஒரு வகை பாக்டீரியாவால் ஏற்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஆம்! நம்மால் காசநோயை முடிவுக்கு கொண்டு வர இயலும்" என்பதாகும்.

## புவி நேரம் - மார்ச் 23

- புவி தினமானது 2007 ஆம் ஆண்டு முதல் மார்ச் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- உலக வனவிலங்கு நிதியம் (WWF) ஆனது, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த வருடாந்திர விழாவை ஏற்பாடு செய்கிறது.
- இந்த ஆண்டு 18வது புவி நேரத்தினைக் குறிக்கிறது என்ற நிலையில் இது "பூமிக்கான மிக முக்கிய நேரம்" என்ற கருத்துருவுடன் அனுசரிக்கப்பட்டது.
- இந்நிகழ்வு ஆனது நமது கிரகத்திற்கான ஆதரவின் அடையாளமாக, உலகம் முழுவதும் உள்ள மக்களை இரவு 8:30 மணி முதல் இரவு 9:30 மணி வரை 60 நிமிடங்களுக்கு மின் விளக்குகளை அணைக்குமாறு ஊக்குவிக்கிறது.




## உலக நாடக தினம் - மார்ச் 27

- உலகெங்கிலும் உள்ள பல்வேறு சமூகங்களின் கலாச்சார மற்றும் சமூக வளர்ச்சியில் நாடகத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் பங்களிப்பு பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக நாடக தினம் பற்றிய ஒரு கருத்தாக்கமானது முதன்முதலில் 1961 ஆம் ஆண்டில் சர்வதேச நாடக நிறுவனத்தால் (ITI) முன்மொழியப்பட்டது.
- முதலாவது உலக நாடக தினம் ஆனது 1962 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.


## சர்வதேச கழிவுகள் இல்லாத தினம் - மார்ச் 30

- உலகளவில் கழிவு மேலாண்மையினை மேம்படுத்துவதன் ஒரு முக்கியத்துவம் மற்றும் நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை ஊக்குவிப்பதன் அவசியத்தை இது எடுத்துரைக்கிறது.
- ஒவ்வோர் ஆண்டும், மனிதகுலம் ஆனது 2.1 பில்லியன் முதல் 2.3 பில்லியன் டன்கள் வரையிலான நகராட்சி திடக்கழிவுகளை உருவாக்குகிறது.
- சுமார் 2.7 பில்லியன் மக்களுக்குக் கழிவுச் சேகரிப்பு வசதி இல்லை என்ற நிலையில், அவர்களில் 2 பில்லியன் பேர் கிராமப் புறங்களில் வாழ்கின்றனர்.

- மனித குலமானது ஆண்டிற்கு 430 மில்லியன் டன் நெகிழியினை உற்பத்தி செய்கிறது, என்ற நிலையில், அதில் மூன்றில் இரண்டு பங்கு ஆனது விரைவில் கழிவுகளாக வீசப் படுகின்ற குறுகிய காலப் பயன்பாட்டுப் பொருட்களாகும்.
- விரைவில் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால், 2050 ஆம் ஆண்டிற்குள் வருடாந்திர நகராட்சி திடக்கழிவு உற்பத்தி 3.8 பில்லியன் டன்களை எட்டும்.




## உலக இருமுனையப் பிறழ்வு கோளாறு தினம் - மார்ச் 30




- இந்தத் தினமானது இருமுனையப் பிறழ்வுக் கோளாறால் பாதிக்கப்பட்ட புகழ்பெற்ற ஓவியக் கலைஞரான வின்சென்ட் வான் கோ அவர்களின் பிறந்த நாளுடன் ஒன்றி வருகிறது.
- இந்தத் தினமானது உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களை பாதிக்கும் இந்த வாழ்நாள் முழுவதுமான மனநல பிரச்சனைகள் தொடர்பான தவறான கருத்துக்களை அகற்றச் செய்வதையும், அந்நிலை குறித்த விழிப்புணர்வினை பரப்புவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த நோய் பொதுவாக மன உளைச்சல் நோய் என்றும் அழைக்கப்படுகிறது.
- இது ஹைபோமேனியா (மனப்பித்து) மற்றும் மனச்சோர்வு உள்ளிட்ட தீவிரமான மன நிலை மாற்றங்களை உள்ளடக்கியது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு # BipolarStrong என்பதாகும்.

## ராஜஸ்தான் தினம் - மார்ச் 30

- சுதந்திரத்தின் போது, ராஜஸ்தானில் மொத்தம் 22 சுதேச அரசுகள் இருந்தன.
- 1949 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் தேதியன்று இந்த ராஜபுதின மாகாணம் இந்திய ஒன்றியத்துடன் இணைக்கப் பட்டதன் மூலம் இந்த ராஜஸ்தான் மாநிலம் உருவாக்கப் பட்டது.
- மிகப்பெரிய நகரமான ஜெய்ப்பூர் இம்மாநிலத்தின் தலைநகராக அறிவிக்கப்பட்டது.
- முன்பு இருந்த சுதேச அரசுகளின் இணைப்பு மீதான நடைமுறையானது 1948 ஆம் ஆண்டு மார்ச் 18 முதல் 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 வரையில் நீடித்தது.

# இதரச் செய்திகள்

## படகோனியா குகை ஓவியங்கள்

- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தென் அமெரிக்காவில் உள்ள அர்ஜென்டைன் படகோனியாவில் 8,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான குகை ஓவியங்களை கண்டறிந்துள்ளனர்.
- ஹூனுல் 1 குகையில் அர்ஜென்டினா மற்றும் சிலி நாட்டின் பல்வேறு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் 895 ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- இந்தக் குகையில் காணப்படும் ஒரு குறிப்பிட்ட வடிவத்தை வர்ணம் பூசும் நடைமுறை என்பது சுமார் 3,000 ஆண்டுகளுக்கு நீடித்துள்ளது.



## கேவம் மேகங்கள்

- நாசா நிறுவனமானது, விண்வெளியில் இருந்து பார்க்கும் போது கேவம் (வட்ட வடிவ மீக்குளிர் நீர்க்குமிழ் மேகங்கள்) மேகங்களின் மிகவும் வியத்தகு காட்சியைக் காட்டும் மேகங்களின் படத்தைப் பகிர்ந்துள்ளது.
- கேவம் மேகங்கள், துளை-கொண்ட மேகங்கள் அல்லது ஃபால்ஸ்ட்ரீக் துளைகள் என்றும் அழைக்கப் படுகின்றன.
- இந்த அசாதாரண மேகங்கள் விமானங்களால் ஏற்படுகின்றன.
- மீக்குளிர் (நீரின் உறைநிலைக்கு கீழான வெப்பநிலை கொண்ட, ஆனால் திரவமாக உள்ள) நீர் துளிகள் கொண்ட நடுநிலை மேகங்களான உயர்திரள் மேகங்களின் ஓரங்கள் வழியாக விமானங்கள் பறக்கும் போது கேவம் மேகங்கள் உருவாகின்றன.
- விமானத்தைச் சுற்றி காற்று நகரும் போது, மாறா வெப்பச் செயல்முறை எனப்படும் ஒரு செயல்முறை நீர்த்துளிகளைப் பனி படிகங்களாக உறைய வைக்கின்றது.
- இந்தப் பனிக்கட்டிகள் இறுதியில் கனமாகி, வானத்தில் இருந்து இறங்கி மேக அடுக்கில் ஒரு துளையினை ஏற்படுத்துகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★